[illegible]

[illegible] 2 1989-90



160940

# மாதர் மித்திரி.

## இரண்டாம் புஸ்தகம்.

௧௮௮௮-ம் ௵ ஜூலை மீ — ௧௮௮௯-ம் ௵ ஜூன் மீ.

# The Woman's Friend

IN TAMIL

"MATHAR MITHIRI."

PUBLISHED BY THE

WOMAN'S FOREIGN MISSIONARY SOCIETY,

METHODIST EPISCOPAL CHURCH,

U. S. AMERICA.

**VOLUME II. JULY 1888 TO JUNE 1889.**

MADRAS:

METHODIST EPISCOPAL MISSION PRESS.

1889

160940

JL
Y15m211.M87
M87:2;1

# INDEX TO VOLUME II.

PAGE.

Baroness Bardett-Coutts ... ... 66
Buckingham Palace ... ... ... 138

Childbirth ... 12, 24, 36, 48, 60, 72, 84, 96, 108, 120, 132, 144

CHILDREN'S CORNER.
Cock, The ... ... ... ... 130
Crimson Silk, The ... ... ... 142

Hermit, The ... ... ... ... 34
House Cock, The ... ... ... 71
Hunter, The ... ... ... ... 82

Negligent Servant, The ... 106, 118
Nut, The ... ... ... ... 10

Pebbles, The ... ... ... ... 58
Precious Vegetable, The ... ... 10

Three best Books, The ... ... 35, 46
Three Friends, The ... ... 22
Tree of Gold, The ... ... ... 94

Dowager Empress of Germany, The ... 78

Feeding the Sick ... ... ... 99
Florence Nightingale ... ... ... 90

Gleanings ... 11, 23, 35, 47, 59, 71, 83, 95, 107, 119, 131, 143
Golden Moments ... ... ... ... 74
Golden Tree, The ... ... 2, 15, 26
GOOD WORDS FOR WOMEN.
Arithmetic ... ... ... ... 128

Beauty ... ... ... ... 32

Clean Heart, The ... ... ... 44

Happy Home, The ... ... ... 140
House-Wife, The ... ... ... 92
Humility, Patience and Truth ... 56

Introduction ... ... ... ... 8

Jewels ... ... ... ... ... 104

Mother, The ... ... ... ... 68

PAGE.

Mother-in-law, The ... ... ... 116

Position of Women, The ... ... 20

True Wife, The ... ... ... 80

Hannah More ... ... ... ... 30
Hindu Ladies ... ... ... ... 6
Household Duties ... ... ... 42
Humility ... ... ... ... ... 75
HYMNS.
Christmas Anthem ... ... ... 65
Eternal Love, The ... ... ... 41
Good Fight, The ... ... ... 29
Human Nature ... ... ... 125
Nothing but the Blood of Jesus ... 101
Omnipresence ... ... ... 17
Praise the Lord ... ... ... 137
Rejecting the World ... ... 89
Spirit of Truth, The... ... ... 53
True Friend, The ... ... ... 5
What hast thou done for me ... 113
Wonderful Words of Life ... 77

Lahore ... ... ... ... ... 126

Madame Godin ... ... ... ... 18
Maid-Servants ... ... ... ... 114
Mortimer, Mrs. ... ... ... ... 54

NOTES.
Another Year ... ... ... 133

Beauty ... ... ... ... 73
Be punctual ... ... ... ... 35

Christmas ... ... ... ... 61
Contentment ... ... ... ... 14

Education of Women, The... ... 121
Encouragement ... ... ... 134

| | Page. |
|---|---|
| Facts ... ... ... ... ... | 122 |
| Fault Finding ... ... ... | 62 |
| Forgiving Spirit, A ... ... ... | 13 |
| Great Need, A ... ... ... | 97 |
| Happy Home, A ... ... ... | 26 |
| Help ... ... ... ... | 87 |
| How to make Home happy ... ... | 109 |
| Influence ... ... ... ... | 2 |
| New Year, The ... ... ... | 73 |
| Perseverance ... ... ... ... | 25 |
| Personal Influence ... ... ... | 39 |
| Quiet Power for Good, A ... ... | 50 |
| Reading ... ... ... ... ... | 1 |
| Real Worth ... ... ... ... | 110 |
| Soft Answer, A ... ... ... ... | 49 |
| Sunshining Husbands ... ... | 85 |
| Temperance ... ... ... ... | 37 |
| Proverbs ... ... ... ... ... | 83 |
| **Scripture Lessons.** | |
| Flood, The ... ... ... | 4, 16, 28 |
| Jacob and Esau ... ... ... | 64 |
| Jacob's Dream ... ... ... | 52 |
| Joseph interprets Pharoah's Dreams | 88 |
| Joseph sold by his Brethren ... | 76 |
| Lost Piece of Silver, The ... ... | 124 |
| Parable of the Leaven, The ... | 112 |
| Pharisee and the Publican, The ... | 100 |
| Tower of Babel, The ... ... | 40 |
| Vineyard Labourers, The ... ... | 136 |
| Taj Mahal, The ... ... ... | 102 |
| True Wife, The ... ... ... ... | 81 |


## இரண்டாம் புஸ்தகப் பொருள் அட்டவணை.


| | பக்கம். |
|---|---|
| அரிய நிமிஷங்கள் ... ... ... | 74 |
| இந்து ஸ்திரீகள் ... ... ... | 6 |
| இராணியாரின் ஜேஷ்ட புதல்வி ... | 78 |
| உத்தம மனைவி ... ... ... | 81 |
| காடின் பெருமாட்டி ... ... | 18 |
| சமாச்சாரக் குறிப்புகள் | 11, 23, 35, 47, 59, 71, 83, 95, 107, 119, 131, 143 |
| **சிறுவர்க்கான கதைகள்.** | |
| அசமந்த வேலைக்காரி ... | 106, 118 |
| அரிய பூண்டு ... ... ... | 10 |
| கொட்டை ... ... ... | 10 |
| சந்நியாசி ... ... ... | 34 |
| சிவப்புப் பட்டு ... ... ... | 142 |
| சிறு கூழாங்கற்கள் ... ... | 58 |
| சேவல் ... ... ... ... | 130 |
| பொன் விளையும் மரம் ... ... | 94 |
| மூன்று சிநேகிதர் ... ... ... | 22 |
| மூன்று சிறந்த புஸ்தகங்கள் | 35, 46 |
| வீட்டுச் சேவல் ... ... ... | 11 |
| வேடன் ... ... ... ... | 82 |
| **ஞான கீதங்கள்.** | |
| இயேசு ரத்தம் ஒன்றுதானே ... | 101 |
| உத்தம சிநேகிதர் ... ... | 5 |
| உலகத்தை வெறுத்தல் ... ... | 89 |
| கிறிஸ்துவின் ஜனன கீதம் ... | 65 |
| கர்த்தருக்குத் துதி ... ... | 137 |
| சத்திய ஆவி ... ... ... | 53 |
| சர்வ வியாபகம் ... ... ... | 17 |
| நல்ல போராட்டம் ... ... | 29 |
| நித்திய அன்பு ... ... ... | 41 |
| நீ எனக்காக என்ன செய்தாய் ... | 113 |
| மனுஷ சுபாவம் ... ... ... | 125 |
| ஜீவாதிசயச் சொல் ... ... | 77 |
| தங்க விருட்சம் ... ... | 2, 15, 26 |
| தாழ்மை ... ... ... ... | 75 |
| தாஜ் மஹல் ... ... ... ... | 102 |
| **நங்கையர்க்கு நல்லுரை.** | |
| அழகு ... ... ... ... | 32 |
| கணக்கு ... ... ... ... | 128 |
| காப்பு ... ... ... ... | 44 |
| குடித்தனக்காரி ... ... ... | 92 |
| தாய் ... ... ... ... | 68 |
| நகை ... ... ... ... | 104 |
| பதிவிரதை ... ... ... | 80 |
| பாக்கியம் நிறைந்த மாளிகை ... | 140 |
| மாமியார் ... ... ... ... | 116 |
| மித்திரிக்கு மித்திரி ... ... | 8 |
| மும்மை ... ... ... ... | 56 |
| ஸ்திரீசாதி மேன்மை ... ... | 20 |
| நோயாளிகளைப் போஷித்தல் ... | 99 |
| பக்கிங்காம் அரண்மனை ... ... | 138 |
| **பத்திராதிபர் குறிப்புகள்.** | |
| அமர்ந்து நன்மைசெய்யும் வல்லபம் | 50 |
| அழகு ... ... ... ... | 73 |
| இரண்டாம் வருஷம் ... ... ... | 133 |

| | பக்கம். |
|---|---|
| உற்சாகமுள்ள புருஷர் ... ... | 85 |
| ஒவ்வொருவரும் செய்யக்கூடியது | 39 |
| ஓர் பெரும் குறைவு ... ... | 97 |
| காலக் கிரமம் ... ... ... | 135 |
| கிறிஸ்துவின் ஜனன திருநாள் ... | 61 |
| குடும்ப பாக்கியத்திற்கான வழி ... | 109 |
| குற்றம் பிடித்தல் ... ... | 62 |
| சரியான மேம்பாடு ... ... | 110 |
| சொல்வதின்படியே செய் ... | 122 |
| துணை ... ... ... ... | 87 |
| தூண்டிவிடுதல் ... ... ... | 134 |
| பாக்கியம் நிறைந்த வீடு ... ... | 26 |
| புது வருஷம் ... ... ... | 73 |
| பெண் கல்வியின் அவசியம் ... | 121 |
| மதுபான விலக்கு ... ... | 37 |
| மனத்திர்ப்தி ... ... ... | 14 |
| மன்னிக்கும் குணம் ... ... | 13 |
| மெதுவான பிரதியுத்தரம் ... | 49 |
| வல்லமை ... ... ... | 2 |
| வாசிப்பு ... ... ... ... | 1 |
| விடாமுயற்சி ... ... ... | 25 |
| பர்டெட் கூட்ஸ் பெருமாட்டி ... | 66 |
| பழமொழிகள் ... ... ... | 83 |

| | பக்கம். |
|---|---|
| பிரசவ நூல் | 12, 24, 36, 48, 60, 72, 84, 96, 108, 120, 132, 144 |
| பிளாரென்ஸ் நயிற்றிங்கேல் ... | 90 |
| மார்ட்டிமர் அம்மாள் ... ... | 54 |
| லாகூர் ... ... ... ... | 126 |
| வீட்டுவேலை ... ... ... | 42 |
| **வேத பாடங்கள்.** | |
| காணாமற்போன வெள்ளிக்காசு ... | 124 |
| திராட்சத்தோட்டத்தில் வேலைசெய்தவர்களின் உவமை ... ... | 136 |
| பரிசேயனும் ஆயக்காரனும் ... | 100 |
| பாபேல் கோபுரம் ... ... | 40 |
| புளித்த மாவின் உவமை... ... | 112 |
| யாக்கோபின் சொப்பனம் ... | 52 |
| யாக்கோபும் ஏசாவும் ... ... | 64 |
| யோசேப்பு தன் சகோதரரால் விற்கப்பட்டது ... ... ... | 76 |
| யோசேப்பு பார்வோனின் சொப்பனங்களை வியாக்கியானம் பண்ணியது ... ... ... | 88 |
| ஜலப்பிரளயம் ... ... | 4, 16, 28 |
| வேலைக்காரிகள் ... ... ... | 114 |
| ஹன்னா மோர் அம்மாள் ... ... | 30 |


# மாதர் மித்திரி.

புத். ௨. ௧௮௮௮ ௵ - ஜூலை ௴. இல. ௧.

## NOTES.
## பத்திராதிபர் குறிப்புகள்.

### READING.
### வாசிப்பு.

தேகாப்பியாசம் சரீர சுகத்துக்கு எப்படி அவசியமோ அதுபோல மனதின் சுகத்துக்கு வாசிப்பு அவசியமாயிருக்கிறது. தேகாப்பியாசத்தால் நாம் எப்போதும் சுகமும் பலமும் சுறுசுறுப்பும் உள்ளவர்களாய் இருக்கிறோம். அதுபோல வாசிப்பினால் மனதின் சுகமாகிய நல்லொழுக்கம் நம்மில் வளர்ந்து விர்த்தித்து உறுதியாய்த் தரித்துநிற்கிறது.

நாம் அறியவேண்டிய அநேக காரியங்கள் உண்டு; ஆனால் புஸ்தகம், பத்திரிகை, கடிதம் முதலியவற்றை நாம் வாசித்தால் மாத்திரம் அவைகளைப்பற்றி நன்றாய் அறிந்துகொள்ளலாம்; மற்றபடி அவைகளைச் சரியாய் அறிந்துகொள்ளமாட்டோம். நாம் அறிந்திருக்கவேண்டிய அநேக இடங்களுண்டு; ஆனால் அவைகளைக்குறித்து நாம் வாசித்து அறிந்திராவிட்டால், அவைகள் உலகத்தில் இல்லையென்றே நினைத்துக்கொள்ளவேண்டும். தங்களைச் சுற்றிலும் உள்ளோரைப் பாக்கியமான நற்சீருக்குக் கொண்டுவந்த அநேக நல்ல மனிதர் உண்டு; ஆனால் அவர்களின் மேலான குணத்தைக்குறித்து நாம் வாசித்திராவிட்டால் அவர்கள் நமக்கு எப்போதும் அந்நியராகவே இருக்கவேண்டும். துக்கப்படும் மனதுக்கு ஆறுதலைத் தருவதும், கழியாமல் இருக்கும் காலத்தைப் பறக்கச் செய்வதும், கடினமான காரியத்தை இலேசாக்கிவிடுவதுமான அநேக வார்த்தைகள் உண்டு; இவைகளை மனிதர் தங்கள் நாவால் சொல்வது அசாத்தியம்; ஆகையால் அவர்கள் தாங்கள் சொல்லவேண்டியதையெல்லாம் புஸ்தகங்களில் திரளாய்க் குவித்துவைத்திருக்கிறார்கள்; அவைகளை வாசித்தே நாம் அறிந்துகொள்ளவேண்டியது அவசியம். மானிட ஜீவியத்துக்கடுத்த உல்லாசங்களிலெல்லாம் உபயோகமான புஸ்தகங்களை வாசிப்பதே மிகவும் சிறந்ததாயிருக்கிறது; இதனால் அவர்களின் ஜீவியத்தில் குறைவானதெல்லாம் நிறைவானதாகிவிடுகிறது.

இப்படியே நமது 'மாதர் மித்திரியிலும்' பிரயோசனமான சரித்திரங்களையும், விசேஷித்த இடங்களின் விவரங்களையும் படங்களுடன் மாதந்தோறும் எடுத்தெழுதுகிறோம்; இத்துடன் ஆத்தும சுகம், சரீர சுகம் முதலியவற்றைக்குறித்துத் தேர்ந்த பண்டிதர்கள் எழுதிய நூற்களை மொழிபெயர்த்துத் தருகிறோம்; 'மித்திரிக்கு மித்திரியும்' அநேக அறிய விஷயங்களைக்குறித்து வெகு இனிய நடையில் எழுதப் பிரியங்கொண்டிருக்கிறாள். இவற்றை வெகுபேர் வாசித்துப் பயன் அடைவார் என்று நம்புகின்றோம்.

---

INFLUENCE.

## வல்லமை.

மிகவும் ஏழையாய் ஜீவனம் செய்து வந்த ஒருவன் தான் சாகும்போது "ஆ, நான் செய்த காரியங்களின் வல்லமையை ஒருமிக்கச் சேர்த்து என்னோடு புதைத்துவிட்டால் தாவிளை" என்று எல்லோரும் ஆச்சரியப்படும்படிக்கான விதமாய்ச் சொன்னானும். ஆனால் இது கூடாத காரியம். அவன் செய்த காரியங்களின் வல்லமை இன்னமும் இருந்து, ஒரு நன்மையை அல்லது தீமையை நடப்பித்துக் கொண்டே இருக்கிறது. இவ்வுலகத்தில் வசிக்கும் ஒவ்வொருவனும் பாக்கியத்தையாவது நிர்ப்பாக்கியத்தையாவது அதிகரிக்காமல் இருக்கமாட்டான். இது நம்மிலிருந்து நீக்கப்படக்கூடாத மகாப் பெரும் வல்லமையாயிருக்கிறது. அது நம்மோடு ஒட்டிக்கொண்டிருப்பதால் அதை நாம் உதறிவிடமுடியாது. நமது கண்களால் நாம் பார்க்கும்போதும், நமது வாயால் நாம் பேசும்போதும், நாம் ஏதோ ஒரு காரியத்தைச் செய்யும்போதும் அந்த வல்லமை காணப்படுகிறது. பெற்றோரின் முன்மாதிரி பிள்ளைகளிடத்தில் அதிக வல்லமையான காரியங்களைச் செய்கிறது. அவர்களின் முன்மாதிரியால் பிள்ளைகள் சுறுசுறுப்பும் நல்லொழுக்கமும் உள்ளவர்களாய் இருந்தாலும் இருக்கலாம், அல்லது சோம்பலும் துர்க்குணமும் உடையவர்களானாலும் ஆகலாம். ஆகையால் ஒவ்வொரு தகப்பனும் தாயும் தங்களின் முன்மாதிரியைக்குறித்து அதிக கவலையுள்ளவர்களாய் இருக்கவேண்டியது அவசியம். பிள்ளைகள் உலகத்துக்கு மெய்யாபரணங்களாய் இருக்கும்படி தேவன் அவைகளைப் பெற்றோரிடம் ஒப்புவித்திருக்கிறார். இந்த உத்தரவாதத்தைப் பெற்றோர் அறிந்து தங்கள் கடமையைச் செய்வார்களாகில் அப்போதுதான் அவர்களுக்குப் பாக்கியம் கிடைக்கும்.

---

THE GOLDEN TREE.

BY A. L. O. E.

## தங்க விருட்சம்.

தேவன் பூமிக்கு அலங்காரமாய் உண்டாக்கியிருக்கும் மரங்கள் மெய்யாகவே அழகானவைகளாயிருக்கின்றன. நூற்றுக்கணக்கானபேர் பாளையம் இறங்க நிழல் கொடுக்கக்கூடிய பெரிய ஆலவிருட்சம் உண்டு. வெகு உயரத்தில் கனிகளைக் கொடுக்கும் நீண்ட பனைமரமும் உண்டு. கிளைகளாலும் கனிகளாலும் நிறைந்த கிச்சிலி மரமும் உண்டு. எல்லா மரங்களையும் எடுத்துரைக்க நமக்குக் காலம் போதாது.



ஆனால் எல்லா விருட்சங்களிலும் மேலான ஒரு விருட்சத்தைக்குறித்து நான் சொல்லப்போகிறேன்; அதை ஒரு தங்க விருட்சம் என்று அழைக்கலாம்; அதில் பன்னிரண்டு தங்கக் கிளைகள் உண்டு; ஒவ்வொரு கிளையிலும் வெகுநேர்த்தியான பழங்கள் உண்டு; அந்தப் பழங்களில் அநேக விதங்கள் உண்டு; அவற்றில் சிலது துக்கத்தை நீக்கும்; சிலது பாவத்தை அகற்றும்; சிலது இருதயத்தைச் சந்தோஷத்தால் நிரப்பும். இந்த விருட்சம் சத்தியவேதமே; அது எத்தேசத்துக்கும் பொருந்தினதாயிருக்கத் தேவனால் கொடுக்கப்பட்டிருக்கும் ஒரு விசேஷித்த ஈவாயிருக்கிறது. நான் அதின் கனிகளைக்குறித்துக் கொஞ்சம் சொல்லாமல் அதிகம் சொல்லி, ஒவ்வொரு விதத்துக்கும் ஒரு மாதிரியையும் எடுத்துக்காட்டுவேன். அப்பொழுது இந்தத் தங்க விருட்சத்தின் அருமையை நீங்களே அறிந்துகொள்ளக்கூடியவர்களாயிருப்பீர்கள்.

அது உங்களுக்குமுன் சூரிய வெளிச்சத்தில் வெகுபிரகாசமாய்த் துலங்குவதை நீங்கள் பார்ப்பதாக எண்ணிக்கொள்ளுங்கள். ஆனால் அதற்குச் சூரியவெளிச்சம் அவசியமானதல்ல; ஏனெனில் அது மகிழ்ச்சியின் மத்தியானத்தில் பிரகாசிப்பதைப்பார்க்கிலும் துன்ப இராத்திரியில் அதிகமாய்ப் பிரகாசிக்கின்றது. முதல் முதல் அதன் அடிக்கிளையைப் பாருங்கள். அதில் பத்துப் பெரும்பழங்களைக் காண்பீர்கள்; இவைகளே தேவன் கொடுத்த பத்துக் கட்டளைகள். அவைகளில் பிறனுக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக என்னும் ஒன்றைமாத்திரம் நாம் பறித்துப் பார்ப்போம். இது துன்பத்தை ஆற்றும் பழம்; மனிதரை வழக்குக்குப் போகாமல் தடுக்கும் பழம்; சண்டைகளைத் துவக்கத்திலேயே நிறுத்தும் பழம்; நாவினால் செய்யப்படும் பாவங்களைத் திருத்தும் பழம். ஆ, இந்தப் பழம் அருமையானதல்லவா? அது சத்தியவேதத்திலிருக்கிறது. இந்த முந்தின கிளைக்குமேல் வேறு இரண்டு கிளைகள் உண்டு. அவைகளின் கனிகள் மகா ஏராளமானதாயும் மிகமதுரமான பேரீச்சம்பழத்தைப்பார்க்கிலும் அதிக இனிதானவைகளுமாயிருக்கின்றன. ஒன்றில் பழைய ஏற்பாட்டின் சரித்திரங்களும் மற்றொன்றில் புதிய ஏற்பாட்டின் சரித்திரங்களும் இருக்கின்றன. பழைய ஏற்பாட்டில் நமது ஆதித்தாய்தந்தையராகிய ஆதாம் ஏவாளைக்குறித்தும், அவர்கள் பாவஞ்செய்து துன்பப்பட்டதைக்குறித்தும், தேவகட்டளைக்குக் கீழ்மைந்து பேழையை உண்டாக்கி உயிர்தப்பின நோவாவைக்குறித்தும், தேவனின் சிநேகிதனாகிய ஆபிரகாமைக்குறித்தும், பெரிய அற்புதங்களைச் செய்த மோசே தீர்க்கதரிசியைக்குறித்தும், இராட்சதனைக் கொன்ற தாவீதைக்குறித்தும், இராசாக்களிலெல்லாம் மகா ஞானவானாகிய சாலொமோனைக்குறித்தும் வாசிக்கிறோம்.

புதிய ஏற்பாட்டிலே கிறிஸ்துவையும் அவர் சீஷரையும்பற்றிய சரித்திரங்களையும், சாந்தகுணமுள்ள கன்னித்தாயாகிய மரியம்மாளின் சரித்திரத்தையும், துன்பப்படுத்தின பவுல் அற்புதமாய்ப் பரிசுத்த அப்போஸ்தலனாக்கப்பட்ட சரித்திரத்தையும் வாசிக்கிறோம். சத்தியவேதக் கதைகளைப்போன்ற மகா ஆச்சரியமும் மகா இனிதுமான கதைகள் வேறெங்கும் கிடைக்காது.

(இன்னும் வரும்.)



THE FLOOD.

## ஜலப்பிரளயம்.

உலகம் சிருஷ்டிக்கப்பட்டு ஏறக்குறைய ஈராயிரம் வருஷங்களானபிறகு, மனுஷர் பூமியின்மேல் பெருகினதால் அக்கிரமம் அதிகரித்தது. அவர்கள் இருதயங்கள் பொல்லாத நினைவுகளால் நிறைந்திருந்தன; அவர்கள் தேவனுக்குப் பிரியமாய் நடக்காமலும் அவர் கற்பனைகளைக் கைக்கொள்ளாமலும் இருந்தார்கள். ஆகையால் தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகத் தேவன் விசனமாகி மனஸ்தாபப்பட்டார். அப்போது அவர்: மனுஷரின் அக்கிரமம் அதிகரித்ததால், அவர்களையும் மற்ற ஜீவஜந்துக்களையும் அழித்து, பூமியை ஆழமான தண்ணீரால் மூடிப்போடும் ஜலப்பிரளயத்தை அனுப்பி, அவர்களைத் தண்டிப்பேன் என்றார்.

நோவா என்று பேர்கொண்ட ஒரு நல்ல மனுஷன் இருந்தான். அவன் நீதிமானும் தேவனுக்குக் கீழ்ப்படிந்தவனுமாயிருந்தான். ஆகையால் தேவன் நோவாவைச் சிநேகித்து, தாம் அனுப்பப்போகும் ஜலப்பிரளயத்தைக்குறித்து அவனுக்குச் சொல்லி, அவன் ஒரு பேழையைச் செய்யும்படி கட்டளையிட்டார். அதை அவன் அநேக அறைகளும், ஜன்னலும், பக்கத்தில் ஒரு பெரிய கதவும், உள்ளே மூன்று தட்டுகளுமுள்ள ஒரு பெரிய படகைப்போலப் பண்ணவேண்டும் என்றார். மேலும் அவர் நோவாவைநோக்கி: பூமியின்மேல் ஜலப்பிரளயம் வரும்போது பேழைக்குள் இராத மற்றவையெல்லாம் அழிக்கப்பட்டுப்போமாதலால், நோவாவும், அவன் மனைவியும் அவன் குமாரரும் அவன் குமாரரின் மனைவிகளும் பேழைக்குள் சென்று, ஒவ்வொரு ஜாதியான மிருகங்களிலும், பறவைகளிலும், ஊரும் பிராணிகளிலும் சிலவற்றைமாத்திரம் உள்ளே சேர்த்துக் கொள்ளவேண்டும் என்றார்.

நோவா தேவனை நம்பி அவர் கட்டளையின்படியே பேழையைச் செய்துமுடிக்க அநேக வருஷங்கள் சென்றது. அவன் அதைச் செய்துகொண்டிருந்த காலத்தில் வரப்போகும் ஜலப்பிரளயத்தைக்குறித்து அவீன் ஜனங்களிடம் அடிக்கடி பேசி, அவர்கள் தங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டுத் தேவனண்டைக்குத் திரும்பும்படிப் போதித்துவந்தான். ஆனால் அவர்கள் அவன் பேச்சை நம்பாமலும், தேவனண்டைக்குத் திரும்பாமலும் இருந்து, அவன் பேழைபண்ணுவதைப் பார்த்து நகைத்துப் பரியாசம்பண்ணினார்கள். ஆனால் அவன் அதைப் பொறுமையாய்ச் சகித்து, கடைசியாய்த் தேவன் கட்டளையிட்டபடியே பேழையைச் செய்து முடித்தான். பின்பு தேவன் நோவாவையும் அவன் குடும்பத்தையும் மற்ற ஜீவஜந்துக்களையும் அதனுள்ளேபோகக் கட்டளையிட்டு, ஜீவசுவாசமுள்ள மாம்ச ஜந்துக்களும் பலவிதமான பட்சிகளும் ஜோடுஜோடாக பேழைக்குள் பிரவேசித்ததும் கதவை அடைத்தார். இவைகள் பிரவேசித்து ஏழுநாள் சென்றபின்பு ஜலப்பிரளயம் பூமியின்மேல் உண்டாயிற்று.

(இன்னும் வரும்.)



HYMN.

## ஞானகீதம்.

THE TRUE FRIEND.

### உத்தம சிநேகிதர்.

பாவம் துக்கம் யாவுந் தூக்கும்
இயேசு நேசர் உத்தமர்;
மெய்ச்செபத்தில் தேவை யாவும்
சொல்லிக்கொள்வோர் பாக்கியர்.
இயேசு நேசரைச் செபத்தில்
கூப்பிடாமல் துக்கிப்பார்,
துன்புறும்பேர் வையகத்தில்
எத்தனை நிர்ப்பாக்கியர்.

2. துன்பங்கள், மா சோதனைகள்,
சங்கடங்கள் யாவிலும்
நம்பிக்கை விடாமல், செபம்
செய்வாயாக நித்தமும்;
இயேசுபோல் பரிதபிக்கும்
நேசர் இல்லையே எங்கும்;
உன்னை நன்றாய்த் தாம் அறிவார்,
நீ செபிப்பாய் நித்தமும்.

3. உன் விசாரம் பலவீனம்
மா விஸ்தாரமாகிலும்,
இயேசு நேசர்தாம் சுமப்பார்,
நீ செபிப்பாய் நித்தமும்;
லோக நேசர் கைவிட்டாலும்,
நீ செபிப்பாய்ப் பத்தியாய்,
இயேசுவே கைதூக்கிக் காப்பார்
நீ செபித்தால் உண்மையாய்.

HINDU LADIES.

## இந்து ஸ்திரீகள்.

தற்காலத்து இந்து ஸ்திரீகள் முற்காலத்து இந்து ஸ்திரீகளுக்கு முக அழகிலாகிலும் சரி, நகை அழகிலாகிலும் சரி, நடை அழகிலாகிலும் சரி, உடை அழகிலாகிலும் சரி எவ்வளவும் கீழானவர்கள் அல்லவென்று தெளிவாகிறது. ஆனால் அழகிலெல்லாம் மிகச் சிறந்ததாகிய கல்வி அழகிலோ மிகவும் குறைந்தவர்களாயிருக்கிறார்கள். பூர்வீக இந்து ஸ்திரீகள் வேதங்களை வாசிப்பதிலும், கவி கட்டுவதிலும் புருஷருக்குச் சமானமாயிருந்தார்கள். பெண்கள் கல்விகற்பதற்குத் தடையாக நிற்கும் சிலர் பூர்வீகத்தில் பெண்கள் படித்ததில்லையென்று வற்புறுத்தித் துர்வாதம் செய்கிறார்கள். இவர்கள் சொல்வது அபத்தமேதவிர யதார்த்தமல்ல. ஏனெனில் இது மெய்யென்று ரூபிப்பதற்கு எண்ணிறந்த திருஷ்டாந்தங்கள் உண்டு. திருவள்ளுவருடைய சகோதரிகளாகிய ஔவை, உப்பை, உருவை, வள்ளியம்மை முதலானவர்கள் கல்விகற்று அநேக பிரபந்தங்களைச் செய்யவில்லையா? அன்றியும் சீதை, துரோபதை, சந்திரமதி, தமயந்தி, சகுந்தலை முதலானவர்களும், மற்றும் சில ரிஷிபத்னிகளும், பாண்டியன் மனைவியும், கம்பர் வீட்டு வெள்ளாட்டியும் படித்தவர்களென்பது கற்றோருக்கும் மற்றோருக்கும் தெரிந்த விஷயமாயிற்றே. ஆகவே இக்காலத்துப் பெண்களை இன்னமும் அறியாமையென்னும் சாகரத்தில் அமிழவிட்டிருப்பது அநீதமல்லவா?

பெண்கள் படித்தால் அவர்கள் புருஷர்களுக்கு மந்திரிகளைப்போலச் சமயத்தில் புத்திசொல்வார்கள்; காரியஸ்தர்களைப்போல வீட்டுக் காரியங்களையெல்லாம் நடப்பித்துக்கொள்வார்கள்; கணக்கர்களைப்போல வீட்டுக் கணக்குகளையெல்லாம் எழுதிக்கொள்வார்கள்; தாய்போலப் புருஷர்களைத் தற்காப்பார்கள்; வைத்தியர்களைப்போலப் புருஷர்களுடைய தேகசௌக்கியத்தைத் தேடுவார்கள்; சங்கீதவித்துவான்களைப்போல இன்பமான பதங்களைப் பாடியும், இங்கிதமான வார்த்தைகளைப் பேசியும் புருஷர்களுடைய வருத்தங்களைத் தீர்ப்பார்கள்; உத்தம சிநேகிதர்களைப்போலப் புருஷர்களுடைய ஆபத்துக்குதவுவார்கள்; நல்ல சுயம்பாகிகளைப்போலப் புருஷர்களுடைய நாவுக்கிதமான உணவுகளைச் செய்துகொடுத்து உபசரிப்பார்கள். பெண்களுக்குப் படிப்பியாமையினால் இவ்வளவு நன்மைகளையும் புருஷர்கள் இழந்துபோவது எவ்வளவு மதியீனம். அழகிருந்தும் எழுத்து வாசனையில்லாத ஸ்திரீகள் வாசனையில்லாத புஷ்பங்கள்போலவும், குடத்திலிட்ட விளக்கைப்போலவும், சாணைபிடியாத இரத்தினங்கள்போலவும் இருக்கிறார்கள்.

பெண்கள் கல்விகற்பதினால் அவர்களுக்குப் பதிவிரதாதர்மம் முதலிய சுகுணங்கள் அதிகரித்து, புருஷன்மேல் உண்மையான பக்தியும் விசுவாசமும் உடையவர்களாயிருப்பார்கள். ஆகையால் புத்திசாலிப் புருஷர் தங்கள் ஸ்திரீகளை முற்காலத்துக் கல்வி நிலைமைக்குக் கொண்டுவரக் கணந்தோறும் பிரயாசப்படுவார்களாக.



A HINDU LADY.

ஒரு இந்து ஸ்திரீ.

GOOD WORDS FOR WOMEN.

# நங்கையர்க்கு நல்லுரை.

## 1. மித்திரிக்கு மித்திரி.

இப்பத்திரிகை, உண்மையில் மாதர் மித்திரியே. இதில் மித்திரிக்கேற்ற ரூபம், மித்திரிக்கேற்ற பாஷை, மித்திரிக்கேற்ற சங்கதி முதலியவற்றைக் காணலாம். மித்திரிக்கேற்ற குணமே, இம்மாதரசை யாவர்முன்னும் மணப்படுத்தும் விசேஷம். சென்ற பன்னிரண்டு மாதத்துக்குள் மாதர் மித்திரிக்கு மித்திரிகளானோர் பலர். அவர்களில் நானும் ஒருத்தி. அவள் வாக்கு எனக்கு இனிது. என் வாக்கும் அவளுக்கு இனிது. நான் சமயாசமயங்களில் அவளுக்கு எழுதிய அற்பசொற்ப விஷயங்களையும் அவள் பெரிதுபண்ணி, தயவாயேற்று, தன் சிநேகிதிகள் யாவருக்கும் தெரிவித்தாள். இது அவள் மேன்குணத்துக்கு ஓர் திருஷ்டாந்தம். அவள் சிறு துரும்பும் பற்குத்த உதவும் என்றெண்ணுகிற சிறந்த குடித்தனக்காரி.

மாதர் மித்திரி நாளொருவண்ணமாக வளர்ந்தேறி வாழவேண்டுமென்பது என் உள்ளக்கனிவான விருப்பம். அவள் நாட்கள் பெருகப் பெருக, அவளை நாடுவோரும் பெருகுவார்களாக. அவள் நன்னோக்கம் வாய்ப்பதற்கு எல்லோரும் உதவிசெய்யவேண்டுமென்பது என் ஆசை. நானும் என்னாலான உதவிசெய்வேன்.

மித்திரிக்கு மித்திரியான நான் தமிழ்நாட்டாள். நகரவாசியல்ல, நீர்கம் பொருந்திய ஊரகத்திலிருக்கும் நாட்டுவாசி. ஆயினும் நாடும் அறிவேன், நகரும் அறிவேன். நான் படித்தவள் என்றும் சொல்லேன், படியாதவள் என்றும் சொல்லேன். நான் கற்றது கையளவு கல்லாதது உலகளவு. "எண்ணறப் படித்து எழுத்தற வாசித்தாலும் பெண்புத்தி பின்புத்தியே" என்று பெண்புத்தியைக் குறைகூறுவோர் பலர். குறைசொல்வோர் சொல்லட்டும். பின்புத்தியானாலும் முன்புத்தியானாலும் என்புத்தி என்புத்தியே. என்புத்தி சுயமாய் மண்புத்தியானாலும், அதைப் பொன்புத்தியாக்கும் வாகடம் அறிவேன், மருந்தையுங்கூட அறிவேன். தேவ திருவாக்கே வாகடம், திருநாதர் அருளே மருந்து.

மாதர் மித்திரியின் பெண்புத்தியை விண்புத்தியாக்கும் மருந்து அவ்வருளே. "நான் பெண்ணாய்ப் பிறந்ததிலும், மண்ணாய்ப் பிறந்தால் தாவிலை" என்று புலம்புகிற இத்தேசப் பெண்களைப் பரமநாயகர்க்கு அருமை நாயகிகளாக்கும் ஔஷதம் இதுவே. இந்த அமிர்த சஞ்சீவியை ஆனந்தமாய் உட்கொண்டு அருஞ்சுகமடைந்த நானும், இத்தேச மாதரையாளும் மருள்மயக்கை ஓட்டவும், அருள்மருந்தை ஊட்டவும், கங்கணங்கட்டிக்கொண்ட மித்திரிக்குத் துணைநிற்கத் தீர்மானித்தேன். மாதர் மித்திரிக்கு மாத்திரமல்ல, அவள் மித்திரியாயிருக்கும் யாவருக்கும் நான் மித்திரியாயிருக்க ஆசைப்படுகிறேன்.



கணக்குக்கு மித்திரியாக அல்ல, காரியத்தில் மித்திரியாயிருப்பதே நன்று. அவரவர் கண்ணுக்கழகும், நாவுக்கினிதுமான பதார்த்தங்களைக் கொடுப்பதே நட்புக்கு அடையாளம் என்று எண்ணுவதுண்டு. ஒருவாறு இது நிசமே. ஆகிலும், சமயாசமயங்களில் காட்சிக்கும் உருசிக்கும் இனிதாயிராதவற்றையும் கொடுக்க அவசியம் நேரிடுவதுண்டு. எனக்கும் என் தங்கைக்கும் தித்திப்புப் பதார்த்தங்களை மாத்திரமல்ல, கசப்பு மருந்துகளையும் அடிக்கடி என் தாயார் கொடுக்கக் கண்டிருக்கிறேன். இனிப்பைப்போலவே கசப்பும் அன்பின் கொடையென்றறிக. அவ்வாறே, என்போலிய இந்து ஸ்திரீகளின் அபிவிர்த்திக்கான விஷயங்களைக் கண்டிப்பும் கருணையுமாய் அப்பப்போ பிரசுரிக்கத் தீர்த்துக்கொண்டேன்.

இத்தேசத்தாராயினும் எத்தேசத்தாராயினும், ஸ்திரீகளைத் தேவன் ஒரு விசேஷித்த நோக்கத்துக்கென்று சிருஷ்டித்து, அவர்களுக்கு விசேஷித்த ஈவுகளை அளித்திருக்கிறார் என்பது நிசம். அப்படியிருந்தும், சுதேச சகோதரிகளில் அநேகர் தங்கள் மேம்பாட்டை அறியாமலும், தங்களுக்குள்ள வரங்களை விருத்திசெய்யாமலும், பயன்படுத்திக்கொள்ளாமலும் இருப்பது எத்தனை விசனமான காரியம்.

இவ்வெண்ணமே, இத்தமிழ்நாட்டு நங்கையரின் பத்திவிருத்தி சுத்திவிருத்தி, மனவிருத்தி குணவிருத்தி, வாக்கியவிருத்தி யோக்கியவிருத்தி, அகவிருத்தி சுகவிருத்தி, ஞானவிருத்தி தானவிருத்தி, நாட்டுவிருத்தி வீட்டுவிருத்தி, தேசவிருத்தி நேசவிருத்தி முதலிய நல்லவிருத்திக்கான சங்கதிகளை இயன்றமட்டும் எடுத்துரைக்க என்னை ஏவுகிறது.

நான் பலவூர் பார்த்து, சற்று வயது தளர்ந்து, அனுபவமுதிர்ந்த பிள்ளைகுட்டிக்காரியானதால், நான் சொல்லப்புகும் சங்கதிகள் வெறும் மனோபாவனையாயிரா.

நான் ஏற்கனவே சொல்லியபடி நாட்டுப் பெண்ணானதால், என் நடை உடை பாவனையாவும் நாட்டுத்தனமாயிருப்பது போல் என் பாஷையும் நாட்டுத்தனமாயிருக்கும். பொற்பாத்திரத்தில் இருப்பதே பால், கற்பாத்திரத்தில் இருப்பது கள் என்று சொல்லுவார் உண்டோ? அதுபோல் அறிவுடையோர் பொருளைப் பெரிதுபண்ணுவதால், பாஷைக்குறைவைப் பரிகரிப்பார்.

"அன்பைப் பெருக்கி யெனை
தாருயிரைக் காக்கவந்த
இன்பப் பெருக்கே
இறையே பராபரமே"

என்று பக்தர் பணிந்துபோற்றும் பரமநாயகருக்கு நான் அடிமையானதால், அவர் அன்பு என்னையாள இடங்கொடுத்திருக்கிறேன். ஆனதுபற்றி, நங்கைமார் என் நல்லுரைகளை வம்புரைகளாக எண்ணாமல், அன்புரைகளாக எண்ணி அங்கிகாரஞ்செய்வார்கள் என்பது என் நம்பிக்கை.

மி. மி.

CHILDREN'S CORNER.

## சிறுவர்க்கான கதைகள்.

THE NUT.

### கொட்டை.

ஒரு கிராமத்துப் பிள்ளைகளில் இரண்டுபேர் ஒரு பெரிய மரத்தின்கீழ் ஒரு வாதுமைக்கொட்டையைக் கண்டெடுத்தார்கள். உடனே அவர்களில் ஒருவன் "நான் அதை முதல் முதல் கண்டபடியால் அது என்னைச் சேரவேண்டியது" என்றான். மற்றவன் "நான் அதை முதல் முதல் எடுத்தபடியால் அது என்னைச் சேரவேண்டியது" என்றான். இப்படியே இவர்கள் இருவருக்கும் அதிக வாக்குவாதமாகி, கடைசியில் அடிபிடி சண்டை நடக்கும்போலிருந்தது.

இதைத் தூரத்தில் பார்த்துக்கொண்டிருந்த ஒரு பெரிய பையன் வெகு விரைவாய் ஓடிவந்து, சண்டையின் காரணத்தை அறிந்துகொண்டு "நான் இந்த விவாதத்தை நியாயமாய்த் தீர்த்துவிடுகிறேன்" என்றான். அதற்கு அவர்கள் சம்மதந்தான் என்றார்கள். உடனே அவன் தன்னை அவர்கள் இருவருக்கும் மத்தியில் வைத்துக்கொண்டு, கொட்டையைச் சரிபாதியாய் உடைத்து, ஓட்டில் ஒருபாதியை முதல் முதல் கண்டவனுக்கும், மற்ற பாதியை முதல் முதல் எடுத்தவனுக்கும் கொடுத்துவிட்டு, என் நியாயத்தினிமித்தம் மீதி என்னைச் சேர்ந்ததென்று சொல்லி, அவர்கள் ஆவலோடு பார்க்கப் பார்க்கப் பருப்பை எடுத்து வாய்க்குள்போட்டுத் தின்றுவிட்டான். வம்புபண்ணின இருவரும் ஏமாந்துபோய் ஏதும் பேசாமல் தங்கள் வீட்டிற்கு ஏகினார்கள்.

ஆகையால் வீண்வாதம் செய்பவர் வெகு நஷ்டம் அடைபவர் என்பது சத்தியம்.

THE PRECIOUS VEGETABLE.

### அரிய பூண்டு.

இரண்டு பெண்கள் ஒரு கிராமத்திலிருந்து பழம் நிறைந்த பெருங் கூடைகளைத் தலையில் வைத்துக்கொண்டு பட்டணத்திலுள்ள கடைக்கு விற்கப்போனார்கள். போகும்போது மிகுந்த பாரத்தினால் ஒருத்தி வழிமுழுவதும் முறுமுறுத்துக்கொண்டுபோனாள். அதே பாரமுடைய மற்றவளோ சிரித்து விளையாடி உற்சாகத்துடன் தூக்கிக்கொண்டுபோனாள். இதை முந்தினவள் கண்டு "என் சுமையைப்போன்ற பாரத்தையுடைய நீ என்னைப்பார்க்கிலும் பலசாலியல்லவே, பின்னை எப்படிச் சிரித்துச் சந்தோஷமாய் வருகிறாய்" என்றாள். அதற்கு அவள் "என் தலையின்மேல் இந்தக் கூடையோடு ஒரு அரிய பூண்டு வைத்திருக்கிறேன், அதுவே என் சுமையை இலேசாக்குகிறது" என்றாள். இதைக் கேட்டதும் முறுமுறுப்புக்காரி "ஆ, அது மெய்யாகவே ஒரு அரிய சிறு பூண்டாய் இருக்கவேண்டும்; அதை எனக்கும் தயவுசெய்து சொல்வாயானால், என் சுமையையும் இலேசாக்கிக்கொள்வேன்" என்றாள். அதற்கு மற்றவள் "நல்லது, நீ முறுமுறுக்காமல் வருவாயாகில் கடைக்கு வந்ததும் சொல்வேன்" என்றாள்.



அந்தப் பூண்டை அறியவேண்டும் என்னும் ஆசையினால் அவள் பேசாமல் நடந்து கடைக்கு வந்துசேர்ந்ததும், அதுஎன்ன என்று ஆவலாய்க் கேட்டாள். உடனே அவள் தோழி "அது எல்லாத் துன்பங்களையும் இன்பமாக்கும் அரிய பூண்டாகிய பொறுமை, பொறுமை" என்றாள். அன்று முதல் அவள் எதையும் பொறுமையுடன் சகிக்கக் கற்றுக்கொண்டாள்.

ஆகையால் பொறுத்தார் அரசாள்வார் பொங்கினார் காடாள்வார் என்பது உண்மை.

THE HOUSE COCK.

### வீட்டுச் சேவல்.

ஒரு வீட்டெசமாட்டி தனது இரண்டு வேலைக்காரப் பெண்களையும் தனது வீட்டுச் சேவல் கூவினதும் எழுப்பிவிடுவது வழக்கம். இப்படி விழிப்பது அவர்களுக்கு மிகவும் கஷ்டமாயிருந்ததால், அவர்கள் ஒருநாள் இரகசியத்தில் அந்த வீட்டுச் சேவலைக் கொன்றுவிட்டு, தாங்கள் நினைத்தமட்டும் சுகமாய்த் தூங்கலாம் என்று சந்தோஷமாய் எண்ணியிருந்தார்கள். ஆனால் வயதுசென்ற அந்த எசமாட்டி சேவலை இழந்ததுமுதல் சரியான நேரம் தெரியாமல் அந்தப் பெண்களை எந்நேரத்திலும், சில சமயங்களில் நடு ராத்திரியிலும் எழுப்பிவிட்டாள். இதனால் அந்தப் பெண்கள் முன்னிலும் அதிகமாய் இப்போது தூக்கம் கெட்டு, சேவல் இல்லாமைக்காக மிகவும் சஞ்சலப்பட்டு, வெகு நிர்ப்பந்தமாய்க் காலம்தள்ளிவந்தார்கள்.

ஆகையால் சிறு நன்மையை நீக்குவது பெருந்துன்பத்துக்கிடமாம்.

GLEANINGS.

## சமாச்சாரக் குறிப்புகள்.

சென்னையிலுள்ள பெண்பாடசாலைகளைப் பரீட்சிக்கும் பிராண்டர் துரைசானி கல்வி சாரணைத்தலைவரின் அநுமதி பெற்று 'கிரகச்சிக்கன நூல்' ஒன்று எழுதிவருகிறார்களாம். இது பாடசாலைப் பெண்களுக்குமாத்திரமல்ல, மற்ற ஸ்திரீகளுக்கும் உபயோகமாயிருக்குமென்று நம்புகின்றோம்.

சென்ற மாதம் பதினோராம் தேதி இரவு பத்தரை மணித்திட்டத்தில் சீனா தேசத்திலுள்ள நான்கிங் என்னும் நகரில் ஒரு விண்வீழுங்கொள்ளி காணப்பட்டது. அது பருமனில் சந்திரனளவு பெரிதான ஒரு நட்சத்திரம்போலத் தோன்றி, ஆகாயத்தில் நாலுதரம் வெகு உயர்வாய் எழும்பிப் பிரகாசித்து மறைந்துவிட்டதாம்.

பெண்கள் கல்விகற்கும் கவர்ண்மென்ற் நார்மல் பாடசாலைக்கு வேண்டியவைகளை வாங்குவதற்கும், அதை இன்னும் சற்றுப் பெரிதாகக் கட்டுவதற்கும் செல்லும் செலவாகக் கணக்கிடப்பட்ட முப்பத்திராயிரம் ரூபாயையும் கொடுக்கும்படி உத்தரவாகிவிட்டது.

பதின்மூன்று வயதுள்ள மிஸ் மக்டோனல்ட் என்னும் பெண்ணும், இருபத்திரண்டு வயதுள்ள மிஸ் ஆர்தர் என்னும் பெண்ணும் இங்கிலாந்து தேசத்துத் தென்கரையோரத்திலுள்ள போர்ட்ஸ்மத் துறைமுகத்தில் ஒரு சிறு படகில் வெகு உல்லாசமாய் விளையாடிக்கொண்டிருக்கையில், மிஸ் ஆர்தர் திடீரென தண்ணீரில் தவறி வீழ்ந்து அமிழ்ந்துபோகச் சமீபமாயிருந்தாள்; மிஸ் மக்டோனல்ட் தண்ணீரில் குதித்து, அவளைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு வெகு வருத்தத்துடன் நீந்திக் கரைசேர்த்தாள். இந்த அவளின் வீரியச்செய்கைக்காக 'ராஜ காருண்ய சங்கத்தார்' அவளுக்கு ஒரு பதக்கத்தை வெகுமதியாகத் தந்திருக்கிறார்கள்.

CHILDBIRTH.

## பிரசவ நூல்.

### முகவுரை.

குடும்பஜீவியம்.—நாம் இவ்வுலகத்தில் பாக்கியமாய் ஜீவனம் செய்யும்பொருட்டு நமது பரம பிதாவாகிய தேவன் ஏற்படுத்தியிருக்கும் முக்கிய சாதனங்களில் ஒன்று குடும்ப ஜீவியமே. புருஷனும் பெண்சாதியும் அன்பின் மிகுதியால் வெகு நெருக்கமாய் இணைக்கப்பட்டு, ஒருவர் குறைவுகளை ஒருவர் நிவர்த்தித்துக் கொள்ளுகிறார்கள். ஆயினும், பிள்ளைகள் அவர்களுக்குப் பிறக்கும்போது, அவர்களின் சந்தோஷம் வெகுவாய் அதிகரிக்கிறது. தங்களுக்கு முதற் குழந்தை பிறந்ததும், பெற்றோர் அதை எவ்வளவு பிரியத்தோடே பார்க்கிறார்கள். இதை நோக்கியே, குழந்தையின் மழலைச்சொல் கேளாதவர் வீணை முதலிய வாத்திய ஓசை இனிது என்பார் என்று இத்தேசத்துப் புலவரில் ஒருவர் கூறியிருக்கிறார். நாள் முழுவதும் உழைத்து, மாலைப்பொழுதில் களைப்போடு வீட்டுக்குத் திரும்பும் ஒரு தகப்பன் தனது பிள்ளைகளைக் கண்டதும் வேலையின் வருத்தத்தையெல்லாம் மறந்துவிடுகிறான். அவர்கள் வளருவதை அவன் பிரியத்தோடே கண்ணுற்று, அவர்களின் நன்மைக்கான எதையும் தன்னால் கூடியமட்டும் செய்கிறான். அவர்களுக்கு நிலையான ஜீவனம் கிடைத்ததும் அவனின் சந்தோஷம் நிறைவானதாயிருக்கும். அவன் வெகுநாளைக்கு உயிரோடிருந்தால், அவர்கள் அவனின் தள்ளாத காலத்தில் அவனுக்கு ஆறுதலாயிருந்து, அவன் அமைதலாய் மரித்தபின்பும் அவன் பேரை மற்றச் சந்ததிகளுக்கெல்லாம் தெரியப்படுத்துவார்கள். தாயின் அன்பும் தளராப் பிரயாசையுமோ இதிலும் அதிகமாயிருக்கின்றன.

பிள்ளைகள் இல்லாவிட்டால் உலகம் என்னமாயிருக்கும்!

பிரசவ மோசங்கள்.—இந்தியாவில் ஒவ்வொரு வருஷத்திலும் அநேக ஆயிரங்கணக்கான ஸ்திரீகள் பிரசவகாலத்திலும், பிரசவத்துக்குப்பின் உண்டாகும் சுரமி காணும் சமயத்திலும் மரித்துப்போகிறார்கள். சில சமயங்களில் இதிலும் கொடிய வேதனையுடன் மரிக்கிறார்கள். அன்பு மிகுந்த ஒரு அருமை மனைவி தனது முதற் பிரசவத்திலேயே மரித்துப்போகலாம்; அநேகம் பிள்ளைகள் தங்கள் தாயை இழப்பதும் இப்படிக்கொத்த விசனமான விஷயமாகவே இருக்கிறது. இவ்வித மரணங்கள்தவிர கிரமந்தப்பி நிர்வகிக்கப்படும் பிரசவத்தாலும் தாய்க்கும் பிள்ளைக்கும் நீடித்து நிற்கும் உபத்திரவம் அடிக்கடி உண்டாகின்றது. சில சமயங்களில் கர்ப்பாசயத்தின் நிலை மாறுபட்டுப்போகிறது; சில சமயங்களில் அதன் பாகம் வெளியே தெரியும்படிக்கான விதமாய் அது விழுந்துபோகிறது.

பிராண காரணங்கள்.— கர்ப்பத்தில் சிசுவை உருவாக்கினவர் அது பிறப்பதற்கும், பிறந்தபின் அதுவும் தாயும் சுகமாயிருப்பதற்குமான வழிகளை ஏற்படுத்தியிருக்கிறார். தேர்ந்த அறிவில்லாதவர்கள் பிரசவம்பார்க்கத் தலையிடுவதினாலேயே அநேக மரணங்கள் பிரசவத்தில் உண்டாகின்றன.

ஒரு மனிதன் தனது கடிகாரம் சரியாய்ப் போகவில்லையென்று கண்டு அதைத் தனது அம்பட்டனிடம் பழுதுபார்க்கக் கொடுத்தால், அது முழுவதும் கெட்டுப்போவது ஆச்சரியமல்லவே. இவ்வாறே அவன் தனது மனைவியின் பிரசவகாலத்தில் அவளை ஒரு அம்பட்டத்தியினிடத்திலாவது, மானிட தேகத்திலுள்ள உறுப்புகளின் அமைப்பைக்குறித்து எதும் அறியாதவளும், வாசிக்கத்தெரியாதவளும், சில வேளைகளில் அதிகமோசமும் பயித்தியமுமான வழக்கங்களைக் கண்மூடிப் பின்பற்றுகிறவளுமான ஒரு அறிவீனக் கிழவியினிடத்திலாவது ஒப்புவிப்பதும் மூடத்தனமாகவேயிருக்கிறது.

(இன்னும் வரும்.)

# மாதர் மித்திரி.

புத். ௨. ௧௮௮௫ - ஆகஸ்டு மீ. இல. ௨.

NOTES.

## பத்திராதிபர் குறிப்புகள்.

A FORGIVING SPIRIT.

### மன்னிக்கும் குணம்.

இவ்வுலகத்தில் தங்களை அன்புற்ற விதமாய் நடத்தும் ஒருவனுக்கு உடனே மன்னிக்கும் குணம் உடையவர்களே பாக்கியவான்கள் என்னப்படுவார்கள்.

கொடுமையாய் நடத்தப்படும்போது, மிகுந்த கோபங்கொள்ளுகிறவர்கள், இந்தக் கொடிய செய்கையைக்குறித்தும் இந்தச் செய்கையை நடத்தினவர்களைக்குறித்தும் எப்போதும் சிந்தித்துக்கொண்டேயிருப்பார்கள். அவர்கள் சிந்திக்கச் சிந்திக்கப் பழிவாங்கும் குணம் அவர்களில் அதிகரித்துக்கொண்டேவருகிறது; அவர்களின் இருதயம் நிர்ப்பாக்கியத்தாலும் திருப்தியின்மையினாலும் நிறைந்திருக்கிறது.

"தப்பிதஞ்செய்வது மனுஷீகம், மன்னிப்பளிப்பதோ தெய்வீகம்" என்பது ஒரு சிறந்த கவிஞனின் அமிர்த வாக்கு.

இதன்படியே, கோபித்துப் பேசும் ஒருவருக்குச் சாந்தமாய் மறுவுத்தரம் தந்து, அவர் செய்யும் தீமைக்குப்பதிலாய் நன்மைசெய்துவரும் பெரியோர் பழைய குற்றங்களையெல்லாம் மறந்து, தங்கள் இருதயத்தில் நிறைந்த சமாதானமுள்ளவர்களாய் இருப்பார்கள். மேலும் இப்படிப்பட்ட நற்செய்கையால் உண்டாகும் பலன் கொஞ்சமானதல்ல. இதனால் மகாப் பெரிய பராக்கிரமசாலிமுதலாய்ச் செய்யக்கூடாத காரியத்தை நாம் செய்துமுடிக்கலாம்.

ஒருவன் மற்றொருவனுக்குத் தீமையைச் செய்யும்போது, இவன் அவனுக்குத் தீமைசெய்வதற்குப்பதிலாய் நன்மைசெய்து, அவனிடத்தில் பழிவாங்குவதற்குப்பதிலாய் அன்புபாராட்டினால், தனக்குத் தீமைசெய்தவனை மெய்யாகவே மேற்கொண்டிருக்கிறானல்லவோ? எப்படியெனில், இம்மட்டும் தீமைசெய்தவன் இனிமேல் அப்படிச் செய்ய வெட்கப்பட்டு, கோபகுணத்தை யொழித்து சாந்த குணமுள்ளவனாய் மிகவும் தணிந்துபோய்விடுவான்; ஆனால் நாம் முற்கூறியவாறு அன்புபாராட்டுவதற்குப்பதிலாய் கோபவார்த்தைகளையே உபயோகிப்போமாகில், துவக்கத்தில் சிறுகெடுதியாயிருப்பது கடைசியில் பெருங்கெடுதியாய் மாறி, சிநேகம் என்னும் பாசம் அறுக்கப்பட்டு, என்றும்

இணைக்கப்படக்கூடாத விரோதமாய் முடியும். ஆகலால் மன்னிக்கும் இந்தத் தெய்வீக குணத்தை நமது சிநேகிதிகள் பூண்டு கொள்வார்களாக.

---

CONTENTMENT

## மனத்திர்ப்தி.

மனத்திர்ப்தியினால் உண்டாகும் பலன்களைக்குறித்து அநேக ஞானிகளும் கல்விமான்களும் வெகுவாய் வியந்து பேசியிருக்கிறார்கள். மனத்திர்ப்தியின் அர்த்தத்தை நாம் சரியாய் அறிந்துகொண்டால் மாத்திரம் அது மகா இனிதும் அருமையுமான காரியம் என்று விளங்கும். தேவன் நாம் வசிக்கும்படி ஒரு சிறுவீட்டைக் கொடுத்திருக்கக்கொள்ள, அலங்காரமான ஒரு மெத்தைவீடு இல்லையே என்று அங்கலாய்ப்பது நல்லதா? நமக்குக் கிடைத்திருக்கும் அந்தச் சிறுவீட்டையே சுத்தமும் சுசிகரமுமாய் வைத்து, பார்ப்போர் யாவரும் புகழும்படிக்கான விதமாய்ச் சீவனம்பண்ணிவந்தாலல்லவோ நாம் மனத்திர்ப்தியுடையவர்கள் என்று அழைக்கப்படுவதற்குப் பாத்திராயிருப்போம்?

மனத்திர்ப்திக்கும் பொறாமையென்னும் பிசாசுக்கும் ஓயாத போராட்டம் உண்டு. பொறாமையிருக்கும் இடத்தில் மனத்திர்ப்திக்கு இடம் இல்லை. பொறாமைக்காரன் யாதொரு முகாந்தரமுமின்றி நல்ல இடத்தில் எல்லாம் பொல்லாப்பு பண்ணிக்கொள்ளுகிறான். மனத்திர்ப்தியுள்ளவனோ பொல்லாப்பு செய்கிறவனை நன்மை செய்ய ஏவுகிறான். பொறாமைக்காரன் தன்னைக் கெடுக்கிறதுமன்றி, பிறனையும் கெடுக்கப் பார்க்கிறான். மனத்திர்ப்தியுள்ளவனோ தான் மகா ஈன ஸ்திதியிலிருந்தாலும், தனது அயலான் தன்னிலும் மேலான அந்தஸ்துக்கு வருவதைக் கண்டு ஆனந்தம் கொள்ளுகிறான்.

எந்த விஷயமும் எவ்வளவு கெடுதியானதாய் இருந்தபோதிலும், மனத்திர்ப்தியுள்ளவன் அதிலிருக்கும் சிறுநன்மையையே சிலாகித்துப் பேசுவான். குற்றத்தைக் களைந்து, குணத்தையே கொள்ளும் சுகுணம் மனத்திர்ப்தியுள்ளோர்க்கே உரியது. நன்மையான எக்காரியத்தையும் நமது சக்திக்கேற்றபடி செய்யவேண்டியது. அதில் நாம் விர்த்தித்தால் நல்லதே; விர்த்திக்காவிடில் தேவன் நமக்குக் குறித்திருக்கும் நிலைமையிலேயே முறுமுறுக்காமலும், பொறாமைப்படாமலும் வெகு சந்தோஷத்துடன் இருக்கவேண்டியது.

மனத்திர்ப்தியற்ற முறுமுறுப்புக்காரன் தனது பெற்றோருக்கும் உற்றோருக்கும், தனது வீட்டாருக்கும் நாட்டாருக்கும், தனது மனைவிக்கும் மக்களுக்கும் வெகு துன்பத்தை விளைவிக்கும் துன்மார்க்கனாயிருக்கிறான். அவனைக் காண்போர் யாவரும் அகற்றிவிட ஆசிப்பார்கள். தூரத்தில் கண்டதும் துரத்திவிட யோசிப்பார்கள். மனத்திர்ப்தியுள்ள மகாபுருஷனையோ வாரும் வாரும் என்று வாழ்த்துவார்கள். அவரிடம் ஆலோசனை கேட்டு அதின்படியே செய்வார்கள். ஆகவே மனத்திர்ப்தியே மனிதருக்கு வேண்டிய மகா இனிய இலட்சணமாய் இருக்கிறது, இந்தச் சிறந்த இலட்சணம் நமது சிநேகிதிகளிடத்திலும் விளங்குவதாக.



THE GOLDEN TREE.

BY A. L. O. E.

## தங்க விருட்சம்.

(தொடர்ச்சி.)

இந்தச் சரித்திரக் கிளைகளுக்குமேல் வேறொரு தங்கக் கிளையில் மகாப்பெரும் பழங்கள் உண்டு. இவைகள் தேங்காயைப்பார்க்கிலும் கடினமும் இலேசாய் உடைக்கப்படக்கூடாதவைகளுமாய் இருக்கின்றன. தேங்காயைப்போலவே இந்தப் பழங்கள் ஒவ்வொன்றினுள்ளும் நேர்த்தியான பருப்பும் தித்திப்பான பாலும் உண்டு. இவைகளே சத்தியவேதத்திலுள்ள தீர்க்கதரிசனங்கள். இவைகளில் சிலது மனித புத்தியால் கிரகித்து அறியப்படக்கூடாத அவ்வளவு கடினமானவைகளாய் இருக்கின்றன. ஏற்ற காலத்தில் இவைகள் தாங்களாய்த் திறந்து, தங்களினுள்ளே இருக்கும் திருவசனத்தின் சுத்தப் பாலைத் தெளிவாய்க் காண்பிக்கும். இதற்கு நான் ஒரேஒரு திருஷ்டாந்தம் சொல்லுகிறேன். அதன் அர்த்தத்தைத் திறந்துபார்க்க ஏறக்குறைய ஆயிரம் வருஷம் சென்றது. இந்தத் தீர்க்கதரிசனத்தைக் கூறினவனாகிய தாவீதுமுதலாய் அதைச் சரியாய் அப்போது அறிந்துகொண்டதில்லையென்று நினைக்கிறேன். ஆனால் இப்பொழுது சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவை விசுவாசிக்கும் எல்லாருக்கும் அது வெகு தெளிவாய் இருக்கிறது. என் கைகளையும் என் கால்களையும் உருவக்குத்தினார்கள்; என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு, என் உடையின்பேரில் சீட்டுப்போடுகிறார்கள் என்பதே அந்தத் தீர்க்கதரிசனம். (சங்: 22. 16, 18.) இதைக் கூறி ஆயிரம் வருஷமான்பிறகு இதிலுள்ள ஒவ்வொரு வார்த்தையும் நிறைவேறினது. தீர்க்கதரிசனங்கள், மெய்யாகவே தங்க விருட்சத்திலுள்ள ஆச்சரியமான பழங்களாய் இருக்கின்றன.

போதனையென்னும் தங்கக்கிளையிலுள்ள பழங்கள் அன்னதாழம்பழத்திலும் அதிக அழகியதும் சுகந்த வாசனையுடையதுமாய் இருக்கின்றன. தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகோள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகோள்ளவேண்டும் என்பது எவ்வளவு விசேஷித்த வார்த்தைகளாய் இருக்கின்றன. (யோவா: 4. 24.)

சத்தியவேதச் செய்யுள் பொன்னிறக் கிச்சிலிப்பழங்களிலும் அதிக இனிப்புள்ளதாய் இருக்கிறது. கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன்; அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து, அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் என்னைக் கோண்டுபோய் விடுகிறார் என்று தாவீது பாடினான். (சங்: 23, 1. 2.)

இந்த மகிமைபொருந்திய விருட்சத்தைக் கிளை கிளையாய்ப் பரிசோதிப்பதனால் நீங்கள் களைத்துப்போகிறீர்களோ? களைக்காவிட்டால் இன்னும் சற்று உயரத்தில் பாருங்கள்; ஏனெனில் அவ்வுயர்ந்த கிளைகளில் சில செழுங்கனிகள் இருப்பதைக் காண்பீர்கள். ஒருவேளை சிநேகிதரே, உங்கள் இருதயம் சஞ்சலமுள்ளதாயிருக்கலாம், அல்லது ஆறுதலை நீங்கள் ஆவலோடு தேடலாம். இந்த ஆறுதலின் விருட்சம் துக்கத்தில் எவ்வளவு ஆறுதலைத் தருகிறதென்று பாருங்கள்.

(இன்னும் வரும்.)



THE FLOOD.

## ஜலப்பிரளயம்.

(தொடர்ச்சி.)

நோவாவும், அவன் குமாரரும், நோவாவின் மனைவியும், அவன் குமாரரின் மனைவிகளும், அவர்களோடு சகலவிதக் காட்டு மிருகங்களும், சகலவித நாட்டு மிருகங்களும், சகலவித ஊரும் பிராணிகளும், சகலவிதப் பறவைகளும் ஜோடு ஜோடாகப் பேழைக்குள் பிரவேசித்த பின்பு, பூமியின்மேல் இரவும் பகலும் நாற்பதுநாள் பெருமழை பெய்தது. மகா ஆழத்தின் ஊற்றுக்கண்களெல்லாம் பிளந்தன; வானத்தின் மதகுகளும் திறவுண்டன.

இப்படியாகப் பூமியின்மேல் ஜலப்பிரளயம் உண்டானபோது, பேழையானது ஜலத்தின்மேலே மிதந்துகொண்டிருந்தது. ஒவ்வொருநாளும் ஜலம் மிகவும் அதிகமாய்ப் பெருகினதால், பூமியின்மேலுள்ள உயர்ந்த மலைகளெல்லாம் மூடப்பட்டன. மகாப் பெரிய நகரங்களெல்லாம் தண்ணீரின்கீழ் மறைக்கப்பட்டன. ஆயிரமாயிரமான அழகிய மாடமாளிகைகளும் கூடகோபுரங்களும் அழிக்கப்பட்டன. மூடப்பட்ட மலைகளுக்கு மேலாய்ப் பதினைந்துமுழ உயரத்துக்கு ஜலம் பெருகிற்று.

பேழைக்குள் பிரவேசிக்காத பறவைகளும், நாட்டு மிருகங்களும், காட்டு மிருகங்களும், ஊரும் பிராணிகளுமாகிய எல்லா சரஜீவன்களும் மாண்டன. மனுஷரில் அநேகர் மரங்களின்மேல் ஏறினார்கள்; சிலர் மலைச்சிகரங்களின்மேல் ஓடி ஒதுங்கினார்கள்; வேறு சிலர் குகைகளில்



போய் ஒளித்துக்கொண்டார்கள். ஆனால் மழை விடாமல் பெய்யவே, அவரவர் தங்கள் தங்கள் இருப்பிடத்திலேயே மாண்டார்கள். நோவா: உலகம் ஜலப்பிரளயத்தால் அழிக்கப்படும் என்று பிரசங்கித்து புத்திசொன்னபோது, அவனைப் பார்த்து நகைத்துத் தங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்படாமலும், தேவனண்டைக்குத் திரும்பாமலும் இருந்த பலரும் பரிதாபமாய் மரித்தார்கள். 'இந்த நோவாக் கிழவனுக்குப் பைத்தியம்பிடித்திருக்கிறது' என்று பரியாசம்பண்ணினவர்கள் பயங்கரமாய் மாண்டார்கள். தேவன் தாம் முன்னாக விளம்பியிருந்தபடியே மனுஷர்முதல், மிருகங்கள், ஊரும் பிராணிகள், ஆகாயத்துப் பறவைகள்பரியந்தமும், பூமியின்மேல் இருந்த உயிருள்ள வஸ்துக்கள் யாவையும் அழித்து, அவைகளைப் பூமியில் இராதபடிக்கு நிக்கிரகம் பண்ணினார். தேவன்பேரில் விசுவாசமுள்ளவனாயிருந்து, அவருக்குக் கீழ்ப்படிந்து அவருக்கேற்ற சன்மார்க்க வழியில் நடந்துவந்த உத்தமனாகிய நோவாவும், அவன் குடும்பமும், அவர்களோடே பேழையிலிருந்த உயிர்களும் சர்வவல்லமையுள்ள தேவனால் காக்கப்பட்டன.

உலகம் ஜலப்பிரளயத்தால் அழிக்கப்பட்ட இந்தச் சரித்திரத்தை நாம் வாசிக்கும்போது, தேவன் பாவத்தை எவ்வளவாய் அருவருக்கிறார் என்றும், பாவிகளை எவ்வளவு பயங்கரமாய்த் தண்டிக்கிறார் என்றும், நீதிமான்களையோ கண்ணின் கறுப்பு விழியைப்போல எவ்வளவாய் ஆசீர்வதித்துக் காப்பாற்றிவருகிறார் என்றும் பார்க்கிறோம்.

(இன்னும் வரும்.)

HYMN.

## ஞான கீதம்.

OMNIPRESENCE.

### சர்வ வியாபகம்.

உன்னதமான ஸ்தலத்தில்
மா ஆழமுள்ள இடத்தில்
கர்த்தாவே! நீர் இருக்கிறீர்,
எல்லாவற்றையும் பார்க்கிறீர்.

2. நான் நோக்கிச் செல்லும் இடத்தை
நடந்துபோகும் வழியை
நன்றாய் அறிந்திருக்கிறீர்,
சமீபமாயும் நிற்கிறீர்.

3. வானத்துக்கேறிப் போயினும்,
பாதாளத்தில் இறங்கினும்,
அங்கெல்லாம் நீர் இருக்கிறீர்,
தப்பாமல் கண்டுபிடிப்பீர்.

4. இருளிலே ஒளிக்கினும்,
கடலைத் தாண்டிப் போயினும்,
எங்கே போனாலும் தேவரீர்
அங்கென்னைச் சூழ்ந்திருக்கிறீர்.

5. இதை உணர்ந்து தீமையை
வெறுத்துத் தள்ளி, நன்மையை
கடைப்பிடித்துக்கொள்ளவே,
சகாயம் செய்யும், கர்த்தரே!

MADAME GODIN.

## காடின் பெருமாட்டி.

நாம் இப்போது சொல்லப்புகும் சரித்திர நாயகியாகிய காடின் பெண்மகள் பிரான்சு தேசத்து வானசாஸ்திரியாகிய காடின் என்பவரின் மனைவி. இவர் ௧௭௩௫-ம்௵ தமது வேலையினிமித்தம் அமெரிக்கா கண்டத்தின் அதிஉஷ்ண பாகங்களுக்குப் போகவேண்டி நேரிட்டது. இவரின் உத்தம மனைவியும் புருஷனை விட்டு பிரான்சு தேசத்தில் தனியே வாசஞ்செய்யாமல், அவரோடு வாழ்ந்து, அவருக்குரிய துன்பங்களில் பங்குபெறுவதையே பெரும்பாக்கியமாக எண்ணி, அவர் தங்கியிருந்த கீற்றோ என்னும் இடத்துக்குப் போய்ச் சிலகாலம் இல்லறம் நடத்தி வந்தாள். பின்பு காடின்துரை வெகு அபாயங்களுக்கு உறைவிடமாகிய கீன் என்னும் இடத்திற்கு மாற்றப்பட்டார். அவ்விடத்திற்கும் அவரின் மனைவி அவரோடு போக வெகுவாய் ஆசித்தும், அவர் கூடாதென்று தடுத்துவிட்டார். அவர் அங்கே போய்ச் சேர்ந்ததுமுதல் தனது பிரிய மனைவிக்கு எழுதிய கடிதங்களில் ஒன்றாகிலும் அவளுக்குக் கிடைக்காதபடித் திருடர் வழியிலே தடுத்துவிட்டார்கள்.

இப்படியாகப் பதினாறு வருஷகாலமாகத் தமது மனைவியினிடமிருந்து ஒரு செய்தியும் வாராததால் மிகுந்த கலக்கமுள்ளவராகி, ஈராயிரத்து ஐஞ்ஞூறு மயில் நீளமான ஆமேசான் நதிக்கரையைக் கடந்து, அதற்கப்பால் உள்ள அதன் உபநதியின் வழியாய் ஒரு காட்டைச் சேர்ந்து, அதைக் கடந்ததும் கீற்றோ நகர் பிடிக்க மனவுறுதிகொண்டார். ஆனால் கொஞ்சத்தூரம் பிரயாணம்பண்ணினதும், மிகுந்த வியாதிப்பட்டபடியால், அப்பால் போவது அசாத்தியமென்று திரும்பிவிட்டார்.

தனது கணவனிடம் இருந்து கடிதம் வருமென்று தினந்தோறும் பார்த்துப் பார்த்துக் கண்பூத்துப்போன பெண்மணியாகிய காடின்மாது தனது புருஷன் தன்னைப் பார்க்கப் புறப்பட்டு வியாதியினால் நின்றுவிட்டார் என்று எவ்வாறோ கேள்வியாகி, அவர் செய்ய யோசித்ததுபோல தானும் ஆமேசான் நதியின் இக்கரையினின்று அக்கரைக்குப் போகத் தீர்மானஞ்செய்துகொண்டாள். இவளின் மனோவுறுதியைப் பார்த்து, இவளோடு பிரயாணம்பண்ண இவளின் தமையனும், வேறு ஐந்து சினேகிதரும் சம்மதித்தார்கள்.

அவர்கள் வழியில் பெருவெள்ளத்தினாலும், மலைக்காற்றுகளாலும், பயங்கரமான காட்டு மிருகங்களினாலும் நல்ல பாதைகள் இல்லாமையினாலும் அடைந்த உபத்திரவங்களை இங்கே எடுத்துரைக்க நமக்கு இடம் இல்லை. ஆனால் காடின்மாது இவைகளையெல்லாம் ஒரு பொருட்டாய் எண்ணாதிருக்கத் தன் தோழருக்குத் தைரியஞ்சொல்லி உற்சாகப்படுத்தி வந்தாள். கடைசியாக ஆமேசான் நதியைக் கடக்கக்கூடிய இடத்துக்கு வந்து, தாங்களாய் ஒரு படகு உண்டாக்கி, அதில் ஏறி முக்கால் வாசித்தூரம் போனதும், அது ஒரு பாறையில் தாக்கிச் சின்னபின்னமானதால், அதிலிருந்தவர்கள் வெகு வருத்தத்துடன் நீந்தி அக்கரை சேர்ந்தார்கள். சேர்ந்ததும் இந்த மனோதைரிய மாதரசியின் சிநேகிதர் எல்லாரும் ஒருவர் பின்னொருவராய் மரணத்துக் கிரையானார்கள். தனியே விடப்பட்ட காடின்மாதின் விசனத்தை யாரால் விரித்துரைக்க முடியும்.

இவள் இவர்களுக்காக வெகுவாய்த் துக்கித்து, பின்பு எல்லாவற்றையும் தேவசித்தத்துக்கு ஒப்படைத்துத் தனியே காட்டோடமாய்ப் போனாள். அப்போது சில இந்திய திருடரின் படகு ஒன்று வெகு தொலையில் தோன்றிற்று. அதைக் கண்டதும், கல்லில் இடறி தனது மெலிந்த கால் கிழிந்து இரத்தம் வடிவதையும் கவனிக்காமல், அதைப் பிடிக்க ஓடினாள். அவர்களிடத்தில் தனது நிர்ப்பந்த கோலத்தைக் குறித்துச் சொன்னாள். திருடராகிய அவர்கள் மிகவும் பரிதபித்து, அவளைத் தங்கள் படகில் ஏற்றி, வெகுதொலையில் வசித்த ஒரு குருவினிடம் ஒப்புவித்தார்கள். அவர் அவளைச் சௌக்கியப்படுத்தி, கணவனைத் தான அவள் சகித்த துன்பங்களி



MADAME GODIN.

காடின் பெருமாட்டி.

னிமித்தம் அவளைப் புகழ்ந்து, கடைசியாக அவள் கணவனிடம் சேரும்படி வழிபண்ணினார். தனது மனைவியைப் பத்தொன்பது வருஷத்துக்குப்பிறகு கண்ட கணவனின் சந்தோஷத்தை யாரால் எடுத்துரைக்க முடியும். சிலகாலம் சென்று காடின் துரையும் மனைவியும் தங்கள் சுயநாடாகிய பிரான்சு தேசத்துக்குச் சென்று, வெகு அன்போடும் ஆறுதலோடும் காலங்கழித்து வந்தார்கள்.

GOOD WORDS FOR WOMEN.

## நங்கையர்க்கு நல்லுரை.

### 2. ஸ்திரீசாதி மேன்மை.

நங்கையரே, இத்தேச ஸ்திரீகளாகிய நமது சகோதரிகள் இருக்கும் நிலைமையும், அவர்களில் அனேகருக்கு நடக்கும் கொடுமையும் மிகப் பரிதபிக்கத்தக்கதே. இதை அறியக்கூடுமானால், மண்ணும் கரையும், மலையும் உருகும். சிலர் அவர்களை அடுப்பங்கறைக்கே அடிமைகளாகவும், சிலர் அவர்களை வெள்ளரித் தோட்டத்துக்குப் புல்லுருவாகவும், சிலர் அவர்களைச் சோளக் கொல்லைக்கு வேலிகளாகவும், சிலர் அவர்களை நந்தவனத்துக்குப் பந்தனமாகவும் எண்ணி நடத்துவார்கள். இவ்வெண்ணமுடையோரிலும் சற்று உத்தமரான பேர்கள் அவர்களைப் புருஷர் விளையாடும் பொம்மைகளாகவும், பொன் விலங்கிட்ட பூனைகளாகவும் பாவித்து, அவர்களைக் கட்டிலிலும் தொட்டிலிலும், அறையிலும் புரையிலுமாத்திரம் வைத்து, அதற்கப்பால் அவர்கள் பயன்படத்தக்கவர்களல்லவென்று நினைத்து, அறிவீனமும் பலவீனமும் அவர்களுக்கு மாறாச் சுதந்தரமாயிருக்கும்படிக்குப் பண்ணுகிறார்கள். இதற்கு மூலாதாரமான குருட்டாட்டம் புருஷர்களைமாத்திரமல்ல, ஸ்திரீகளையும் பிடித்திருப்பதால், இவர்கள் எவ்வித அபிவிர்த்திக்கும் இடங்கொடாதிருக்கிறார்கள்.

ஸ்திரீகளைத் தேவன் சிருஷ்டித்த நோக்கம் மிகச் சிறந்தது. அவர்களுக்குக் கொடுத்திருக்கும் அந்தஸ்து மிக உயர்ந்தது. அவர்களுக்குரிய தொழில் வெகு அருமையானது. தாங்கள் ஆரென்றும், தங்கள் வேலை இன்னதென்றும் அறியாமையினாலேயே அனேக சகோதரிகள் பல விதத்திலும் தாழ்வான நிலைமையில் இருக்கிறார்கள்.

மனிதர் ஸ்திரீகளை எத்தனை இட்டமாக எண்ணினபோதிலும், கடவுள் அவர்களை மேன்மையாகவே எண்ணியிருக்கிறார் என்பது பல நியாயங்களால் பிரத்தியட்சமாம். தேவன் ஸ்திரீகளை விருட்ச ரூபமாக அல்லது விலங்கினங்களில் ஒன்றாக உருவாக்காமல், புத்தி சித்தம் உணர்ச்சியையுடைய மானிடராக அமைத்திருப்பது அவர்களை மேன்மைப்படுத்தவா, அல்லது கீழ்மைப்படுத்தவா?

புருஷர் ஸ்திரீகளைக் காலுக்குச் செருப்பாக்கிக் கீழே போட்டுத் தேய்க்காமல், அவர்களைப் பட்சமாய் அரவணைத்து நடத்தும்படிக்கல்லவா, கடவுள் ஸ்திரீயை மனுஷனுடைய காலெலும்பால் உருவாக்காமல், பக்கத்தெலும்பால் உருவாக்கினார்.

மிருகசாதியிலும் பட்சிசாதியிலும் ஆணினவைகளுக்கே அழகைக் கொடுத்திருக்க, மனுஷசாதியில் பெண்பாலர் புருஷரைப்பார்க்கிலும் அழகு சௌந்திரியமுள்ளவர்களாயிருக்கும்படித் தேவன் திருவுளமானதென்ன?

ஆணுக்குத் துணையாய்ப் பெண்ணைக் கடவுள் அமைத்தாரென்பது ஆகம வாக்கு. துணைநிற்கும் வேலை சொற்ப வேலையா? துணைநிற்கும் பேரைத் தூசிக்கொப்பாய் எண்ணுவது தர்மமா?



தேவன் அவரவர்க்கேற்ற பாரத்தை அவரவர் தோள்மேல் வைக்கும் அனந்த ஞானசொரூபி. அவர் குருவித்தலைமேல் பனங்காய் வைப்பதில்லை. மனிதசாதிக்கு இயல்பாயிருக்கும் துன்பங்களைக் கணக்கிட்டுப்பார்த்தால், இளமைதொட்டு முதுமைவரையில் பெண்களுக்குள்ள துன்பங்களே மிகுதியென்பது நிச்சயம். பெண்களே துன்பத்தைச் சகிக்கும் பொறுமைக்கும், பாரந்தாங்கும் பலத்திற்கும் உறைவிடமாயிருக்கத்தக்கவர்கள் என்பதற்கு இது சாட்சியமல்லவா? மேலும் துன்பம் எங்கேயோ, அங்கே சகாயரும் சமீபம் என்பதை அறிவோம். உத்தம சகாயர் தேவனே. அதிகத் துன்பத்துக்கும் ஆபத்துக்கும் ஆளாயிருக்கும் ஸ்திரீசாதிக்குத் தேவதுணை அதிகம் என்பதற்கு ஐயமில்லை. இதுவும் ஸ்திரீசாதியை மேன்மைப்படுத்துகிறதன்றோ?

"தேனே, ரசமே,
தெவிட்டாத செங்கரும்பே,
மானே, என் கண்ணே,
வயிரமணிப் பெட்டகமே."
"பெட்டகமே, பொற்பணியே,
பேழையே, என்னுசைக்
கட்டழகே, மாற்றுயர்ந்த
கட்டித் திரவியமே."

என்று வையகமும் வானகமும் அருமைபெருமையாய் வர்ணித்துப் பேசும் அரும்பொருள் என்ன? அனேக ராஜராஜாக்கள் தவசிருந்தும் காணாத விலையேறப்பெற்ற மேன்பொருள் என்ன? மானிடக்குழந்தையல்லவா? வெற்றிசிறந்த வீரவானெனவும், ரதகஜதுரகபதாதிகளுடைய ராஜனெனவும், கற்றோர் மெச்சும் கல்விக்களஞ்சியமெனவும், பூதலம் புகழும் புண்ணியனெனவும், செல்வமிகுந்த சீமானெனவும் பெயர்பெறத் தக்கோராவதார்? பிள்ளைகள்தானே. பிள்ளைகளாகிய பெரும் பொக்கிஷங்களைத் தேவன் முதல்முதல் புருஷன் கையில் கொடாமல், ஸ்திரீகளாகிய நமது கையில் கொடுப்பதால் நம்மைக் கனப்படுத்துகிறார் என்பதற்கு ஆட்சேபனையென்ன?

நமது தேசத்தில் ஔவை முதலியவர்களும், மற்றனேக தேசங்களில் வேறு பல ஸ்திரீகளும், தங்கள் அறிவினாலும், மனோபலத்தினாலும், நல்லொழுக்கத்தினாலும் சிறந்தோராய் விளங்கியிருக்க, புருஷர்களுக்கு ஒத்த வரங்கள் ஸ்திரீசாதிக்கு இல்லையென்று யார் சொல்லக்கூடும்?

உலகத்தை மீட்க மனுவுருவெடுத்த இரட்சணியமூர்த்தி ஒரு மகாபுருஷனாக வானத்தினின்று இறங்காமல், கன்னித்தாயின் கைப்பாலனாகச் சித்தமானது ஸ்திரீசாதியை ஈனப்படுத்துகிறதோ, மேன்மைப்படுத்துகிறதோ? மேலும் அவர் தமது திருஉதிரத்தைப் புருஷாளுக்காகமாத்திரமல்ல, ஸ்திரீகளுக்காகவும் சிந்தினதால், ஸ்திரீ புருஷாள் அனைவரும் ஏகமாய் யாதொரு வித்தியாசமின்றி பரலோகராச்சியத்துக்கு அருகராக வேண்டுமெனச் சித்தமானதும் யாவரும் கவனிக்கவேண்டிய முக்கிய நியாயமல்லவோ?

நங்கையரே, நான் இத்தியாதி நியாயங்களால் நம்போலிய பெண்களை மேன்மைப்படுத்துவது ஏன் என்று தெரியுமா? நாம் ஆண்பிள்ளைகளை ஆளவிரும்பும் அகங்காரிகளாகும்படியல்ல, நான் என்கிற எண்ணங்கொண்டு நாசமடைவதற்கல்ல, ஆணவமிகுந்த அதனப்பிரசங்கிகளாவதற்கல்ல, ஆனால் நமக்குத் தேவனருளிய பதவி, அவர் கொடுத்திருக்கும் வேலை, அவர் நம்மிடத்தில் எதிர்பார்க்கும் நன்மை முதலியன மகா மேன்மையாயிருப்பதால், அதற்கேற்ப நாமும் நமது சகோதரிகளும், பிழைக்கவும் உழைக்கவும், இம்மேன்மைக்கேற்காத யாவையும் ஒழிக்கவும் கழிக்கவும் நாம் பிரயாசப்படவேண்டுமென்றே இந்நியாயங்களை எடுத்துக்காட்டினேன்.

மி. மி.

CHILDREN'S CORNER.

## சிறுவர்க்கான கதை.

THE THREE FRIENDS.

### மூன்று சிநேகிதர்.

ஒரு தகப்பன் தனது பிள்ளைகளுக்கு ஒவ்வொருநாள் சாயந்திரமும் பற்பல நற்போதனைகளைக் கற்றுக்கொடுப்பது வழக்கம். அப்படியே ஒருநாள் சாயங்காலம் அவன் தனது பிள்ளைகளையும் அயல் வீட்டுப் பிள்ளைகளையும் கூட்டி, அவர்களை நோக்கி: பிள்ளைகளே, நான் இன்றைக்கு உங்களுக்கு ஒரு சின்ன உவமை சொல்லப்போகிறேன். அதை நீங்கள் கவனமாய்க் கேட்டு, அதன் அர்த்தத்தைக் கண்டுபிடித்துச் சொல்வீர்களாகில், உங்களுக்கு நல்ல வெகுமதி தருவேன் என்றான். அவர்கள் அந்த உவமையென்னவென்று கேட்க, அவன் சொன்னதாவது:—

ஒரு இராசா தன் கீழிருந்த ஒரு பெரிய அதிகாரியை ஒரு ஊருக்கு அனுப்பி, அதைச் செவ்வையாய் ஆளும்படிக் கட்டளையிட்டான். அரசன் கட்டளைப்படியே அவன் போய், அதை ஆண்டுவரும் சமயத்தில், அவ்வூரார் அவனைக்குறித்து அரசனுக்குப் பல நிருபங்களை எழுதியனுப்பினார்கள். சிலர் அவனைப் புகழ்ந்தும், வேறுசிலர் இகழ்ந்தும், சிலர் அவனைப் போற்றியும், வேறுசிலர் தூற்றியும், சிலர் அவனைப் பூஷித்தும், வேறுசிலர் தூஷித்தும் எழுதியிருந்தார்கள். இவற்றால் அரசன் கலக்கமடைந்து, இவைகளை அதிகாரியிடத்திலேயே தீர விசாரிக்க விரும்பி, அவன் தன்னண்டைக்கு உடனே புறப்பட்டு வரும்படி கடிதம் எழுதினான். அதிகாரியும் அரசனின் உத்தரவை வெகு உயர்வாக எண்ணி, தனது நீண்ட பிரயாணத்துக்கு வேண்டியவைகளையெல்லாம் சேகரித்துக்கொண்டு, புறப்படுவதற்கு ஆயத்தமாயிருந்தான்.

ஊரை விடுவதற்குமுன், எல்லாரிலும் தான் அதிகமாய் நேசித்துவந்த தனது உத்தம சிநேகிதரை முந்திப் பார்க்கப் போனான். அவர்களோ அவனோடு ஒன்றும் பேசாமலும், தங்கள் ஆசனங்களை விட்டு எழுந்து அவனுக்கு மரியாதைபண்ணாமலும், தாங்கள் உட்கார்ந்திருந்தபடியே அவனை அனுப்பிவிட்டார்கள். பின்பு இரண்டாவதாக இவர்களிலும் சற்றுக் குறைவாய் நேசித்துவந்த சிநேகிதரண்டைக்குப் போனான். அவர்கள் கரைமட்டும் வந்து, அவனைக் கப்பலேற்றிப் போனார்கள். கடைசியாக அவன் மிகவும் அலட்சியமாய் எண்ணியிருந்த சிநேகிதரண்டைக்குப் போனான். அவர்களோ அவனோடுகூட கப்பலேறிப் பிரயாணம்பண்ணி, சுகமாய் மறுகரை சேர்ந்ததும், அரசன் சமுகத்தில் போய், அதிகாரியின் ஆளுகையைக்குறித்து நல்ல நியாயங்கள் எடுத்துக்காட்டி, அரசனின் ஆக்கினைக்கு அவனை நீங்கலாக்கினார்கள். இதைச் சொல்லி இப்படிக்கொத்த சிநேகிதர்கள் யார் என்று தகப்பன் பிள்ளைகளைக் கேட்க, அவர்கள் ஒருவரையொருவர் பார்த்து ஒன்றும் தெரியாமல் நின்றார்கள். இதைக் கண்டு அவன் சொன்னதாவது:—

இராசாதி இராசாவாகிய தேவன் நம்மில் ஒவ்வொருவரையும் இவ்வுலகத்தில் அனுப்பியிருக்கிறார். மனிதராகிய நமக்கு இங்கே மூன்று விதமான சிநேகிதர் இருக்கிறார்கள். முந்தினவர்கள் நாம் வெகுவாய் நேசிக்கும் செல்வத்தைக் குறிப்பிக்கிறார்கள். தேவன் நம்மை மரணத்தின் மூலமாய்த் தம்மண்டைக்கு அழைக்கும்போது, இவைகள் ஒரு உதவியும் நமக்குச் செய்யக்கூடாதவைகளாய்ப் பின்தங்கிவிடுகின்றன. இரண்டாம் வகைச் சிநேகிதர் நமது உற்றார் பெற்றாரைக் குறிப்பிக்கிறார்கள். இவர்கள் நமது கல்லறைமட்டும் வந்து, நம்மைத் தனியே விட்டோடிப்போகிறார்கள். மூன்றாம் வகைச் சிநேகிதரோ நாம் மிகுந்த கவலைந்தாழ்ச்சியோடே நடத்தும் நமது செய்கைகளையும் எண்ணங்களையும் குறிப்பிக்கிறார்கள். இவைகளே நம்மோடு தேவனிடம் வந்து, நமக்காகப் பேசுகிறவைகளாயிருக்கின்றன. ஆகையால் நற்கிரியைகளைச் செய்யவே நாம் நாள்தோறும் கவலைப்படவேண்டியது என்று மகா இன்பமாய் விஸ்தரித்துப் புத்தி புகட்டினான்.



GLEANINGS.

## சமாச்சாரக் குறிப்புகள்.

கல்கத்தாவிலுள்ள வைத்திய கல்லூரியில் கடைசியாய் நடந்த எம். பீ. பரீட்சையில் சித்திபெற்றவர்களில் வேர்ஜீனியா மேரி மிற்றர் என்னும் சுதேச கிறிஸ்தவப் பெண்மணி முதல் இடம் பெற்றாளென அறிந்து மிகவும் சந்தோஷப்படுகின்றோம். இவளோடு சித்தியடைந்த வேறொரு கிறிஸ்தவப்பெண் பீதுமோக்கீ போஸ் என்பவள். இவ்வாறு சுதேச ஸ்திரீ வைத்திய பண்டிதர் நாளுக்கு நாள் அதிகரித்து வருவது நமது தேசத்துக்கு நன்மையை உண்டாக்குமென நம்புகின்றோம்.

---

வெகுகாலத்துக்குமுன் சென்னையில் வியாபாரியாயிருந்த ஆன்த்ரு சிமித் என்பவரின் விதவையாகிய அமீலியா அம்மாள் சென்னையிலுள்ள 'அநாதிபேர்களை ஆதரிக்கும் சங்கத்தாருக்கு' ஆயிர ரூபாய் நன்கொடை அளித்தார்கள்.

---

ஜோட்புரியில் பிரசாரமாகும் பாரதபந்து என்னும் பத்திரிகையின் பத்திராசிரியராகிய உயர்குலப் பிரபு அதே குலத்தைச் சேர்ந்த ஒரு விதவையை விவாகம் செய்துகொண்டார். விவாகம் மார்வார் நகரில் நடந்தேறியது.

---

காங்துளி என்னும் ஒரு பெங்காள கனவானுடைய மனைவி பீ. ஏ. பட்டம் பெற்று, கல்கத்தாவிலுள்ள வைத்திய கல்லூரியில் ஐந்து வருஷம் படித்து, ரண வைத்தியம், மருத்துவ வைத்தியம் முதலிய வைத்திய வகைகளில் அப்பியாசம் செய்துவரத் தகுதியுடையவளென்று யோக்கியதாபத்திரம் பெற்று, இப்பொழுது ஸ்திரீகளுக்கும் குழந்தைகளுக்கும் அங்கிலேய முறைப்படி வைத்தியம்பார்த்து வருகிறாளென அறிகிறோம்.

CHILDBIRTH.

## பிரசவீநூல்.

(தொடர்ச்சி.)

**நற்பிரசவத்துக்கான வழிகள்.**— ஒரு ஸ்திரீ விக்கினமின்றி பிரசவிக்க விரும்பினுல், ஒன்றில் ஒரு பிரசவ வைத்தியசாலைக்குப் போகவேண்டும், அல்லது ஒரு தேர்ந்த மருத்துவச்சியை அமர்த்திக்கொள்ளவேண்டும்; இவைகளே (நற்பிரசவத்துக்கான) சிறந்த வழிகள். ஆகிலும் இவைகள் இந்தியாவில் இன்னும் அதிகமாயிராதபடியால், வெகுபேர் பிரியப்பட்டாலும் சொற்பபேர்மாத்திரம் அவைகளால் உண்டாகும் நன்மையில் பங்குபெறக் கூடியவர்களாயிருக்கிருர்கள். டவ்ரின் பெருமாட்டியார் ஏற்படுத்திய நிதியைக்கொண்டு இவைகளை அதிகரிக்கச் செய்யும் வழியைக்குறித்துப் பின்னுகச் சொல்லப்படும். இந்தச் சிறுநூலிலுள்ள பிரமாணங்களைக் கவனித்து நடப்பதால், மிகுந்த உதவி கிடைக்கும். பிரசவிக்கப் போகும் தாய்மாரும் தந்தையரும் இதை வாசிக்கவேண்டியது. தாய் வாசிக்கக்கூடாவிட்டால், கணவன் அதை அவளுக்கு விவரிக்க வேண்டியது. இதனுல் அவள் அநேக வீண் பயங்களிலிருந்தும், வெகு வருத்தங்களிலிருந்தும் தன்னை நீங்கலாக்கிக்கொள்ளக்கூடும்.

கணவன் மருத்துவச்சிக்கு நல்யோசனை கொடுக்கவும் பிரயாசப்படவேண்டியது. ஏனெனில் அநேக மருத்துவச்சிகள் எதையும் கற்கக்கூடாத கிழவிகளும், அறிவீனரும், மூடரும், மூடபக்தியுள்ளவர்களுமாய் இருக்கிருர்கள் என்பது எல்லோரும் ஒத்துக்கொள்ள வேண்டிய விஷயம்; ஆனுல் சிலரோ அதிக விவேகமுடையவர்களாயிருக்கிருர்கள். மோசமென்று தனக்குத் தோன்றும் எந்த வழக்கத்தையும் கணவன் எந்தச் சமையத்திலும் நிறுத்தலாம். பொதுவாய் இந்நூலில் பிரசவத்தில் செய்யப்படவேண்டியவைகளின் காரணங்கள் காட்டப்படும்.

## சுகமும் பலமுமுள்ள பிள்ளைகளைப் பெறுவதற்கான வழி.

“இனத்தை இனம் பிறப்பிக்கும் என்பது உலக இயலுக்கொத்த பிரமாணம். பலவீனப் பெற்றோர் பலமுள்ள பிள்ளைகளைப் பெறும்படிக்குப் பார்ப்பது முட்செடிகளில் திராட்சப்பழங்களையும், முட்பூண்டுகளில் அத்திப்பழங்களையும் பறிக்கிறதுபோலிருக்கும்.

இதற்கு அவசியம் வேண்டிய மூன்று காரியங்கள் பின்னுகச் சொல்லப்படும்:

1. **பக்குவப் பிராயம்.**— உறுதியான வீட்டுச்சாமான் ஒன்றைச் செய்ய விரும்பும் ஒருவன் மரக்கன்றின் மெல்லிய பலகையைக்கொண்டு அதைச் செய்யமாட்டான். அநேக இந்துப் பிள்ளைகள் இளம்பிராயத்திலேயே மரித்துப் போவதற்குப் பாலவிவாகமே ஒரு காரணமாம். அவர்கள் ஐரோப்பியரிலும் பலக்குறைவுள்ளவர்களாய் இருப்பதற்கும் இதுவே ஒருவாறு காரணமாகின்றது. அவர்களில் அநேகர் பிள்ளைகளின் பிள்ளைகளாய் இருக்கிருர்கள்.

கீர்த்திபெற்ற கிரேக்க சாஸ்திரியாகிய அரிஸ்டாட்ல் என்பவர் ௨௰௱ வருஷத்துக்கு வெகுகாலத்துக்குமுன்னே சொன்னதாவது: “பருவகாலத்துக்கு முந்தி விவாக ஐக்கியத்துக்குட்படுவதால், குறைவான சந்தானமும், ஆண்களுக்குப்பதிலாய் பெண்களும் உண்டாகின்றன; மேலும் இவர்கள் பலத்திலே குறைவுள்ளவர்களும், பருமனிலே குட்டையானவர்களுமாய் இருக்கிருர்கள். பாலவிவாகம் நடத்தப்படும் தேசங்களிலே காணப்படும் சிறு ஜீவன்களால் இது மனுஷசாதியில் மாத்திரமல்ல, மற்ற ஜீவஜந்துக்களிடத்திலும் நடந்து வருகிறதென்பது தெளிவாகிறது.” மேலும் சற்று முதிர்ந்த வயதில் விவாகம்செய்யப்படும் ஸ்திரீகளைப்பார்க்கிலும் இளம்பிராயத்தில் விவாகம்செய்யப்படும் ஸ்திரீகள் அநேகமாய் மலடிகளாயும் இருப்பார்கள்.

(இன்னும் வரும்.)


# மாதர் மித்திரி.

புத். ௨. ௧௮௮௮ ௵ - செப்டெம்பர் ௴. இல. ௩.


NOTES.

## பத்திராதிபர் குறிப்புகள்.

PERSEVERANCE.

### விடாமுயற்சி.

“மெல்லமெல்லப் பாயும் தண்ணீர் கல்லுருவப் பாயும்” என்பதுபோல “விடாமுயற்சி எக்காரியத்திலும் வெற்றிதரும்” என்பதும் எல்லோரும் ஒத்துக்கொள்ளும் சத்தியமாயிருக்கிறது. அநேக இடையூறுகளையும் வருத்தங்களையும் சகித்து, இரவும் பகலும் விடாமுயற்சியாய் இருந்தவர்களே உலகத்துக்குப் பாக்கியமாயும் பெருங்காரியங்களை முடித்த வீரர்களாயும் விளங்குகிருர்கள். இதை ஒரு திருஷ்டாந்தத்தால் விளக்குவோம்.

பளிங்குபோலத் துலங்கும் மட்பாண்டங்களைச் செய்யும் வித்தையைக் கண்டுபிடித்த பாலிசி என்னும் குயவன் அன்றாடக வேலைசெய்து பிழைத்த ஓர் ஏழை மனிதன். மண்ணின் அளவையும், மண்ணைச் சுடுவதற்கான அனலின் அளவையும் சரியான பிரகாரம் அறியும்பொருட்டுத் தனக்குண்டானதையெல்லாம் செலவழித்துவந்தான். தங்கள் அப்பத்தையெடுத்து அநியாயமாய் வீணில் செலவிடுகிருன் என்று அவன் மனைவி மக்கள் அலறியும், அதை அவன் சிறிதும் பாராட்டவில்லை. கடைசியாக அவன் சில மட்பாண்டங்கள் செய்தபோது, எரிக்க விறகும் செலவிட பணமும் இல்லாதபடியால், வீட்டில் இருந்த தட்டுமுட்டுகளையெல்லாம் முறித்துச் சூளையில்போட்டு ஊண் உறக்கம் இன்றித் தானெடுத்த கருமத்திலேயே கண்ணுயிருந்தான். பார்ப்போர் யாவரும் அவனுக்கு அறிவுகெட்டுப் பைத்தியம் வந்ததென்று பலவாருகத் தூற்றினுர்கள். ஆனுல் மட்பாண்டங்களைச் சூளையிலிருந்து எடுத்தபோது, அவைகள் பளிங்குபோலத் துலங்கினதையும், அவன் எண்ணிய கருமம் கைகூடினதையும் கண்டு மிகவும் ஆச்சரியப்பட்டார்கள்.

விடாமுயற்சியால் வெற்றிபெற்ற அநேகரில் பாலிசி என்பவனும் ஒருவன். எந்த நற்காரியத்திலாகிலும் சரி, எந்த மேலான காரியத்திலாகிலும் சரி, நாம் சித்தி

பெற விரும்பினால், விடாமுயற்சியுள்ளோராய் இருக்கவேண்டும். தாய்மார் தங்கள் பிள்ளைகளைச் சன்மார்க்கராய் வளர்ப்பதில் விடாமுயற்சியுள்ளோராய் இருக்கவேண்டும். எத்தனை வருஷங்களானாலும் அவர்களை நல்லோராக்கவே பிரயாசப்படவேண்டும். அவர்களுக்கு உண்மையின் பயனையும், நேர்மையின் சிறப்பையும், பொறுமையின் பிரயோஜனத்தையும், அயலாரை நேசித்தலையும், நன்மையை நாடுவதையும் குறித்துப் போதிக்கவேண்டும். அப்போதுதான் தாய்மார் பாக்கியவதிகளாயிருக்க இடமுண்டு. இப்போது வீடுகளுக்கு வந்து போதிக்கும் ஸ்திரீகளிடத்தில் படித்துவரும் தைரியசாலிப்பெண்களும் கல்விகற்பது கடினம் என்று தங்கள் தைரியத்தை இழந்துபோகாமல், சித்திபெறுமட்டும் இடைவிடாமல் பிரயாசப்படுவார்களாக.

A HAPPY HOME.

## பாக்கியம் நிறைந்த வீடு.

வயதில் முதிர்ந்த ஒரு ஸ்திரீ புருஷன் வீட்டுக்குப் போகும் ஒரு புதுப்பெண்ணை நோக்கி "உன் புதுவீட்டில் நீ பாக்கியமுள்ளவளாய் இருக்க விரும்பினால், எக்காலத்திலும் எந்த அன்பில்லாத வார்த்தையையும் உன் புருஷனிடம் உபயோகிக்காதிரு; அப்பொழுது பாக்கியமாய் வாழ்வாய்" என்றாள். இது சகலரும் ஒத்துக்கொள்ளும் சத்தியம். ஆனால் கடுகடுப்பும் வெடுவெடுப்புமுள்ள குணம் ஒன்றிலிருந்து மற்றொன்றைத் தாவும் நெருப்புபோலிருக்கிறது.

மனைவி புருஷனிடத்தில் கடுகடுத்துப் பேசினால், அவனும் அவ்வாறே பேசுவான். தாய் தன் பிள்ளையினிடம் வெடுவெடுப்பாயிருந்தால், அது தன் சகோதரனிடத்திலும் சகோதரியினிடத்திலும் அவ்வாறேயிருக்கும்; இப்படியே இந்த நெருப்பு அந்த முழுக்குடும்பத்திலும் பற்றிக்கொள்ளும். ஆகையால் அநேக துன்பங்களும் சஞ்சலங்களும் உண்டாகும்போது, மனைவி தனது மூர்க்ககுணத்தை அடக்கி, பொறுமையாயிருக்கப் பிரயாசப்படவேண்டும். கோபத்தில் வெகு தூரம் சிந்தப்படும் வார்த்தைகளை மறுபடியும் பொறுக்குவது மகா கஷ்டம். நாம் எவ்வளவாய் விரும்பினாலும் அவைகள் பொறுக்கி மறைக்கப்படமுடியாது. ஆகையால் நமது சிறு அவயவமாகிய நாக்கைக் காக்கவேண்டியது அவசியமல்லவா? நமது நாக்கைக் காத்தால், நாம் பேசுவதைக் கவனிப்போம்; நமது பேச்சைக் கவனித்தால், துக்கம் துன்பத்தை நீக்குவோம். அப்பொழுது நமது வீடும் பாக்கியம் நிறைந்ததாயிருக்கும்.

THE GOLDEN TREE.

BY A. L. O. E.

## தங்க விருட்சம்.

(முடிவு.)

இதற்கு மாறாக வாய்க்குக் கசப்பாயிருக்கும் பழங்களையும் பாருங்கள். ஆனால் அவைகள் ஆத்துமாவுக்குச் சிறந்த ஔஷதமாய் இருக்கின்றன. இவைகள்தான் எச்சரிப்பின் பழங்கள். பாவத்தின் சம்பளம் மரணம்; (ரோம: 6, 23.) பொய் உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பானவைகள். (நீதி: 12, 22.) இப்படிக்கொத்த பழங்களை உங்கள் ஞாபகசாலையில் திரளாய்க் குவித்துவையுங்கள்.



இன்னும் அதிக உயரத்தில் பாருங்கள். ஒரு பக்கத்தில் துதி என்னும் தங்கக் கிளையையும் மற்றொரு பக்கத்தில் ஜெபம் என்னும் தங்கக் கிளையையும் பார்ப்பீர்கள். துதியின் பாட்டு இருதயத்தில் உண்டாக்கும் சந்தோஷத்தை எப்படிப்பட்ட இனிய திராட்சரசமும் உண்டாக்குகிறதில்லை. என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது, என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களிகூருகிறது. (லூக்: 1,46. 47.) பிழியப்படும் திராட்சக்குலைகள்முதலாய் ஜெபத்தைப்போன்ற அதிக இனிப்பைத் தருகிறதில்லை. தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும். (சங்: 51, 10.)

பாவிக்கு நற்செய்தியும், பரிசுத்தவானுக்கு வாக்குத்தத்தங்களுமாகிய இவைகள் தங்க விருட்சத்தின் உச்சியிலுள்ள ஜீவப்பழங்களாய் இருக்கின்றன. சத்திய வேதத்தைப் புறம்பே பார்ப்பதுபோல இப்பழங்களைப் பார்ப்பதில்மாத்திரம் திருப்தியடையாமல், வருத்தப்பட்டாவது ஏறி, விசுவாசம் என்னும் கையை நீட்டிப் பறித்துச் சாப்பிடுங்கள்.

தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். (யோவா: 3, 16.) இது பாவிக்கடுத்த நற்செய்தி. நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன். (வெளி: 2, 10.) இது பரிசுத்தவானுக்கடுத்த வாக்குத்தத்தம்.

இதை வாசிக்கும் சிநேகிதியே, உன்னிடத்தில் சத்தியவேதம் ஒன்று இல்லாவிட்டால், அதைச் சம்பாதிக்க இப்பொழுது வெகு ஊக்கமாய்ப் பிரயாசப்படமாட்டாயா? அதின் பழங்களில் சிலவற்றை மாத்திரம் ருசிபார்த்த உனக்கு இன்னும் அதிகமாய் ருசிக்க ஆசையில்லையா? உலகத்திலுள்ள சங்கங்களில் மகாப்பெரிதான ஒரு பெரிய சங்கம் இங்கிலாந்து தேசத்தில் உண்டு. உலகமெங்கும் சத்திய வேதாகமங்களை அனுப்புவதே அச்சங்கத்தாரின் நோக்கம். இவைகள் அநேக ஆயிரங்கணக்கான பாஷைகளில் திருப்பப்பட்டும் இருக்கின்றன. இவ்வாறு தங்க விருட்சம் அநேக கரையோரங்களில் நடப்பட்டு இருக்கிறது. இப்படியே உன் தோட்டத்திலும் ஒன்று இருக்கவேண்டியது. இல்லாவிடில் நீ அதன் விதை ஒன்றைச் சம்பாதிக்குமட்டும் இளைப்பாறாதே; இதினால் உனது சுயபாஷையில் ஒரு வேதாகமத்தைச் சம்பாதித்துக்கொள்ளச் சொல்லுகிறேன். நான் முன் சொன்னதுபோல பழத்தைப் பார்ப்பதால்மாத்திரம் திருப்தியடையாமல், அதைப் புசித்து உன் இருதயத்தில் வைத்துக்கொள். ஏனெனில் வேதாகமத்திலுள்ள ஒரு வாக்கியம் அநேக தருணங்களில் ஆத்துமாவை இரட்சிக்கும் எத்தனமாயிருந்திருக்கிறது.

தங்க விருட்சத்தின் பழங்கள் மெய்யாகவே சொல்லிமுடியாத அருமையான பழங்களாய் இருக்கின்றன.



THE FLOOD.

## ஜலப்பிரளயம்.

(முடிவு.)

நாற்பதுநாள் விடாமல் பூமியின்மேல் மழைபெய்தபோது, ஜலம் பெருவெள்ளமாகி, பூமிமுழுவதையும் மூடிற்று. பேழையானது ஜலத்தின்மேல் மிதந்துகொண்டிருந்தது. ஆனால் ஜலம் பூமியின்மேல் இன்னும் நூற்றைம்பதுநாள் மிகவும் பிரவாகித்துக்கொண்டிருந்தது; அப்பொழுது தேவன் பூமியின்மேல் காற்றை வீசப்பண்ணினதினால், ஆழத்தின் ஊற்றுக்கண்களும், வானத்தின் மதகுகளும் அடைபட்டு, மழையும் நின்று, ஜலம் நாளுக்குநாள் வற்றிக்கொண்டேவந்தது. இதற்குப்பின் பேழை அராராத் என்னும் மலைகளின்மேல் தங்கிற்று; ஜலம் வடிய வடிய மலைச்சிகரங்களும் காணப்பட்டன.

நாற்பதுநாள் சென்றபின், நோவா பேழையின் ஜன்னலைத் திறந்து, ஒரு காகத்தை வெளியே விட்டான்; அது பூமியின்மேல் இருந்த ஜலம் வற்றிப்போகும்வரைக்கும் போகிறதும் வருகிறதுமாய் இருந்தது. பின்பு ஜலம் குறைந்துபோயிற்றோ என்று அறியும்படி, ஒரு புறாவைத் தன்னிடத்திலிருந்து வெளியேவிட்டான். பூமியின்மீதெங்கும் ஜலம் இருந்தபடியால், அந்தப் புறா தன் உள்ளங்கால் வைத்து இளைப்பாற இடம் காணாமல், திரும்பிப் பேழையிலே மறுபடியும் அவனிடத்தில் வந்தது; அவன் அதைக் கையை நீட்டிப் பிடித்துத் தன்னிடமாகச் சேர்த்துக்கொண்டான். பின்னும் ஏழுநாள் பொறுத்து, ஒரு புறாவை வெளியே விட்டான்; அது சாயங்காலத்தில் ஒரு ஒலிவமரத்தின் இலையைக் கொத்திக்கொண்டு வந்தது; அதினால் நோவா ஜலம் குறைந்துபோயிற்று என்று அறிந்து, ஏழுநாள் பொறுத்து மறுபடியும் புறாவை வெளியே விட்டான்: அது அவனிடத்திற்குத் திரும்பி வரவில்லை.



நோவா பேழையின் மேல்தட்டை எடுத்துப்பார்த்தபோது, பூமியின்மேல் ஜலம் இல்லாதிருந்தது; ஆகிலும் பூமி காயுமட்டும் அவன் பேழையிலேயே இருந்தான். பூமி காய்ந்ததும், தேவன் நோவாவை நோக்கி: நீயும், உன் மனைவியும், உன் குமாரரும், உன் குமாரரின் மனைவிகளும், உன்னிடத்தில் இருக்கிற சகல ஜீவபிராணிகளும் பேழையை விட்டுப் புறப்படுங்கள் என்றார்.

அப்பொழுது நோவா கர்த்தருக்கு ஒரு பலிபீடம் கட்டி, சுத்தமான சகல மிருகங்களிலும், சுத்தமான சகல பறவைகளிலும் சிலவற்றைத் தெரிந்துகொண்டு அவைகளைப் பலியிட்டான்; கர்த்தர் அவனோடு ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்தி: இனி எந்த மாம்சமானாலும் ஜலப்பிரளயத்தினால் சங்கரிக்கப்படுவதில்லையென்றும், பூமியை அழிக்க இனி ஜலப்பிரளயம் உண்டாவதில்லையென்றும், பூமியுள்ள நாளளவும் விதைப்பும் அறுப்பும், சீதளமும் உஷ்ணமும், கோடைகாலமும் மாரிகாலமும், பகலும் இரவும் ஒழிவதில்லை என்றும் சொன்னார். இந்த உடன்படிக்கையின் அடையாளமாக அவர் தமது வானவில்லை மேகத்தில் வைத்தார். தேவன் நோவாவையும் அவன் குமாரரையும் ஆசீர்வதித்து: நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள், மனுஷன் தேவசாயலில் உண்டாக்கப்பட்டபடியால், மனுஷனுடைய இரத்தத்தை எவன் சிந்துகிறானோ, அவனுடைய இரத்தம் மனுஷனாலே சிந்தப்படக்கடவது என்றார்.

HYMN.

## ஞான கீதம்.

THE GOOD FIGHT.

### நல்ல போராட்டம்.

தெய்வ கிருபையைத் தேட
நீ போராடிக்கொண்டிரு;
ஆவி பாரமற்று ஏற
நன்றாய் ஜாக்ரதைப்படு.

2. வாசலானதோ இடுக்கம்,
தாழ்மையாகி உட்படு;
ஜீவ வழியோ நெருக்கம்,
லோக நேசத்தை விடு.

3. வேண்டுதலினால் போராடி,
ஆண்டவரின் தயவு
காணுமட்டுக்கும், மன்றாடி
கூப்பிட்டுக்கொண்டே இரு.

4. கர்த்தர் உன்னை தயவோடே
ஏற்றுக்கொண்ட பிறகு,
பாவம் உன்னிலே வேரோடே
செத்ததென்றெண்ணுதிரு.

5. ஜீவனுள்ள நாள் மட்டாக
மோசங்கள் இருக்குது;
திகிலும் பயமுமாக,
உன் ரட்சிப்பைக் காத்திரு.

HANNAH MORE.

## ஹன்னா மோர் அம்மாள்.

அங்கிலேய நாட்டார் வெகு அருமையாக எண்ணும் அநேக நூற்களின் ஆசிரியளாகிய ஹன்னா மோர் என்னும் அம்மாள் அங்கிலேய தேசத்திலுள்ள கிளவுஸ்ற்றர் மாகாணத்தில் ௧௭௪௫-ம் ௵ பிறந்து, ௧௮௩௩-ம் ௵ மரித்தாள். அவள் தகப்பன் உபாத்தித்தொழில் செய்துவந்த ஓர் வயோதிகன். அவள் பிறந்த காலத்தில் அநேக அங்கிலேயப் பெண்களுக்கு எழுத வாசிக்கத் தெரியாது. ஆயினும் இவள் தன் சகோதரிகள் வைத்திருந்த பள்ளிக்கூடத்தில் எழுத வாசிக்கக் கற்றுக்கொண்டு, பதினாறும் பிராயத்தில் தனது முந்தின நூலை இயற்றினாள். சில வருஷங்களாய் நாடகத்துக்கென்று அநேக காவியங்களையும் வசனங்களையும் எழுதிவந்தாள். கிறிஸ்துவின் அன்பு அவளின் இருதயத்தில் மூளவே, இவ்வாறு எழுதுவதை உடனே நீக்கி உத்தம கிறிஸ்தவளானாள்.

அக்காலத்து அங்கிலேய ஜனங்கள் சத்தியவேதத்தைச் சரியான பிரகாரம் கற்காதவர்களும், தேவனை முழு இருதயத்தாலும் வணங்காதவர்களுமான துன்மார்க்கராயிருந்தார்கள். ஏழைகளின் நிலைமை மெத்தப் பரிதாபமாயிருந்தது. பிள்ளைகளுக்கும் விசேஷமாய்ப் பெண்களுக்கும் நல்ல விஷயங்களைக் கற்றுக்கொடுப்பதற்கான கல்விச்சாலைகள் இருந்ததில்லை. தனது சுயதேசத்துப் பெண்களின் பரிதாப நிலைமையைக் கண்ணுற்ற ஹன்னா மோர் அம்மாள் அவர்களை நற்சீருக்குக் கொண்டுவருவதற்கும், அவர்கள் தங்களின் உயர்ந்த பதவியைக் கண்டுணருவதற்குமான வழிவகைகளைத் திறந்துவிட முயன்றாள். இதற்கென்று அவள் அநேக நூற்களை எழுதி, பணம் சம்பாதித்து, ஏழைப்பிள்ளைகளுக்காகப் பள்ளிக்கூடங்களை எங் ஸ்தாபித்தாள். இத்துடன் எல்லாரா வெகு பிரியத்துடன் வாசிக்கப்பட்டு ஒரு பத்திரிகையையும் பிரசுரஞ்செ வந்தாள். இதினால் இவள் பேரும் புக பெற்று, தனது இருபத்தெட்டாம் பி த்தில் லண்டன் பட்டணத்துக்குப் னபோது, அநேக கல்விமான்களும் ன்களும் அவளின் நட்பை நாடினார்கள். வேல்ஸ் இளவரசி அவளைத் தன் நாட்டுக்கு அழைத்து, தன் புத்திரிக்குக் கல்வி கற்பிப்பதற்கான ஒரு ஒழுங்கு ஏற்படுத்த மிகவும் கேட்டுக்கொண்டாள்.

அவள் விவாகம் செய்துகொண்டதில்லையாயினும், எல்லோருக்கும் தாயைப்போலிருந்தபடியால், ஹன்னா மோர் அம்மாள் என்று அன்போடு அழைக்கப்பட்டாள். அவள் எழுதின அநேக நூற்களில் 'சன்மார்க்க சங்கிரகம்,' 'புத்தி போதனை' என்னும் இரண்டு நூற்களும் மிகவும் சிறந்தனவ. அவள் மரித்தபோது, தனது நூற்களால் சம்பாதித்த மூன்று லட்சம் ரூபாய்க்குச் சரியான முப்பதினாயிரம் பவுனில் அதிக பாகத்தை ஏழைகளின் ஆதரவுக்கென்று பின்வைத்துப்போனாள். "எழுத அறிந்த ஸ்திரீகளில் இவளைப்போலத் தங்கள் தலைமுறைக்கு அதிக நன்மை செய்தவர் வெகுபேர் இல்லை" என்று ஒரு நூலாசிரியர் நியாயமாகவே இவளைக்குறித்துக் கூறுகின்றார். இந்தச் சரித்திரத்தை வாசிக்கும் கற்றறிந்த நமது இந்து சகோதரிகளும் கல்லாத தங்களின் சுயதேசத்துப் பெண்களுக்கும் கல்வி கற்பிப்பதற்கான சகல வழிகளையும் தேடுவார்களாக.



HANNAH MORE.
ஹன்னா மோர் அம்மாள்.

GOOD WORDS FOR WOMEN.

## நங்கையர்க்கு நல்லுரை.

### 3. அழகு.

அழகழகென்று அடித்துக்கொள்வது அநேக பெண்களுக்கு இயல்பு. இந்தப் பெண் வெகு சட்டம் என்றும், அந்தப் பெண் கூந்தலழகியென்றும், இவள் கட்டழகியென்றும், அவள் நடையழகியென்றும், தங்களைக்குறித்துப் பலரும் சொல்லவேண்டுமென்று ஆசைப்பட்டு, அழகு தேடும் பெண்கள் அனேகர். ஆனால் மெய்யழகு எதுவென்றும், பொய்யழகு எதுவென்றும், ஆசிக்கத்தக்கது எதுவென்றும், துவேஷிக்கத்தக்கது எதுவென்றும் அவர்களுக்குத் தெரிகிறதில்லை.

சிருஷ்டிகர் சிலருக்குச் சுபாவமாகவே அழகைக் கொடுத்திருக்கிறார். சிலருக்கு அழகான கூந்தலுண்டு. கறுத்து, அடர்ந்து, நெளிந்து, நீண்டிருக்கிற அளகாபாரம் ஸ்திரீகளுக்கு அலங்காரமே. சிலருக்கு வடிவழகுண்டு. நெற்றி, நேத்திரம், மூக்கு, கன்னம், உதடு முதலியன ஒன்றுக்கொன்று ஏற்ற அளவினதாகவும், அங்கவீனம் ஒன்றுமில்லாமலும் இருக்குமாகில், அது சிறப்பே. இவ்வழகோடு நிறவழகும் கூடிக்கொண்டால் வெகு நேர்த்தியே. இந்த இயல்பான அழகு தேவன் கொடுத்ததென்று அனேகர் நினைக்கிறதில்லை. அழகினிமித்தம் அகந்தைகொள்வார் பலர். மயிர்த்தலையை மொட்டைத் தலையாக்கவும், வடிவழகை நொடிநேரத்தில் குலைத்துப்போடவும், நிறத்தையெல்லாம் க்ஷணப்பொழுதில் பறக்கடிக்கவும் அமலனால் கூடாதா? ஆ, ஆ, வயது, வறுமை, நோய்நொடி முதலியவற்றால் எத்தனை அழகு சுரூபிகள் மகா குரூபிகளாக மாறியிருப்பதை நமது கண் கண்டிருக்கிறது. நமது நாட்டுச் சகோதரிகளில் அனேகர் இதை மறந்து, அழகுக்கு அழகுசெய்யப் புகுந்து, தங்கள் அருமையான நேரத்தையும், நுண்ணிய புத்தியையும், வெகுவான பணத்தையும் தங்களை அலங்கரிப்பதில் செலவிடுகிறார்கள்.

அழகுக்கென்று பச்சைக் குத்திக்கொள்ளும் இலச்சையை என்னவென்று சொல்வேன். அமலன் கொடுத்த அழகிய முகத்தை அந்தகம் பிடித்த ஒரு குறத்தியினிடம் ஒப்புவித்து, அவள் தன் கூரிய ஊசியைக் கொடுமையாய்ப் பிரயோகிக்க, அப்பாடி அம்மாடியென்று அழுதுகொண்டும், பல்லைக் கடித்துக்கொண்டும், வேதனை மிகுக்க வெட்கங்கெட்டுக் கோடும் புள்ளியும் குத்திக்கொள்வது புத்தியா, அழகா? இது அழகுக்கு இழவேயன்றி வேறல்ல. சில பெண்கள் அரக்கு மஞ்சளாலும், மினுக்கெண்ணெயாலும் தங்களை அலங்கரிப்பார்கள். வேறுசிலர் நாய்ப் பல்லும் வெள்ளை, என் பல்லும் வெள்ளையா என்று சொல்லிப் பல்லுக்குப் பற்கறையிட்டுக்கொள்வார்கள். இவையெல்லாம் யதார்த்தத்தில் அலங்காரமல்ல, அலங்கோலம், அலங்கோலமே.

ஐரோப்பிய ஸ்திரீகள் பெரும்பாலும் தங்களை வஸ்திரங்களால் அலங்கரிப்பார்கள். அவர்களில் பலர் மானத்துக்கும் மரியாதைக்கும் மிஞ்சின வஸ்திரங்களை மாட்டிக்கொள்வதால், அவர்கள் பருத்திப் பஞ்சு மூட்டைகளையும், ஆட்டுமயிர் மூட்டைகளையும் தூக்கும் சுமட்டுக்காரிகளாகிறார்கள். இந்துமாதர்களோ இவ்விதச் சுமட்டுக்காரவேலையில் ஐரோப்பியருக்கு மேற்பட்டவர்களேயன்றி கீழ்ப்பட்டவர்களல்ல. ஐரோப்பிய பெண்கள் துணி மூட்டைக்காரிகள். இத்தேசப் பெண்களோ மண்மூட்டைக்காரிகள். பொன் மூட்டையிலும் பாரமான மண் மூட்டை எது? நமது தேசமாதர்கள் அணிந்திருக்கும் பொன் வெள்ளி நகைகளையெல்லாம் உருக்கி, உருட்டித் திரட்டினால் எத்தனை வண்டிப் பாரமாகும்? இந்தப் பாரத்தை நம்மவர்கள் எவ்வளவு சங்கடத்துடன் தூக்கிவருகிறார்கள். இதைத் தூக்கக் காதிலும் மூக்கிலும் செய்துகொள்ளும் தொள்ளல் எத்தனை, துவாரம் எத்தனை?



இதெல்லாம் என்னத்துக்கு, அழகுக்குத்தான். பிள்ளை வரத்துக்குப் போய்ப் புருஷனைப் பலிகொடுத்ததுபோலும், அன்ன நடை நடக்கப் போய் உள்ள நடையும் போனதுபோலும், அழகுக்கு அழகுசெய்யப் போய் அழகையிழந்தோர் எத்தனை, உயிரையிழந்தோர் எத்தனை, மதியிழந்தோர் எத்தனை, மானமிழந்தோர் எத்தனை? அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு. மிதமிஞ்சின அலங்காரம் அழகுள்ளவர்களின் அழகை மறைக்கிறது, அழகற்றோரை அதிக அவலட்சணமாக்குகிறது. இதையறிந்து, நங்கையரே! நீங்கள் வீணழகைத் தேடாமல், மெய்யழகைத் தேடுங்கள். புறத்தழகில் எல்லாம் விசேஷித்தது சுத்தமே. தேகசுத்தமும் துணி சுத்தமும் அழகுக்கும் சுகத்துக்கும் அவசியம். தினந்தோறும் தேகத்தைக் கழுவாமலும், தலையைச் சீவிக்கட்டாமலும், வஸ்திரத்தை அடிக்கடி துவைக்காமலும் இருக்கிற பெண்கள் மிக அவலட்சணமானவர்களே. சுசிகரம் கொடுக்கும் வசீகரம் என்பது நிசம். புறத்தழகிலும் விசேஷித்தது அகத்தழகு. இதை நினைத்தே

"குஞ்சியழகுங் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சளழகும் அழகல்ல—நெஞ்சத்து
நல்லம் யாமென்னும் நடுவுநிலைமையால்
கல்வி யழகே யழகு"

என்று ஒருவர் உரைத்தார். கல்வியினால் புத்தி விர்த்தியடையும், அறிவு அதிகரிக்கும், விவேகம் மீசுரப்படும், ஞானம் வளர்ந்தோங்கும். இத்தகைமையான ஸ்திரீகளின் அழகுக்கு யார் பழுது சொல்லலாம்? புத்திசாலியான ஸ்திரீ பொன்னிலும் விலையேறப்பெற்றவள், தங்கத்திலும் அருமையானவள். பொன்னாலாகாதது புத்தியாலாகும், வெள்ளியாலாகாதது விவேகத்தாலாகும். புத்தியில்லாத பெண் அலங்காரமான ஆடையாபரணங்களைத் தரித்திருந்தாலும், அறிவுடையோர் அவளை மதியார்கள். அவள் ஆடையாபரணங்களெல்லாம் பன்றிக்கு உடுத்திய பட்டுக்கொப்பாம். அறிவுள்ள பெண் அழகற்றவளாயிருந்தாலும், அவளை யாவரும் புகழ்ந்து பேசுவார்கள். அவள் பல்லழகுக்குப் பற்கறையிடாதிருந்தும், அவளைச் சொல்லழகுள்ள சுந்தரியென்பார்கள். அவளுக்கு மதிமுகம் இல்லாதிருந்தும், அவளை மதிமிகுத்த மங்கையர்க்கரசியென்பார்கள்.

புத்தியழகிலும் பெரிது பத்தியழகு. தேவனுக்கஞ்சும் பயம், அவரை நேசிக்கும் அன்பு, அவரைப் பற்றிக்கொள்ளும் நம்பிக்கை எந்தப் பெண்ணிடத்தில் விளங்குகிறதோ, அவள் தேவனுக்கழகி, நல்லோர்க்கழகி. அவள் பத்தியழகைக் கண்டு பிசாசு அஞ்சுகிறது, பாவம் பயப்படுகிறது, உலகம் நடுங்குகிறது. அவள் கற்பு, சுத்தாங்கம், தயாளம், நாணம், தாழ்மை என்ற சுகுணங்களுக்கு ஒப்பான நகை நட்டு இங்குமில்லை, எங்குமில்லை.

மி. மி.



CHILDREN'S CORNER.

## சிறுவர்க்கான கதைகள்.

THE HERMIT.

### சந்நியாசி.

ஒரு தேசத்தில் மாட்சிமை மிகுந்த ஒரு அரசன் இருந்தான். இவன் தனது நடை அழகினாலும் உடை அழகினாலும், கனத்தினாலும் பணத்தினாலும் மிகுந்த இறுமாப்புகொண்ட இறைமகன். ஒரு நாள் இவன் தனது சேனையோடு வேட்டையாடப் போய் வெகு உல்லாசமாய்க் காலங்கழித்து வீட்டுக்குத் திரும்பும்போது, மலைகள் நிறைந்த ஒரு காட்டின் வழியாய் வந்தான்.

அங்கே ஒரு மலைக்குகைக்கு வெளியே வயது சென்ற சந்நியாசி ஒருவன் உட்கார்ந்துகொண்டு, அரசன் வருவதைச் சற்றும் கவனியாமல் ஒரு மண்டை ஓட்டை வெகு கவனமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தான். இதைக் கண்டு அரசன் ஆச்சரியப்பட்டு, மகிமையுள்ள அரசனாகிய தான் வருவதைச் சந்நியாசி அறிந்திருந்தும், தன்முன் எழுந்து நின்று மரியாதைபண்ண இல்லையே என்று மிகுந்த கோபமுள்ளவனாகி, அவனை நோக்கி: "ஓய், கிழவனே, ஒன்றுக்கும் உதவாத இந்த மண்டை ஓட்டை எடுத்து ஓயாமல் சிந்திப்பதால் உன்மத்தம் பிடித்தவன் போலிருக்கிறாயே. இந்த மண்டை ஓட்டை எடுத்து உற்றுப்பார்ப்பதால் உண்டாகும் இன்பம் என்னவென்று அன்போடு சொல்லும் தயவைச் செய்" என்று இழிவானவிதமாய்க் கேட்டான்.

அப்போது சந்நியாசி அகந்தையுள்ள அந்த அரசனின் அறியாமையைக் கண்டு தனக்குள்ளே சிரித்து, வெகு ஆத்திரத்துடன் அவனைப் பார்த்து: "அறிவீனமும் பெருமை என்னும் அந்தகாரமும் நிறைந்த அரசனே, இந்த மண்டையோடு உன்னைப்போலொத்த ஒரு அரசனுடையதோ அல்லது என்னைப்போலொத்த ஒரு பிச்சைக்காரனுடையதோ என்று அறிய அதிக ஆவலுடன் பார்க்கிறேன்; ஆனால் எப்படிப் பார்த்தும் அதை அறியக்கூடவில்லை; ஆதலால் இவ்வுலகத்தில் மகிமையுள்ள அரசனுக்கும் மகிமையற்ற ஏழைக்கும் மரணத்துக்குப்பின் யாதொரு வித்தியாசமும் இல்லை என்று அறிகிறேன்" என்று அரசன் மனதில் நன்றாய்ப் படும்படிச் சொன்னான்.

இதைக் கேட்டதும், அரசன் திடுக்கிட்டு ஒன்றும் பேசாமல் அப்புறம் போய்விட்டான். அன்றுமுதல் அவன் பெருமைக்குணத்தை விட்டு எப்போதும் தாழ்மைக்குணம் உடையவனாய் இருந்தான்.

ஆகையால் நாம் பெருமையை விட்டு எப்போதும் தாழ்மையையே அணிந்துகொள்வோமாக.



THE THREE BEST BOOKS.

## மூன்று சிறந்த புஸ்தகங்கள்.

வெகு ஜனம் வசித்த ஒரு விஸ்தாரமான நகரில் ஒரு சிறுகுடிசையில் ஒரு விருத்தாப்பியர் இருந்தார். அவர் அப்பட்டணத்தின் ஒரு பகிரங்கமான இடத்தில் இராமல், எவரும் எளிதில் கண்டுபிடிக்கக்கூடாத ஒரு மறைவான இடத்தில் இருந்தார். அப்படி இருந்தும், அவரிடம் போய்வந்த பெரியோரும் சிறியோரும் அவருடைய அறிவையும் ஞானத்தையும் குறித்து வெகுவாய்ப் புகழ்ந்துபேசினார்கள். இதைக்கேள்வியுற்ற ஒரு கல்விமான் அவர் இவ்வுலகத்திலுள்ள சகல புஸ்தகங்களையும் வாசித்துப் படித்த மகா நிபுணராயிருக்கவேண்டுமென்று எண்ணி, அவரை எப்படியும் பார்த்துப் பேசவேண்டுமென்று அவர் வீட்டைத் தேடிவந்தான். அவர் வசித்த சிறுகுடிசையைப் பார்த்தும், இவனில் வெறுப்பு உண்டாகித் திரும்பிவிடலாமோ என்று யோசித்தான். ஆயினும் அவரோடு சம்பாஷிக்கவேண்டுமென்னும் ஆசையால் அவர் இருந்த சிறு அறைக்குட் சென்று அவரைப் பல கேள்விகளும் கேட்டான். இதற்கெல்லாம் அவர் கொடுத்த சிறந்த மறுமொழிகளால் அவனும் அதிசயப்பட்டவனாகி: "ஐயா, உம்மிடம் இதோ மேசைமேல் இருக்கும் இந்த ஒரு புஸ்தகம்தவிர வேறொந்த புஸ்தகமும் இல்லையே; இப்படியிருக்க ஏராளமான புஸ்தகங்களைப் படித்திருக்கும் எங்களில் உண்டாகும் சந்தேகங்களையெல்லாம் நீர் எப்படி நிவிர்த்திக்கச் சக்தியுள்ளவராயிருக்கிறீர் என்பதை நான் அறியக்கூடவில்லை; இதை நினைக்க நினைக்க எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது" என்றான்.

(இன்னும் வரும்)

GLEANINGS.

## சமாச்சாரக் குறிப்புகள்.

அங்கிலேய நாட்டுக் கீர்த்திபெற்ற வயித்திய சாஸ்திரப் பண்டிதராகிய காரேற் ஆன்டர்சன் துரைசானி ஏறக்குறைய லட்சத்து ஐயாயிரம் ரூபாய் சம்பாதிக்கிறார்களாம்.

கல்கத்தா நகரில் புதிதாய் ஸ்தாபிக்கப்படும் ஸெனனா வயித்தியசாலைக்கு வேண்டிய ஒரு லட்சம் ரூபாயில் நாற்பத்திரண்டாயிரம்ரூபாய் ஆறு பங்காள கனவான்களால்மாத்திரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

முன் அங்கிலேய மந்திரியாயிருந்த கிளாட்ஸ்டன் பெருமானுக்கும் அவர் இல்லறத் துணைவிக்கும் விவாகம் நடந்து இப்போது ஐம்பது வருஷமாகிறது; இந்த உற்சவம் இம்மாசத் துவக்கத்தில் வெகு சிறப்பாய்க் கொண்டாடப்பட்டது; அவருக்கு இப்பொழுது வயது எழுபத்தொன்பது.

ஜாதி ஸ்திரீகள் கோஷா ஸ்திரீகளின் உபயோகத்துக்கென்று இச்சென்னை நகரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் வயித்திய சாலையின் புதிய கட்டடத்துக்காகச் செல்லும் அறுபத்து மூவாயிரத்து நூற்று ஐம்பத்து நாலு ரூபாயையும் கவர்ண்மெண்டார் கொடுப்பதாக ஒத்திருக்கிறார்கள்.

தாகித்தீ தீவின் இராணியாகிய போமாரே என்பவள் சிலகாலத்துக்குமுன் எழுபத்தைந்து வயதுள்ள கிழவியாய் மரித்தாள். அவள் பிறந்தபோது தென் சமுத்திரத்தீவுகளில் ஒரு கிறிஸ்தவனாவது இருந்ததில்லை. அவள் மரித்தபோதோ ஏறக்குறைய முன்னூறு தீவுகளில் உள்ள அனைவரும் சுவிசேஷ கிறிஸ்தவர்களாயிருந்தார்கள்.

CHILDBIRTH.

## பிரசவ நூல்.

(தொடர்ச்சி.)

இந்தியாவில் ஏறக்குறைய பன்னிரண்டாம் பிராயத்திலாவது இதற்குச் சற்று முந்தியாவது மாதவிடாய் ஆரம்பித்தபோதிலும், சரீரம் அப்பொழுது பூரண வளர்த்தியுடையதாய் இருக்கிறதில்லை. ஒரு சிறுபெண்ணைத் தாயாக்கி அவள் பலத்தைக் குறைப்பதற்குப்பதிலாய் அவளை ஸ்திரீபருவம் அடைய விடவேண்டியது. (பெண்ணுக்கு விவாகம் செய்யவேண்டிய) அதிக இளம்பிராயம் பதினாறு; பதினெட்டு அதிக நல்லது; இருபது இதிலும் நல்லது. தகப்பனுக்குக் குறைந்தபட்சம் இருக்கவேண்டிய வயது இருபத்தொன்று; இதிலும் முதிர்ந்திருப்பது அதிக நல்லது.

பெண்கல்வியைக் குறைப்பது, பாலவிதவைகளை அதிகரிப்பது முதலிய அநேக நியாயங்களை பாலவிவாகத்துக்கு எதிரிடையாகக் கூறலாம்.

2. **அளவுக்கு அதிகப்படுதலால் பலவீனம் உண்டாக்கலாகாது.**—ஸர் மாதவ ராவ் இந்து அரசருக்கு அடிக்கடி பிள்ளைகளே பிறக்கிறதில்லை என்றும், பிறந்தாலும் அவர்கள் அடிக்கடி "நோய்கொண்டவர்களும், மந்தபுத்தியுள்ளவர்களும், சிலசமயங்களில் பயித்தியம் பிடித்தவர்களுமாய்" இருக்கிறார்கள் என்றும் சொல்லுகிறார். இதற்குத் திருஷ்டாந்தமாக ஒரே நாளில் பதினேழு மனைவிகளை விவாகஞ்செய்து பட்டத்துக்கு வர ஒரு புத்திரன்கூட இல்லாமல் மரித்த தஞ்சாவூர் மகாராஜாவின் விஷயத்தை எடுத்துக்கூறுகின்றார். இத்தேசத்துப் பள்ளிக்கூட விசாரணைக்கர்த்தர் ஒருவர்: பாலவிவாகத்தினால் அநேக மாணாக்கர் "பதினேழு வயதாகுமுன்னே அதிக தளர்ச்சியும் பலட்சயமும் உடையவர்களாகி முந்தின ஊக்கமும் பாலியக் கூர்மையும் இல்லாதவர்களாய்" இருக்கிறார்கள் என்கிறார்.

"வித்தே ஜீவனாய் இருக்கிறது." அளவுக்கு அதிகமான அசுத்தம் அதில் சேருவதால், அதிக மோசந்திற்கிடம் உண்டாகிறது. தேகம் இதைப்போன்ற இருபதுமடங்கு இரத்தத்தை இழப்பதால் பலட்சயப்படுவதிலும் அதிகமாய் இதினால் பலவீனப்படுகிறது என்று ஒரு வைத்தியர் கூறுகின்றார். ஒரு அரசகுமாரனுக்கு அவன் தாய் சொன்ன போதனை "உன் பலத்தை ஸ்திரீகளுக்குக் கொடாதே" என்பது.

"நரம்பைப்பற்றிய பலட்சயத்தைச்" சொஸ்தமாக்கிவிடுவதாக அநேக சுதேச பத்திரிகைகளில் பிரசுரமாகும் மூடவைத்தியரின் மருந்துகள் அடிக்கடி அதிகக் கெடுதியை உண்டாக்குவதால், அவைகளை உபயோகிக்கக்கூடாது. ஆனால் எதிலும் மிதமாயிருத்தலாலும், குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்தலாலும், நாம் பின்னால் சொல்லும் முறைப்படியே செய்தலாலும் சுகமடையலாம்.

3. **சுத்த ஆகாயத்தாலும், சுகந்தரும் ஆகாரத்தாலும், தேகாப்பியாசத்தாலும் சரீரத்தைப் பலப்படுத்தவேண்டியது.**—அதிகமான சுத்த ஆகாயமே முதல் முதல் தேகத்துக்கு அவசியம்வேண்டியது; ஆனால் இது இறுக்கமான அறைகளுள்ள இத்தேசத்து வீடுகளில் அடிக்கடி கிடைக்கிறதில்லை. மிட்டாயும் நெய்யும் (கெட்டியாய் இராத) மிருதுவும் தளர்த்தியுமான சதையை அதிகரிக்கக்கூடியது. அங்கிலேய கனவான்கள் சுறுசுறுப்பான தேகாப்பியாசத்தில் அதிக நாட்டமுடையவர்கள்; இந்துக்களோ அதைச் சாதாரணமாய் எக்காலத்திலும் நினைக்கிறதேயில்லை. அநேக ஸ்திரீகள் அந்தப்புரத்திலேயே அடைபட்டுக் கிடப்பதால் அடிக்கடி அவர்களுக்குக் கயரோகம் உண்டாக இடமுண்டு. ஸர் மாதவ ராவ் பிரசவத்தை அதிகரிப்பதென்று வீணாக எண்ணப்படும் மருந்தை உட்கொள்ளாதிருக்க அவர்களை எச்சரிக்கிறார்.

(இன்னும் வரும்.)



# மாதர் மித்திரி.

புத். ௨. ௧௮௮௮ ௵ - அக்டோபர் மீ. இல. ௪.


## NOTES.

## பத்திராதிபர் குறிப்புகள்.

TEMPERANCE.

### மதுபான விலக்கு.

மதுபான விலக்கைக்குறித்து நமது பத்திரிகையில் பேசுவது சிலருக்கு விபரீதமாய்த் தோன்றும். ஆனால் இதில் நமது சகோதரிகளின் இன்பமும் துக்கமும் ஓர்விதமாய் அடங்கியிருப்பதால், அதைக்குறித்தும் சில வரிகள் எழுதப் பிரியங்கொண்டிருக்கிறோம். மதுபானமாவது இன்னதென்று அறியாமலிருந்த நமது இந்து சிநேகிதருக்குள் இப்பொழுது அது அதிகமாய்ப் பரவியிருப்பதால், அதனால் விளையும் கெடுதிகளையும், அதை நீக்குவதற்கு நாம் செய்யவேண்டியது இன்னதென்பதையும் தெளிவாய்க் காட்டுவோம்.

தற்காலத்தில் உலகத்திலுள்ள எக்காரியத்தைப்பார்க்கிலும் மதுபானத்தினால் விளையும் கெடுதியும் துக்கமும் துன்பமும் வெகு ஏராளமாயிருக்கின்றன. குடியினால் சொற்ப பலனும் உண்டாகிறதில்லை. சிலர் அது மனதை உற்சாகப்படுத்துகிறது என்கிறார்கள். அது ஒருவேளை துவக்கத்தில் சொற்ப காலத்துக்கு உற்சாகப்படுத்தினாலும், கடைசியில் புத்தி முழுவதையும் கெடுத்துவிடுகிறது. அது புத்தியை அதிகரிப்பது மெய்யானால், குடித்திருக்கும் வைத்தியனிடத்தில் ஒரு நோயாளி தனக்கு மருந்து கேட்பானா? அப்படி அவனைக் கேட்பதிலும் ஒரு பைத்தியக்காரனைக் கேட்பது மேலாயிருக்கும். சிலர் மதுபான ரசத்தை இன்பத்துக்குக் குடிக்கிறோம் என்கிறார்கள். இதைக் குடித்து இன்பமடைபவர்கள் வேறெதிலும் இன்பமடையவேமாட்டார்கள்.

மதுபானத்தினால் விளையும் பலன்கள் மகா சஞ்சலத்தை உண்டாக்கத்தக்கவைகள். குடித்தவன் வெகு பூரிப்பாயிருந்தாலும், எப்போதும் மதிகேடனாகவேயிருக்கிறான். அவன் சரியாய் நின்று பேசக்கூடாமல், மிருகம்போலத் தூங்கப் பிரியங்கொண்டிருக்கிறான். அவன் தனது மனைவி மக்களையும் தோழரையும் அடித்து வதைசெய்யும் குலநாசனாய் இருக்கிறான். அவன் மனிதனென்று அழைக்கப்படுவதிலும் மிருகம் என்று அழைக்கப்படுவதற்

கே தருதியாய் இருக்கிறான். இதினால் அவன் புத்திமாத்திரமல்ல, சரீரமும் கெடுகிறது. அவன் வயிறு வெந்து, எதையும் ஜீரணிக்கக்கூடாத வெறும் தோலாகிவிடுகிறது. அவன் குடல் முழுவதும் தீய்ந்து, பலமெல்லாம் குன்றி, ஒன்றுக்கும் உதவாத வெறுந்தோலை உடையவனாய் இருக்கிறான். சற்றும் எதிர்ப்பாராதவிதமாய் ஒரு மனுஷன் மதுபானத்திற்கு அடிமையாகிறான்.

பற்பல விதமான சாராயங்களையும் விற்பதற்குத் துரைத்தனத்தாரே உத்திரவு கொடுப்பதால், நமது இந்து சகோதரர் மிகவும் பரிதாபமும் மோசமுமான நிலைமையில் இருக்கிறார்கள். ஆகையால் நமது இந்து சகோதரிகள் செய்யக்கூடியது இன்னதென்பதைக் காட்டுவோம்.

இங்கிலாந்து தேசத்திலும் அமெரிக்கா கண்டத்திலும் மதுபானத்தை விலக்குவதற்கென்று அநேக நல்ல ஸ்திரீகள் ஒரு கூட்டமாய்க் கூடியிருக்கிறார்கள். அவர்கள் வைத்தியசாலைகளுக்கும் வினோதசாலைகளுக்கும் மற்றும் பகிரங்கமான இடங்களுக்கும் போய், புருஷரும் பிள்ளைகளும் இனிமேல் குடிக்காதிருப்போம் என்று சத்தியம்பண்ணச் செய்வதுமல்லாமல், சாராயம் இறக்குவதையும் விற்பதையும் முழுவதும் நிறுத்தும்படி துரைத்தனத்தாருக்கு விண்ணப்பம் எழுதிக்கொள்ளுகிறார்கள். ஆனால் நமது இந்து சகோதரிகள் இபபடிக்கொத்த காரியங்களைச் செய்யக்கூடாதவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் செய்யக்கூடிய வேறு அநேக காரியங்களுண்டு. தங்கள் புருஷரும் பிள்ளைகளும் குடியில் அகப்பட்டுக்கொள்ளாதபடி, முந்த முந்த தங்கள் வீட்டைப் புருஷர் பிரியங்கொள்ளும்படிக்கானவிதமாய் வைக்கவேண்டும்; அப்பொழுது அவர்கள் அதை விட்டு அசையவேமாட்டார்கள். வீட்டை அவர்களுக்கு இன்பந்தரும் வீடாய் வைக்காவிட்டால், சாராயக்கடையே அவர்கள் தங்கும் இடமாகிறது.

தங்கள் பிள்ளைகளைக்குறித்தும் தாய்மார் வெகு கவலையாய் இருக்கவேண்டியது. சிலகாலத்துக்குமுன்னே மரணத்தீர்ப்புபெற்ற ஒரு வாலிபன் தன் தாயை நோக்கி "உன்னாலே நான் இப்படியானேன், நீயல்லவா எனக்கு முந்த முந்த குடியும் சூதாடுதலும் பழக்கினாய்" என்றானாம். ஐயோ, தாய்மாரின் மனதைப் பிளக்கத்தக்க சொற்கள் இதைவிட வேறே தாயினும் வேண்டுமா? மதுபானம் மனதையும் சரீரத்தையும் கெடுத்து, மனிதரைப் பலவீனப்படுத்தி, அவர்கள் ஆயுசைக் குறுக்கி, அவர்களை நிர்ப்பாக்கியரும் துன்மார்க்கரும் ஆக்குகிறதென்று தாய்மார், தங்கள் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதிக்கவேண்டும். இந்தத் தீமையில் புருஷரும் பிள்ளைகளும் அகப்பட்டுக்கொள்ளாதபடி நாளடைவிலே அவர்களுக்குக் கொஞ்சம் கொஞ்சமாய்ப் போதித்துவரவேண்டும். வீடுகளுக்கு வந்து போதிக்கும் ஸெனானா ஸ்திரீகளிடத்தில் இத்தீமையை நீக்குவதற்கான வழியைக் காட்டும் புஸ்தகங்களை வாங்கி வாசிக்கவேண்டும்.



மதுபானத்தினால் விளையும் கெடுதிகளை மற்ற தேசங்களில் பார்த்த ஸ்திரீகள் இந்துத் தாய்மாரை நோக்கி "உங்கள் தேசத்தாரிடமிருந்து பணம் பறிக்கும்பொருட்டு அந்நிய தேசத்திலிருந்து வந்த இத்தீமையை அடியோடே அகற்றுங்கள், அகற்றுங்கள்" என்று வெகுவாய்க் கேட்டுக்கொள்ளுகிறார்கள். இதற்குச் சகல ஸ்திரீகளும் இணங்கி நடப்பார்களாக.

---


PERSONAL INFLUENCE.

## ஒவ்வொருவரும் செய்யக்கூடியது.

நினைக்கவும் பேசவும் சிரிக்கவும் சிருஷ்டிகர் நம்மில் ஒவ்வொருவருக்கும் பற்பல வரத்தையும் பலத்தையும் கொடுத்திருக்கிறார். இந்த வரத்தையும் பலத்தையும் நாம் நம்மிலே அடக்கிவைக்காமல், பிறரின் நன்மைக்காவது தீமைக்காவது உபயோகித்து வருகிறோம். இதை நன்றாய் விளக்க ஒரு சிறு கதை சொல்வோம். அநேக ஜனங்கள் கூடியிருந்த இடத்தில் திடீரென ஒரு மனிதன் வந்து நின்று, ஒரு வார்த்தையும் பேசாமல் அவர்களைப் பார்த்துச் சிரித்தான். கூடியிருந்தவர்கள் இதைக் கண்டு முதலில் பிரமித்து, பிறகு புன்னகைகொண்டு, கடைசியாக ஏகோபித்துச் சிரித்தார்கள். உடனே அந்த நூதன மனிதன் வெகு கோரமாய் அவர்களை நோக்கிப்பார்த்தான். அப்போது அவர்களும் ஒவ்வொருவராய்ச் சிரிப்பதை விட்டு, எல்லோரும் வெகு கோரமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவனோ ஒன்றும் பேசாமல் அப்புறம் போய்விட்டான்.

நாம் செய்வதுபோல மற்றவர்களும் செய்யவேண்டுமென்று ஆசிப்பதே நம்மிலுள்ள வல்லமையென்னப்படும். இந்த வல்லமையினால் நாம் அதிக கவலையுள்ளவர்களாய் இருக்கக் கற்றுக்கொள்ளுகிறோம். வாக்கிலும் நடக்கையிலும் சுத்தமானவர்களோடு நாம் கூடி, கோபக்காரரோடும் சண்டை செய்பவரோடும் கூடாமல் இருக்கவேண்டியது. நம்மையும், நம்மைச் சுற்றிலுமுள்ளோரையும், நமது பிள்ளைகளையும் பாக்கியமுள்ளோராக்க விரும்பினால், நாம் வெகு விழிப்போடு ஜீவனம்செய்துவரவேண்டும். ஒருவரோடும் தீதானவைகளைப் பேசக்கூடாது. ஒருவரையும் பொய் பேசத் தூண்டிவிடக்கூடாது. ஆனால் சமாதானம் உண்டுபண்ணும் சுகுண பூஷணிகளாய் விளங்கவேண்டும். பிறரை உற்சாகப்படுத்தும்பொருட்டு நாமே உற்சாகமுள்ளவர்களாய் இருக்கவேண்டும். பிறர் தற்சிநேகம் இல்லாதவர்களாய் இருக்கும்பொருட்டு நாமே தற்சிநேகமற்றவர்களாய் இருக்கவேண்டும்.

இதை வாசிக்கும் சிநேகிதிகள் இப்படி ஜீவனம்பண்ணுவது கூடாத காரியம் என்று எண்ணிக்கொள்ளவேண்டாம். ஏனெனில் அன்பும் பொறுமையுமுள்ளவர்களுக்குச் சரியான பாக்கியவான்கள் இப்பூவுலகில் எங்கும் [illegible]பது அரிது. ஆகவே தேவனால் [illegible] பட்டிருக்கும் இந்த அரிய வல்லமையை நமது இந்து சகோதரிகள் நற்பிரயோகம் செய்வார்களாக.



## THE TOWER OF BABEL.
## பாபேல் கோபுரம்.

ஜலப்பிரளயத்துக்குப்பின் நோவாவும், அவன் குமாரரும், அவன் குமாரரின் மனைவிகளும் பேழையை விட்டு வெளியே வந்து, பூமியில் குடியேறினார்கள். இவர்களுக்கு அநேக பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் பிறந்து சந்ததி பெருகவே, பூமி மறுபடியும் ஜனங்களால் நிரம்பிற்று. அநேக வருஷங்களானபிறகு பூமியில் இருந்தவர்களெல்லாம் நோவாவும் அவன் குமாரரும் பேசிவந்ததுபோல ஒரே பாஷை பேசினார்கள். அவர்களில் அநேகர் மிகவும் பொல்லாதவர்களாகி, ஜலப்பிரளயத்தால் வந்த தண்டனையை முற்றும் மறந்து, தேவன் பெரியவர் என்பதையும், அவருக்கு நாம் பயந்து நடக்க வேண்டியதென்பதையும் நினையாதிருந்தா[illegible]லும் தங்கள் செல்வத்தினால் அவர்கள் அதிகத் தற்பெருமைகொண்டு சிநேயார் என்னப்பட்ட சமபூமியில குடியிருந்தாகள்.

அவர்கள்: நாம் பூமியின்மீதெங்கும் சிதறிப்போகாதபடிக்கு, நமக்கு ஒரு நகரத்தையும், வானத்தை அளாவும் சிகரமுள்ள ஒரு கோபுரத்தையும் கட்டி, நமக்குப் பேர் உண்டாகப்பண்ணுவோம் வாருங்கள் என்று சொல்லிக்கொண்டார்கள். தேவன் மனுபுத்திரர் கட்டுகிற நகரத்தையும் கோபுரத்தையும் பார்த்தபோது, அது அவருக்கு மிகவும் பிரியக்கேடாய் இருந்தது. ஏனெனில் அவர்கள் அவரை மறந்து, தங்களுக்கு ஒரு பெரிய பேரை உண்டாக்க இதைச் செய்தார்கள்.

அப்பொழுது தேவன்: இதோ ஜனங்கள் ஒரே கூட்டமாய் இருக்கிறார்கள்; அவர்கள் அனைவருக்கும் ஒரே பாஷையும் இருக்கிறது; ஆகையால் இதைச் செய்யத் தொடங்குகிறார்கள்; இப்பொழுதும் தாங்கள் செய்ய நினைத்தது ஒன்றும் தடைபடமாட்டாது என்று இருக்கிறார்கள்; ஆகலால் நாம் ஒருவர் பேசுவதை மற்றொருவர் அறியாதபடிக்கு, அங்கே அவர்கள் பாஷையைத் தாறுமாறாக்குவோம் என்றார். அப்படியே தேவன் அவர்களில் ஒருவன் பேசுவதை மற்றவன் அறியாதபடிக்கு அவர்களுடைய பாஷையைத் தாறுமாறாக்கி, அவர்களை அவ்விடத்திலிருந்து பூமியின்மீதெங்கும் சிதறிப்போகப்பண்ணினார்.



அவர்கள் பாஷை தாறுமாறானபோது, வெகு விபரீதமான காரியங்கள் நடந்திருக்கும். ஒருவன் "செங்கல் கொண்டுவா" என்று மற்றவனுக்குச் சொல்ல, அவன் வெகு விரைவாய் ஓடி, சாந்து சுண்ணாம்பைக் கொண்டுவந்திருப்பான். ஒருவனை 'இங்கே வா" என்றால், அவன் வெகு தூரம் ஓடியிருப்பான். அவர்களின் நாமங்களிலும் குழப்பம் உண்டாயிருக்கும். ஒருவனைப் பேர்சொல்லிக் கூப்பிட்டால், இன்னொருவன் ஓடிவந்திருப்பான். இப்படியாக வெறும் சத்தமும் குழப்பமும் அவர்களுக்குள் உண்டாகியிருந்தது. ஒவ்வொருவனும் தான் தெளிவாய்ச் சொல்வதை மற்றவன் ஏன் அறியவில்லை என்று ஆச்சரியப்பட்டிருப்பான். ஆகவே பட்டணத்தைக் கட்டுவதும், கோபுரத்தைக் கட்டுவதும் முழுவதும் கூடாத காரியமென்று அவர்களுக்குத் தெரிந்து, அந்த வேலையை விட்டுவிட்டு பூமியின் மீதெங்கும் சிதறிப்போனார்கள். பூமியெங்கும் வழங்கின பாஷையைத் தேவன் அவ்விடத்தில் தாறுமாறாக்கினபடியால், அதின் பேர் "குழப்பம்" என்னும் அர்த்தங்கொள்ளும் பாபேல் என்னப்பட்டது.

அநேகர் சிதறிப்போனபோதிலும், சிலர் அவ்விடத்திலேயே குடியிருந்து, அந்தக் கோபுரத்தைச் சுற்றிலுமுள்ள பட்டணத்துக்கு பாபிலோன் என்று பேரிட்டார்கள். கோபுரமோ இப்பொழுது பாழாய் இடிந்து கிடக்கிறது.

இதினால் நாம் தேவனை மறந்து, அவர் சித்தத்தின்படி செய்யாவிட்டால் தண்டிக்கப்படுவோம் என்றும், மெய்யான வழியாகிய இயேசுகிறிஸ்துவின்மூலமாய் நாம் மோட்சலோகம் சேருவதற்குப்பதிலாக நமது பெருமையாகிய கோபுரத்தின்மூலமாய் ஏறப் பிரயாசப்படுவோமாகில், நமது சிந்தனைகள் எல்லாம் தாறுமாறாக்கப்படும் என்றும் கற்றுக்கொள்ளுகிறோம்.

HYMN.

## ஞான கீதம்.

THE ETERNAL LOVE.

### நித்திய அன்பு.

தெய்வ சிநேகம், அற்புதம்!
பிதா இரங்கி, உலகம்
சீர்ப்பட ஏக மைந்தனை
கொடுத்தார்; இதே மா தயை.

2. பொல்லாருக்காக இவரே
பலியாய்ச் சிலுவையிலே
மரித்து, பாவம் நீக்குதல்
உண்டாக்கின் இம்மானுவேல்.

3. பிதாவின் அன்பை மிகவும்
விளக்கி, மோட்ச வாழ்வையும்
எல்லாருக்கும் சம்பாதித்தார்,
விரும்பும் யார்க்கும் ஈகிறார்.

4. இவ்வாழ்வை நீ விரும்பினால்,
தேவாவியின் சகாயத்தால்
உன் பாவம் யாவும் வெறுத்து,
நற்சீர் அடைந்தன்பாய் இரு.

5. அதால் உன் பாவம் நீங்குமே,
குமாரன் நீதி உனதே,
பிதாவின் பிள்ளை ஆகுவாய்,
தேவாவியையும் பெறுவாய்.

HOUSEHOLD DUTIES.

## வீட்டுவேலை.

மறுபக்கத்திலுள்ள படம் நமது காருண்ய இராணியாரும் அவர்களின் கடைசி புத்திரியும் மெத்தை துப்பட்டி பின்னும் பாவனையைக் காட்டுகின்றது. இதை வாசிக்கும் சிநேகிதிகள்: ஓகோ, இதென்ன விந்தை, இராணியாருக்குத் துப்பட்டி இல்லாமற் போயிற்றோ? அவர் தமக்கென்று ஒரு துப்பட்டி பின்னவும் வேண்டுமோ என்று வெகு ஆச்சரியத்துடன் கேட்பார்கள். இராணியாருக்குத் தேவையானவைகளெல்லாம் திரளாயிருந்தும், தமது புத்திரிகள் வீட்டுவேலையில் கவனமற்றவர்களாய்ப் போகாதபடிக்கு அவர்களுக்குக் குடும்ப ஒழுக்கங்களையும் குறையறக் கற்பித்துக்கொடுத்திருக்கிறார்கள். கல்வி விஷயத்தில் அவர்களுக்குச் சமானமான பெருமாட்டிகளைக் காண்பதரிது. இப்படிப்பட்ட கல்வித்தேர்ச்சியுடைய தமது புத்திரிகளையும் இராணியார் வீட்டுவேலைகளில் பழக்கிவந்திருக்கிறார்கள்.

கல்விகற்ற இந்து ஸ்திரீகளில் சிலர் வித்தியா கர்வங்கொண்டு வீட்டுவேலைகளைச் செய்வது தங்களுக்குக் கனக்குறைச்சல் என்று எண்ணிக்கொள்ளுகிறார்கள். இவர்கள் கல்வியினால் உண்டாகும் பயனைத் துர்உபயோகம் பண்ணுகிறவர்களேயன்றி, நல்லுபயோகம் பண்ணுகிறவர்களல்ல. வீட்டுக்காரியம் செய்யாத இவர்களுக்கு நாட்டுக்காரியம் தெரிவதால் உண்டாகும் நன்மையென்ன? பாக சாஸ்திரம் அறியாத இவர்களுக்கு லோக சாஸ்திரம் தெரிந்து லாபமென்ன? ஆகையால் இவர்களின் வித்தையெல்லாம் அவித்தையாயும், ஞானமெல்லாம் அஞ்ஞானமாயும், விவேகமெல்லாம் அவிவேகமாயும் இருக்கின்றன.

ஜர்மானிய இராச்சியத்திலுள்ள மேன்குலப் பெண்களும் ராஜஸ்திரீகளும் சமையல் சமைக்கவும், வீட்டைச் சுத்தமாய் வைக்கவும், வீட்டுக்கு வேண்டிய காரியங்களைச் சம்பாதிக்கவும் பயிற்றுவிக்கப்படுகிறார்கள். இவ்வாறே இந்துப் பெண்களும் வீட்டுவேலை செய்வது வெட்கம் என்று எண்ணாமல், வீட்டிலே வேலையையும் வித்தியாசாலையில் கல்வியையும் கற்றுவருவார்களாகில், அவர்களுக்கு மேலான நுண்ணிய புத்தியுள்ள குடித்தனக்காரிகள் எங்கும் கிடைக்கமாட்டார்கள். வீட்டுவேலையிலும் வித்தையிலும் தேர்ந்திருக்கும் இவர்களின் கைபாகத்துக்கு நளபாகமும் ஈடல்ல. இவர்கள் கைபட்டால் வேம்பும் கரும்பாகும். இவர்கள் சமைத்தால், பிடிசாதம் இறங்காதவர்களும் படிசாதம் உண்ணுவார்கள்; தீராத ரோகிகளும் திடகாத்திரராவார்கள். இவர்கள் ஆக்கும் கறியைத் தொட்ட கையும் மணக்கும்; உண்ட வாயும் மணக்கும்; அதைக் கழுவிய நீரெல்லாம் மணக்கும்; பின்னும் ஊரெல்லாம் மணக்கும்; சகலரும் அவர்களின் சமையலுக்கு வாயூறுவார்கள். அவர்கள் வீட்டுவேலைகளை முடித்துப் பின்பு நல்ல புஸ்தகங்களையும் பத்திரிகைகளையும் வாசிப்பார்கள்; பின்பு தையல் முதலிய சித்திரவேலைகளைச் செய்வார்கள். இவ்விஷயத்தில் நமது இராணியாரும் நமக்குச் சிறந்த முன்மாதிரியாயிருக்கிறார்கள். அவர்களின் மாதிரியையே நமது இந்து சிநேகிதிகள் ஒவ்வொருவரும் பின்பற்றப் பிரயாசப்படுவார்களாக.



அன்பற்ற மனிதனை வெட்கப்படுத்துகின்றன."

பட்சமற்ற வெடுவெடுப்பான வார்த்தைகளை நாம் எத்தனைதரம் பேசியிருக்கிறோம்; அவைகள் நமது வாயிலிருந்து வெளியே வந்தபிறகு அவைகளைத் திரும்பவும் பொறுக்கி, வாயில் போட்டு மூடிவைத்துக்கொள்ளப் பார்க்கிறோம். ஆனால் இப்படிச் செய்வது கூடாத காரியமெனத் தெளிவாகின்றது. அவைகளின் ஓட்டத்தை நாம் தடுக்கவும் முடியாது, அவைகளால் உண்டாகும் கசப்பையும் துக்கத்தையும் இவ்வளவென்று அளக்கவும் முடியாது.

நமது ஜீவநாட்களில் சொற்பகாலத்துக்குமாத்திரம் நாம் பிறருக்கு நன்மைதரத்தக்கப் பெரிய காரியங்களைச் செய்யலாம்; ஆனால் ஒவ்வொரு நாளின் ஒவ்வொரு மணிநேரத்திலும் அன்பும் உற்சாகமுமான வார்த்தைகளைப் பேசி, அநேகரை ஆறுதல்படுத்தி, அவர்களின் துக்கமாகிய சுமையை அகற்றிவிடலாம். புருஷனும் பெண்சாதியும், சகோதரனும் சகோதரியும் "மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும், கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும்" என்னும் நீதிமொழிகளைக் கவனித்து, அவைகளின்படியே நடந்துவந்தால், வீடுகளில் சாதாரணமாய் நடக்கும் அநேக சச்சரவுகளை நீக்கி சுகமே வாழ்ந்திருக்கலாம்.

A QUIET POWER FOR GOOD.

## அமர்ந்து நன்மைசெய்யும் வல்லபம்.

அநேக மனிதர் ஆடம்பரமின்றி அமைதலாய்ப் பற்பல வழிகளிலும் நன்மைசெய்துவருவதுண்டு; ஆனால் இதை வெகுபேர் கவனிக்கிறதில்லை. ஆடம்பரத்தோடு செய்வதிலும் அமைதலாய்ச் செய்வதைக் கவனிக்கும் சிலபேர் அவ்வாறே செய்ய ஆரம்பிக்கிறார்கள். தன் தேசத்துக்கு நன்மைசெய்யும் வல்லபசாலியையும், ஜனசங்கரீனைத் திருத்த முயலும் புண்ணியசாலியையும், அறிவீனருக்கும் நிர்ப்பாக்கியருக்கும் உதவிசெய்து, அவர்களின் அந்தகாரத்தை அகற்றும் பரோபகாரியாகிய பாக்கியசாலியையும் நாம் வெகுவாய்ப் புகழ்ந்து போற்றுகிறோம்; ஆனால் அவர்கள் இவ்வாறு சித்திபெற்றதற்குக் காரணம் இன்னதென்பதை விசாரிக்காமல் விடுகிறோம். இதைச் செய்தவர் இன்னாரென்று எவருமறியாத விதம் அமைதலாய் நன்மைசெய்துவந்த மகாத்துமாக்களின் முன்மாதிரியைப் பின்பற்றினதினாலேயே இவ்வுலகத்தில் அநேக புருஷரும் ஸ்திரீகளும் பெரியோரென்று கீர்த்திபெற்றிருக்கிறார்கள். இவர்களில் அநேகர் கனத்துக்குப் பாத்திரரான தங்கள் பெற்றோரிடத்திலும், அன்பு மிகுத்த சகோதரிகள் சிநேகிதர் முதலானோரிடத்திலும் பெற்றுக்கொண்ட உதவியை நன்றியோடே அறிக்கையிடுகிறார்கள். நா

# மாதர் மித்திரி.

புத். ௨. ௧௮௮௫ - நவம்பர் மீ. இல. ௫.

## NOTES.
## பத்திராதிபர் குறிப்புகள்.

### A SOFT ANSWER.
### மெதுவான பிரதியுத்தரம்.

இவ்வுலகினில் கொஞ்சமாயினும் சஞ்சலமில்லாமல் சந்தோஷமாயிருக்கும் மனிதனைக் காண்பதரிது. சஞ்சலம் நிறைந்த இருதயமுள்ளோர்க்கு மெதுவான பிரதியுத்தரமும், சாந்தமான வார்த்தைகளும், பட்சமான செய்கைகளும் எவ்வளவு மிகுதியான ஆறுதலையும் சந்தோஷத்தையும் தருகின்றன! விசனமிருந்தவர்கள் நம்மிடம் நன்றாய்ப் பேச இல்லை என்று நாம் அடிக்கடி முறையிடுகிறோம்; ஆனால் அவர்களின் விசனத்துக்குக் காரணம் அவர்களிடத்தில் ஒருவரும் அன்பும் ஆறுதலுமான எந்த வார்த்தைகளையும் எக்காலத்திலும் பேசாதிருந்ததேயாம். "ஏற்றசமயத்தில் சொன்ன வார்த்தை வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்குச் சமானம்."

கீர்த்திபெற்ற நூலாசிரியராகிய பாஸ்கல் என்பவர் அன்பு மிகுந்த வார்த்தைகளைக்குறித்துச் சொல்லுகிறதாவது: "அன்பு நிறைந்த வார்த்தைகளைச் சொல்லுவது வெகு எளிதாயிருந்தபோதிலும், இவைகளால் உண்டாகும் பலன் ஏராளமானதாயிருக்கிறது. இவைகள் ஒருவனின் நற்சுபாவத்தையும் நற்சிந்தையையும் அதிகரிக்கச் செய்கின்றன. மெதுவான வார்த்தைகள் நமது சொந்த ஆத்துமத்தை மெதுவாக்குகின்றன; கோப வார்த்தைகளோ கோபமாகிய நெருப்புக்கு விறகு போலிருந்து, இந்தக் கோப அக்கினியை அதிகமாக்கிவிடுகிறது.

"பட்சமான வார்த்தைகளால் நாம் பிறரை நற்குணமுள்ளவர்களாக்குகிறோம்; அன்பற்ற வார்த்தைகளாலோ அவர்களைக் கோபமுள்ளவர்களாக்குகிறோம். பட்சமான வார்த்தைகள் மனிதரின் இருதயத்தில் அழகிய உருவத்தை அமைக்கின்றன. அவைகள் எவன் காதில் விழுகின்றனவோ அவனை ஆறுதல்படுத்தி,



## CHILDBIRTH.
## பிரசவ நூல்.

(தொடர்ச்சி.)

### கர்ப்ப காலம்.

**கர்ப்பாசயம்.**—கர்ப்பாசயம் (அதாவது கருப்பை) தசையாலானதும், உருவத்தில் சற்றேறக்குறைய தட்டையாக்கப்பட்ட கொய்யாப்பழம்போன்றதுமான பையாயிருக்கிறது. அது விசேஷமாய் எல்லாப் பக்கங்களிலும் ஒன்றுக்கொன்று குறுக்கே ஓடுகின்ற தசைநார்களால் ஆக்கப்பட்டு, இரத்தக் குழாய்கள் நிறைந்ததாய் இருக்கிறது. அது இரண்டு விசேஷித்த பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. (இவ்விரண்டில்) பெரிதான மேற்பாகமே சிசு இருப்பதற்கான இடமாம்; கீழ்ப்பாகம் கர்ப்ப காலத்தில் ஓர்வித தடிப்பான பசையாகிய ஆப்பினால் மூடப்பட்டிருக்கிறது. சிசு வளர வளர கர்ப்பாசயமும் ஏறக்குறைய கையளவிலிருந்து காலளவுள்ளதாய் அதிகரித்துக் கொண்டேவருகிறது. பூரண கர்ப்ப காலத்தில் அது ஒரு நீண்ட சுரைக்காய்போலிருக்கிறது.

**கர்ப்பாசயத்தில் சிசு வளரும் விதம்.**—முதல் முதல் கருவானது வெறுங்கண்ணுக்குக் கொஞ்சமும் தெரியாமல், ஒரு கடுகளவு சிறிதாய் இருக்கிறது. முதலாம் மாதக்கடைசியில் அக்கருவானது ஒரு பெரிய எறும்பின் பரிமாணத்துக்கு அதிகப்படாமல் இருக்கும்; அப்பொழுதும் சிசுவின் உருவம் சரியாய்க் கண்ணுக்குத் தெரியாது. இரண்டாம் மாதத்தில் அது ஏறக்குறைய ஒரு அங்குல நீளமுள்ளதாய் இருக்கும். அப்பொழுது சிசுவின் உடலிலும் தலை பெரிதானதாய் இருந்து, கைகளும் கால்களும் உண்டாகத் தொடங்கும். மூன்றாம் மாதத்தில் சிசு ஏறக்குறைய கையளவு நீளமுள்ளதாய் இருக்கும். அப்பொழுது கைவிரல்களும் கால்விரல்களும் கண்ணுக்குத் தோன்றும். நாலாம் மாதக்கடைசியில் சிசு ஏறக்குறைய ஆறு அங்குல நீளமுள்ளதாய் இருக்கும்; அப்பொழுது அது ஆணோ பெண்ணோ என்பதை அறியக்கூடும். ஏறக்குறைய இந்தச் சமயத்தில்தான் பிண்ட சலனம் என்னப்படும் சிசுவின் அசைவு கர்ப்பாசயத்தில் முதல் முதல் உண்டாவதைத் தாயானவள் அறிவாள். அது ஒரு பட்சி தன் சிறகை அடித்துக்கொள்வதுபோல் இருக்கிறது என்று விவரிக்கப்பட்டிருக்கிறது. ஐந்தாம் மாதத்தில் சிசு ஏறக்குறைய ஒன்பது அங்குல நீளமுள்ளதாய் இருக்கிறது. இந்தக் காலத்தில் அது பிறந்தால், தன்னைச் சுற்றிலுமுள்ள ஆகாயத்தைச் சுவாசிக்கக்கூடாமல் உடனே மரித்துப்போகும். ஆறாம் மாதத்தில் அது ஏறக்குறைய ஒரு அடி நீளமுள்ளதாயிருக்கிறது. இப்பொழுது பிறந்தால், அது ஒன்று அல்லது இரண்டு மணிநேரமாத்திரம் உயிரோடிருக்கும். ஏழாம் மாதத்தில் அது ஏறக்குறைய பதினைந்து அங்குல நீளமுள்ளதாய் இருக்கிறது; மயிரும் வளரத் தொடங்குகிறது. இப்பொழுது பிறந்தால், பிள்ளை வளராமல் சிலநாளைக்கு உயிரோடிருக்கலாம். எட்டாம் மாதத்தில் அது ஏறக்குறைய பதினாறு அங்குல நீளமுள்ளதாய் இருக்கிறது. இப்பொழுது பிறக்கும் பிள்ளை மெலிந்த சத்தமுடையதாயிருந்தபோதிலும், உயிரோடிருக்கலாம். சாதாரணமாய் இருநூற்று எண்பது நாள் அல்லது நாற்பது வாரம் கழித்து பிள்ளை பிறக்கிறது.

இந்தப் பரிமாணங்களெல்லாம் ஐரோப்பியரின் பிள்ளைகளுக்கே அடுத்தது. இந்துக்களின் பிள்ளைகளின் அளவு சாதாரணமாய் இவைகளிலும் சற்றுக் குறைந்ததாகவேயிருக்கும்.

(இன்னும் வரும்.)

காதே. கையை நீட்டினால் கருணையாய் நீட்டு, கொடுமையாய் நீட்டாதே.

காலைக் காப்பது கற்புள்ளவள் குறி. காலில் காப்பணிகிற பெண்கள் அனேகர். காலைக் காத்துக்கொள்ளுகிற பெண்களோ வெகு சிலர். பூர்வகத்தை விட்டுப் பிறந்தகத்துக்கு ஓடி ஓடிப்போகிற பெண்கள் எத்தனை? புருஷனுக்கும் பிள்ளைகளுக்கும் செய்யவேண்டிய வேலை பூர்த்தியாயிருக்க, அண்டை வீட்டுக்கும் அடுத்த வீட்டுக்கும், மச்சான் வீட்டுக்கும் மாமன் வீட்டுக்கும் சும்மா சும்மா ஓடுகிற ஓடுகாலிகள் எத்தனை? நாய்க்கு வேலையுமில்லை, உட்கார்ந்திருக்க நேரமுமில்லையென்று சொல்லத்தக்கதாய் வீணேயலைந்து விருதாவில் நேரம்போக்கும் வெங்கப்பெண்கள் எத்தனை? ஓடுகாலிப் பெண்களால் எத்தனை துன்பம், எத்தனை கலகம், எத்தனை நஷ்டம், எத்தனை விசனம்.

எல்லாக் காப்பிலும் இருதயக் காப்பே பெரிதென்றார் ஞானி. அது சத்தியம். ஊற்று சுத்தமானால் தீர்த்தமும் சுத்தமாம். ஊற்று கெட்டால் தீர்த்தமும் கெட்டதாம். இருதயம் சுத்தமானால் கிரியையும் சுத்தமாம். இருதயம் கெட்டுப்போனால் எல்லாம் கெட்டுப்போம். ஆகையால் பொல்லாத நினைவுகளுக்கும், அசுத்த எண்ணங்களுக்கும், அக்கிரம யோசனைகளுக்கும், உன் இருதயத்தை விலக்கமாய்க் கார். "சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், தேவனே" என்று தினம் செபித்து, சுத்த தேவவசனத்தால் சுத்த விசுவாசத்தில் நிலைத்து, உன்னைத் தீட்டாக்கும் யாவுக்கும் உன்னை விலக்கிக் காத்து, தேவபாதுகாப்புக்கு உன்னை முழுவதும் ஒப்புவி.

"சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை."

மி. மி.

CHILDREN'S CORNER.

## சிறுவர்க்கான கதை.

THE THREE BEST BOOKS.

### மூன்று சிறந்த புஸ்தகங்கள்.

(தொடர்ச்சி.)

(ஒரு விஸ்தாரமான நகரில் வசித்து, தமது விவேகத்தினாலும் ஞானத்தினாலும் வெகுவாய்ப் புகழப்பட்ட விருத்தாப்பியர் ஒருவரை ஒரு கல்விமான் காணப்போய், அவர் வசித்த சிறு குடிசைக்குள் பிரவேசித்து, தனக்கு மகா வருத்தமாய்த் தோன்றிய கேள்விகளுக்கெல்லாம் அவர் வெகு இலேசாய் மறுமொழி கொடுத்ததைக் கண்டு ஆச்சரியப்பட்டு, "ஐயா, உம்மிடம் இதோ மேசைமேல் இருக்கும் இந்த ஒரே புஸ்தகம்தவிர வேறெந்த புஸ்தகமும் இல்லையே; பின்னை எப்படி நீர் இவ்வளவு அறிந்திருக்கிறீர்" என்று கேட்டதாக நாம் போனமுறை சொன்னோம்.)

இப்படி அவன் சொன்னதைக் கேட்டு, அநுபவத்திலும் வயதிலும் முதிர்ந்த அந்தப் பெரியவர்: "தம்பி, நீ எண்ணியிருப்பதுபோல என்னிடத்தில் ஏராளமான புஸ்தகங்கள் இல்லையென்பது உண்மையே; ஏனெனில் 'ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு ஆகாது' என்பது உனக்கு நன்றாய்த் தெரிந்திருக்கலாம்; ஆனால் என்னிடத்தில் மூன்று முதல்தரமான புஸ்தகங்கள் உண்டு; உலகத்திலுள்ள சகலவிதமான



புஸ்தகங்களும் இம்மூன்றிலிருந்தே உண்டாகியிருக்கின்றன; அவைகள் இன்னவையென்று இப்போது உனக்குச் சொல்லுகிறேன், கவனமாய்க் கேள்:

"இவைகளில் முந்தினது தேவன் தமது ஞானத்தையும் வல்லமையையும் காட்ட நமக்குமுன் எப்போதும் ஒரு பெரும்புத்தகம்போலத் திறந்துவைத்திருக்கும் இப்பிரபஞ்சமாகிய இயல்வேதமாம்; இரண்டாவது நாம் எப்போதும் நன்மையைச் செய்யவும், தீமையை அகற்றவும் தேவன் நம்மில் வைத்திருக்கும் மனச்சாட்சியாம்; மூன்றுவது பாவிகள் கரையேறுவதற்கான வழியைக் காட்டத் தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் சத்தியவேதமாகிய அருள்வேதமாம். இம்மூன்று புஸ்தகங்களையும் நான் தினந்தோறும் வாசித்துத் தியானித்துப் படித்து, அவைகளிலிருந்து சுரக்கும் இனிய தேனை உட்கொண்டு, அவைகளின்படியே நடப்பதால், உனக்கு வருத்தமென்று தோன்றுகிறவைகள் எல்லாம் எனக்கு மிகவும் எளிதாய் இருக்கின்றன; இதினால் எனக்கு அநேக புஸ்தகங்கள் தேவையாயிருக்கிறதுமில்லை" என்றார்.

இதைக் கேட்ட கல்விமான்: "அநேக புஸ்தகங்களிருந்தும், அவற்றிற்கெல்லாம் மூலகாரணமாகிய இச்சிறந்த புஸ்தகங்களை இதுவரைக்கும் நான் அறிந்ததில்லை; இப்போதும் உமது அன்பால் அவைகளை அறிந்துகொள்ளும் பாக்கியம் பெற்றேன்" என்று ஆநந்தித்து மகிழ்ச்சியோடே தனது வீட்டுக்குத் திரும்பினான்.

GLEANINGS.

## சமாச்சாரக குறிப்புகள்.

அமெரிக்கா கண்டத்திலுள்ள ஐக்கிய மாகாணங்களில் 'மாதர்' என்னப்படும் ஒரு சிறந்த பத்திரிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. அதில் சாஸ்திர சம்பந்தமான விஷயங்களும், வீட்டுக்கடுத்த விஷயங்களும், இனிய இலக்கிய விஷயங்களும், ஸ்திரீகளுக்கு அவசியமான வேறு அநேக விஷயங்களும் வெகுவாய் அடங்கியிருக்கின்றன. அதை நடத்துபவரும் அதற்கென்று ஏராளமாய் எழுதுகிறவர்களும் ஸ்திரீகளாய் இருக்கிறார்கள்.

---

இப்போதிருக்கும் ஜர்மன் சக்கரவர்த்தினியார் தமது வீட்டாரோடு கூடியமட்டும் இங்கிலீஷிலேயே சம்பாஷித்து வருகிறார்களாம். கிரேக்க, ருஷிய, டேனிஷ் ராஜ்ய குடும்பங்களிலெல்லாம் இங்லீஷ் பாஷை பேசப்பட்டு வருகிறது.

---

ருமானியா நாட்டு இராணியார் காலஞ்சென்ற ஜர்மன் சக்கரவர்த்தியாகிய பிரதரிக் என்பவரின் ஜீவிய விருத்தாந்தத்தைக் காவிய ரூபமாக எழுதி, அந்தச் சக்கரவர்த்தியின் விதவைக்கும், அவர்களின் தாயாகிய நமது ராஜாத்தியவர்களுக்கும் அனுப்பியிருக்கிறார்கள்.

---

இங்கிலாந்து தேசத்தில் ஒவ்வொரு வருஷமும் மதுபானத்தினால் கொல்லப்படுகிறவர்கள் ஏறக்குறைய ஒரு லட்சத்து இருபதினாயிரம் பேர். இந்தியாவிலோ வாந்திபேதியால் மரிப்பவர்களிலும் மதுபானத்தால் மரிப்பவர்கள் ஏராளமாயிருக்கிறார்கள்.

---

பம்பாயிலிருக்கும் அங்கிலேய ராணுவத்தின் அதிபதியாகிய கன்னாட் டியூக்பிரபுவின் மனைவியின் சகோதரியும், சாக்சே ஆல்றன்பர்க் ராஜபிரபுவின் மனைவியுமான மேரி ராஜபெருமாட்டி பிரசவசுரம் கண்டு, ஜர்மானிய சக்கரவர்த்தியாகிய பிரதரிக் பெருமான் மரித்துச் சிலநாட்களுக்குப்பின் மரணத்துக்கிரையானார்கள்.

GOOD WORDS FOR WOMEN.

## நங்கையர்க்கு நல்லுரை.

### 4. காப்பு.

காப்பு, காப்பு என்றவுடனே நங்கையரில் பெரும்பாலார் தங்கக்காப்பு, வெள்ளிக்காப்பு, கெட்டிக்காப்பு, போல்காப்பு என்ற பலவகையான நகைகளை நினைப்பார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. நானோ இந்த அணிகலத்தை மறந்து, காப்பு என்ற பதத்தின் மூல அர்த்தத்தை யாவரும் கவனித்து, யோசித்து, அதைப் பிரயோசனப்படுத்திக்கொள்ளவேண்டுமென்றிருக்கிறேன்.

காப்பிடுதல், காப்புக்கட்டிக்கொள்ளுதல் என்கிற சாங்கியம் அனேக இந்து ஸ்திரீகளுக்குத் தெரியும். பிள்ளை பிறந்த சில தினங்களுக்குப்பின் தங்கள் குலதேவதையை நினைத்து, வேண்டுதல்செய்து, அத்தேவதையின் பாதுகாப்புக்குத் தங்கள் பாலகனை ஒப்புவித்து, அதற்கு அடையாளமாக அதன் கையிலாவது, காலிலாவது, அவ்விரண்டிலுமாவது காப்பு போடுவார்கள்.

மேலும், பெரியோரான ஸ்திரீகளும் புருஷரும் தங்களை இன்னின்ன தேவதை காப்பாற்றவேண்டுமென்ற கோரிக்கையோடு கையிலாவது, காலிலாவது காப்புபோட்டுக்கொண்டு, தாங்கள் குறித்த காலத்தில் அந்தக் காப்பைக் காணிக்கையாகச் செலுத்துவார்கள். இப்படியே தெய்வ பாதுகாப்பினிமித்தம் அணிந்துகொள்ளும் நகைக்குக் காப்பென்ற பெயர் வந்து, பிறகு அதைப்போல் கை காலில்போட்டுக்கொள்ளுவது தேவதாசம்பந்தமாயிராவிட்டாலும், காப்பென்னப்பட்டது.

தங்கக்காப்பும் வெள்ளிக்காப்பும் ஒருவரைக் காக்கப்போகிறதில்லை. நம்மைக் காப்பது இந்த அம்மனும் அந்த தேவதையுமல்ல. மெய்யான தேவனின் பாதுகாப்பே காப்பு. இவர் காப்புக்குத் தங்களை ஒப்புக்கொடுப்போர் அவர் துணையை முன்னிட்டுத் தங்களைக் காத்துக்கொள்ளுங் காப்பும் அதிக அவசியம்.

ஒட்டகங்களிலேறிப் பிரயாணஞ்செய்த இரண்டுபேர் ஒரு இடத்தில் வந்து இராத்தங்கினார்கள். அவர்களில் ஒருவன் தன் ஒட்டகத்தை யாதொரு மரத்திலாவது, முளையிலாவது கட்டாமல், அவிழ்த்துவிட்டு, "தேவன் என் ஒட்டகத்தைக் காப்பாற்றுவார்" என்க, மற்றவன் "அப்படியல்ல, நான் என் ஒட்டகத்தைக் கட்டிவைத்து, அதைத் தெய்வபாதுகாப்புக்கு ஒப்புவிப்பேன்" என்றானாம். இதுவே சரி.

நமது சரீரத்தையும் ஆத்துமத்தையும் தேவன் பாதுகாக்கிறார் என்பது சத்தியமேயாயினும், அவர் நமது பாதுகாப்புக்காகக் கொடுத்திருக்கிற பிரமாணங்களை நாம் அனுசரித்துக்கொண்டு, அத்தோடு நம்மை அவர் பாதுகாப்புக்கு ஒப்புவிப்பது நியாயம். வெள்ளப் பெருக்காயிருக்கும் ஒரு ஆற்றைக் கடக்கப் பாலமொன்றிருந்தும், அதன் வழியாய்ச் செல்லாமல் ஆற்றில் இறங்குகிறவன், தேவன் தன்னைக் காப்பாற்றுவாரென்று சொல்வது அவரைப் பரிகாசம்பண்ணுவதற்கு ஒப்பாகுமல்லவா? அவ்வாறே நாம் துஷ்டரோடும் தூர்த்தரோடும் ஆத்மார்த்த சிநேகமாயிருந்துகொண்டு, தேவனே என்னைப் பரிசுத்தத்தில் தேறப்பண்ணும் என்று ஜெபிப்பது அநியாயந்தானே.



நங்கையரே, நமக்குச் சரீரக்காப்பைப் பார்க்கிலும் ஆத்துமக்காப்பு அதிக அவசியம். ஆத்துமக்காப்பைக் கண்ணோக்கி நமது அவயவங்களைக் காப்பது முக்கியம்.

இதை வாசிக்கும் சிநேகிதியே, நீ கண்ணைக் காப்பதில் கவலையாயிரு. பார்க்கத் தகாததைப் பாராதே. வேஷம் பார்ப்பதும், வேடிக்கை பார்ப்பதும் நமது தேசத்தாருக்குப் பிரியம். அசுத்த வேஷங்களும், அக்கிரம வேடிக்கைகளும் நமக்குள் நல்லெண்ணங்களை உண்டுபண்ணக்கூடுமா? பொருளாசை முதலிய துராசைகளைக் கிளப்பிவிடும் காட்சிகளுக்கு விலக்கமாய்க் கண்ணைக் காக்கவேண்டும். சிந்தாமணியின் சிலையழகையும் ஒய்யாரவல்லியின் ஒலையழகையும் உற்றுப்பார்ப்பது என்னத்திற்கு? மங்கையர் வெளியே போகநேரிட்டால், அங்குமிங்கும் அநாவசியமாய்ப் பாராமல், தலைகுனிந்து பெருவிரல்மேல் கண்வைத்து நடப்பதே நன்று. வாசிக்கத் தெரிந்த பெண்கள் தகாத புத்தகங்களையும் பத்திரிகைகளையும் பார்ப்பது நன்றல்ல.

காதைக் காப்பதில் கருத்தாயிரு. இதுவே நராத்மபுரியில் வேதாளம் புகுந்ததற்கு முதல் ஏதுவாயிருந்த சாளரவாசல். துர்ப்பேச்சுக்குச் செவிசாய்க்காதே. சோற்றில் நஞ்சிடுவதுபோல் சுகமான ராகங்கள் வழியாய்த் துர்ப்போதனைகளைச் செய்வாருண்டு. இதற்கு எச்சரிக்கையாயிரு. வேதபோதகம் கேட்டு விசுவாசம் அடைவதற்குப் பதிலாய்ப் பேதக மொழிகளைக் கேட்டுப் பேய்க்கடிமையாகாதே. பெண்களே, நீங்கள் கேட்கத்தக்கதை இருமுறை கேளுங்கள். கேட்கத்தகாததற்கு இருகாதையும் அடைத்துக்கொள்ளுங்கள்.

நாவைக் காப்பவளே ஞானமுள்ள பெண். பெண்ணுக்கெல்லாம் புண்ணுக்கு என்று சொல்லாமல், பொன்னுக்கென்று சொல்லும்படிப் பார்க்கவேண்டும். மட்டுமிஞ்சின பேச்சுக்காரியை யாவரும் வாய்ப்பட்டிக்காரியென்று வாய்க்குப் புறம்பே வாந்திபண்ணிப்போடுவார்கள். கோள் சொல்லும் குண்டுணியாகாதே. புரணி பேசும் போக்கிலியாகாதே. பொய்யைச் சொல்லும் புலைஞியாகாதே. உன் வீட்டுக் குறைவை ஒருவருக்கும் சொல்லாதே. பிறர் வீட்டுக் குறைவைப் பேசவே பேசாதே. வீணையிட்டு வெங்காந்தாளாகாதே. நஞ்சு செய்யும் தீமையிலும் நாக்கு செய்யும் தீமை அதிகம் என்று அறிந்திரு. பெண்டீர் நாவால் பெருந்தீமை விளைகிறதென்று அபிப்பிராயப்பட்ட ஒருவர் "தலையிலாப் பெண்களே தங்கப் பெண்கள்" என்று சொன்னார். இந்தச் சொல் பொய்யாய்ப் போகவும், பெண்கள் நாவே தங்க நாவென்று சொல்லவும் பிரயாசப்படவேண்டும்.

"யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு."

கையைக் காப்பவளே காரியக்காரி. ஊரார் சொத்துக்குப் பேயாய்ப் பறந்து, கண்ட பொருளையெல்லாம் கவர்ந்தெடுக்கிற திருட்டுச் செய்கைக்கு உன் கையை விலக்கு. திருட்டுச் சோறு, திருட்டுத் துணி, திருட்டு நகை, திருட்டுப் பணத்தால் செழித்தோர் இல்லை, சீரழிந்தோர் அனேகர். யாதொருவரையும் துன்பப்படுத்தாமல், உன் கையைக் காத்துக்கொள். மங்காள் தலைமயிர் பிடி, மங்காத்தாள் அடிமடி பிடி என்று பிடிபிடியாய்ப் பிடித்து, அடிஅடியாய் அடிப்பதற்குக் கை கொடுக்கப்பட்டிருக்கிறதில்லை. நன்மைசெய்யவேண்டிய கையினால் தின்மை செய்யாதே. தங்கக் கையைப் பங்கமாக்



THE QUEEN AND PRINCESS BEATRICE MAKING QUILTS.

இராணியாரும் அவர் புத்திரியும் மெத்தை துப்பட்டி பின்னுதல்.

மாய்ச் செய்யக்கூடாததைப் பிறர் செய்யும்படிக்காயினும் உற்சாகப்படுத்தித் தூண்டுவதினாலேயே நாம் உலகத்துக்கு வெகு நன்மைசெய்யலாம்.

"தாயைப்போல பிள்ளை, நூலைப்போல சேலை" என்பது சகலரும் அறிந்த பழமொழி; அப்படியே "பிள்ளை வீட்டிலிருப்பதுபோலவே வெளியிலுமிருக்கும்" என்றும் சொல்லலாம். பிள்ளைகள் உலகத்தில் நல்லோரெனப் பேரெடுக்கவேண்டுமானால், தாய்மார் அவர்களை வீட்டிலேயே நன்றாக வளர்க்கவேண்டும். தாய்மார் தங்கள் குமாரர் குமாரத்திகளின் இளவயதிலேயே அவர்களைச் சன்மார்க்க வழியில் நடத்தி, சற்போதனை செய்வித்து, கல்வி கற்கத் தைரியஞ்சொல்லி, இப்படியாக அவர்கள் பிறருக்கு உபயோகமுள்ளவர்களாயிருக்க வழி திறக்கவேண்டியது.

வீட்டிலே அமைதலாய்ச் செய்யப்படக்கூடிய இந்த வல்லமையான காரியங்களை இந்தத் தாய்மார் கவனிக்காதபடியால், எவ்வளவு சந்தோஷத்தையும் பாக்கியத்தையும் இழந்து நிற்கிறார்கள். ஒன்றுக்கும் உதவாதவன் என்று சொல்லப்படக்கூடிய எந்த ஏழையாவது, அறிவீனனாவது, நிர்ப்பாக்கியனாவது உலகத்தில் இல்லவே இல்லை; பிறனுக்கு எந்த உதவியும் செய்யக்கூடாதவன் என்று சொல்லப்படக்கூடியவனும் இல்லை; பிறனுக்கு ஒரு சிறுயோசனைமுதலாய்ச் சொல்லத் தெரியாத மூடசிகாமணி என்று சொல்லப்படக்கூடியவனும் இல்லை; பிறனை மேலான அந்தஸ்துக்குக் கொண்டுவர சமயம் தனக்கு இல்லை என்று சொல்லக்கூடியவனும் இல்லை.

பிறரை நாம் மேலான பதவிக்குக் கொண்டுவரப் பிரயாசப்படுவதாலும், நன்மைக்கென்று போராடுவதாலும், இப்படியாக இவ்வுலகிலுள்ளோர்க்கு நன்மைசெய்வதாலும் நாம் வெகு இன்பத்தோடே நமது வாழ்நாளைக் கழித்துவரலாம். நம்மில் ஒவ்வொருவனும் பிறனின் மேலான அல்லது தாழ்வான பதவிக்கடுத்த ஏதாயினும் ஒரு காரியத்தைத் தினந்தோறும் செய்துகொண்டே வருகிறான். ஆனால் எப்பொழுதும் நன்மைக்கென்றே நாம் அமைதலாய்ப் போராட அதிக கவலையுள்ளவர்களாயிருக்கவேண்டியது அவசியம். இதனால் நம்மில் பெரியோராகிலும் சரி, சிறியோராகிலும் சரி, ஆணாகிலும் சரி, பெண்ணாகிலும் சரி, உயர்ந்தோராகிலும் சரி, தாழ்ந்தோராகிலும் சரி, எப்படிப்பட்டவர்களும் தங்களாலானமட்டும் ஆடம்பரமின்றி அமர்ந்து அநேகம் பேருக்கு நன்மை செய்யலாமென்று தெளிவாகிறது. ஆகையால் இதை வாசிக்கும் சிநேகிதிகள் தங்களால் கூடிய நன்மையை உடனே செய்யத் தொடங்குவார்களாக.

J—
Y15 m·11, M87



JACOB'S DREAM.

## யாக்கோபின் சொப்பனம்.

ஏறக்குறைய நாலாயிரம் வருஷங்களுக்கு முன்னே ஈசாக்கு என்று பேர்கொண்ட ஒரு பெரிய மனுஷன் கானான் தேசத்தில் இருந்தான். அவன் நற்குணமுள்ள கிழவனும், தனது மரண காலத்தை அறியக்கூடாதவனுமாயிருந்தபடியால் ஏசா, யாக்கோபு என்னும் தனது இரண்டு குமாரரையும் அழைத்து, அவர்களை ஆசிர்வதித்தான். இவ்விருவரில் யாக்கோபு பெரியவனாயிருப்பானென்று தகப்பன் சொன்னதை ஏசா கேட்டு யாக்கோபைப் பகைத்தான்; ஆகையால் யாக்கோபு தன் ஜீவனைக் காப்பாற்ற ஓடிப்போனான். இப்படி இவன் ஓடிவரும்போது, பிரயாணத்தினால் களைப்படைந்தவனாய் சூரியன் அஸ்தமித்ததும், ஒரு இடத்தில் இராத்தங்கினான். அங்கே சில கற்களை எடுத்துத் தன் தலையின்கீழ் தலையணைக்குப்பதிலாய் வைத்துக்கொண்டு நன்றாய்ப் படுத்து நித்திரை செய்தான். எவருமறியாத அவ்வெளிய வழியிலே குளிர்ந்த தரையாகிய படுக்கையில் கற்களாகிய தலையணையை வைத்துக்கொண்டு நித்திரை செய்தபோது, பரம தகப்பனாகிய தேவன் அவனைப் பாதுகாத்து ஆறுதல்படுத்திவந்தார். அவன் இவ்வாறு நித்திரைசெய்யும்போது ஒரு சொப்பனம் கண்டான். இதோ ஒரு ஏணி பூமியிலே வைக்கப்பட்டிருந்தது; அதின் நுனி வானத்தை எட்டியிருந்தது; அதிலே தேவதூதர் ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களுமாய் இருந்தார்கள். அதற்கு மேலாகக் கர்த்தர் நின்று "நான் உன் தகப்பனின் தேவனாகிய கர்த்தர்; நான் உன்னோடே இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காப்பேன்" என்றார். யாக்கோபு நித்திரை தெளிந்து விழித்து "மெய்யாகவே கர்த்தர் இந்த ஸ்தலத்தில் இருக்கிறார்" என்றான்.



யாக்கோபின் சரித்திரத்தை நாம் வாசித்துப் பார்த்தால், தேவன் அவனோடு மெய்யாகவே இருந்து, அவனை அவன் எல்லாச் சத்துருக்களின் கைக்கும் நீங்கலாக்கினார் என்பதைப் பார்ப்போம். யாக்கோபு கண்ட ஏணி தேவன் எல்லாக் காரியங்களையும் காத்து நடத்தி ஆண்டுவருகிறார் என்பதைக் குறிக்கிறது. மேலும் அது பரலோகத்துக்கும் பூலோகத்துக்குமுள்ள சம்பந்தத்தையும் காட்டுகிறது. ஏனெனில் அது பூமியிலே வைக்கப்பட்டு, அதின் நுனி வானத்தை எட்டியிருந்தது.

ஒரு பெரிய அரசன் தன்னிடம் வருகிற எல்லாருக்கும் பணமும் கனமும் தருவதாக வாக்களிப்பானாகில், அவனண்டைக்கு ஏராளமானபேர் சீக்கிரம் வருவார்கள். இதைப் பார்க்கும் ஒவ்வொருவனும் "அரசன் என்ன கொடுப்பார், நான் எப்படி அவரண்டை போகலாம்" என்று ஆவலோடே கேட்பான். நமது பரம தகப்பனாகிய தேவன் தமது சத்திய வேதத்தில் நாம் அவரிடம் வந்தால் நமது எல்லாக் குறைகளையும் நீக்குவதாக வாக்களித்திருக்கிறார். நமக்காகப் பாடுபட்டு மரித்த தமது ஒரேகுமாரனின்மூலமாய்மாத்திரம் நாம் அவரண்டைக்கு வரலாம் என்றும், **இதைத்தவிர வேறு வழியில்லை** என்றும் அவர் சொல்லியிருக்கிறார். இயேசுவே மெய்யான வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறார். அவரையன்றி ஒருவனும் பிதாவண்டைக்கு வரான். அவர்மூலமாய் நாமும் தேவனண்டைக்குப் போகிறோம்.

HYMN.

## ஞான கீதம்.

THE SPIRIT OF T..UTH.

### சத்திய ஆவி.

அடியார் நெஞ்சைத் தயவாய்
சந்தித்து ரப்பி உமக்கே
பொருந்தும் அலங்காரமாய்
படையும், தேவ ஆவியே!

2. வெளிச்சம் தாரும் மனதில்,
சூடன்பை நெஞ்சிலே கொடும்;
சரீர பலவீனத்தில்
பலம் உண்டாக்கியருளும்.

3. அடியார் எச்சரிக்கையாய்
நீர் ஏவும்போல் நடக்கவே,
பிசாசின் சூதைத் தூரமாய்
விலக்கும், மனவாசரே!

4. பிதா சுதனையும் நன்றாய்
அறிந்து அண்டிக்கொள்ளவே,
நீர் எங்கள் தேவ வாத்தியாய்
இரும், இருவர் ஆவியே!

5. திரியேக தெய்வமாகிய
பிதா குமாரன் ஆவிக்கும்,
எப்போதென்றைக்கும் சகல
புகழ்ச்சியும் உண்டாகவும்.

MRS. MORTIMER.

## மார்ட்டிமேர் அம்மாள்.

அநேக ஸ்திரீகளும், கல்வியில் தேர்ந்த பெரியோரும், புல்லறிவுள்ள சிறியோரும் வெகு ஆவலோடு வாசித்துப் படித்துவரும் 'தின தீபிகை,' 'சட்ட திட்டம்' என்னும் இரு அரிய நூற்களின் ஆசிரியளாகிய மார்ட்டிமேர் துரைசானி ௲௮௱௨-ம் ௵ பிறந்து, ௲௮௱௭௰௮-ம் ௵ மரித்தாள். இவள் சுவிசேஷ போதகராகிய தாமஸ் மார்ட்டிமேர் என்பவரின் மனைவியும், கிறிஸ்தவர்களின் கீர்த்திபெற்ற பரோபகாரியாகிய பிவான் என்பவரின் சகோதரியுமாயிருந்தாள். இவளுக்குப் பிள்ளையில்லாதிருந்தும், பிள்ளைகள்மேல் மிகுந்த பாசமுள்ளவள். சிறுபிள்ளைகளின் உபயோகத்துக்கென்றே ௲௮௱௩௰௩-ம் ௵ 'தின தீபிகை' என்னும் நூலை எழுதினாள். அவள் மரிக்கும்போது, இந்த நூலில் பதினைந்து லட்சத்து ஐயாயிரம் காப்பிகளும், 'சட்ட திட்டம்' என்னும் நூலில் நாலு லட்சத்து அறுபதினாயிரம் காப்பிகளும் விலையாகியிருந்தன. இதுவுமன்றி இவைகள் அநேக ஐரோப்பிய இந்திய பாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டும் இருக்கின்றன. கிறிஸ்துமார்க்கத்தைக் குறித்து யாதும் அறியாத அறிவீனருக்கு இவைகள் இரட்சணிய மகிமையை வெகு தெளிவாய்க் காட்டும் சிறந்த கருவிகளாய் இருக்கின்றன.

சிறுவருக்கும் அறிவீனருக்கும் சுவிசேஷ பாலை ஊட்டுவதற்கென்றே மார்ட்டிமேர் அம்மாள் தனது ஜீவகால முழுவதையும் செலவழித்துவந்தாள். சில அநாத பிள்ளைகளைத் தனது வீட்டில் சேர்த்து, அவர்களின் கல்வி அபிவிருத்தியின்பொருட்டு அதிகப் பணம் செலவழித்துவந்தாள். சுவிசேஷகப் பிரசங்கிகளை அஞ்ஞான தேசங்களுக்கு அனுப்புவதற்குத் தன்னால் இயன்றமட்டும் உதவி செய்துவந்தாள். தன் வீட்டில் பிள்ளைகள் அதிகமாய்ச் சேர்ந்ததும், பெண்பிள்ளைகளுக்கென்று பிரத்தியேகமான ஒரு அநாத ஆதரிப்புப் பாடசாலையை ஏற்படுத்தினாள். இவள் ஆதரவற்றோரின் சிநேகிதியும், நல்லோரின் ஆலோசனைக்காரியுமாய் இந்நாள்வரைக்கும் எங்கும் புகழப்படுகிறாள்.

இவளின் குணத்தைக் குறித்து: "நல்லொழுக்கத்திலும் பக்தியிலும் உத்தமியாகிய மார்ட்டிமேர் துரைசானிக்கு இணையொத்தவளை எங்கும் காண்பது அரிது. இவள் எக்காலத்திலும் தனது மனச்சாட்சியின்படியே நடந்துவந்த, மாசற்ற மனத்தூய்மையுள்ள மாதுசிரோன்மணி. பொய்யென்பதை விளையாட்டுக்காகிலும் அற்பமேனும் சகியாத புண்ணியாத்துமா. இவளில் அன்பென்னும் அரிய குணம் ஆழ்ந்து வேரூன்றியிருந்ததை அறியாதவர் வெகு சிலர். இந்தக் குணசீலியைக் கண்டாலும் கண் ருசிக்கும், பேசுவதைக் கேட்டாலும் செவி ருசிக்கும்" என்று இவளை நன்றாய் அறிந்த ஒருவர் எழுதியிருக்கிறார். இப்படிக்கொத்த இனிய குணங்களை ஆபரணமாகக் கொண்ட இந்தப் புண்ணியவதியை நமக்கு முன்மாதிரியாக வைத்துக்கொள்வோமாக.

"கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள். அவள் கைகளின் பலனை அவளுக்குக் கொடுங்கள்; அவளுடைய செய்கைகள் வாசல்களில் அவளைப் புகழ்க்கடவது."



MRS. MORTIME.., AUTHOR OF 'PEEP OF DAY'.
மார்ட்டிமேர் அம்மாள்.

GOOD WORDS FOR WOMEN.

## நங்கையர்க்கு நல்லுரை.

### 5. மும்மை.

நமது தேசத்துப் பெண்களில் கண்ணுக்கு மையிட்டுக்கொள்வார் அநேகருண்டு. கண்குவளை கறுப்பாயிருப்பது கண்ணுக்கும் முகத்துக்கும் அழகு என்பது அநேகர் எண்ணம். நானோ இந்த மையழகு பொய்யழகு என்கிறேன். அஞ்சனம் கலைந்தால் அழகும் ஒழிந்துபோம். பெண்களுக்கு மெய்யழகு தரும் மூவகை மை இருக்கிறது. அவைகளைத் தரித்துக்கொள்வது நன்றும் அவசியமுமாம்.

மும்மையில் முதல் மை **தாழ்மை.** மனிதருக்குத் தாழ்மை நல்லது. அதிலும் ஸ்திரீகளுக்கு மிகவும் நல்லது. மேட்டிமைக்காரப் பெண்களை அவர்கள் பெற்றோர் பிறந்தார், உற்றோர் உறவோர் ஒருவரும் விரும்பார். தாழ்மையுள்ளவர்களையோ மேலோர் கீழோர், எளியார் வலியார் எல்லோரும் விரும்புவார்கள். நாம் அகந்தை பாராட்ட நமக்கு என்ன நியாயமிருக்கிறது? நமது அறிவு நமக்கு அகந்தையைத் தருமோ? சுதேச ஸ்திரீகளுக்கு இருக்கும் கல்வியும் அறிவும் எவ்வளவு சொற்பம். நமக்குக் கல்வியும் அறிவும் அதிகமென்றே வைத்துக்கொள்வோம். இது நமக்கு அகந்தையை உண்டாக்க என்ன நியாயமிருக்கிறது? அறிவைக் கொடுத்தவர் தேவன். கொடுக்க வல்லவர் அதை எடுக்கவும் வல்லவர். புத்திசாலிகள் புத்தியீனரும், அறிவாளிகள் அறிவீனரும் ஆகிறது வெகு லேசு. இதற்கேன் பெருமை? மேலும், நல்லறிவு அகந்தை கொள்ளாது. நிறைகுடம் தளம்பாது, குறைகுடம் தளம்பும்.—பணங்காசினிமித்தம் பெருமை பாராட்டுவோருண்டு. பணப் பெருமை பிணப் பெருமை, தங்கப் பெருமை பங்கப் பெருமை. பணப் பெருமையெல்லாம் கணப்பொழுதில் பறந்துபோம். பட்டுப் புடவைக்காரியெல்லாம் பருத்திப் புடவைக்காரியாவதும், பருத்திப் புடவைக்காரியெல்லாம் கந்தைத் துணிக்கும் கதியற்று நிற்பதும் கூடாத காரியமல்ல. உலக வாழ்வு கனவைப்போலும், நிழலைப்போலும் ஒழிந்துபோகக்கூடியதென்று நாம் அனுபவசித்தாந்தமாய் அறிந்திருக்க, நமக்குப் பெருமை என்னத்துக்கு? அப்படியே புத்திகோசரம், சௌந்தரியம், தேகபலம், உயர்குலம், இவற்றினிமித்தம் மேட்டிமை அடைகிறவர்களுண்டு. நங்கையரே, நமக்கு அது வேண்டாம். மேற்சொன்ன விஷயங்களெல்லாம் நமக்குத் தாழ்மையை உண்டுபண்ணுவதே நியாயம். நாம் வாசஞ்செய்யும் பூமியுண்டையைப்போல் அநேக ஆயிரமடங்கு பெரிதான அண்டங்களெல்லாம் தங்கள் சுயசுரூபத்தை நமக்குக் காண்பியாமல், மகா நுட்பமான மின்மினிப்பூச்சிபோல் ஆகாயத்தில் தோன்றி நிற்பதை நாம் பார்க்கிறதில்லையா? வச்சிரம், கெம்பு, வைடூரியம், கோமேதகம், புஷ்பராகம் முதலிய உயர்விலையுள்ள இரத்தினக்கற்களெல்லாம் யாவரும் பார்க்கத்தக்கதாக வெளியெங்கும் விழுந்து கிடக்காமல், அடக்க ஒடுக்கமாய்த் தரைக்குள் புதைந்து கிடக்கின்றன அல்லவா? காயும் கனியும் குலுங்கித் தொங்கும் மாக்கிளைகளைப் பாருங்கள்; அவைகள் மேட்டிமைக்காரரைப்போல் நீட்டி நிமிர்ந்து முறைப்பாய் நில்லாமல், அதிகப் பணிவாய்த் தாழ்ந்து தொங்குகின்றன அல்லவா? அப்படியே அழகிலும், அறிவிலும், ஆஸ்திபாஸ்தியிலும் பெருத்தவர்களான ஸ்திரீகளில் உத்தமிகளாயிருப்போர் தாழ்மையை அணிந்து, மேன்மை அடைவார்கள்.



மற்றொரு மை **பொறுமை.** ஸ்திரீகளுக்குப் புருஷரைப்பார்க்கிலும் பாடும் துன்பமும் அதிகமாயிருப்பதால், பொறுமையும் அவர்களுக்கு அதிகமாயிருப்பது அவசியம். பொறுக்காக்குணம் துன்பத்தைப் பெருக்குமேயல்லாமல் குறைக்காது. ஸ்திரீகளுக்குத் தேகசம்பந்தமான பல பாடுகளுண்டென்பதை நான் விபரிக்க வேண்டியதில்லை. அவர்களுக்குப் புருஷராலும், பிள்ளைகளாலும், மாமிமாராலும், நாத்திமாராலும் துன்பங்கள் உண்டு. மேலும், வீட்டாருக்கு நோய் வந்தால் வீட்டுக்காரிக்கு நோய் வந்ததுபோலாம். அவளே அவர்களுக்குப் பல பணிவிடையும் செய்யவேண்டியவள் ஆகிறாள். இல்லாமையின் கொடுமை இல்லாளுக்குப் பெரிதேயல்லாமல் மற்றோருக்கல்ல. இவைகளில் எல்லாம் அவளுக்குப் பொறுமை எத்தனை அவசியம். துன்பத்தில் பொறுமை, துக்கத்தில் பொறுமை, பாட்டில் பொறுமை, பசியில் பொறுமை, பேற்றில் பொறுமை, பிரிவில் பொறுமை, எங்கும் பொறுமை, எப்போதும் பொறுமையாயிருப்பதே நன்று. பொறுமையினால் அநேக சண்டை சடுத்தங்கள் நீங்கி, வீட்டிலும் மனதிலும், சமாதானமும் சந்தோஷமும் உண்டாக ஏதுவாகும்.

மேற்சொன்ன இரண்டு மையோடு இன்னொரு மை சேர்ந்திருக்குமானால், தேனும் தினைமாவும், பாலும் பருப்பும் சேர்ந்தாற்போல் ஆகும். அந்த மை உண்மைதான். மனமும் வாக்கும் ஒத்திருக்கும் உண்மை, வாக்கும் நடையும் ஒத்திருக்கும் உண்மை. ஸ்திரீகளுக்கு உத்தியோகமொன்று இல்லாவிடினும், சுயமாகவே பல உத்தரவாதமுள்ள வேலை உண்டு. அவர்கள் மனைவிகள், தாய்மார், எசமாட்டிகள், சகோதரிகள், சிநேகிதிகள், ஊழியக்காரிகள். இத்தனை தரத்திலும் உண்மை அவசியம். புருஷனுக்கு உண்மையாயிராத பெண்சாதி பெண்சாதியல்ல, புண்சாதி. பிள்ளைகளுக்கு உண்மையாயிராத தாய் தாயல்ல, நோய். நங்கையரே, நீங்கள் எதிலும் உண்மையாயிருங்கள், எல்லாவற்றிலும் உண்மையாயிருங்கள். உங்கள் புருஷருக்கும் பிள்ளைகளுக்கும், உங்கள் வீட்டுக்கும் நாட்டுக்கும், எல்லாவற்றிலும் விசேஷமாய்த் தேவனுக்கும் உண்மையாயிருங்கள். உங்களைச் சிருஷ்டித்துப் பராமரித்து, இரட்சித்துக் காத்துவருகிற தேவன் உங்களிடத்தில் தேடுவது முக்கியமாய் உண்மை. உண்மையுள்ளவர்களுக்கு இம்மையிலும் பலன், மறுமையிலும் பலன்.

தாழ்மையுள்ளவள் தங்கம் போன்றவள். பொறுமையும் சேர்ந்தவள் தங்க புஷ்பத்துக்கு ஒத்தவள். இத்தோடு உண்மையும் உள்ளவளோ நறுமணம் பொருந்திய தங்க புஷ்பத்துக்கு ஒப்பானவள்.

மி. மி.

CHILDREN'S CORNER.

## சிறுவர்க்கான கதை.

THE PEBBLES.

### சிறு கூழாங்கற்கள்.

நிலவளம் நீர்வளம் பொருந்திய ஒரு சிங்கார நகரில் செல்வம் மிகுந்த ஒரு சீமான் இருந்தான். இவன் விதவிதமான விலையுயர்ந்த சரக்குகள் தட்டுகளிலே பரப்பப்பெற்ற மகாப் பெரிய கடையொன்று வைத்திருந்தான். ஒருநாள் அங்கே நற்குணமுள்ள ஒரு வாலிபன் வந்து, கடையின் எசமான் தனக்கு ஏதாயினும் ஒரு உத்தியோகம் கொடுக்கவேண்டுமென்று வெகுவாய் வேண்டிக்கொண்டான். ஏழைகள்மேல் மிகுந்த பரிதாபமுள்ள அவ்வெசமானும் அவன் வேண்டுதலுக்கு இரங்கி, அவன் விரும்பியவாறே ஒரு உத்தியோகம் கொடுத்தான்.

உத்தியோகம் கிடைத்ததும், 'சோராத இடந்தனிலே சேரவேண்டாம்' என்னும் நீதிவாக்கியத்தை இந்த வாலிபன் மறந்து, துர்ச்சனரோடு கூடி, வெறிக்க குடிக்கக் கற்றுக்கொண்டு, கடைசியில் வெகு பயங்கரமாய் வியாதிப்பட்டுச் சாகச் சமீபமாயிருந்தான். அப்பொழுது ஒரு நைதேர்ந்த வைத்தியன் அவனை அவ்வியாதியினின்று சுகப்படுத்தி, இனி அவன் ஒரு போதும் எப்படிப்பட்ட மதுபானத்தையும் உட்கொள்ளவேகூடாதென்று திட்டமாய் உத்தரவு செய்தான். வாலிபனோ வைத்தியனைநோக்கி "பண்டிதரே, மதுபானம் உட்கொள்ளுவது எனக்கு வழக்கமாகிவிட்டது. அதை நான் உபயோகித்துவராவிடில் சீக்கிரம் மரித்துப்போவேன். இதோ நீர் பார்க்கும் இந்தச் சிறு புட்டியிலும் அதிகமாய் நான் குடிக்கிறதேயில்லை. ஆகையால் மதுபானத்தை ஆரோக்கியம் தரும் பானமாக மாற்றும் ஏதாயினும் அரிய மருந்தை நீர் தயவுசெய்து கொடுப்பீரானால், நான் அதை மதுபானத்தோடு எப்போதும் கலந்து குடித்துச் சுகமாக வாழ்ந்திருப்பேன்" என்றான்.

வைத்தியன் இதைக் கேட்டு, மதுபானத்தை இவனிடமிருந்து திடீரென விலக்குவது இலேசான விஷயமல்ல என்று கண்டு "நல்லது, நீர் விரும்புகிறபடியே மதுபானத்தை நல்ல பானமாக்கும் சில சிறுகற்கள் என்னிடமுண்டு. அவைகளிலுள்ள குணம் வேறெந்த மருந்திலும் இல்லை. ஆகையால் நீர் இந்தப் புட்டியிலிருந்து குடிக்கும்போதெல்லாம் இந்தக் கற்களில் ஒன்றை அதில் போட்டுக் குடியும்; ஆனால் ஒருதரம் போட்ட கல்லைத் திருப்பவும் எடுக்காதேயும். அது புட்டியிலேயே இருக்கவேண்டும்; அப்போது தான் கற்கள் நல்ல பலன் செய்யும்" என்றான். குடிக்க எப்படியும் உத்திரவு கிடைத்தபடியால் வாலிபன் மிகவும் சந்தோஷமாகி, "நீர் எப்படி சொன்னீரோ அப்படியே செய்துவருகிறேன், ஐயா" என்றான்.



வைத்தியன் அங்கிருந்தபடியே ஆற்றோரத்துக்குப் போய் நேர்த்தியான ஒரே அளவுள்ள சிறு கூழாங்கற்களைப் பொறுக்கி, ஒரு பெட்டி நிறைய அடைத்து, மறுநாள் காலையில் அவனிடம் அனுப்பினான். வாலிபன் அந்தக் கற்களை மகாச் சிறந்த குணமுள்ளவைகளாக எண்ணி, தினந்தோறும் தவறாமல் தனது சாராயப் புட்டியில் அவைகளில் ஒன்றைப் போட்டுக் குடித்துவந்தான். இப்படியாக ஒவ்வொருநாளும் அவனுக்குத் தெரியாமலேயே அவன் புட்டியில் கொஞ்சம் கொஞ்சமாய் சாராயம் குறைந்துகொண்டேவந்தது. கடைசியாக சாராயப் புட்டி கற்களால் நிறைந்ததும், அவனும் குடிப்பதை விட்டொழிந்து, வைத்தியனைக் கூப்பிட்டு "ஐயா, நீர் அனுப்பின கற்கள் மெய்யாகவே சிறந்த கற்கள்தான்; அவைகள் எனக்கு ஆரோக்கியம் தந்ததுமல்லாமல் குடியையும் என்னிலிருந்து முழுவதும் அகற்றிவிட்டது; ஆகையால் உமக்கு அநேககோடி வந்தனம் செலுத்துகிறேன்" என்றான்.

வைத்தியன் அவனை நோக்கி "உமக்கு நான் அனுப்பிய கற்கள் வெறும் கூழாங்கற்களேயன்றி வேறொன்றுமல்ல. நீர் அவைகளை உமது புட்டியில் போட்டபோதெல்லாம் அவைகள் நீர் குடிப்பதைக் கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைத்துக்கொண்டே வந்தன. இதுவே அவைகளால் உண்டான பலன். இவ்வாறு ஒவ்வொருவனும் தினந்தோறும் ஒரு சிறு தீமையை நீக்குவதால் தேவனுக்குப் பிரியமான திவ்விய வழியில் நடக்கலாம்" என்றான்.

GLEANINGS.

## சமாச்சாரக் குறிப்புகள்.

ஐரோப்பா கண்டத்திலுள்ள ஸ்திரீகளிலெல்லாம் கல்வியில் பூரண பாண்டித்தியமுடையவர்கள் இரண்டேபேரென அமெரிக்காவில் பிரசுரமாகும் ஒரு பத்திரிகை கூறுகின்றது. அவர்கள் நமது காருண்ய இராணியாரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற ஜர்மன் தேசத்து சக்கிரவர்த்தியாகிய பிரதரிக் என்பரின் மனைவியுமாகிய விக்டோரியா சக்கிரவர்த்தினியும், இத்தாலி தேசத்து இராணியாகிய மார்கரேத்தா பெருமாட்டியுமாம். இவர்களில் விக்டோரியா சக்கிரவர்த்தினியார் வாக்கு வல்லபத்தாலும் சாஸ்திர பாண்டித்தியத்தாலும் பேர்பெற்றும், மார்கரேத்தா இராணியார் கூரிய புத்தியினாலும் வாக்குச்சாலத்தினாலும் கீர்த்திபெற்றும் இருக்கிறார்கள்.

ஓர் ஆப்பிரிக்காவின் அரசனின் உபயோகத்துக்கென்று ஸ்காட்லந்து தேசத்திலுள்ள கிளாஸ்கோ நகரில் செய்யப்பட்ட குடை ஒன்று உலகத்திலுள்ள எல்லாக் குடைகளிலும் மகாப் பெரிதானது. சாதாரண குடைகளைப் போலவே அதையும் விரித்து மூடலாம். விரித்தால் அதன் குறுக்களவு இருபத்தோரடி; குடைக்கழியின் நீளமும் இருபத்தோரடி; அது பட்டு ஓரங்களும் அழகிய குஞ்சங்களும் பொன்முலாம் பூசிய நுனியுமுள்ளதாய்ப் பிரகாசிக்கின்றது.

இப்போது புதிதாய் கிளாஸ்கோ நகரில் ஏற்படுத்திய பலவினோத பொருட்களின் பகிரங்க காட்சியைப் பார்க்கும்படி இராணியார் போயிருந்தபோது, ஆக்ஸ்போர்ட் நகரில் பதிப்பிக்கப்பட்டதும், பொன் எழுத்துக்களில் இராணியாரின் பெயருள்ளதுமான இங்கிலீஷ் வேதாகமப்பிரதி ஒன்று பொற்பூட்டுள்ள மிகச் சிறந்த தோற்பெட்டியில் போடப்பட்டு அவர்களுக்கு வெகுமதியாக அளிக்கப்பட்டது. அதை அவர்கள் வெகு சந்தோஷத்துடன் அங்கீகரித்துக்கொண்டார்கள்.

## CHILDBIRTH.
## பிரசவ நூல்.

(தொடர்ச்சி.)

**கர்ப்பாசயத்தில் சிசு போஷிக்கப்படும் விதம்.**—கர்ப்பாசயத்தில் சிசுவானது தாயின் இரத்தத்தால் போஷிக்கப்படுகிறது. ஏறக்குறைய ஒரு முழ நீளமான நாபிக்கொடியினால் (அல்லது தொப்புள்கொடியினால்) கருப்பையின் உட்பக்கத்தில் ஒட்டிக்கொண்டிருக்கும் ஜவ்வுபோன்ற அணையம் (அல்லது மாயை) என்னும் வஸ்துவோடு சிசுவானது இணைக்கப்பட்டிருக்கிறது. அணையமும் கருப்பையின் பக்கங்களும் இரத்தக் குழாய்களால் நிறைந்திருக்கின்றன. இந்த இருவகை இரத்தக் குழாய்களுக்கும் நெருங்கிய வாய்க்கால் சம்பந்தமில்லை; ஆனால் தாயின் இரத்தம் இவைகள் மூலமாய்ச் சென்று, சிசுவின் இரத்தத்தைச் சுத்தமாக்கக்கூடிய அவ்வளவு மெல்லிதானவைகளாய் இருக்கின்றன. நாபிக்கொடியிலே மூன்று இரத்தக் குழாய்களுண்டு; இவைகளில் இரண்டின் வழியாய்ச் சிசுவுக்குச் சுத்த இரத்தம் செல்லும்; மற்றதின் வழியாய்ச் சிசுவிலிருக்கும் அசுத்த இரத்தம் சுத்தமாக்கப்படுவதற்கென்று அணையத்துக்குச் செல்லும். நாபிக்கொடியை அறுத்துவிட்டால், அல்லது இரத்தம் அதின் வழியாய்ச் செல்லாதபடி இறுக்கிவிட்டால், சிசு கருப்பாசயத்தை விட்டு வெளிப்படுமுன்னே கழுத்தில் கயிற்றை மாட்டிக்கொண்டு திக்குமுக்காடிச் சாகும் மனிதனைப் போல மரித்துப்போகும்.

கர்ப்பாசயத்திலுள்ள சிசுவைச் சுற்றி ஓர் வகைத் தண்ணீர் உண்டு. இதினால் கர்ப்பாசயம் நீண்டு, சிசு வளருவதற்குப் போதுமான இடமுள்ளதாயிருக்கிறது; மேலும் சிசு அமுக்கப்படாமல் காப்பாற்றப்பட்டும்வருகிறது. சாதாரணமாய்ச் சிசு தலைகீழாகவும், முழங்கால்கள் மேலாகவும், மார்பின் குறுக்கே கைகள் கட்டினபடியாயும் கிடக்கும்.

கர்ப்பாசயத்தில் சிசு வளரும் விதம் மிகவும் அதிசயமானது. ஏறக்குறைய கடுகினளவு சிறிதான கருவிலிருந்து அடிக்கடி பெற்றோரின் சாயலை ஒத்திருக்கும் ஒரு சிசு உண்டாகிறது; தாயின் பிரயாசையின்றி அதில் அநேக மாறுதல்கள் நடக்கின்றன; சாதாரணமாய் அவளுக்கு அவைகளைக்குறித்து ஒன்றுந் தெரியாது. இவைகள் தற்செயலாய் நடக்கக்கூடியவைகளோ? ஒருக்காலும் இல்லை. ஏனெனில், தற்செயலாய் நடக்குமானால் ஒரு அரண்மனையைக் கட்டுவதற்கென்று பற்பலவிதமான கற்களும், சாந்தும், மரமும், உலோகங்களும் தாங்களாய் வரக்கூடியதாகுமே. ஆனால் எல்லாம் "ஆலோசனையில் ஆச்சரியமானவரும், செயலில் மகத்துவமானவருமாகிய" பெரிய சிருஷ்டிகரின் வல்லமையினால் நடக்கின்றன.

**கர்ப்பகால பரிமாணம்.**—நாம் மேலே கூறியபடி கர்ப்பகாலத்தின் அளவு ஏறக்குறைய நாற்பது வாரம். இது சாதாரணமாய்க் கடைசி மாதவிடாயிலிருந்து (அல்லது மாத முழுக்கிலிருந்து) கணக்கிடப்படுகிறது; கர்ப்பகாலத்தில் இம்முழுக்குச் சாதாரணமாய் நின்றுபோகிறது. பிண்ட சலனமாகிய சிசுவின் அசைவினாலும் இதைக் கணக்கிடலாம். இந்த அசைவுண்டாகி இரண்டு வாரமானபின் கர்ப்பம் சாதாரணமாய்ப் பாதி முடிவடைகிறது. ஆனால் ஒன்று அல்லது இரண்டு வாரம் இதில் வித்தியாசப்படுமாதலால், இதைக்கொண்டு அதிக நிச்சயமாய் அறியமுடியாது.

**சிசு ஆணோ பெண்ணோ என்று அறிதல்.**—இதை நிச்சயமாய் அறியும்படிக்கான வழி ஒன்றுமில்லை. சோதிடசாஸ்திரிகள் சொல்வதெல்லாம் தற்செயலாய் சிலவேளையில் சரியாயும், சிலவேளையில் பிழையாயும் இருக்கக்கூடிய வெறும் உத்தேசங்களாம். பெற்றோரில் அநேகர் புத்திரர் வேணுமென்று விரும்புகிறார்கள்; ஆனால் இவைகளையெல்லாம் ஜீவனைக் கொடுக்கிறவராகிய தேவனுக்கு ஒப்புக்கொடுப்பதே சரியான வழியாம்.

(இன்னும் வரும்.)

# மாதர் மித்திரி.

புத். ௨. ௧௮௯௮ நவ-டிசம்பர் மீ. இல. ௬.

## NOTES.
## பத்திராதிபர் குறிப்புகள்.

### CHRISTMAS.
### கிறிஸ்துவின் ஜனன திருநாள்.

கிறிஸ்துவின் ஜனன திருநாள் என்னப்படுவது டிசம்பர் மாதம் இருபத்தைந் தாம் தேதியில் கிறிஸ்துவின் திருச்சபையார் கொண்டாடும் ஓர் பண்டிகை. கிறிஸ்து பிறந்ததை நினைவுகூர்ந்து, சகலரும் சந்தோஷமாயிருப்பதற்காக இந்தத் திருநாள் கொண்டாடப்படுகிறது. இது கோவிலிலும் வீட்டிலும் சந்தோஷமாய் இருக்கத்தக்க காலம். இந்தப் பண்டிகையின் கொண்டாட்டங்கள் எல்லாம் இருபத்து நாலாம்தேதி இரவிலேயே ஆரம்பித்து, புது வருஷத்தின் முதலாம்நாள்மட்டும் தொடர்ந்து வருகின்றன. இந்தப் பண்டிகைநாளுக்கு முந்தின நடுராத்திரியில் மணிகள் அடிபடுவதுடன், கிறிஸ்து பிறந்தபோது இடையர்கள் பாடின இனிய கீதங்களையொத்த பாடல்களும் பாடப்படும்.

கிறிஸ்து பிறந்த பண்டிகை "பிள்ளைகளின் பண்டிகை" என்றும் அழைக்கப்படுவதுண்டு. ஏனெனில் கிறிஸ்து பிறப்பின் பண்டிகைக்கு முந்தின இரவில் பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கும், சகோதரர் தங்கள் சகோதரிகளுக்கும் "பண்டிகை மரம்" என்னப்பட்ட ஒரு விருட்சத்தின் மூலமாய் வெகுமதிகளைக் கொடுப்பது வழக்கம். பழங்களாலும், பலகாரங்களாலும், விநோத விளையாட்டுப் பண்டங்களாலும், வேறுவிதமான வெகுமதிகளாலும் நிறைந்து குலுங்கும் சிறு மரமானது மெழுகுவர்த்திகள் கொளுத்தப்பட்டதாய் அறைவீட்டின் மத்தியில் நடப்பட்டிருக்கும். மரத்தில் தொங்கும் வெகுமதிகள் ஒவ்வொன்றிலும் இது இன்னாருக்குக் கொடுக்கப்படவேண்டியதென்றும் குறித்திருக்கும்; கொடுக்கிறவர்களின் பேர் அதிலிராது. முழுவீட்டாரும் அறையில்

கூடி வெகு சந்தோஷமாயிருக்கும் சமையத்தில் வெகுமதிகள் கொடுக்கப்படும்; இவைகளைப் பெற்றுக்கொண்டு ஒவ்வொருவரும் கிறிஸ்து பிறந்த பண்டிகையின் மினவுதலைச் சொல்லி வாழ்த்திக்கொள்ளுவார்கள்.

இது உலகமெங்கும் கொண்டாடப்படும் பண்டிகை. இக்காலத்தில் கிறிஸ்தவர்கள் விசேஷமாய் ஏழைகளுக்கும் துன்பப்படுகிறவர்களுக்கும் அன்னவஸ்திரம் தந்து, அவர்களையும் தங்களைப்போல் சந்தோஷமாய் இருக்கச் செய்கிறார்கள்.

இச்சமயத்தில் நாமும் நமது "மாதர் மித்திரியை" வாசிக்கும் சகல சிநேகிதருக்கும் கிறிஸ்து பிறந்த பண்டிகையின் கொண்டாட்டம் சந்தோஷமானதாயும் இனிவரும் புதுவருஷம் பாக்கியமானதாயும் இருக்க வாழ்த்துகின்றோம்.

FAULT FINDING.

## குற்றம் பிடித்தல்.

பிறரிடத்திலும் பிறர் காரியங்களிலும் குற்றம் பிடிப்பது இலேசான காரியம் என்பது எவரும் அறிந்த விஷயம். அப்படிப்பட்ட குற்றங்களை நிவிர்த்திப்பதற்கான வழி வகைகளைக் காட்டுவதோ முழுவதும் வித்தியாசமான வேறொரு காரியம். ஒரு பிள்ளையாவது புருஷனாவது ஒரு தப்பிதத்தைச் செய்யும்போது, அவர்களைப் பார்த்துச் சிரிப்பதும், அல்லது அவர்கள் தப்பிதத்தைக்குறித்துப் பழித்துப் பேசுவதும் மிகவும் இலேசான காரியம். ஆனால் அந்தத் தப்பிதத்தை அன்போடு திருத்தி, அவர்களுக்கு நல்ல வழியைக் காண்பிப்பது ஞானம் நிறைந்த காரியம். பொறுமையோடும் அன்போடும் நம்முடைய தப்பிதங்களை நமக்குக் காண்பித்து, இடைவிடாமல் சன்மார்க்க வழியிலேயே உறுதியாய்த் தரித்துநிற்க நம்மைத் தைரியப்படுத்திவருகிறவர்களை நமது முழு உள்ளத்தினாலும் உண்மையாய்ச் சிநேகிப்போம் அல்லவா?

குற்றம் பிடிப்பதும், இழிவாய்ப் பேசுவதும் வெகு இலேசாய் நம்மில் உண்டாகும் ஒரு சாதாரண துர்க்குணம். அதற்கு இடங்கொடுக்கிறவர்களிடத்தில் அது வெகு ஆச்சரியமான விதமாய் வளர்ந்து விர்த்திக்கும். எப்போதும் இழிவாய்ப் பேசப் பழகினவர்கள் எதைக்குறித்தும் யாதொரு நியாயமின்றி எப்போதும் பழித்தே பேசுவார்கள். இப்படிப்பட்ட குணம் மிகவும் அருவருப்பான குணம்; இதனால் நம்மைச் சுற்றியிருக்கும் சகலரும் மிகுந்த நிர்ப்பாக்கியராவதுமன்றி, எந்த நல்லவேலையைச் செய்கிறவர்களும் அதைரியமடைந்து தடைப்பட்டு நிற்கிறார்கள்; ஆனால் பரிகாச வார்த்தைகளைப் பேசுவதற்குப் பதிலாய்ப் புகழ்ச்சியான வார்த்தைகளைப் பேசி, நல்லவேலை செய்கிறவர்களைத் தைரியப்படுத்திவந்தால், அவர்கள் அவ்வேலையை வெகு சந்தோஷத்துடன் செய்துவருவார்கள்.



குற்றம் பிடிக்கும் குணம் எல்லாக் குணத்திலும் பொல்லாக் குணமாகிய பொறாமை என்னும் துர்க்குணத்தோடு ஒருவாறு சம்பந்தப்பட்டது. எப்படியெனில் குற்றம் பிடிக்கும் குணமுடையவர்கள் பிறர் செய்த நற்காரியங்களில் குற்றம் பிடிப்பார்களேயன்றி, துர்க்காரியங்களில் பிடிக்கமாட்டார்கள். மேலான பதவிக்குப் பிறர் வந்திருப்பதை அவர்கள் காணவும் கேட்கவும் சகிக்கமாட்டார்கள். ஆனால் பிறருக்கு வாழ்வு போனது, தாழ்வு வந்தது, நற்கீர்த்தி போனது, துர்க்கீர்த்தி வந்தது என்று கேள்விப்படுவார்களாகில், அவர்களுக்கு உண்டாகும் சந்தோஷத்தை இவ்வளவென்று எடுத்துக்கூற இங்கே நமக்கு இடமில்லை. விரலத்தனை குற்றத்தை உரலத்தனையாக்கிப் பேசுவோரும் இவர்களே. "சிறியோர் செய்த சிறுபிழையெல்லாம் பெரியோராயிற் பொறுப்பது கடனே" என்னும் நீதியை முற்றும் மறந்த மூடசிகாமணிகள் என்று இவர்களை அழைக்க ஒருவரும் ஆட்சேபியார். இவர்கள் எள்ளளவு எழுத்து வாசனை அறியாதவர்களாயிருந்தாலும், பிறர் பேச்சில் எல்லாம் பிழை பிடிப்பார்கள், எழுதுவதை எல்லாம் ஏளனம் பண்ணுவார்கள், வேலைக்கெல்லாம் விக்கினம் செய்வார்கள். இதுவே அவர்களுக்கு ஆனந்தம். இப்படிக்கொத்த புல்லறிவாளரை நாம் புறம்பே தாத்துவது நமது கடமையல்லவா?

மேலும், அவர்கள் இத்துர்க்குணம் ஒரு தொத்து நோய்போல் இருக்கிறது என்பதையும் அறியார்கள். ஒரு குடும்பத்தில் ஒருவன் எப்போதும் எதைக்குறித்தும் குற்றம் பிடிக்கும் குணமுடையவனாய் இருப்பானாகில், அவ்வீட்டிலுள்ள மற்றவர்களும் அவனைப் பின்பற்றி, இப்படியாக வீட்டின் சமாதானத்தையும் சந்தோஷத்தையும் கெடுக்கிறார்கள். நாம் பாக்கியம் நிறைந்த வீட்டோராய் இருக்க விரும்பினால், குற்றம் பிடித்தல், பழித்துப் பேசுதல் முதலிய துர்க்குணங்களை வேரோடே களைந்து, புகழ்ந்து பேசுதலின் ஆவியைப் பயிராக்கவேண்டும்.

அன்பான சிறுசெய்கைகளையும், நாம் அனுபவிக்கவேண்டிய அநேக காரியங்களையும், நம்மைச் சுற்றிலுமுள்ளோருக்கு உண்டாகும் துன்பங்கள் துக்கங்களையும், பிறருக்குத் தைரியமுண்டாக்கும் சாந்தமான வார்த்தைகளை நாம் பேசவேண்டிய சமயங்களையும் நன்றாய் அறிந்து, கோபமாய் உரத்துப் பேசி குற்றம் பிடிக்கும் குணத்தை நாம் விட்டுவிடுவோமாகில், நமது வீடு பாக்கியம் நிறைந்ததாயும், நமது சீவன் சிறப்புற்றதாயும், நமது வீட்டாரின் நிலைமை மகா மேன்மையானதாயுமிருக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை.



JACOB AND ESAU.

## யாக்கோபும் ஏசாவும்.

யாக்கோபு தன் சகோதரனாகிய ஏசாவுக்குப் பயந்து அன்னிய தேசத்துக்கு ஓடினபோது, கர்த்தர் அவனை எப்படி ஆறுதல்படுத்திக் காப்பாற்றினார் என்று நாம் போனமுறை பார்த்தோம். அவன் போன இடத்தில் கர்த்தர் அவனை ஆசிர்வதித்ததால், அவன் அதிக ஐசுவரியவானானான். தனது நாட்டையும் வீட்டையும் விட்டுப் பிரிந்து இருபது வருஷமானபிறகு, கர்த்தரின் கட்டளைப்படியே அவன் தன் பிதாக்களின் தேசமாகிய கானான் தேசத்துக்குத் திரும்பினான். கர்த்தரும் அவனோடிருந்து அவனைக் காப்பேன் என்றார். யாக்கோபு தன் மனைவிகளையும் மக்களையும் ஒட்டகங்கள்மேல் ஏற்றி, தன் மந்தைகளோடு புறப்பட்டுப் போனான். அவன் ஏசா இருந்த இடத்துக்கு வந்தபோது, தான் இருபது வருஷகாலமாய் இருந்த இடத்தையும், தான் ஐசுவரியவானானதையும் ஏசாவுக்குத் தெரிவிக்க ஆட்களை அனுப்பினான். அவர்கள் திரும்பிவந்து: ஏசா நானூறு பேரோடே உம்மைச் சந்திக்க வருகிறார் என்றார்கள். அப்பொழுது யாக்கோபு மிகவும் பயந்து, கர்த்தர் தன்னை ஏசாவின் கைக்குத் தப்புவிக்கும்படி ஜெபித்தான்; ஏனெனில் ஏசா தன்மேல் இன்னும் கோபமாயிருந்து, தன்னையும் தன் மனைவிகளையும் மக்களையும் கொல்ல வருகிறான் என்று நினைத்தான். அவன் தனது மந்தையில் ஒரு பகுதியை எடுத்து ஏசாவுக்கு வெகுமதியாக அனுப்பி, அன்று இராத்திரி பாளயத்தில் தங்கியிருந்தான். இராத்திரியில் அவன் எழுந்திருந்து, தன் மனைவிகளையும் பிள்ளைகளையும் அங்கிருந்த ஆற்றைக் கடக்கப்பண்ணி, தனக்கு உண்டான யாவையும் அக்கரைப்படுத்தி, பின்பு தனித்திருந்தான். அப்பொழுது ஒரு தேவதூதன் தோன்றி, அவனோடு போராடினார்; யாக்கோபு அவர் தன்னை ஆசிர்வதிக்காலொ-



ழிய அவரைப் போகவிடேன் என்றான். காலையில் யாக்கோபு ஆற்றைக் கடக்கையில், ஏசா நானூறு மனிதரோடு வருகிறதைக் கண்டான். உடனே அவன் முந்திப்போய், தரைமட்டும் குனிந்து, ஏசாவைக் கிட்டிச் சேர்ந்தான். ஏசா எதிர்கொண்டு ஓடிவந்து, அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முத்தஞ்செய்தான்; இருவரும் அழுதார்கள். யாக்கோபின் குடும்பத்தை ஏசா பார்த்து: உன்னோடிருக்கிற இவர்கள் யார் என்றான். அதற்கு அவன்: தேவன் உமது அடியானுக்கு அருளின பிள்ளைகள் என்றான். அப்பொழுது ஏசா: எனக்கு எதிர்கொண்டுவந்த மந்தையெல்லாம் என்னத்துக்கு என்றான். யாக்கோபு: உம்முடைய கண்களில் எனக்குத் தயவுகிடைப்பதற்கு நான் உமக்கு அனுப்பின வெகுமதி என்றான். ஏசாவோ: என் சகோதரனே, எனக்குப் போதுமானது உண்டு, உன்னுடையது உனக்கு இருக்கட்டும் என்றான். ஆனால் யாக்கோபு நெருக்குவாய் அவனைக் கேட்டுக்கொண்டதின்மேல் அவன் அந்த வெகுமதியை ஏற்றுக்கொண்டான். பிறகு இருவரும் பிரிந்துபோனார்கள்.

தேவன் யாக்கோபோடு இருப்பேன் என்று வாக்குத்தத்தம்பண்ணினதின்படியே, அவனை எல்லா மோசத்துக்கும் விலக்கிக் காத்து, அவனைக் கொல்ல நினைத்த ஏசாவின் மனதையும் மாறிப்போகப் பண்ணி, அவன்மேல் மிகவும் அன்புகூரச் செய்தார். ஆகையால் தம்மை உறுதியாய் நம்புகிறவர்களைக் கர்த்தர் ஒருக்காலும் கைவிடுகிறதில்லை.

HYMN.

## ஞானகீதம்.

CHRISTMAS ANTHEM.

### கிறிஸ்துவின் ஜனன கீதம்.

இரக்கமுள்ள யேசுவே,
நரரின் தன்மையாகவே
பிறந்ததால் துதிக்கிறோம்,
சுரரும் பாடக் கேட்கிறோம்.

2. அளவில்லாத வல்லவர்,
சகலத்தையும் செய்தவர்,
குழந்தையாய்ப் பிறந்தனர்,
நரரைப்போல் வளர்ந்தனர்.

3. அநாதி ஜோதி பூமிக்கு
வெளிச்சம் தந்து மாந்தர்க்கு
சுடர் கொடுக்க, ராவிலே
உதித்தது சந்தோஷமே.

4. நமக்கிரங்கி, வானத்தில்
நம்மை மாளா ஆஸ்தியில்
சம்பன்னராக்க, ரட்சகர்
மகா எளியோரானவர்.

5. அதைக் கருத்தாய்ச் சிந்தித்து,
எல்லோரின் உள்ளம் பூரித்து,
அச்சோதி நோக்கி வாருங்கள்,
அதில் நடக்கப் பாருங்கள்.

## BARONESS BURDETT-COUTTS.
## பர்டெட் கூட்ஸ் பெருமாட்டி.

ஜனோபகாரியென்று சகலராலும் புகழப்பட்ட பர்டெட் கூட்ஸ் பெருமாட்டி ௧௮௧௪-ம் ௵ பிறந்தாள். இவள் பிரான்சிஸ் பர்டெட் பிரபுவின் கடைசி புத்திரியும் தாமஸ் கூட்ஸ் என்பவனின் பேத்தியுமாய் இருந்தாள். தாமஸ் கூட்ஸ் லண்டன் மாநகரில் திரண்ட சம்பத்துள்ள தனிகனெனப் பேரெடுத்தவன். இவன் எலிசபேத்து ஸ்ற்றார்க்கி என்னும் அழகு மிகுந்த குணசீலியை மணம்புரிந்தான். இவள் அவனுக்கு மூன்று புத்திரிகளைப் பெற்றாள். அவர்களில் ஒருத்தியே பர்டெட் கூட்ஸ் பெருமாட்டியின் தாய். சகல பிரபுக்களாலும் யோக்கியன் என்று கீர்த்திபெற்ற தாமஸ் கூட்ஸ் தனது முந்தின மனைவி மரித்ததும், ஹரியட் மெல்லன் என்னும் நாடகக்காரியை விவாகஞ்செய்து, தனது திரண்ட ஆஸ்தியையும் அவள் பேருக்கு எழுதிவைத்து மரித்தான். தாமஸ் கூட்ஸ் மரித்தபின், பிள்ளையற்ற மெல்லன் என்பவள் ஆல்பன்ஸ் டியூக்பிரபுவைக் கலியாணம்செய்து புத்திர பாக்கியம் இல்லாதவளாய்ச் சாகச் சமீபித்தபோது, பர்டெட் பிரபுவின் கடைசி புத்திரியாகிய இந்தப் பெருமாட்டியை அழைத்து, அவள் கையில் தனது ஏராளமான செல்வத்தையும் ஒப்புவித்து, அவள் தன்னை பர்டெட் மகளென்றுமாத்திரம் அழைக்காமல், கூட்ஸ் குடும்பத்தைச் சேர்ந்தவளென்றும் உலகமெங்கும் அறியப்படவும், இப்படியாக கூட்ஸின் நாமம் எங்கும் நிலைபெறவும், தன்னை பர்டெட் கூட்ஸ் என்றும் அழைக்கவேண்டுமென்றும் வற்புறுத்தி வாக்கு வாங்கி மரித்தாள். இப்படியாக பர்டெட் கூட்ஸ் பெருமாட்டிக்கு ௧௮௩௭-ம் ௵ கிடைத்த இந்தப் பெருஞ்செல்வத்தின் தொகை ஏறக்குறைய மூன்றுகோடி ரூபாய்க்குச் சரியான முப்பது லட்சம் பவுன்.

தனக்கு இவ்வாறு வரப்பெற்ற இந்தப் பெருந்தொகையைப் பர்டெட்ஸ் பெருமாட்டி வீணாய்ச் செலவழிக்காமல் பொதுஜன நன்மைக்கென்று பிரயோசனப்படுத்தினாள். கோவில் பல கட்டினாள், குளங்கள் பல வெட்டினாள், ஏழைகளைக் கூட்டினாள், இனிய உணவூட்டினாள். லண்டன் நகரில் ஏழைகள் வசித்த ஒரு இடத்தில் ஒரு பெரிய கோவிலையும், குரு வசிக்கும் வீட்டையும், அநாத பிள்ளைகளுக்கென்று அநேக பள்ளிக்கூடங்களையும் கட்டினாள். தென் ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்கா, பிரிட்டிஷ் கொலம்பியா முதலிய இடங்களில் குருக்களுக்கு வெகுவான வாசஸ்தானங்களை ஏற்படுத்தினாள். அங்கிலேய நாட்டிலுள்ள கார்லைல் பட்டணத்தில் அழகிய கோவிலொன்றைக் கட்டினாள். எருசலேம் நகருக்குப் போகும் ஏராளமான ஜனங்களின் சுகத்துக்கென்று சுத்த ஜலம் வருவதற்கான வழிவகைகளைச் செய்தாள். கிர்வான் என்னும் தீவில் பஞ்சத்தால் வருந்திய ஏழைகளுக்கு வெகு திரவிய சகாயம் செய்தாள். இவளுக்கு ௧௮௭௧-ம் ௵ பெருமாட்டி என்னும் பட்டம் கிடைத்தது. இதற்காக லண்டன் நகரிலுள்ள சர்வத்திராளும் அவளை வெகுவாய்ப் புகழ்ந்து கொண்டாடி வாழ்த்தினார்கள்.

இந்தப் பெருமாட்டியின் சரித்திரத்தால் பணத்தில் மிகுந்த சீமாட்டிகள் தங்கள் முன்னோரால் தங்களுக்கு வரப்பெற்ற பொருட் செல்வத்தைச் செலவழிக்க வேண்டிய சிறந்த வழி இன்னதென்று பார்க்கிறோம்.



BARONESS BURDETT-COUTTS.
பர்டெட் கூட்ஸ் பெருமாட்டி.

GOOD WORDS FOR WOMEN.

## நங்கையர்க்கு நல்லுரை.

### 6. தாய்.

உலகத்தில் மனிதருக்குள்ள சகல நிலைமையிலும் தாயின் நிலைமைக்கு மேற்பட்டது ஒன்றுமில்லை. தாயின் அன்பு, தாயின் உழைப்பு, தாயின் பொறுப்பு யாவும் அவளை உயர்த்திவைக்கிறது. இந்த உயர்வைக் கொடுத்தவர் தேவன். அவளின் உயர்ந்த பதவியை அறிவாளிகள் அறிவீனர்கள், உயர்ந்தோர் தாழ்ந்தோர், பெரியோர் சிறியோர் யாவரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். சர்வதேசத்தையும் ஒரு குடைக்குள் ஆளும் சக்கரவர்த்தியானாலும் சரி, குடிக்கக் கஞ்சியற்றுத் திரியும் எளியவனானாலும் சரி, யாவரையும் தேவன் முதல் முதல் தாய்மார் கையில் ஒப்புவிக்கிறார். ஒரு சிறுபிள்ளைக்குமுன் பீற்றல் துணி தரித்த அதன் எளிய தாயையும், பீதாம்பரம் தரித்த நமது மகத்துவ சக்கரவர்த்தினியாரையும் நிறுத்தி: இவ்விருவரில் யார் உனக்கு வேண்டும் என்று கேட்டால், அது தன் தாயையே பற்றிப் பிடித்துக்கொள்ளும் என்பதற்கையமில்லை. ஒவ்வொருவனும் தன் தாய் பொன் தாய் என்று எண்ணுகிறான். ஒவ்வொரு மிருகமும் அப்படி நினைக்கிறது. ஒவ்வொரு குருவியும் அப்படி நினைக்கிறது. அது சரிதான். ஒரு பிள்ளைக்குத் தாயுள்ளமட்டும் சீராட்டு. "தாயற்றபோதே சீரற்றுப் போச்சு", என்று தமிழ் நாட்டார் பழமொழியாய்ச் சொல்வார்கள். தாயின் கையில் பிள்ளையின் நலம், தாயின் கையில் பிள்ளையின் பொலம், தாயின் கையில் பிள்ளையின் தாழ்வு, தாயின் கையில் பிள்ளையின் வாழ்வு. தாய்மார் தங்களுக்கு இருக்கும் பொறுப்பையும் உயர்வையும் அறிந்து, தங்கள் பதவிக்கேற்ற அறிவும் உணர்வும் உடையவர்களாயிருப்பது அவசியம்.

தாயின் வேலை இரண்டுவிதம். அவள் போஷகி, அவள் போதகி. சரீரத்துக்குப் போஷகி, ஆத்துமத்துக்குப் போதகி.

போஷகி வேலையில் பொறுப்பு அதிகம். அவள் பிள்ளையை ஊட்டி வளர்ப்பவள், உடுத்து வளர்ப்பவள், தூக்கி வளர்ப்பவள், சொகுசாய் வளர்ப்பவள், சீராட்டி வளர்ப்பவள், தாராட்டி வளர்ப்பவள், அடித்து வளர்ப்பவள், அணைத்து வளர்ப்பவள்.

"பிள்ளைப் பசியோ, கொள்ளித்தேளோ" என்றபடி பிள்ளைகள் பசிதாளார்கள். காலம் தப்பாமல், நேரம் தப்பாமல் பசியாற்றுவது தாயின் கடமை: ஆனால் நினைத்தபோதெல்லாம் பால் கொடுத்து, பிள்ளை அழுதபோதெல்லாம் அமுதூட்டுவது சரியல்ல. இது தாய்க்கும் கெடுதி, பிள்ளைக்கும் கெடுதி. இதனால் கால நஷ்டம், பொருள் நஷ்டம், சுக நஷ்டம். பிள்ளைகள் வளர வளர, அவர்கள் போசனத்தின் பலமும் அளவும் அதிகரித்து வரவேண்டியதேயாயினும், அவர்கள் பார்த்ததையெல்லாம் பட்சித்துவிடவும், கண்டதையெல்லாம் உண்டுவிடவும் இடங்கொடுப்பது சரியல்ல. இப்படியிடங்கொடுப்பதால், பெருந்தீனிக்காரப் பேயாண்டிகளும், "மூசுண்டை" தின்னும் மூதேவிகளுமாய்ப் போன அநேகம் பிள்ளைகளைக் கண்டிருக்கிறேன். பிள்ளையின் உணவைக் கவனிக்கும் போஷகி அதன் உடையைக் கவனிப்பதும் அவசியம். வீட்டிலும் வெளியிலும் பிள்ளைகளை அம்மணமாய்த் திரிய விடுவது அழகல்ல, ஒழுங்கல்ல, சுகமல்ல. மானம் மரியாதையின் உணர்ச்சியைச் சிறுவயதிலேயே பிள்ளைகளுக்கு உண்டாக்குவது தாய்மார் கடமை. ஆயினும், சிறந்த வஸ்திரங்களையும் உயர்ந்த நகைகளையும் பிள்ளைகளுக்குத் தரிப்பித்து அவைகளில் ஆசைகொள்ளும்படிக்கு ஏவுவது பெரிய அநியாயம். தாய் கவனிக்கவேண்டிய சுகாதார விஷயம்: சுத்தம், சுசிகரம். எல்லாவற்றிலும் சுத்தம், எப்போதும் சுத்தம் என்பது அரிய பிரமாணம், அவசிய பிரமாணம். ஆடிக்கு ஒருவிசை, அமாவாசைக்கு ஒருவிசை பிள்ளைகளைக் குளிப்பாட்டுவதும், அவர்கள் வஸ்திரங்களை மாற்றுவதும் பெரிய அநியாயம். பிள்ளைப் பருவத்தில் பன்றிக்குட்டியாய் வளர்ந்தது பெரிதானபின் வேறுவிதமாயிருப்பது அருமை.



தாயின் போஷகி வேலையிலும் அதிமுக்கியமானது போதகி வேலை. சரீரத்திலும் முக்கியமானது ஆத்துமா அல்லவா? "சிறுமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்ற முதுமொழிக்கு ஏற்ப, சிறுவயதில் பிள்ளைகள் கற்றுக்கொள்வது அவர்கள் ஆயுசுபரியந்தம் அவர்களோடு இருக்கிறது. நல்லதாயிருந்தாலும் பதிந்து போம், கெட்டதாயிருந்தாலும் பதிந்து போம். "சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை." நல்லதைச் சொன்னாலும் சொல்லும், தீயதைச் சொன்னாலும் சொல்லும். நமது பிள்ளைகளும் அப்படித்தான். பிறந்த நாள்முதல் பிள்ளையின் கண் தாயைப் பார்க்கிறது, அதன் காது தாயின் வார்த்தையைக் கேட்கிறது, அதன் கை தாயின் உடலைத் தொடுகிறது. மெழுகில் அச்சு இலேசாய்ப் பதிவதுபோல் இளமனதில் யாவும் இலேசாய்ப் பதிகிறது. ஆகையால் தாய்மார் தங்கள் பேச்சு வார்த்தை, போக்கு வரத்து, நடை உடை, உண்பனை தின்பனை, கட்டல் கழற்றல் யாவிலும் எச்சரிக்கையாயிருப்பது கடமை. அநேகம் பொல்லாத தாய்மார் துஷ்ட வார்த்தைகளையும், அசுத்த சொற்களையும் பேசுவதால், அவர்கள் பிள்ளைகளும் கொஞ்சமாவது தட்டல் தடங்கல் இல்லாமல் துஷ்டத்தனமாய்ப் பேசுவார்கள். வேலைக்காரரைச் சீ என்றும் போ என்றும், நாயென்றும் பேயென்றும், கழுதையென்றும் குதிரையென்றும், தாயார் பேசும் வீடுகளில் பிள்ளைகளும் அவ்வாறு பேசக்கேட்பது ஆச்சரியமல்ல. பிள்ளை ஒரு துஷ்ட வார்த்தையைப் பேசினவுடனே அதைக்

கடிந்துகொள்ளாமல், வீட்டில் உள்ள யாவரையும் கூட்டித் திரட்டி, அவர்கள் நடுவே அந்தப் பிள்ளையை நிறுத்தி, என் கட்டிக் கரும்பே, கண்மணியே, ரத்தினமே, நீ சொன்னதை இன்னொருவிசை சொல்லு என்று கேட்டு, அதைச் சொன்னவுடனே யாவரும் மகிழ்ந்து கைகொட்ட, பிள்ளையைத் தூக்கியெடுத்து மார்போடணைத்துக் கட்டி முத்தமிடுகிற தாய் தாயா? இல்லை இல்லை. அவள் பிள்ளையைக் கெடுக்க வந்த பேய், குழந்தையைக் குட்டிச் சுவராக்கும் கூற்று. பேசத் தெரியுமுன்னே பிள்ளைகளுக்குக் கேட்கத் தெரியுமாதலால், அவைகளின் காதில் நல்வார்த்தைகளே விழும்படி செய்யவேண்டும். பேசத் தெரிந்த பிள்ளைகளோடு நல்விஷயங்களைக்குறித்துப் பேசவேண்டும். தீமையைத் தீமையென்றும், நன்மையை நன்மையென்றும் திட்டமும் தெளிவுமாய்ச் சொல்லி, தின்மையைப் பகைக்கவும், நன்மையை நேசிக்கவும் செய்யவேண்டும்.

பிள்ளைகள் தப்பிதம் செய்யும்போது, அவர்களைக் கண்டிப்பதும், அவசியமானால் தண்டிப்பதும் முக்கியம். ஊசி திருடுகையில் தண்டிக்காமல் விட்ட பிள்ளை ஊர்க்கொள்ளையடிக்கிறவர்களுக்குத் தலைவனாவது இலேசு. தட்டான் பிடித்ததற்குத் தண்டனை பெறாத பிள்ளை சகோதரனை அடிக்கத் துணிவது சாதாரணம். தண்டனை செய்யச் சிற்சில சமயங்களில் பிரம்பும் மிலாறும் அவசியமேயாயினும், பெரும்பாலும் அவை நல்லதல்ல. முகச் சுளுக்கும் கடும்பார்வையுமே பிள்ளைகளை அடக்கி ஒடுக்கப் போதுமான யத்தனங்கள் என்றெண்ணும்படி செய்யும் தாய்மாரின் சமர்த்தே சமர்த்து.

பிள்ளைகள் தங்களுக்குத் தெரியாத பல விஷயங்களைக்குறித்து அடிக்கடி தாயை வினவுவதுண்டு. அப்போது தாய் சீ நாயே, போராதே, உனக்கென்னத்துக்கு இந்தக் கேள்வி என்று மட்டித்தனமாய் உத்தரவுசொல்லி, அவர்களை "மழுங்குணலி மாங்கொட்டைகள்" ஆக்குவதுமுண்டு. அறிவீனமுள்ள தாய்மாரே இப்படிச் செய்வார்கள். பாலகர் வினவுக்குப் புட்சமாய் விடையளிப்பதும், தெரியாத விஷயங்களைத் தெளிவாக்குவதும் தாய்மார் கடமை.

தாய்மார் தக்க போதகிகளாகவேண்டுமானால், அவர்கள்தாமே போதனை பெற்றவர்களாயிருப்பது அவசியம். அறிவீனமுள்ள தாய் தன் பிள்ளைக்கு அறிவீனத்தைப் புகட்டுவாளேயன்றி வேறல்ல. நமது தேசப் பெண்களில் பெரும்பாலார் அறிவீனராயிருப்பதால், தக்க தாய்மார் இங்கில்லையென்றே சொல்லவேண்டும். பிள்ளை பெறத் தாய்மார் உண்டேயன்றி, பிள்ளை வளர்க்கத் தாய்மார் இல்லை. ஆகையால் நமது சகோதரிகளின் அறிவீனத்தை ஒழித்து, அவர்களை அறிவு



ள்ள தாய்மாராக்கும்படி அவர்களுக்கு நல்லறிவைப் புகட்டுவது அவசியம்.

மேலும், பிள்ளைகள் கேட்டுப் படிப்பதைப்பார்க்கிலும் பார்த்துப் படிப்பது இலேசு. பெற்றோர் நடக்கை பிள்ளைக்குச் சட்டம். ஆகையால் தாய்மாரே, உங்கள் பிள்ளைகள் நல்லவர்களாகவேண்டுமானால், நீங்கள் நல்லவர்களாகுங்கள், நல்ல மாதிரி காட்டுங்கள். போதிப்பது நல்லது, அதைச் சாதிப்பது அதினும் நல்லது. மனித சுபாவம் சிறுவமுதல் தீமைக்குச் சார்பானது. தீமையைக் கற்றுக்கொடுத்தாலோ அதன் துர்ப்பலனைக் கேட்பானேன். "முழுக்கட்டி போர்க்கிற பன்றிக்குக் கொழுக்கட்டி விட்டாப்போலாகும்." தாய்மார் தங்கள் நடக்கையால் வேம்பை விதைத்து, பிள்ளைகள் நடக்கையில் கரும்பை எதிர்பார்ப்பது நியாயமா? அவரை போட்டால் துவரை முளைக்குமா? "தாயைப்போலே பிள்ளை, நூலைப்போலே சேலை."

நமது பிள்ளைகளைத் தாயினும் அதிகமாய் நேசிக்கிற ஒருவர் இருக்கிறார் அவர் தேவன். "ஒரு தாய் தன் பாலகனை மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை" என்று சொன்னவர் அவர். அவரே நமக்குப் பிள்ளைகளை அளிக்கிறவர். அவரே பிள்ளைகளின் நேசர். அவரிடம் தன் பிள்ளைகளை நடத்துகிறவளே நல்ல தாய். ஜெபத்தின் வழியாய்த் தினந்தோறும் தன் பிள்ளையை அவர் கையில் ஒப்புவிக்கிறவளே உத்தம தாய், உத்தம போஷகி, உத்தம போதகி.

## GLEANINGS.
## சமாச்சாரக்குறிப்புகள்.

உலகத்தில் முதல் முதல் அச்சிற்பதிப்பிக்கப்பட்ட தினவர்த்தமானப் பத்திரிகை ஏறக்குறைய இருநூறு வருஷங்களுக்குமுன் ௲௭௱௨-ம் ௵ லண்டன் நகரில் எலிசபெத்து மாலேற்று என்னும் பெண்மணி நடத்திவந்த வர்த்தமானப் பத்திரிகையாம்.

---

கடந்த வருஷம் சென்னை வைத்திய கல்விச்சாலையிலிருந்து வைத்திய விஷயம் அதிகமாய்க் கற்க அங்கிலேய நாட்டுக்குச் சென்ற இரண்டு மாணாக்கரில் ஒருவர் சுதேச கிறிஸ்தவப் பெண். இவளே இச்சென்னை சமஸ்தானத்திலிருந்து அங்கிலேய நாட்டுக்குச் சென்ற முந்தின சுதேச பெண்.

---

கல்கத்தாவில் புதிதாய்க் கட்டப்படும் டவ்ரின் பெருமாட்டியின் பெண் வைத்தியசாலைக்கென்று சேர்க்கப்படும் நிதிக்கு சரீனுமாய் மகாராணியவர்கள் ஈராயிரம் ரூபாய் தனசகாயம் செய்திருக்கிறார்கள்.

---

கூச்பிகார் நாட்டு மகாராஜா ராணியாரவர்களுக்கு இப்போது பிறந்த செல்வப் புதல்வனுக்கு நமது காருண்ய சக்கரவர்த்தினியவர்கள் ஞானத்தாயானார்கள். அவர்களின் விருப்பப்படியே பிள்ளைக்கு விக்டர் என்னும் நாமகரணம் சூட்டப்பட்டது.

---

நமது சக்கரவர்த்தினியாரிடத்திலுள்ள வேலைக்காரிகளிலெல்லாம் அதிக காலம் உழைத்த உத்தம வேலைக்காரியாகிய ஷூல் துரைசானி எழுபத்தெட்டு வயதுடையவளாய் இப்போது மரித்தாள். சக்கரவர்த்தினியாரின் முந்தின மகனாகிய வேல்ஸ் இளவரசர் சிறுகுழந்தையாயிருந்தபோது, இவள் தனது வேலையை ஆரம்பித்து, இராஜகுடும்பத்திலுள்ள எல்லாப் பிள்ளைகளாலும் வெகுவாய் நேசிக்கப்பட்டு வந்தாள். இவள் வியாதியாயிருந்த காலத்தில் சக்கரவர்த்தினியார் இவளை அடிக்கடி தாமே நேரில்போய் பார்த்துவந்தார்கள்.

CHILDBIRTH.

## பிரசவேநூல்.

(தொடர்ச்சி.)

### கர்ப்பகால ஒழுக்கம்.

சீக்கிரத்தில் பிரசவிக்கப்போகும் தாய்க்கு நல்ல சுகமிருந்தால், வழக்கம்போல வீட்டு வேலைகளைச் செய்துவரலாம்; ஆனால் பிரசவத்துக்கு நாள் சமீபிக்கையில்மாத்திரம் அவள் அதிகமாய் வேலைசெய்து உழைக்காமல், இடைக்கிடையே சற்று இளைப்பாறவேண்டும். விழுதல், பாரமானவைகளைத் தூக்குதல், எவைகளையும் உயரத் தூக்கிப் பிடித்தல், கூத்தாடுதல், குதிரை ஏறி சவாரிசெய்தல், எதைக் கண்டும் திகைத்தல், திடுக்கிடல், அதிக ஆசைகொள்ளுதல் முதலியவைகளுக்குத் தாய் தன்னை விலக்கமாய்க் காத்துக்கொள்ளவேண்டும். ஏனெனில் இவைகளால் கரு அழிந்துபோகும், அல்லது அகாலப் பிரசவம் உண்டாகும்.

உணவு சுலபமாய் ஜீரணிக்கத்தக்கதும், சுகத்தைத் தரத்தக்கதுமாய் இருக்கவேண்டும். சிலசமயங்களில் கர்ப்பவதிகள் எதையும் வீணாய் விரும்புகிறார்கள். அவர்கள் தின்ன விரும்புவது சுகத்தைக் கெடுக்காததும் விலைசரசமானதுமாய் இருக்குமாகில், அதைத் தின்கலாமேயொழிய வேறெதையும் புசிக்கலாகாது. சில ஸ்திரீகள் தங்கள் விருப்பத்துக்கு இசைந்து, சுகத்துக்குக் கெடுதியானவற்றைத் தின்று, தங்களுக்கும் தங்கள் பிள்ளைகளுக்கும் சேதம் உண்டாக்கியிருக்கிறார்கள்; ஆனால் தங்கள் விருப்பங்களை விட்டொழித்து உண்டதனால் ஒருவருக்கும் சேதம் உண்டானதில்லை. அவர்கள் வேறெதையாகிலும் நினைத்துக்கொண்டால், வீணாசைகள் எல்லாம் விட்டொழிந்துபோம்.

குடல்கள் அடைபட்டிருக்கக்கூடாது. அவைகளைத் தளரச்செய்வது அவசியமானால், கொஞ்சம் ஆமணக்கெண்ணெய் உட்கொள்ளலாம்; ஆயினும் சரியான உணவை உட்கொள்வதே இதிலும் சிறந்தது. பழங்கள் மரக்கறி பதார்த்தங்களைப் புசித்தலும், மிதமாய் வேலை செய்தலும் மருந்தைபோல பலன் செய்யும். அதிகாலையில் ஒரு குவளை குளிர்ந்த ஜலம் குடிப்பது நல்ல பரிகாரம்.

காலை நோய் சிலசமயங்களில் அதிக வருத்தம் கொடுத்து வாந்தியை உண்டாக்கும். அப்பொழுது உணவைக்குறித்துக் கவலையாயிருக்கவேண்டியது. வயிற்றுக்கு ஒத்துக்கொள்ளாத எதையும் புசிக்கலாகாது. காலையில் எழுந்திருப்பதற்குமுன்னே ஒரு துண்டு ரொட்டியாவது கொஞ்சம் பாலாவது காப்பியாவது உட்கொண்டால் வருத்தம் நீங்கும். இவைகள் எவற்றிலும் வருத்தம் நீங்காதபட்சத்தில், கிராம்பு கஷாயம் குடிக்கலாம். கொஞ்சம் கிராம்பை எடுத்து நறுக்கி, வெந்நீரில் போட்டு மூடிவைத்து, அரைமணிநேரமான பிறகு அதில் ஒன்று அல்லது இரண்டு மேசைக்கரண்டியளவு நீரைக் குடிக்கலாம்.

முற்ற முற்ற பிண்ட சலனம் உண்டாகும்போது, சிலசமயங்களில் ஒர்விதஸ் மரணை உண்டாகி, கர்ப்பவதி சோர்ந்துபோவாள். அப்பொழுது அவள் கர்ப்பத்தில் சிசு உயிரோடிருக்கிறதென்றும், அவள் பிரசவ வேதனை ஏறக்குறைய அரைவாசி முடிந்துவிட்டதென்றும் சொல்லி, அவளை உற்சாகப்படுத்தவேண்டும்.

வேளாவேளைகளில் ஸ்தனங்கள் வீங்கி வருத்தம் கொடுக்கும். ஆனால் சீக்கிரத்தில் நின்றுபோம். அவைகளை ஒவ்வொரு நாளும் நன்றாய்க் கழுவி உணரவைத்து, கொஞ்சம் நல்லெண்ணெய் தடவுவதால், சுகம் உண்டாகும்.

காலுக்கு மேலுள்ள இரத்தக் குழாய்களைக் கர்ப்பம் அழுத்துவதால், காலிலுள்ள நாம்புகள் அடிக்கடி வீங்கும். அதற்குச் சாதாரணமாய் ஒன்றும் செய்யவேண்டிய அவசியமில்லை. பகலில் படுத்து இளைப்பாறுவதால் வருத்தம் நீங்கும், அல்லது காலின்மேல் சீலையைச் சுற்றிவைக்கலாம்.

(இன்னும் வரும்)

மாதர் மித்திரி.

புஸ். ௨. க௲அ௱௯௰௭ ௵ - ஜனுவரி ௴. இல. ௭.

NOTES.

## பத்திராதிபர் குறிப்புகள்.

THE NEW YEAR.

### புது வருஷம்.

இப்போது கடந்துபோன வருஷத்தில் நடந்தவைகளை நாம் கவனித்துப் பார்த்தால், நமது தீர்மானங்களில் அநேகவற்றை நிறைவேற்றாதிருந்தோமென்றும், நமது காலத்தில் அதிகமானவற்றை வீணில் செலவழித்தோமென்றும், அன்பற்ற கோபமான வார்த்தைகளை அதிகமாய் உபயோகித்தோமென்றும், பெருமையும் கோபமும் நம்மில் நிறைந்திருந்ததென்றும் தெளிவாய்க் காண்போம். நமது சுய நன்மைக்கென்றும் பிறத்தியாருடைய நன்மைக்கென்றும் நாம் செய்யவேண்டிய அநேகவற்றைச் செய்யாமல் விட்டதற்கு விசேஷித்த காரணம் நம்மிடத்தில் தைரியம் இல்லாமையே என்பதும் பிரத்தியட்சமாம். நாம் புது வருஷத்தைத் துவக்கும்போது, கடந்த வருஷத்தின் பாவங்கள் எல்லாம் நமதுமேல் ஒரு சுமையைப்போல் இருப்பதால், அவைகள் எல்லாவற்றையும் மறந்து, புது பலத்தோடு புது வருஷத்தை ஆரம்பிக்க மிகவும் ஆசிக்கிறோம். இச்சமயத்தில் நாம் தேவனுடைய ஏக சுதனாகிய இயேசு கிறிஸ்துவின் நிமித்தமாகவும் அவருடைய நாமத்தைக்கொண்டும் தேவனண்டைக்கு வருவோமாகில், அவர் இந்தப் பாவங்களையெல்லாம் நீக்கி, இனிமேல் நாம் நலமானவற்றைச் செய்ய நம்மைப் பலப்படுத்தி நமக்குத் துணையாய் நிற்பார்.

இந்தப் புது வருஷத்தில் நம்மில் ஒவ்வொருவருக்கும் புதிதான சமயங்கள் கிடைத்திருக்கின்றன. இவ்வருஷ முடிவில் இதைச் சஞ்சலத்தோடு அல்ல, சந்தோஷத்தோடு பார்க்கும்படி நாம் நமது வாக்கிலும் நடக்கையிலும் ஒழுங்குள்ளவர்களாயிருப்போமாக.

BEAUTY.

### அழகு.

சில பெண்களுக்கு இயற்கையிலேயே கண் அழகும் காது அழகும், முக அழகும் மூக்கு அழகும் இல்லாவிட்டாலும், நாம் பின்னாகக் கூறுவதுபோன்ற சில விதிகளை அவர்கள் அனுசரித்து வருவார்களாயின், அவர்கள் சகலரும் விரும்பத்தக்க இனிய இலட்சணம் பொருந்தினவர்களாவார்களென்பதற்குச் சந்தேகமில்லை. அவையாவன:—

உன்னை அடக்கி, எப்போதும் சாந்தமும் பொறுமையுமுள்ளவளாயிருக்கப் பிரயாசப்படு.

விசேஷமாய் வியாதிகாலங்களிலும், துன்பகாலங்களிலும் உனது கோப குணத்தை அடக்கி, அவைகளை ஜெபத்தால் இனிதாக்கிக்கொள்.

எக்காலத்திலும் எந்த விஷயத்தையும் கோபத்தோடு பேசாதே, கோபத்தோடு செய்யாதே.

நன்றாய்ப் பேசும் வரம் அருமையானதுபோலவே, மௌனமும் அதிக அருமையானது என்பதை அடிக்கடி நினைத்துக்கொள்.

பிறரின் சக்திக்கு மிஞ்சின காரியங்களை அவர்களிடம் எதிர்பார்க்காமல், அவர்கள் உன்னைச் சகிக்கவேண்டுமென்று நீ விரும்புவதுபோலவே, அவர்களையும் நீ சகிக்கப் பிரயாசப்படு.

எக்காலத்திலும் கோபமான பதில் வார்த்தைகளை உபயோகியாதே. நீ பதிலுக்குச் சொல்லும் கோப வார்த்தையே சண்டைக்குக் காரணம் என்பதை எப்போதும் அறிந்துகொள்.

சாந்தமான இனிய சத்தத்தோடு எப்போதும் பேசப் பிரயாசப்படு.

சமயம் கிடைக்கும்போதெல்லாம் அன்பு நிறைந்த இனிய விஷயங்களைக்குறித்துப் பேச மறக்காதே.

பிறருக்கு நேரிட்ட துன்பங்கள் எவ்வளவு சிறிதாய் இருந்தபோதிலும், அவைகளிலும் நீ அவர்களோடு அனுதாபப்படுகிறவளாய் நடந்துகொள்.

சிறு காரியங்களும் பிறருக்கு ஆறுதலைத் தரக்கூடியதென்று நீ காண்பாயாகில், அவைகளை அசட்டைசெய்யாதே.

வேளாவேளைகளில் உண்டாகும் வெடுவெடுப்புக் குணத்தை வெறுத்துத் தள்ளு.

வீணாய் உன் வேலையில் பிரவேசிக்கிறவர்களைக்குறித்தும் கோட்சொல்லும் குணமுடையோரைக்குறித்தும் எப்போதும் எச்சரிக்கையாயிரு.

இந்த அரிய விதிகளையும் இவைபோன்ற வேறநேக விதிகளையும் அனுசரித்து நடக்கும் பெண்கள் மெய்யாகவே இனிய குணம் பூண்டோர் என்பதை யார் ஆட்சேபிக்கலாம்? அவர்களைக் கண்டோர் யாவரும் குணபூஷணிகள் என்று கூற சற்றும் வாய் கோணார். இப்படிப்பட்ட குணசீலிகளின் நடுவே சஞ்சரிக்கும் புருஷரும் சகோதரரும் எப்போதும் பாக்கியமுள்ளவர்களாய்க் காலந்தள்ளி வருவார்கள்.

## GOLDEN MOMENTS.
## அரிய நிமிஷங்கள்.

தூர தேசத்துக்குப் பிரயாணம் பண்ணும் ஒரு மனுஷன் தன் பை நிறையப் பொன் நாணயங்கள் வைத்துக்கொண்டு வழிநடந்து போகையில், அந்தப் பையிலிருந்த ஒரு சிறு பீறலின் மூலமாய்ச் சகல நாணயங்களும் ஒன்றின்பின் ஒன்றாய் விழுந்து, கடைசியாக அவன் குறித்த இடம் சேர்ந்ததும், தன் பையில் ஒரு நாணயமும் இல்லையென்று காணுவானாகில், அவனுக்கு இருக்கும் பெருந்துக்கத்தையும் சஞ்சலத்தையும் யாரால் விவரிக்கமுடியும்? அவன் இவ்வாறு பிச்சைக்காரனாக நேரிட்டதைக்குறித்து எப்போதும் நினைத்துப் பெருமூச்செறிவான். இப்படிப்பட்ட சம்பவத்தை நாம் கேள்விப்படுவோமாகில், நமது பைகளிலுள்ள நாணயங்களை வெகு ஜாக்கிரதையுடன் கொண்டுபோய் வெகு கவலையாய்ச் செலவழிக்கவாவது அல்லது வழியில் விழுந்து வீணாய்ப் போகாதபடி பத்திரமாய்ச் சேர்த்துவைக்கவாவது பிரயாசப்படுவோமல்லவா? பொன் நாணயங்களைக்குறித்து இவ்வளவு விழிப்புள்ளவர்களாயிருக்கிற நாம் பொன்னிலும் விலைமிகுந்ததும் நமக்குத் தயவாய்க் கிடைத்திருக்கிறதுமான அரிய நிமிஷங்களைக்குறித்து எவ்வளவு அஜாக்கிரதையுள்ளவர்களாயிருக்கிறோம். நமது ஜீவபிரயாணத்தில் சற்றும் கவலையில்லாதவர்களாய் அரிய நிமிஷங்களாகிய பொன் நாணயங்களைத் தூக்கிக்கொண்டு புறப்படுகிறோம். இந்த நாணயங்கள் எல்லாம் சோம்பல், அறிவீனம் என்னும் பீறல்களின் மூலமாய் வெகு சீக்கிரத்தில் விழுந்துபோகின்றன. எழுபது வருஷங்களின் அரிய நிமிஷங்களாகிய திரண்ட ஆஸ்தியுடைய அநேக சீமான்கள் தங்களுக்குக் கிடைத்த அரிய நிமிஷங்களாகிய இந்தப் பொன் நாணயங்கள் தங்களிலிருந்து எப்படி விழுந்ததென்று அறியக்கூடாத அறிவிலிகளாய் இருக்கிறார்கள். ஆனால் கடைசியாகத் தங்களில் ஒன்றுமில்லாமற்போயிற்று என்பதையும், தங்களுக்குக் கிடைத்ததைத் தங்களுக்கும் பிறருக்கும் பிரயோசனமான விதமாய் உபயோகப்படுத்தவில்லை என்பதையும் வெட்கத்தோடும் துக்கத்தோடும் பூரணமாய்க் கண்டறிகிறார்கள். “கர்த்தாவே, நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி, எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும்.”



## HUMILITY.
## தாழ்மை.

இம்மாத சஞ்சிகையில் நாம் சித்திரரூபத்துடன் காட்டியிருக்கும் இராணியாரின் சிரேஷ்ட புதல்வியின் இனிய குணங்களைத் திருஷ்டாந்தத்துடன் எடுத்தெழுத நமக்கு இடமில்லாத குறைவுபற்றி தாழ்மை என்னும் அணிகலம் அவர்களில் எப்படி விளங்கிற்று என்பதைமாத்திரம் இங்கே ஒரு சிறு சம்பவத்தால் விளக்கிக் காட்டுகிறோம்:—

இப்பூலோகமெங்குமுள்ள சகல தேசங்களிலும் சாதாரணமாய் மாட்சிமை மிகுந்த மகுடம் தரித்த மன்னரின் மனைவிகளும் மக்களும் எந்தச் சிறு பணியையும் செய்வது வழக்கமல்ல. ஒருநாள் இராணியாரின் சிரேஷ்ட புதல்வியார் ஜர்மன் தேசத்திலுள்ள தமது ராஜ அரண்மனையில் ஒரு நாற்காலியைத் தூக்கிக்கொண்டு ஒரு அறையிலிருந்து மற்றொரு அறைக்குப் போவதைப் பார்த்திருந்த ஒரு ஜர்மன் பெருமாட்டி மிகுந்த ஆச்சரியமடைந்து, அவர்களைத் தனியே அழைத்து: ராஜபுதல்வியும் ராஜபுதல்வனின் மனைவியுமாகிய அவர்கள் அப்படிக்கொத்த சிறு வேலைகளைச் செய்வது அழகல்ல என்றார்கள். உடனே ராஜபுதல்வியார் “பெருமாட்டியாரே, எங்கும் அகன்ற அங்கிலேய ராஜ்யத்து அரசியாகிய என் தாயார் தனது இருகைகளிலும் இரண்டு நாற்காலிகளைத் தூக்கிவந்து தமது பிள்ளைகளுக்குப் போடுவதை அடிக்கடி கண்டு ஆநந்தித்திருக்கும் நான் அதை எனக்குப் பெருமையாக எண்ணிக்கொள்வேனேயன்றி, தாழ்மையாக ஒருக்காலும் எண்ணமாட்டேன்” என்று சொல்லி, அந்தப் பெருமாட்டியை ஆச்சரியத்தில் ஆழ்த்தினார்கள்.

இதனால் மாட்சிமை மிகுந்த நமது காருண்ய இராணியாரும் தமது புத்திரர் புத்திரிகளுக்கு அவர்களுடைய சகல செல்வாக்கிலும் தாழ்மையை மறக்காதிருக்க நற்போதனை கற்றுக்கொடுத்திருப்பார்களேயானால், எத்தனைக்கதிகமாய் நாமும் நமது பிள்ளைகளுக்குத் தாழ்மையையும் பெரியோரைக் கண்டு மரியாதைசெய்தலையும் கற்றுக்கொடுக்கக் கடமைப்பட்டவர்களாய் இருக்கிறோம் என்பது பட்டப்பகல் வெளிச்சம்போல் தெளிவாகிறது. “தாழ்மையென்பது தங்க அணிகலம்.”



JOSEPH SOLD BY HIS BRETHREN.

## யோசேப்பு தன் சகோதரரால் விற்கப்பட்டது.

யாக்கோபுக்குப் பன்னிரண்டு குமாரர் இருந்தார்கள். இவர்களில் யோசேப்பு கடைசிப் புத்திரனுக்கு முந்தினவன். யோசேப்பு பதினேழு வயதிலே தன் சகோதரரோடு ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்து, அவர்களுடைய துன்மார்க்கத்தைத் தன் தகப்பனுக்குச் சொல்லிவருவது வழக்கம். தன் தகப்பன் அவர்களைத் திருத்தும்படி அவன் இப்படிச் சொல்லிவந்தது யோசேப்பினிடம் புகழ்ப்படத்தக்க காரியமாம்.

யாக்கோபின் முதிர்வயதில் யோசேப்பு அவனுக்குப் பிறந்ததினாலும், அவனுடைய மற்ற புத்திரரைப்பார்க்கிலும் இவன் அதிக சீர்ப்பாடுதலும் தகப்பனை நேசிக்கிறவனுமாயிருந்ததினாலும், யாக்கோபு அவனை மற்ற புத்திரரிலும் அதிகமாய் நேசித்து, அவனுக்குப் பலவருணமான அங்கியைச் செய்வித்தான். இது எப்படிப்பட்ட அங்கியென்று நாம் சரியாய்ச் சொல்லமுடியாது; ஆனால் அது அவன் சகோதரர் தரித்த அங்கிகளிலும் விசித்திரமானதும், அவைகளைப்பார்க்கிலும் அதிக அழகானதுமாய் இருந்தது.

தங்கள் தகப்பன் யோசேப்பை அதிகமாய் நேசிக்கிறதை அவன் சகோதரர் கண்டபோது, அவனோடே பட்சமாய்ப் பேசாமல், அவனைப் பகைத்தார்கள். மேலும் யோசேப்பு இரண்டு சொப்பனங்களைக் கண்டான். அவைகளில் முந்தினதின்படியே அவனும் அவன் சகோதரரும் வயலில் அறுத்த அரிகளைக் கட்டிக்கொண்டிருக்கையில், அவன் சகோதரரின் அரிக்கட்டுகள் நிமிர்ந்திருந்த அவனுடைய அரிக்கட்டைச் சுற்றி வணங்கி நின்றதாகவும், இரண்டாம் சொப்பனத்தின்படியே சூரியனும் சந்திரனும் பதினொரு நட்சத்திரங்களும் அவனை வணங்கினதாகவும் யோசேப்பு தன் சகோதரருக்குச் சொன்னான். அவன் சகோதரர் சரியாய்ப் பதினொருபேர் இருந்தபடியால், பதினொரு நட்சத்திரங்கள் தங்களைக் குறித்ததாகவும், சூரியனும் சந்திரனும் தங்கள் தகப்பனையும் தாயையும் குறித்ததாகவும் எண்ணி, "நீ எங்களை ஆளப்போகிறாயோ" என்று சொல்லி, யோசேப்பை முன்னிலும் அதிகமாய்ப் பகைத்தார்கள்.

ஒருநாள் யோசேப்பின் சகோதரர் தங்கள் தகப்பனுடைய ஆடுகளை மேய்க்க வெகுதூரம் போனார்கள். அவர்கள் போய் சிலநாளானதும், யாக்கோபு அவர்களின் க்ஷேமம் எப்படி என்று அறிய ஆசையுள்ளவனாய் யோசேப்பை அவர்களிடம் அனுப்பி, தனக்கு மறுசெய்தி கொண்டுவரக் கட்டளையிட்டான். யோசேப்பைத் தூரத்தில் கண்டதும், அவன் சகோதரர் அவனைக் கொலைசெய்யும்படி சதியோசனைபண்ணினார்கள். அவன் அவர்களிடத்தில் சேர்ந்தபோது, அவர்கள் தங்கள் யோசனையை மாற்றி, அவனுடைய பலவருண அங்கியைக் கழற்றி, எகிப்து தேசத்துக்குப் பிரயாணம்பண்ணின வர்த்தகரிடத்தில் அவனை இருபது வெள்ளிக் காசுக்கு விற்றார்கள்.

(இன்னும் வரும்.)

HYMN.

## ஞான கீதம்.

WONDERFUL WORDS OF LIFE.

### ஜீவாதிசயச் சொல்.

பாடுங்கள், மீண்டும் பாடுங்கள்
ஜீவாதியச் சொல்,
ஆ, அது சேர்த்தி, பாடுங்கள்
ஜீவாதிசயச் சொல்.
நல்ல பாதை காட்டும்,
நம்பிக்கையில் ஓட்டும்.

2. ஸ்தோத்திர நாதர் ஈகிறார்
ஜீவாதிசயச் சொல்,
கேள், அவர் அன்பாய்க் கூவுறார்
ஜீவாதிசயச் சொல்.
தாராளமாய்த் தாறார்,
மோட்சங்கொண்டுவாறார்.

3. நற்சுவிசேஷம் சொல்லுங்கள்,
ஜீவாதிசயச் சொல்.
மெய்ச்சமாதானம் விள்ளுங்கள்,
ஜீவாதிசயச் சொல்.
இயேசுதான் மெய் மீட்பர்,
சுத்தம்பண்ணிக் காப்பார்.

## THE DOWAGER EMPRESS OF GERMANY.
## இராணியாரின் சிரேஷ்ட புதல்வி.

இராணியாரின் சிரேஷ்ட புதல்வியாகிய விக்டோரியா, அடிலெயிட் மேரி லூயிசா என்னும் சக்கரவர்த்தினி ௧௮௪௰-ம் வருஷம் பக்கிங்காம் அரண்மனையில் பிறந்தார்கள். இராணியார் தமது சிரேஷ்ட புதல்விக்குச் சிறந்த விஷயங்களைச் சிறுகச் சிறுகக் கற்றுக்கொடுத்து வந்தார்கள். சில சமயங்களில் இருவருமாகப் படவில் போகும்போதும், இராணியார் இலேசான பாடங்களைத் தமது புத்திரிக்கு இனிதாய்க் கற்றுக்கொடுத்து, சரித்திர புஸ்தகத்தை அடிக்கடி வாசிக்கச் செய்வார்கள்.

இவ்வாறு அழகிலெல்லாம் மிகச் சிறந்த கல்வியழகில் களஞ்சியமெனப் பேரெடுத்து இராணியாருக்குக் கண்மணியாயிருந்த இந்தப் பெண்மணியைத் தமக்குக் காதலியாகக் கொள்ளக் கருதி, ஜர்மன் சக்கரவர்த்தியின் புத்திரனாகிய பிரதரிக் வில்லியம் என்னும் கட்டழகன் அங்கிலேய அரண்மனைக்கு ௧௮௫௫-ம் ஹூ வந்து, விவாகத்தை நிச்சயித்துவிட்டு, தமது ஊருக்குத் திரும்பினார். பின்பு ௧௮௫௮-ம் ஹூ அநேக மன்னர்கள் சூழ, அன்பான புலவர் பாட, ஆயிரம் ஆயிரமாய்ப் பிரபுக்கள் கூட விவாகம் வெகு ஆடம்பரத்தோடு குறித்த தினத்தில் நடந்தேறியது. இவர்களுக்கு நாலு செல்வப் புத்திரரும் நாலு புத்திரிகளும் பிறந்தார்கள். இவர்களில் இரண்டு புத்திரர் மரித்துப்போனார்கள். தமது தாயைப்போலவே ராஜ புதல்வியாரும் தமது பிள்ளைகளுக்குக் கல்வி கற்றுக்கொடுப்பதில் வெகு ஒழுக்கமுடையவர்கள். பாடம் படிக்க நேரமும் வேண்டும், பந்தடிக்கக் காலமும் வேண்டும் என்பதே இவர்களுடைய பாரி எண்ணம். இவர்கள் தாழ்மை என்பதைத் தமக்கு மேன்மையாகக் கொண்ட மேன்மகள். கல்வியில் இவர்களுக்கு இணையொத்த பெண்மகள் இத்தலிதேசத்தின் இராணி தவிர வேறெவரும் ஐரோப்பா கண்டத்தில் இல்லை. பொறுமையென்பது இவர்களின் வேறொரு பூஷணம். இவர்கள் ஏழைகளுக்கென்று ஏற்படுத்திய அநேக தர்மசாலைகள் ஜர்மன்தேசம் எங்கும் காணலாம்.

சென்ற வருஷம் மார்ச்சு மாதம் மத்தியில் இவர்கள் மாமனாராகிய வில்லியம் சக்கரவர்த்தி தொண்ணூறு வயதுள்ளவராய் மரிக்கவும், ௧௮௭௰-ம் ஹூ ஜர்மானியருக்கும் பிரான்சியருக்கும் நடந்த பெரும் யுத்தத்தில் அஞ்சாது நின்று அஞ்சாது வென்ற பேர்பெற்ற பராக்கிரமனும் படிப்பாளியுமாகிய பிரதரிக் வில்லியம் என்னும் இவர்கள் நாயகன் மூன்றாம் பிரதரிக் என்னும் நாமம் சூடி சக்கரவர்த்தியானார்; இவர்களும் சக்கரவர்த்தினியானார்கள். ஆனால் இவர்கள் அருமை நாயகனும் தொண்டையில் புறப்பட்ட ஓர் பிளவையால் மெலிந்து கரைந்துருகி மூன்றே மாதம் முடிதாங்கிச் சென்ற ஜூன் மாதம் மத்தியில் மரணமடைந்தார். இப்போது இவர்களின் மூத்த புதல்வனாகிய பிரதரிக் வில்லியம் என்பவர் இரண்டாவது வில்லியம் என்னும் நாமம் சூடி சக்கரவர்த்தியாக ஆளுகைசெய்து வருகிறார். இவர்கள் தமக்கு வருஷம் ஒன்றுக்குக் கிடைக்கும் நாற்பதினாயிரம் பவுனைப் பெற்றுக்கொண்டு தமது பிள்ளைகளுடன் தற்காலம் லண்டன் நகரத்துக்குத் தமது தாயாரிடம் போயிருக்கிறார்கள்.

தமது கணவன் வியாதிப்பட்ட காலத்தில் இவர்கள் காட்டிய விழிப்பும் தளராப் பிரயாசையும் மேலே விவரித்திருக்கும் சிறந்த குணங்களும் இவர்களிடத்தில் நமது இந்து சிநேகிதிகள் கற்றுக்கொள்ள வேண்டிய நற்பாடங்களாம்.



THE PRINCESS ROYAL OF ENGLAND AND DOWAGER EMPRESS OF GERMANY.

காலஞ்சென்ற பிரதரிக் ஜர்மன் சக்கரவர்த்தியின் மனைவியும், இராணியாரின் சிரேஷ்ட புதல்வியுமான விக்டோரியா சக்கரவர்த்தினி.

GOOD WORDS FOR WOMEN.

## நங்கையர்க்கு நல்லுரை.

### 7. பதிவிரதை.

ஸ்திரீகளின் விரதங்களிலெல்லாம் உத்தம விரதம் பதிவிரதமே. புருஷன் சித்தத்துக்கு இசைந்து நடப்பவளே பதிவிரதை. அவள் இவ்வுலகத்திலுள்ள சகல காரியங்களிலும் கடவுளால் தனக்கருளப் பெற்ற தன் அரிய நாயகனையே மேலாகக்கொண்டு, அவனையே தன் பொன்னும் பொருளும், கண்ணும் கருத்துமாக எண்ணுவதால், அவன் மனங் கோணவும் முகம் நாணவும் இடம் வைக்காமல், சர்வ ஜாக்கிரதையுடன் நடந்துகொள்ளுகிறாள்.

காலையில் தன் புருஷனுக்குமுன் எழுந்து, மாலையில் அவனுக்குப்பின் படுத்துறங்கும் பதிவிரதையானவள் அந்தி சந்தி மத்தியானங்களில் தான் செய்யும் ஜெபங்களில் எல்லாம் தன் புருஷனை விசேஷித்து நினைத்து, அவனைக் கருணாமூர்த்தியின் கண்முன் நிறுத்துகிறாள். நாளெல்லாம் அவள் ஆத்தும கவலைக்கு இரண்டாவது அகத்துக்காரன் கவலையே. தம்பதிகள் விவாக ஐக்கியத்தால் உடல் இரண்டும் உயிரொன்றுமாய்ப் போனதினாலே, நன்மனையாள் தன் நாயகன் சுகத்தைத் தன் சுகமாகவும், அவன் சுகவீனத்தைத் தன் சுகவீனமாகவும், அவன் சந்தோஷத்தைத் தன் சந்தோஷமாகவும், அவன் துக்கத்தைத் தன் துக்கமாகவும் பாவித்து நடக்கிறாள். அவன் கால்வலி அவள் தலைவலி, அவன் உடல் நோவு அவள் உயிர் நோவு.

தன்னை மாலையிட்ட மணவாளனை அந்நியர் அற்பமாக எண்ணினாலும், கல்லென்றாலும் கணவன் புல்லென்றாலும் புருஷன் என்ற நீதிமொழிக்கேற்ப அவனை மகா புருஷனாக மதித்திருக்கிறாள். மதிப்புக்கேற்ற வாக்கும் வாக்குக்கேற்ற நடையும் வாகாய் வெளிப்படுமல்லவா, அவள் தன் கணவனைத் தன் எஜமானாக எண்ணி, அவன் சொல்லுக்கடங்கி நின்று, அவன் கோபத்தைச் சாந்தத்தினாலும், அவன் பகையை அன்பினாலும், அவன் கொடுமையைப் பொறுமையினாலும் மேற்கொள்ளுகிறாள். "பெண்டிர்க்கழகெதிர் பேசாதிருத்தல்" என்பதை மறந்து, தன் பத்தாவின் பேச்சுக்குப் பேச்சும், வர்சுக்கு வச்சும் பதில்கொடுத்து எதிர்த்து நிற்பவள் குலத்தைக் கெடுக்க வந்த கோடாலிக்காம்பேயன்றி வேறல்ல.

குறிப்பறிந்து நடப்பவளே உத்தமி. தங்கள் நாயகிகளுக்குச் சங்கடங் கொடுக்கப்படாதென்று தங்கள் மனதை வெளியிடாதிருக்கும் நாயகருண்டு. இப்போக்கொத்த நாயகன் மனதைக் கண்டுகொள்பவளே கலாநிதி. அவன் களைப்பாயிருந்தால் அவன் களைப்பையாற்றவும், துக்கமாயிருந்தால் அவனைச் சந்தோஷிப்பிக்கவும், தக்க முயற்சிசெய்கிறாள்.

வரவுக்கேற்ற செலவு செய்பவளே மங்கையர் சிரோமணி. செட்டான குடித்தனமே செல்வப் பெருக்குக்கு ஆதாரம். ஜம்பத்துக்கும் டம்பத்துக்கும் வீண்செலவு செய்து, தன் புருஷனைக் கடன்காரனாக்குகிற ஊதாரி முகத்தில் ஒருவரும் முழிக்கத்தக்கதல்ல. ஊதாரிக் குடித்தனம் மூதேவிக் குடித்தனம். ஐஸ்வரியமுள்ள ஸ்திரீகள் அணிந்திருக்கும் நகைகளைத் தாங்கள் அணிந்துகொள்ளவும், அவர்கள் உடுத்திருக்கும் உயர்விலைப் புடவைகளைத் தாங்கள் உடுத்திக்கொள்ளவும் ஆசைப்பட்டுச் சொற்ப வரும்படியுள்ள தங்கள் நாயகரைச் சித்திரவதை செய்யும் சீர்கெட்ட மங்கையர் வெகுபேருண்டு. இவர்கள் பெண்களல்ல, புருஷரை உபாதிக்கும் புண்கள்.



நற்பெண்சாதி தன் நாயகன்பொருட்டேயன்றி வேறெவர்பொருட்டும் தன்னை அழகிய ஆடையாபரணங்களால் அலங்கரியாள். தன்னைக் கண்டோரெல்லாம் நின்று மயங்கவேண்டுமென்று தன்னை மினுக்கிக்கொண்டு புறப்படும் மினுக்கி சமுசாரியென்னும் பெயருக்கு அருகியல்ல. உத்தம பதிவிரதை தன் நாயகனைக் காண்கையில், மனமகிழ்ந்து முகமலர்ந்து, இப்போது மலர்ந்த பூப்போல் விளங்கி, பரிமளிக்கிறாள். தன் நாயகனை விட்டுப் பிரிந்திருக்கையிலோ, மனஞ்சலித்து முகம் வாடி, மழைமுகங் காணாப் பயிர் போலவும், தாய்முகம் காணாச் சிசு போலவும் சோர்ந்துபோகிறாள்.

நல்மனைவி, தன் வீட்டில் எத்தனை பணிவிடையாட்களிருந்தாலும் தன் கணவனுக்குத் தானே பணிவிடை செய்வதைப் பெரும் பாக்கியமாக எண்ணி, அவன் நாவுக்கு ருசிகரமான போசன பானங்களைப் பாகஞ்செய்யவும், அவன் வஸ்திராதிகளை ஆயத்தஞ்செய்யவும், அவன் சந்தோஷத்துக்கும் சௌக்கியத்துக்கும் அவசியமானவற்றைத் தன் கையினாலே நடப்பிக்கவும் தவறாதிருக்கிறாள். அவனுக்ம விஷயங்களிலும் அவனுக்கு உதவி புரியும் உத்தமியே பதிவிரதா ரத்தினம்.

மி. மி.

THE TRUE WIFE.

## உத்தம மனைவி.

உத்தம மனைவி இப்படிப்பட்டவளென்று ஒரு வித்வான் பின்வருமாறு விவரித்திருக்கிறார்:—

அவள் புண்ணிய பொக்கிஷமாய் பொறுமைக்கிருப்பிடமாய், ஞானக் களஞ்சியமாய் நற்குண பாத்திரமாய், கற்பலங்காரியாய் கனவுபகாரியாய், அற்புத சுந்தரியாய் அறிவிலே மந்திரியாய், விற்பன விதரணியாய் விநய சம்பூரணியாய், வாடாத புஷ்பமாய் மங்காத தீபமாய், ஆடாத மாமயிலாய் அலையாத மாங்குயிலாய், ஓடாத புள்ளிமானாய் ஊறாத பைங்கிளியாய், மாற்றில்லாத் தங்கமாய் மாசில்லா மாணிக்கமாய், கோதில்லாக் கரும்பாய்க் குறையில்லாச் சந்திரனாய் இருப்பாள்; அவள் பிராணன் போனாலும் ஒரு பொய் சொல்லத் துணியாள்; பாவமென்றால் பாம்பைக் கண்டதுபோல் நடுங்குவாள்; அவள் எந்த வேலைசெய்தாலும் கடவுளுடைய தியானத்தை மறவாள்; அவள் எந்த உயிரையும் சொந்த உயிரைப்போல் எண்ணி உபகாரம் செய்வாள்; வருமானத்துக்கு மிஞ்சின செலவு செய்யாள்; தன் வீட்டுக் காரியங்களை வெளியிலே பேசாள்; பிறர்மேல் நிந்தையான வார்த்தைகளைத் தானும் பேசாள், பிறர் பேசவும் இடங்கொடாள்; பத்தாவுடன் கூடிவாழ்வதே அவளுக்குப் பரமானந்தம்; பத்தா இருக்கும் இடம் காடாயிருந்தாலும், அதுவே அவளுக்கு அரண்மனைபோன்ற வீடு; அவளுடைய உள்ளம் எப்படி நிர்மலமோ அப்படியே அவளுடைய தேகமும் ஆடையும் அவளுக்குள்ள யாவும் எப்போது சுத்தமாயிருக்கும். இப்படிப்பட்ட புண்ணிய நாயகி எங்கும் எப்போதும் எல்லாராலும் புகழப்படாமல் இருப்பது எப்படி?

CHILDREN'S CORNER.

## சிறுவர்க்கான கதை.

THE HUNTER.

### வேடன்.

வீரியத்தால் வெகு பேர்பெற்ற வேட்டைக்காரன் ஒருவன் இருந்தான். இவன் நற்குணசாலியாகையால், அந்நாட்டிலுள்ள பிரபுக்கள் வேட்டையாடப் போகும்போது, இவனுக்குக் கூலிகொடுத்து, இவனைக்கூட அழைத்துக்கொண்டு போவது வழக்கம். ஒருநாள் இவன் தனியே வேட்டையாடிக்கொண்டு வருகையில், திடீரென்று ஒரு குண்டு அவன் மண்டையில் தாக்கினதால், அவன் அகால மரணமடைந்தான். இவனைக் கொன்றவன் யாரென்று அறிய அரசன் முதலிய பெரிய பிரபுக்கள் எல்லாம் பிரயாசப்பட்டும், கூடாமற்போயிற்று. இவன் வெகு அருமையாய் வளர்த்துவந்த ஒரே புத்திரன் இவனுக்கு இருந்தான். தகப்பன் மரித்தபின், தாய் அவனை வெகு கவலையோடு துர்ச்சனரைக் கண்டால் தூரமாய் ஓடவும், சற்சனரைக் கண்டால் சந்தோஷப்படவும், சன்மார்க்கத்திலே நிலையாய் நிற்கவும் வளர்த்து வந்தாள். அவனுக்கும் தக்க வயது வரவே, வில்லாளித்தனத்தில் வெகு சூரனெனப் பேரெடுத்து, தனது தகப்பனின் வேலையைப் பிரபுக்களினிடம் பெற்றான்.

ஒருநாள் இவன் பிரபுக்களோடு வேட்டையாடி வரும்போது, ஒரு கலைமானைக் கண்டு குறிபார்த்து அடித்தான். ஆனால் குறி தவறிப்போனதால் கலைமான் ஓடிவிட்டது. அந்தச் சமயத்தில் அதற்குச் சற்று தூரத்தில் "ஐயோ, ஐயோ, செத்தேன், செத்தேன்" என்று ஒரு சத்தம் கேட்டது. இதைக் கேட்டதும், அவனும் அவன் கூட இருந்த வேடரும் அந்த இடத்துக்கு ஓடி, ஒரு மனிதன்மேல் இந்த ராஜவேடன் விட்ட அம்பு பாய்ந்து கிழித்திருப்பதையும், அவனிலிருந்து இரத்தம் ஆறாய்ப் பெருகுவதையும் கண்டு திடுக்கிட்டார்கள்.

இதைக் கண்டதும் அந்த ராஜவேடன் மரிக்கும் மனிதனைக் கட்டியணைத்து, "ஐயோ, ஐயா, நான் இதை அறியாமற் செய்தேன், நீர் இருந்ததை நான் சற்றும் அறியேன், ஆகையால் மன்னியும், மன்னியும்" என்று கண்ணீரோடே முழங்காலூன்றி பிரார்த்தித்தான்.

அப்பொழுது அந்தச் சாகும் மனிதன் அவனைப் பார்த்து "அப்பா, தம்பி, நீ என்னை மன்னிப்பு கேட்க நிமித்தியமே இல்லை; ஒருவரும் இதுவரைக்கும் அறியாத ஒரு இரகசியத்தை நான் மரிக்கப் போகிறபடியால், உனக்கு இன்றைக்கு வெளிப்படுத்தப்போகிறேன். உனது உத்தம தகப்பனைக் கொன்ற கொலைபாதகன் நானேயன்றி வேறெவனுமல்ல; அவனை நான் இங்கே இந்த மரத்தின் கீழே நான் இதோ கிடக்கும் இந்த இடத்திலேயே கொன்றேன். அவனின் மகனாகிய உன்னையும் நான் கொல்வதற்கென்று



இன்றைக்கு இங்கே வந்து ஒளித்திருந்தேன். ஆனால் நீ அறியாமற் என்னைக் கொன்றாய். ஆ, தேவன் நீதிபரர், மெய்யாகவே நீதிபரர்" என்று சொல்லி மரித்தான். அவனைச் சுற்றி நின்றவர்கள் எல்லாரும் திகிலும் பயமும் பிடித்தவர்களாய் பிரமித்து நின்றார்கள்.

பின்னாலே வந்த பிரபுக்களும் இதைப் பார்த்து ஆச்சரியப்பட்டுக்கொண்டு இருக்கையில், அவர்களில் வயது முதிர்ந்த ஒருவர் எல்லாரையும் நோக்கி "அரசன் அன்று கொல்லும், தெய்வமோ நின்று கொல்லும் என்பது சத்தியம், சத்தியம்" என்று சொன்னார்.

PROVERBS.

## பழமொழிகள்.

அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.

ஆயிரம் வந்தாலும் ஆத்திரம் ஆகாது.

இளமையிற் சோம்பல் முதுமையில் மிடிமை.

ஈகை உடையவன் எக்களிப்பு அடைவான்.

உற்றது சொன்னால் அற்றது பொருந்தும்.

ஊரார் உடைமைக்குப் பேயாய்ப் பறக்காதே.

எதார்த்தவாதி வெகு ஜன விரோதி.

ஏட்டுச் சுரக்காய் கறிக்கு ஆகுமா?

ஐயப்பட்டால் பைய நட.

ஒரு நன்றி செய்தவரை உள்ள அளவும் நினை.

ஓடம் வண்டியிலும் வண்டி ஓடத்திலும் ஏறும்.

ஔவியம் பேசினால் ஆக்கம் அழியும்.

அஃகமும் காசும் சிக்கெனத் தேடு.

GLEANINGS.

## சமாச்சாரக் குறிப்புகள்.

ஜப்பான் சக்கரவர்த்தினி பெண்களுக்கென்று உயர்தர பாடசாலையொன்று ஏற்படுத்தி, கல்வியில் தேர்ந்த துரைசானிகளாலாகிய ஒரு சங்கத்தின் விசாரணையின்கீழ் அதை வைத்திருக்கிறார்களாம்.

சென்ற மாதம் நடந்த மற்றிக்குலேஷன் எவ். ஏ. பரீட்சைகளில் சென்னையில் மாத்திரம் பதினாறு பெண்கள் பரீட்சிக்கப்பட்டார்கள். அவர்களில் இரண்டுபேர் எவ். ஏ. பரீட்சைக்குப் போயிருக்கிறார்கள்.

இந்து விதவைகளின் தாழ்ந்த நிலைமையை உயர்ந்த பதவிக்குக் கொண்டுவரும்படித் தனது சுயதேசத்தை விட்டு, இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்கும் போய்ப் பெருந்தொகை சேர்த்த கீர்த்திபெற்ற பண்டித ராமபாய் இந்தியாவுக்குத் திரும்பிவருகிறார்களெனக் கேள்வியாகிச் சந்தோஷப்படுகிறோம்.

பெங்களூரிலே முத்துலட்சுமி என்னும் பதினெட்டு வயதுள்ள ஒரு பெண் சுயேச்சையாய் கிறிஸ்தவ குருக்களிடம் போய், பெற்றோர் மற்றோர் என்ன சொல்லியும் கேளாமல் வெகு தைரியத்துடன் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டாள்.

இராணியாரின் பேத்தியாகிய ஜர்மன் சக்கரவர்த்தியின் சகோதரிகளில் ஒருவர் தமது சகோதரனுக்கு இப்போது புதிதாய்ப் பிறந்த செல்வப் புதல்வனைப்போல் ஒரு நேர்த்தியான படம் எழுதி, ஒரு இனிய கவி பாடினார்களாம். 'தாயைப்போல பிள்ளை, நூலைப்போல சீலை' என்பது பொய்யாமோ?

CHILDBIRTH.

## பிரசவ நூல்.

(தொடர்ச்சி.)

**கரு அழிவு.**—கரு அழிந்துபோகிறதானால், அதிக சாதாரணமாய் எட்டாம் வாரத்திலிருந்து பன்னிரண்டாம் வாரத்திற்குள்ளாக அழிந்துபோகும்; ஆகிலும் இந்தக் காலத்தையே இட்டமாய்க் குறித்துச் சொல்லக்கூடாது. ஒருவிசை கரு அழிந்தால், அடிக்கடி அழிந்துகொண்டேயிருக்கும். இதுவே ஒருவிசை கரு அழிவதனால் உண்டாகும் பெரிய மோசம். வலி உண்டானால், ஸ்திரீயானவள் சவ்வரிசி கஞ்சிபோன்ற இலேசான உணவை உட்கொண்டு, குளிர்ந்த ஜலத்தைக் குடிக்கவேண்டியது. அமர்ந்து இருத்தல் அதிக அவசியம். (முகங் குப்புற படுக்காமல்) மல்லாந்தாவது ஒரு பக்கமாயாவது படுத்திருக்கவேண்டும்.

**வீண் பயம்.**—பிரசவத்தால் உண்டாகும் வலி மோசம் முதலியவற்றைக்குறித்துக் கர்ப்ப ஸ்திரீயினிடத்தில் பேசி திடுக்கிடச் செய்யக்கூடாது. இதற்கு மாறாக அவள் சுகமாய்ப் பிரசவித்து, ஒரு பிள்ளைக்குத் தாயாவாள் என்னும் சந்தோஷமான நம்பிக்கை உண்டென்று சொல்லி, அவளை உற்சாகப்படுத்திவரவேண்டும். சில பேதமையான மூட ஜனங்கள் ஒரு கர்ப்ப ஸ்திரீ எதாகிலும் பயங்கரமான ரூபத்தையாவது ஒரு குரூபியையாவது கண்டால், அவளுக்குப் பிறக்கும் பிள்ளையும் குரூபமுள்ளதாய் இருக்கும் என்று பிதற்றுகிறார்கள். இவையெல்லாம் சுத்த பயித்தியமேயொழிய வேறொன்றுமல்ல. இவ்வாறே ஒரு பிராமணன் அல்லது கழுதையைப் பார்ப்பதினாலும், பல்லி கீச்சிடுவதினாலும், ஆந்தை அலறுவதினாலும் ஏதோ விக்கினம் உண்டாகும் என்று எண்ணுவதும் சுத்த பயித்தியமாயிருக்கிறது.

ஆனால் தாயினிடம் உண்டாகும் பயம், கோபம், அதிக ஆசை முதலியவற்றால் பிள்ளைக்கு மெய்யாகவே அபாயம் நேரிடும். நாம் முன்னே கூறியபடி தாய் தன்னை விழுதல் முதலியவற்றிற்கு விலக்கமாகக் காத்துக்கொள்ளவேண்டும்.

**பேய்களுக்குச் செலுத்தும் காணிக்கை.**—கர்ப்ப ஸ்திரீகள் காரணமின்றி பல வழிகளிலும் துன்பப்படுத்தப்படுகிறார்கள். அறிவீனமுள்ள பெற்றோர் தங்கள் பிள்ளைகளைப் பேய் பிடித்துக்கொண்டு ஓடிப்போம் என்று பயமுறுத்துகிறதுபோலவே பேய் ஆசாரிகளும் மற்றவர்களும் பேய்களுக்குக் காணிக்கை செலுத்தவேண்டுமென்று ஜனங்களைப் பயமுறுத்தி, அந்தக் காணிக்கைகளையெல்லாம் கடைசியில் தாங்களே எடுத்துக்கொள்ளுகிறார்கள். கர்ப்ப ஸ்திரீகளுக்கு அபாயம் உண்டாக்கும் பேய்கள் கிடையாது; அவைகளைப்பற்றிய கதைகளெல்லாம் பேதமையான மூட ஜனங்களை மோசம்போக்கும்படி தந்திரசாலிகள் கட்டின வைகளேயொழிய வேறொன்றுமல்ல.

விக்கினமற்ற பிரசவத்தைக் கட்டளையிடுவதற்கென்று வணங்கவேண்டிய விக்கிரகமும் கிடையாது. கர்ப்ப ஸ்திரீக்குத் துணையாய் நிற்கக்கூடிய ஒரு தேவனை அல்லது தேவதையை நினைப்பூட்டும்படி விக்கிரகம் வைக்கப்படுகிறதென்று சொல்லப்படலாம். அப்படிப்பட்ட வஸ்து மெய்யாகவே கிடையாது.

துணையாய் நிற்கக்கூடிய ஒரே ஒருவர் ஜீவனைக் கொடுக்கிற கர்த்தராகிய மெய்யான ஒரே தேவனே. சகல வஸ்துக்களின் பெரிய சிருஷ்டிகராகிய இவரை எந்த உருவத்தாலும் குறித்துக் காட்டமுடியாது. மேலும் அவர் "நீங்கள் என்னை யாருக்கு ஒப்பிடுவீர்கள்" என்று சொல்லி இதைக் கண்டிப்பாய் விலக்குகிறார்.

தேவனை நோக்கித் தினம் பிரார்த்தித்தல்.—பேய்களுக்குக் காணிக்கை செலுத்துதலும் விக்கிரகங்களை வணங்குதலும் தப்பிதமான செய்கையாயிருப்பதால், கர்ப்ப ஸ்திரீ தினந்தோறும் மெய்யான ஒரே தேவனை நோக்கிப் பிரார்த்திப்பது வெகு நியாயமான செய்கையாயிருக்கிறது. அவளுக்கு ஜீவனைக் கொடுத்தவரும், அவள் கர்ப்பத்தில் வெகு ஆச்சரியமான விதமாய்ச் சிசுவை வளரச் செய்கிறவரும் அவரே. நமது கண்கள் அவரைக் காணாவிட்டாலும் அவர் எங்கும் இருக்கிறார். அவர் அதிக மெதுவான சத்தத்தையும் கேட்கிறார்; இருதயத்தின் விருப்பத்தையும் அவர் அறிந்திருக்கிறார்.

(இன்னும் வரும்.)

# மாதர் மித்திரி.

புத். உ. க௲அ௱அ௰கூ ஹு - பெப்பிரவரி மீ. இல. அ.

## NOTES.

## பத்திராதிபர் குறிப்புகள்.

SUNSHINING HUSBANDS.

### உற்சாகமுள்ள புருஷர்.

நமது சிறு பத்திரிகையைப் பெண்கள்மாத்திரமல்ல, அநேக புருஷரும் ஆவலோடு வாசிப்பதால், இம்முறை புருஷருக்கு உபயோகமான சில வார்த்தைகள் சொல்லப் பிரியங்கொண்டிருக்கிறோம். மனைவியானவள் எந்த விஷயத்திலும் எக்காலத்திலும் இனிய முகம் பூண்டு உற்சாகமுள்ளவளாய் இருக்கவேண்டும் என்று நாம் பலமுறையும் பலவிதமாக நமது பத்திரிகை மூலமாய்ப் படித்துப் படித்துச் சொல்லியிருக்கிறோம். பெண்கள் இருக்கவேண்டியது இப்படியானால், புருஷர் இருக்கவேண்டியது எப்படியென்பதே நாம் இம்மாதத்தில் எழுதிக் காட்டத் தீர்மானித்திருக்கும் குறிப்பு.

தங்கள் வீடுகளைப் பாக்கியம் நிறைந்த வீடுகளாக்க விரும்புவோர் உற்சாகம் என்பதை ஒரு நிமிஷமாகிலும் ஒழித்துவிடாதிருக்க ஓயாத கருத்தும் கவலையுமுள்ளவர்களாய் இருக்கவேண்டியது அவசியம். "தாயைப்போல பிள்ளை, நூலைப்போல சேலை" என்பது கற்றோரும் மற்றோரும் அறிந்த பழமொழி. "பெற்றோர் சீவியம் பிள்ளைக்குச் சட்டம்" என்பது தற்காலம் வழங்கும் தங்கப் புதுமொழி. பெற்றோர் எப்போதும் குற்றம் கண்டுபிடிக்கும் கோபகுணமுடையவர்களாய் இருப்பார்களாகில், அவர்கள் பிள்ளைகள் நல்லவர்களாயிருப்பது அருமையிலும் அருமை. தன் மனைவியின் சொல்லுக்கெல்லாம் சொட்டை சொல்லி, பேச்சில் எல்லாம் பிழை பிடித்து, எப்படிப்பட்ட சிறந்த வேலைக்கும் பழுதுசொல்லும் பர்த்தாவுடன் வாழும் நாயகி இனிய குணமும் அமரிக்கையான சுபாவமும் உடையவளாய் இருப்பது அபூர்வம்.

ஒரு புருஷனின் வேலை அதிக களைப்பை உண்டாக்கக்கூடிய வேலையாயிருந்தாலும் சரி, அதிக வருத்தமான வேலையாயிருந்தாலும் சரி, அவன் அதைச் செய்யும்பொருட்டு காலையில் போய் மாலையில் திரும்புவதினாலேயே ஓயாத வேலையினி

ன்று ஒருவாறு ஒழிந்திருக்கிறான். இதனால் தன் மனைவிக்குக் கிடைக்கும் ஆறுதலிலும் இவனுக்குக் கிடைக்கும் ஆறுதல் மிகவும் மேலானதாயிருக்கிறது. தன் வேலையிலிருந்து திரும்பும்போது நல்ல காற்றைச் சுவாசிக்கிறான், பற்பல சிங்காரக் காட்சிகளைப் பார்த்து மகிழுகிறான், ஜனங்கள் போவதையும் பேசுவதையும் கேட்டுச் சந்தோஷிக்கிறான். ஆனால் தன் வீட்டையும் பிள்ளைகளையும் வெகுவாய் நேசித்து அவைகளையே தனக்கு இன்பத்திலும் இன்பம் என்று எண்ணிக்கொண்டிருக்கும் மனைவிமுதலாய் வெகுவாய்க் களைப்படைந்துபோகிற சமயம் தினந்தோறும் உண்டு என்பது எல்லோரும் அறிந்த விஷயம். ஒவ்வொருநாளும் செய்யப்படவேண்டிய காரியங்கள் இவையென்று அவளுக்கு மற்றவர்களைவிட நன்றாய்த் தெரியும்; இவைகளையே அவள் திரும்பத் திரும்பச் செய்துகொண்டு வருகிறாள். இவ்வாறே அவள் ஒவ்வொருநாளும் சகிக்கவேண்டிய துன்பங்களையும் பொறுமையோடே சகித்துக்கொண்டு வருகிறாள். ஒருவேளை இந்தத் துன்பங்களையெல்லாம் புருஷனிடத்தில் சொல்லலாமென்றால், அவனும் அவைகளைத் தினந்தோறும் கேட்பதால் சலித்து, அவற்றை நீக்குவதற்கான வழி ஒன்றும் தேடாதிருக்கிறான். ஆகையால் மனையாளே அவைகளையெல்லாம் ஒவ்வொருநாளும் சகித்துவரவேண்டியவளாயிருக்கிறாள் என்பது பிரத்தியட்சமாம். மனித சாதிக்கு இயல்பாயிருக்கும் துன்பங்களைக் கணக்கிட்டுப் பார்த்தால், இளமைதொட்டு முதுமைவரையில் பெண்களுக்குள்ள துன்பங்களே மிகுதியென்பது நிச்சயம். பெண்களே துன்பங்களைச் சகிப்பதற்கும் குடும்ப பாரங்களைத் தாங்குவதற்கும் உறைவிடமாயிருக்கிறார்கள்.

இவ்வாறு மனையாளின் வேலை பாடும் பாரமுமான வேலையென்பதைக் கணவன் அறிந்து, அவள் செய்யும் வேலைகளில் மிகுந்த அனுதாபமுடையவனாகி, அவளோடு எப்போதும் உற்சாகமுள்ளவனாய் இருக்கவேண்டும். முகமலர்ந்து உற்சாகத்தோடு தனது வீட்டிற்குத் திரும்பின கணவனோடு சந்தோஷமாய்ச் சம்பாஷிப்பதனால், அன்று முழுவதும் தனக்கிருந்த களைப்பையும் கவலையுமெல்லாம் மறந்து, மறுநாள் வேலைக்குத் தன்னைத் தக்கபடி பலப்படுத்திக்கொள்ளுகிறாள். எவ்வளவோ பாடுகளை அவள் படவேண்டியவளாயிருந்தாலும், மாலையில் தனது நாயகன் சந்தோஷத்தோடு திரும்புவானே என்னும் சந்தோஷப் பாட்டால் அப்பாடுகளையெல்லாம் இலகுவாக்கிக்கொள்ளுகிறாள்.

ஆதலால் புருஷன் சந்தோஷத்துக்காகப் பெண்சாதி பிரயாசப்படுவதுபோலவே பெண்சாதியின் சந்தோஷத்துக்காகப் புருஷனும் பிரயாசப்படவேண்டும். இப்படிப்பட்ட புருஷனும் பெண்சாதியும் இருக்கும் வீடு அழகிய வீடும் பாக்கியம் நிறைந்த வீடுமாயிருப்பதுமன்றி, அவர்கள் நடத்தும் சமுசாரமும் துக்க சாகரமாகாமல், ஆனந்த சாகரமாகும்.

"மருவிய காதன் மனையாளுந் தானும்
இருவரும் பூண்டீர்ப்பினல்லால்—ஒருவரால்
இல்வாழ்க்கையென்னும் இயல்புடைய வான்
செல்லாது தெற்றிற்று நின்று." [சகடம்



HELP.

## துணை.

அநேக மனிதர்: எங்களிடத்தில் பணம் இல்லையே, பணம் இல்லாதவன் பிணமாயிற்றே, நாங்கள் இவ்வுலகத்தில் நன்மை செய்வதற்கு எவ்விதமாய்த் துணையாயிருக்கக்கூடும் என்று சொல்லுவார்கள். பணமுடையவர்கள் ஏழைகளின் குறைவை எளிதாய் நீக்கக்கூடியதாகையால், அவர்கள் தங்கள் பணத்தால் அதிக நன்மை செய்யலாம் என்பது உண்மையான சத்தியமாயிருக்கிறது. இது எப்படி சத்தியமோ அவ்வாறே நாம் பணமில்லாமலும் நன்மை செய்யலாம் என்பதும் சத்தியமாயிருக்கிறது. முறுமுறுப்பும் வெடுவெடுப்புமில்லாமல் நாம் பிறரோடு மனக்களிப்போடு பேசி, அவர்கள் துக்கத்திலும் துன்பத்திலும் அவர்களை ஆறுதல்படுத்த பணம் வேண்டியதில்லை. வழியில் விழுந்தவர்களை நமது கையால் தூக்கிவிட்டுச் சரியான பாதையில் நடத்திக்கொண்டுபோக பணம் வேண்டியதில்லை. தைரியம் இழந்து தளர்ந்துபோயிருப்பவர்களின் இருதயத்தில் புது தைரியத்தைக் கிளப்பிவிட பணம் வேண்டியதில்லை. நாம் சந்திக்கும் ஒவ்வொருவருக்கும் ஏதாயினும் ஒரு சிறு உதவியை வார்த்தையினாலாவது கையினாலாவது செய்ய பணம் வேண்டியதில்லை. பணம் செய்வதைப்பார்க்கிலும் நமக்குப் பிறர்மேலுள்ள அனுதாபம் செய்யக்கூடியது அதிகம். இப்படியே பணத்தைப்பார்க்கிலும் உற்சாகமும் நம்பிக்கையுமே மேலானதாயிருக்கிறது.

இயேசுகிறிஸ்து இப்பூலோகத்தில் இருந்தபோது, தம்மண்டை வந்தவர்களுக்குப் பணத்தைக் கொடுக்காமல் வேறு உதவிகளை வேண்டியமட்டும் செய்தார். அவர் செய்த உதவிகளைப்போல நீச மனுஷராகிய நாம் செய்யக்கூடாதவர்களாயிருந்தாலும், பணமின்றி பிறர்மேல் அன்புகூர்ந்து அனுதாபப்படலாம் அல்லவா? இப்படியே நாம் பணமின்றி செய்யக்கூடிய இந்த ஏராளமான உதவிகளையும் நம்மால் இயன்றமட்டும் எப்போதும் செய்யப் பிரயாசப்படவேண்டியது.

மேலும், மனைவிக்குரிய அநேக நாமங்களில் துணைவி என்பது அவளின் கடமையைக் காட்டும் ஒரு அரிய நாமம். "அவள் தன் நாயகனுக்கு உடல் துணைவியாகவும், உயிர்த் துணைவியாகவும், வாக்குத் துணைவியாகவும், ஜெபத் துணைவியாகவும் இருக்கிறாள்." தன் புருஷனைப் புலம்பப்பண்ணாமல் பூரிக்கப்பண்ணி, சகல நற்காரியங்களிலும் அவனுக்கு அவள் துணையாயிருக்கவேண்டியது. வீட்டைக் கவனிப்பதிலும் வீட்டாரைப் பராமரிப்பதிலும் துணையாயிருப்பவளும் அவளே. இதைக்குறித்து "அரைக்காசை ஆயிரம் பொன்னாக்குகிறவள் பெண்சாதி, ஆயிரம் பொன்னை அரைக்காசாக்குகிறவளும் பெண்சாதி" என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் சகல மனைவிகளும் தங்களுக்குரிய துணைவி என்னும் சிறந்த நாமத்துக்கு ஏற்றதுபோல தினமும் நடக்க வகைபார்ப்பார்களாக.



JOSEPH INTERPRETS PHARAOH'S DREAMS.

## யோசேப்பு பார்வோனின் சொப்பனங்களை வியாக்கியானம்பண்ணியது.

யோசேப்பு தன் சகோதரரால் விற்கப்பட்டு எகிப்துக்குக் கொண்டுபோகப்பட்டதைக்குறித்து நாம் போனமுறை பார்த்தோம். எகிப்து தேசத்து அரசனின் பிரதானியாகிய போத்திபார் என்பவன் யோசேப்பை விலைக்கு வாங்கி, தன் வீட்டில் ஒரு வேலையாளாக வைத்துக்கொண்டான். கர்த்தர் யோசேப்போடே இருந்ததை அவன் கண்டு, வெகு சீக்கிரத்தில் அவனைத் தன் வீட்டுக்கு விசாரணைக்காரனாக்கினான். இவன் இந்த வேலையை வெகு உண்மையோடே செய்துவருகையில், போத்திபார் மனைவி தன் கெட்ட விருப்பத்துக்கு இவன் இணங்காமற்போனதைக் குறித்து எரிச்சலாகி, இவன்மேல் ஒரு நாள் அபாண்டமான பொய்யைத் தன் புருஷனிடம் சொல்லி, அவனை அநியாயமாய்ச் சிறைச்சாலையில் போடுவித்தாள். ஆனால் கர்த்தர் அவனைக் கைவிட்டதில்லை.

சிலகாலம் சென்று எகிப்தின் ராசாவாகிய பார்வோனுக்கு விரோதமாக குற்றஞ்செய்த அவனுடைய இரண்டு வேலைக்காரர் யோசேப்பிருந்த சிறைச்சாலையிற் காவற்பண்ணப்பட்டார்கள். இவர்கள் இருவரும் ஒரே இராத்திரி வெவ்வேறு சொப்பனங்களைக் கண்டு, மறுநாள் யோசேப்புக்குச் சொல்ல, அவன் அவைகளை வியாக்கியானம்பண்ணினான். அந்த வியாக்கியானத்தின்படியே அரசன் அவர்களில் ஒருவனைத் தூக்கிப்போட்டு, மற்றவனைத் திரும்பவும் வேலையில் வைத்துக்கொண்டான். இந்த வேலைக்காரனோ யோசேப்பை நினையாமற் மறந்தான்.

இரண்டு வருஷம் சென்றபின்பு ஒரு நாள் பார்வோன், அவலட்சணமும் கேவலமுமான ஏழு பசுக்கள் அழகும் புஷ்டியுமான ஏழு பசுக்களைப் பட்சித்துப்போட்டதாகவும், சாவியானதும் தீய்ந்ததுமான ஏழு கதிர்கள் செழுமையும் மேனியுமான ஏழு கதிர்களை விழுங்கிப்போட்டதாகவும் சொப்பனம் கண்டு, எகிப்தின்



சகல சாஸ்திரிகளும் அதின் அர்த்தத்தைச் சொல்லக்கூடாமற் போயிற்றே என்று விசனமாயிருக்கும்போது, அவன் வேலைக்காரன் யோசேப்பைக்குறித்து அவனிடம் சொன்னான். உடனே அரசனின் கட்டளைப்படி யோசேப்பு சவரம்பண்ணிக்கொண்டு, வேறு வஸ்திரம் தரித்து, அவன்முன் வந்து நின்றான். பார்வோன் தான் கண்ட சொப்பனத்தை அவனுக்குச் சொன்னதும், யோசேப்பு தேவனை நோக்கிப் பிரார்த்தித்து "எகிப்து தேசமெங்கும் பரிபூரண விளைவுள்ள ஏழு நல்ல வருஷங்களுக்குப்பின் பஞ்சமுண்டாயிருக்கும் ஏழு வருஷம் வரும். இந்தப் பஞ்சம் தேசத்தைப் பாழாக்கும் மகா கொடுமையான பஞ்சமாயிருக்கும். அரசனாகிய நீர் தேசம் பஞ்சத்தினால் அழிந்துபோகாதபடிக்கு நல்ல வருஷங்களில் விளையும் தானியங்களைச் சேர்த்துப் பத்திரப்படுத்திவைக்கவேண்டும். இதற்கென்றே தேவன் தாம் செய்யப்போகிறது இன்னதென்று உமக்கு முன்னறிவித்திருக்கிறார்" என்றான்.

இதைப் பார்வோன் கேட்டு சந்தோஷப்பட்டு, அவன் ஞானத்துக்காக மிகவும் ஆச்சரியமடைந்து, தன் மோதிரத்தைக் கழற்றி அவன் கையிலே போட்டு, மெல்லிய வஸ்திரங்களை அவனுக்கு உடுத்தி, பொன் சரப்பணியை அவன் கழுத்திலே தரித்து, தன்னுடைய இரண்டாம் இரதத்தின்மேல் அவனை ஏற்றி, எகிப்து தேசத்துக்கு அவனை அதிகாரியாக்கினான். யோசேப்பு பரிபூரண வருஷங்களில் விளைந்த தானியங்களை மிகுதியாய்ச் சேர்த்துவைத்தான்.

HYMN.

## ஞான கீதம்.

REJECTING THE WORLD.

### உலகத்தை வெறுத்தல்.

போ, அற்பமாம் சிற்றின்பமே!
போ, கெட்ட லோக இச்சையே!
வா, தேவ நேசமே! வாவேன்,
நான் உனதாலயம் ஆவேன்.

2. தேவ குமாரன், ஜீவனை
கொடுத்த அந்த நேசத்தை
நினைத்து, இச்சை யாவையும்
வெறுத்திருக்கச் செய்திடும்.

3. ஓர் நிமிஷத்தின் இன்பமே
அநந்த நோவுண்டாக்குமே,
ஆ! என்னைச் சேர்த்தும்மண்டை
சுகப்படுத்தும், யேசுவே! [யே

4. நான் மோட்சத்தில் பங்கற்
போகாதபடி உண்மையாய் [றுப்
சேர்ப்பட, உம்மை நேசிக்கும்
இதயத்தைத் தந்தருளும்.

5. நரருடைய இதயம்
அறிந்திராத ஆநந்தம்
அங்கெனக்குப் பரத்திலே
கிடைக்கப் பண்ணும், கர்த்தரே!

## FLORENCE NIGHTINGALE.
## பிளாரென்ஸ் நயிற்றிங்கேல்.

பிணியாளிகளுக்குப் பேருதவிபுரிந்து இப்பூவுலகெங்கும் பெரும்புகழ்பெற்ற பிளாரென்ஸ் நயிற்றிங்கேல் என்னும் பெண்மணி ௧௮௨௰-ம் ௵ இத்தாலி தேசத்தின் அழகிய பட்டணமாகிய பிளாரென்ஸ் நகரில் பிறந்தாள். அவள் தனது இளம் பிராயத்திலேயே கணிதம் இலக்கியம் முதலியவைகளையும் அநேக பாஷைகளையும் எளிதில் கற்று, வாத்திய வாசிப்பில் வெகு வல்லபசாலியானாள். ஆகிலும் வியாதிஸ்தருக்கு வேண்டியவைகளைத் தன்னால் இயன்றமட்டும் தருவதும், அவர்கள் நோயை நீக்குவதுமே அவளுக்குப் பேரானந்தம். இவளின் இருபத்தோராம் பிராயத்தில் இவளுக்கு ஏராளமான திரவியம் கிடைத்தது; அதைத் தன் சுயபிரயோசனத்துக்கென்று வைத்து அனுபவிக்காமல், பிணியாளிகளுக்குச் சிகிச்சைசெய்வதற்கும் காயங்களைக் கட்டுவதற்குமான சிறந்த வழிகள் எவையென்று கண்டுபிடிப்பதிலேயே செலவழித்துவந்தாள்.

௧௮௫௪-ம் ௵ அங்கிலேயருக்கும் ருஷியருக்கும் கிரீமியா தீபகல்பத்தில் யுத்தம் உண்டாகவே வைத்தியசாலைகளிலெல்லாம் காயம்பட்டவர்களும், நோயில் அடிபட்டவர்களும் ஏராளமாய் இருந்தார்கள். இதைக் கேள்வியுற்றதும், நயிற்றிங்கேல் பெண்மகள் சிகிச்சையில் கைதேர்ந்த நாற்பத்திரண்டு தோழிமாரைத் தன்னுதவிக்குக் கூட்டிக்கொண்டு, துர்க்கி தேசத்திலுள்ள ஸ்குட்டேரி என்னும் நகர வயித்தியசாலைக்குப் போய், அங்கே சாகக் கிடந்தவர்களுக்குச் சற்றும் சளைக்காமல் இரவும் பகலும் எண்ணிறந்த நன்மைகள் செய்தாள். இதற்குமுன் யுத்தத்தில் காயம்பட்டவர்களுக்குப் பெண்கள் சிகிச்சைசெய்ததே கிடையாது. இப்பொழுது நயிற்றிங்கேலும் அவள் தோழிமாரும் முகமலர்ந்து உற்சாகத்தோடு செய்த உதவிகளைக் கண்டு, வெகுபேர் தாங்கள் பிழைத்ததுபோல எண்ணினார்கள். காயம்பட்ட போர்ச்சேவகருக்கு நயிற்றிங்கேல் மருந்து கொடுத்து காயம் கட்டினதுமன்றி, அவர்களின் படுக்கைகளைக் கழுவி, உடுப்புகளைத் துவைத்து, கடிதங்களை எழுதி இப்படியாக அவர்களைப் பற்பல வழிகளில் ஆற்றித் தேற்றினாள்.

இதற்குப்பின் நயிற்றிங்கேல் தனது தோழிமாருடன் கிரீமியாவுக்குப் போய், அங்கே தான் கடுஞ்சுரத்தில் விழுந்தும், அதை ஒரு பொருட்டாக எண்ணாமல், அங்கிருந்த பிணியாளிகளுக்கும் ஓயாமல் உதவிசெய்துவந்தாள்.

௧௮௫௬-ம் ௵ யுத்தம் முடிந்து, சகலரும் தங்கள் தேசத்துக்குத் திரும்பின பின், எல்லாப் போர்ச்சேவரும் ஏகமாய்க் கூடி, நயிற்றிங்கேல் பேரால் நிதி ஒன்று ஏற்படுத்தி, பெண்களுக்கு வைத்திய விஷயம் கற்பிப்பதற்கென்று, அவள் விருப்பப்படியே அந்நிதியைக்கொண்டு ஒரு பாடசாலையை ஸ்தாபித்தார்கள். இராணியாரும் நயிற்றிங்கேல் செய்த நன்மைகளுக்குத் தாமும் சந்தோஷப்படுவதைக் காட்ட அழகிய சிறு வயிர மார்ப்பதக்கம் ஒன்றை வெகுமதியாய்த் தந்தார்கள். நயிற்றிங்கேல் பெண்மணி தனது சொந்த ஜனத்தாருக்குமாத்திரமல்ல, இந்துதேசத்தாருக்கும் நன்மைசெய்ய நாடி, அவர்களுக்குள் பெண்கல்வி அபிவிர்த்திக்கவேண்டுமென்றும், விவசாயம் விர்த்திக்கவேண்டுமென்றும், இதற்கான வழிகளைத் துரைத்தனத்தார் திறக்கவேண்டுமென்றும் வெகுவாய் வேண்டிக்கொண்டாள்.

பிறருக்கு நன்மைசெய்வதிலேயே தன் நாட்களைச் செலவிட்ட அனேகம் பெண்களில், இம்மாதுசிரோன்மணியும் நமக்கு நல்ல முன்மாதிரியாயிருக்கிறாள்.



FLORENCE NIGHTINGALE.
பிளாரென்ஸ் நயிற்றிங்கேல்.

GOOD WORDS FOR WOMEN.

## நங்கையர்க்கு நல்லுரை.

### 8. குடித்தனக்காரி.

ஒரு பெண் எவ்வளவு அழகுள்ளவளாயிருந்தாலும், எவ்வளவு அறிவுடையவளாயிருந்தாலும், எவ்வளவு ஆஸ்திபாஸ்தியுடையவளாயிருந்தாலும், அவள் குடித்தனக்காரியாயிராதேபோனால், அவள் சமுசார வாழ்க்கைக்கு ஏற்றவளல்ல. அவளால் வாழ் மனை பாழ் மனையாம், வீடு காடாம். குடித்தனக்காரியாலோ பாழ் மனையும் வாழ் மனையாம், காடும் வீடாம்.

நற்குடித்தனத்துக்குச் செட்டு முக்கியம். செட்டென்பது உள்ளதை அனுபவியாமல் வருத்தப்படும் லோபித்தனமல்ல; அறுத்த கைக்குச் சுண்ணாம்பு கொடாத பிசினித்தனமுமல்ல; இருக்கிறது போதாதென்று ஊரார் சொத்துக்குப் பேயாய்ப் பறக்கும் பேராசையுமல்ல. வரவுக்கேற்ற செலவுசெய்யும் மட்டான குடித்தனமே செட்டான குடித்தனம். செட்டற்ற குடித்தனம் மட்டற்ற தரித்திரம். செட்டுக்காரி வீண்செலவு செய்யாள்; அவசியமற்ற பொருள் அதிக மலிவாயிருந்தாலும், அதை ஆசித்து வாங்காள். தனக்கு நியாயமாய்க் கிடைத்த பொருள் எவ்வளவு அற்பமாயிருந்தாலும், அதை இழந்துவிடச் சம்மதியாள். அவள் ஒவ்வொன்றையும் சிந்தாமல் மங்காமல் சிக்கனமாய்க் கையாடும் சிறந்த குணமுடையவள். மேலும், செட்டுக்கழகு சேர்த்துவைக்குதல். இன்று அகப்பட்டதையெல்லாம் இன்றே தின்றுவிட்டு, நாளைக்கு இல்லையே இல்லையே என்று அடித்துக்கொள்ளும் நாசகாலி குடித்தனக்காரியல்ல. அவளைக் கட்டிக்கொண்டவன் கடன்காரருக்குப் பாதகனாவான் என்பதற்குச் சந்தேகமில்லை. கணக்கோடு செலவிட்டுக் கவனமாய் மீர்ப்பதே குடித்தனப்பாங்கு. மீர்ப்பதைச் சேர்ப்பதும், சேர்ப்பதைக் காப்பதும் மெச்சத்தகும் குணம். சிந்தின இடத்திலே சேராது என்பது செட்டுக்குரிய சிறந்த பழமொழி.

குடித்தனத்துக்கு அழகு ஒழுங்கு. ஒவ்வொரு பொருளையும் அதனதனிடத்தில் வைப்பதும், அந்தந்தப் பொருளை அதனதன் வேலைக்கு உபயோகிப்பதும் ஒழுங்கு. பெட்டி இருக்கும் இடம் வேறே, சட்டியிருக்கும் இடம் வேறே; சோறு இருக்கும் இடம் வேறே, துணி இருக்கும் இடம் வேறே. குடித்தனக்காரி இதையறிந்து நடப்பதுமன்றி, ஒவ்வொரு நேரத்துக்கும் ஒரு வேலையையும், ஒவ்வொரு வேலைக்கும் ஒரு நேரத்தையும் குறித்திருப்பது முக்கியம். சமயத்துக்கேற்ற வார்த்தையும், வார்த்தைக்கேற்ற செய்கையும் இருப்பது ஒழுங்குக்குரிய மற்றொரு விஷயம். உடையில் ஒழுங்கு, நடையில் ஒழுங்கு, வீட்டில் ஒழுங்கு, வெளியில் ஒழுங்கு, கொடுக்கலில் ஒழுங்கு,



வாங்கலில் ஒழுங்கு, வேலையில் ஒழுங்கு, சோலியில் ஒழுங்கு அனுசரிப்பவளே குடித்தனக்காரி. ஒழுங்கீனம் தேவனுக்கும் பிரியமல்ல, மனிதருக்கும் பிரியமல்ல.

சுறுசுறுப்பு குடித்தனத்துக்குரிய மற்றொரு இலட்சணம். சோம்பலுள்ள பெண் குடித்தனத்துக்கு நஞ்சு. அசதிக்குணம் அவலட்சணம். பொழுது புகுமுன் படுத்துக்கொண்டு, பொழுது விடிந்தும் நித்திரைசெய்கிற புண்ணியவதிக்குக் குடித்தனமேது, குடிவாழ்க்கையேது? அவள் அஷ்ட தரித்திரத்தைப் பாக்குவைத்தழைக்கும் அழிம்புக்காரி. சுறுசுறுப்புள்ளவளோ சுகம் மிகுந்த சுந்தரி, பொருள் மிகுந்த பொக்கிஷதாரி, கனம் மிகுந்த கௌரதாபீடம். சோம்பேறிக்கு ஒருநாள் வேலை சுறுசுறுப்புள்ளவளுக்கு ஒருநொடி வேலை. பாடில்லாமல் பலனில்லை என்பதைக் குடித்தனக்காரி ஒருபோதும் மறவாமல், விடாமுயற்சியோடு கஷ்டப்பட்டு உழைப்பாள்; தன் சதையைச் சாறாய்ப் பிழியும் அவள் பிரயாசை வீண்போகாது.

"இல்லா ளகத்திருக்க வில்லாத தொன்றில்லை
இல்லாளு மில்லாளே யாமாயின்—இல்லான்
வலிகிடந்த மாற்ற முரைக்குமே லவ்வில்
புலிகிடந்த தூறாய்விடும்."

ஆளுந் திறமையும் குடித்தனத்துக்கு அவசியம். குடித்தனமோ துரைத்தனமோ என்பார்களே. ஆளுந்திறமையென்பது ஆண்படையானை அற்பமாயெண்ணி அவமதித்து அடிமைகொள்ளும் அதனப்பிரசங்கமல்ல. தன்னையும், தன்னைச் சேர்ந்தவர்களையும், தனக்குட்பட்டவர்களையும் ஒருவருக்கும் இடறலின்றி நடத்திக்கொள்ளும் சக்தியே ஆளுந்திறமை. இத்திறமையுள்ள குடித்தனக்காரியினிடம் நயமும் பயமும், கருணையும் கண்டிப்பும் எப்போதும் சேர்ந்திருக்கும். முக்கியமாய்ப் பிள்ளைகளையும் வேலைக்காரரையும் தக்கபடி நடத்தும் திறமையுடையவளே உத்தம குடித்தனக்காரி. பரோபகார சிந்தையும், பட்சமுள்ள வார்த்தையும், ஈகையுள்ள கரமும் குடித்தனத்துக்கு அவசியம். குணங்கெட்ட ஸ்திரீயினிடத்தில் குடியிருக்க யாருக்கு மனம் வரும்? குணசீலிப்பெண்ணே குலத்துக்கு அழகு.

"குடநீ ரட்டுண்ணு மிடுக்கட் பொழுதுங்
கடனீ ரறவுண்ணுங் கேளிர் வரினுங்
கடனீர்மை கையாறுக் கொள்ளு மடமொழி
மாதர் மனைமாட்சியாள்."

பத்தியற்ற குடித்தனம் பாக்கியமில்லாக் குடித்தனம். தெய்வபக்தியுள்ளவளின் குடித்தனம் தெய்வாசீர்வாதம் பெற்றுச் செழித்தோங்கும். குடித்தனக்காரியாகிய நங்காய், நீ உன் குலதெய்வமாகிய ஆத்ம நாயகரை ஒருபோதும் மறவாதே. நீ அவரை விசுவாசித்து அவர் சித்தப்படி நட. அப்போது உன் குடித்தனத்துக்குக் குறைவில்லை.

பி. மி.



CHILDREN'S CORNER.

## சிறுவர்க்கான கதை.

THE TREE OF GOLD.

### பொன் விளையும் மரம்.

ஒரு தகப்பனுக்கு சுந்தரம் என்னும் புத்திரனும் தங்கம் என்னும் புத்திரியும் இருந்தார்கள். சுந்தரம் என்பவன் அதிக சுறுசுறுப்பும் விவேகமுமுடைய சிறுவனயிருந்தாலும், சிற்சில சமயங்களில் விளையாட்டுக்கென்று விகடமாய்ப் பொய் சொல்லி, வீணன பேச்சுகளைப் பேசும் துர்க்குணமுடையவனயிருந்தான். தகப்பன் அவனை அடிக்கடி இதற்காக கண்டித்தும், சிறுவன் அப்பொன்மொழிகளை ஏற்றுக்கொள்ளாத அசடனயிருந்தான். இவன் சகோதரியாகிய தங்கமோ எந்த விஷயத்தையும் உடனே நம்பும் பேதைமையான பெண்.

ஒருநாள் தகப்பன் சுந்தரத்தைக் கூப்பிட்டு, அவனிடம் ஆறு பொன் நாணயங்களைக் கொடுத்து, "மிகுந்த ஆபத்தில் அகப்பட்டிருக்கும் உன் அத்தை மகனுக்கு இவைகளை அட்டியின்றி அனுப்பிவிடுவதுடன், ஒரு கடிதம் எழுதி நமது சுக செய்திகளை அவனுக்குத் தெரிவி" என்றார். தகப்பன் கட்டளைப்படியே சுந்தரம் வெகு அவசரமாய்க் கடிதம் எழுதிக்கொண்டிருக்கும்பொழுது, தங்கம் அவன் இருந்த அறைக்குட் பிரவேசித்து, அங்கே வெகு ஜோதியாய்ப் பிரகாசித்த ஆறு பொன் நாணயங்களையும் கண்டு "இவைகள் என்ன, இவை எங்கேயிருந்து வந்தது" என்று ஆவலோடு கேட்டாள். சுந்தரம் "இவைகள் பொன் விளையும் மரம் என்னப்பட்ட ஒரு விலையுயர்ந்த மரத்தின் காய்கள். இந்தக் காய்களை நிலத்தில் விதைப்பதால், உடனே முளைத்து மரமாகி கனி கொடுக்கும். இம்மரங்கள் நமது தோட்டத்திலும் இருக்குமானல், நம்மையொத்த சீமான்கள் எங்கும் இருக்கமாட்டார்கள்" என்று சிரித்துக்கொண்டு சொல்லி, தன் வேலையின்மேல் கவனமாயிருந்தான்.

தமையன் சொன்னதையெல்லாம் மெய்யென்று நம்பி, வெகு கவனமாய்க் கேட்டுக்கொண்டிருந்த தங்கம், சுந்தரத்துக்குத் தெரியாமல் அவன் ஏதோ ஒரு அவசர வேலையினிமித்தம் அடுத்த அறைக்குச் சென்ற சமயம் பார்த்து, அந்த ஆறு நாணயங்களையும் எடுத்துக்கொண்டு: "என் பெற்றோரைப்போன்ற பேதைமையான மனிதரும், அண்ணனைப்போன்ற அஜாக்கிரதைக்காரனும் இந்தப் பூமியில் எங்கேயாகிலும் இருப்பார்களா? வெண்ணெய்யை வைத்துக்கொண்டு நெய் தேடலாமா? காற்றுள்ளபோதே தூற்றிக்கொள், கரும்புள்ளபோதே ஆற்றிக்கொள் என்னும் முதுமொழியும் உண்டே. இது இவர்களுக்குத் தெரியாததல்லவே. கையிலுள்ளபோதே பூமியில் விதைத்தால் அல்லவோ தக்க காலத்தில் பலனைக் காணலாம்? ஆனல் இந்த அற்புதமான காய்களோ வெகு சீக்கிரத்தில் முளைத்து, தழைத்து, பெரிய ஆலவிருட்சம்போலாகி, ஆயிரமாயிரமான கனிகளைச் சகலரும் ஆச்சரியப்படும்படிக்கான விதமாய்க் கொடுக்குமென்று என் அருமை அண்ணனும் சொல்லியிருக்கிறரே. ஆகையால் நான் இந்த ஆறு காய்களையும் இப்பொழுது நிலத்தில் விதைப்பேனகில், வெகு சீக்கிரத்தில் ஏராளமான பொன் கனிகள் குலுங்கும் மரங்களைக் காண்பேன். இதற்காக என் பெற்றோரும் என்னை வெகுவாய் வாழ்த்துவார்கள்", என்று தனக்குள்ளே யோசித்து, அவைகளைத் தோட்டத்தில் புதைத்துவிட்டாள். இவள் செய்துகொண்டிருந்ததையெல்லாம் மறைவில் பார்த்துக்கொண்டிருந்த தோட்டக்காரன் நாணயங்களை எடுத்துக்கொண்டு, அவைகளுக்குப்பதிலாய்த் தன்னிடம் இருந்த ஒரு செப்புத்தகட்டைப் புதைத்துவிட்டுப் போனன்.

சுந்தரம் திரும்பிவந்து நாணயங்களைக் காணமல் தங்கத்தைக் கேட்க, அவள் தான் செய்ததெல்லாவற்றையும் சொல்லி, மரம் முளைக்குமட்டும் சற்றுப் பொறுமையாய்க் காத்திருக்கும்படி அண்ணனை வேண்டிக்கொண்டாள். அவனே தங்கையை வெகுவாய்க் கோபித்துக்கொண்டு, தகப்பனேடு அவள் நாணயங்களைப் புதைத்த இடத்துக்கு விரைவாய் ஓடி அவைகளைத் தேடுகையில், நாணயங்களுக்குப்பதிலாய்ச் செப்புத்தகடு ஒன்று அகப்பட்டது. அதை எடுத்துப் பார்க்கையில் "பரிகாசம்பண்ணி பாதகனுகாதே, வேடிக்கைபேசி வேதனைப்படாதே" என்று எழுதியிருந்தது. உடனே தகப்பன் இந்த நீதிவாக்கியங்களைத் தன் புத்திரன் மனதில் நன்ருய்ப் பதியப்பண்ணி, தங்கத்தின் பேதைமைக்காக அவளைக் கடிந்துகொண்டான். சுந்தரமோ தன் நடக்கைக்கு நற்பிரமாணமான அப்பொன்மொழிகள் கிடைத்த சந்தோஷத்தால், நாணயங்களை இழந்ததற்காக அதிக விசனப்படாதிருந்தான்.



GLEANINGS.

## சமாச்சாரக் குறிப்புகள்.

தற்காலம் உலகத்தில் சக்கரவர்த்தினியென்னும் பட்டம் வகித்திருப்போர் நாற்பது பேரெனக் கணக்கிடப்பட்டிருக்கிறது." இவர்களில் முந்தினவர் நமது நாட்டை ஆளும் விக்டோரியா சக்கரவர்த்தினியாராம்.

---

உலகத்தில் பிரசுரமாகும் பத்திரிகைகளிலெல்லாம் அதிக சிறு பத்திரிகை மெக்சிக்கோ தேசத்தில் பிரசுரமாகும் எல் றெல்லிகிராமோ என்னும் வாராந்தர பத்திரிகையாம். அதற்குப் பக்கம் நாலு; ஒவ்வொரு பக்கமும் ஐந்து அங்குல நீளமும் மூன்று அங்குல அகலமுமானது. அதில் உலகத்தின் சகல பாகங்களிலுமுள்ள சமாச்சாரங்கள் வெகு சுருக்கமாய் அடங்கியிருக்கின்றன.

---

பம்பாயில் இரண்டு பெண்கள் பீ. ஏ. என்னும் பட்டம் பெற்ருர்கள். இவர்களில் ஒருத்தி யூதஜாதிப் பெண்ணும் இன்னெருத்தி பார்சிஜாதிப் பெண்ணுமாம்.

---

மலையாளத்திலுள்ள தலைச்சேரியில் ஸ்திரீ உபாத்தியாயர்களைப் பழக்குவதற்கென்று ஓர் பெண் பாடசாலை ஏற்படுத்தப்பட்டது; அது ஏற்பாடான தினத்தில் பதினெட்டு நாயர்ஜாதிப்பெண்களும் பத்து பிராமணஜாதிப் பெண்களும் அப்பாடசாலையில் சேர்ந்தார்களென்றறிந்து சந்தோஷப்படுகின்றோம்.

---

அமெரிக்காவிலுள்ள பிரசில் தேசத்து சக்கரவர்த்தியின் மூன்று குமாரரும் சேர்ந்து 'இம்பீரியல் மெய்ல்' என்னும் ஓர் பத்திரிகையை நடத்திவருகிருர்களாம். அவர்களில் மூத்த குமாரனுக்கு வயது பன்னிரண்டு, இரண்டாங் குமாரனுக்கு பத்து, மூன்ருங் குமாரனுக்கு ஏழு. "விளையும் பயிர் முளையிலே தெரியுமல்லவா?"

CHILDBIRTH.

## பிரசவ நூல்.

(தொடர்ச்சி.)

### பிரசவத்துக்கான ஆயத்தங்கள்.

ஏறக்குறைய நாற்பது வாரமானதும், பிரசவம் உண்டாகுமென்று எதிர்பார்த்திருக்கலாம். அப்பொழுது தேவையானவைகளையெல்லாம் ஏற்கனவே சேகரித்துவைத்திருக்கவேண்டியது. ஒரு தேறின மருத்துவச்சி அகப்படுவாளாகில், அவளை அமர்த்திக்கொள்ளவேண்டியது. அப்படிக் கூடாத பட்சத்தில் ஒரு சாதாரண மருத்துவச்சியை அமர்த்திக்கொள்ளவேண்டியது. கூப்பிட்ட சமயத்தில் அவள் உடனே வரவேண்டியதென்று அவளுக்குச் சொல்வதுமல்லாமல், அவள் வகுப்பார் அடிக்கடி புத்தியீனமாய்ச் செய்யும் சில கொடிய துர்வழக்கங்களை அவள் அகற்றவேண்டுமென்றும் எச்சரிக்கவேண்டியது. அவள் அதிக சுத்தமாயிருக்கவேண்டுமென்றும் வற்புறுத்தவேண்டியது. வீடும் அவ்வாறே சுத்தமாய் இருக்கவேண்டியது அவசியம். அதை ஏற்கனவே முழுவதும் சுத்தமாக்கி வைத்திருக்கவேண்டும்; ஆனால் கர்ப்ப ஸ்திரீ அதிகமாய் வேலைசெய்யக்கூடாது.

**சுத்த ஆகாயம் முதலியவைகளின் அவசியம்.**— ஆகாயம் நமக்கு அவசியம் என்பது ஒவ்வொருவரும் அறிந்த விஷயம்; ஆனால் எந்த ஆகாயமாயிருந்தாலும் சரிதான் என்று அநேகர் எண்ணி, அதை நல்ல ஆகாயமாக்கச் சற்றும் பிரயாசப்படாமல் இருக்கிறார்கள். சென்ற நூற்றாண்டில் கல்கத்தா நகரில் ஒரு இராத்திரியில் இரண்டு சிறு பலகணிகள்மாத்திரம் இருந்த இருட்டறை என்னப்பட்ட ஒரு சிறு காவற்கிடங்கில் நூற்று நாற்பத்தாறு பேர் அடைக்கப்பட்டார்கள். மறுநாள் காலையில் கதவைத் திறந்து பார்த்தபோது, இருபத்துமூன்றுபேர்மாத்திரம் தள்ளாடிக்கொண்டு நடக்கக் கூடியவர்களாயிருந்தார்கள்; மீதிப்பேர் எல்லாம் மரித்துப்போனார்கள். கெட்ட ஆகாயமே அவர்களைக் கொன்றது.

கல்கத்தா நகரில் பிரசவத்தால் மரிக்கும் கிறிஸ்தவ ஸ்திரீகளைப்பார்க்கிலும் மகமதிய ஸ்திரீகள் ஒருபங்கு அதிகமாய் இருக்கிறார்கள்; கல்கத்தாவில் பிறக்கும் மகமதிய பிள்ளைகளில் பாதிப்பேர் பிறந்து ஒரு வருஷமாகுமுன் மரிக்கிறார்கள்; மற்ற பாதிப்பேர் பிறந்து பதினைந்து நாளாகுமுன் விசேஷமாய் இசிவு ஜன்னியினால் மரிக்கிறார்கள். பிரசவ காலத்தில் சகல திறப்புகளும் வெகு பத்திரமாய் மூடியிருக்கும் சிறு அறைகளில் ஸ்திரீகள் அடைபட்டிருக்கிறார்கள்; அங்கே கரி நெருப்பை ஒரு சட்டியில் வைத்து விடாமல் எரிப்பதுமன்றி, உறவினப் பெண்டுகளும் ஸ்திரீ சிநேகிதிகளும் கூட்டமாய்ச் சூழ்ந்திருக்கிறார்கள். தாயும் பிள்ளையும் கெட்ட ஆகாயமாகிய நஞ்சை உட்கொள்ளுகிறார்கள். சுகமாய்ப் பிரசவிக்க விரும்பினால், இந்தத் தப்பிதங்களை எல்லாம் அகற்றவேண்டியது.

பிரசவத்தால் ஒரு ஸ்திரீயின் பலத்தை வெகு எளிதில் அறியலாம். (பிரசவம் ஸ்திரீயின் பலத்துக்கு ஒரு மகா பெரிய பாரமாய் இருக்கிறது.) ஆகையால் அவளைப் பலப்படுத்துவதற்கான சகல வழிகளையும் தேடவேண்டியது. இவற்றில் முந்தி அவசியமாய் வேண்டியது ஏராளமான சுத்த ஆகாயமே. அநேக வீடுகள் சிறிதாயிருப்பதால், அங்கே நல்ல அறைகள் இவையென்று தெரிந்துகொள்வது இலேசல்ல; கூடுமானால் பிரசவிக்கும் அறை ஈரமில்லாமலிருப்பதோடுங் கூட அதிக சுத்த ஆகாயமும் வெளிச்சமும் உள்ளதாய் இருக்கவேண்டும். ஆனால் (அந்த அறையில்) காற்று வீசும் இடத்திலும், வெளிச்சத்துக்கு எதிராகவும் ஸ்திரீயின் படுக்கையை வைக்கக்கூடாது. இவைகள் (அதிகமாய்ப் படுக்கையின்மேல் படாதபடி) தட்டிகளால் மறைக்கலாம்.

(இன்னும் வரும்.)

# மாதர் மித்திரி.

புத். ௨. ௧௮௮௯ ௵ - மார்ச்சு ௴. இல. ௯.

NOTE.

## பத்திராதிபர் குறிப்பு.

A GREAT NEED.

### ஓர் பெருங் குறைவு.

இத்தேசத்தில் கற்றறிந்த புருஷருக்குக் கற்றறிந்த மனைவிகள் இல்லாதிருப்பது நாம் காணும் அநேக பெருங் குறைவுகளில் ஒன்று. ஸ்திரீகளில் பெரும்பான்மையோர் தாங்கள் இப்படி கற்றறிந்திருக்கவேண்டியதின் அவசியத்தைக் கண்டுணராதிருப்பது மெத்தவும் விசனமான விஷயமே. ஆயினும், அறிவினால் விளையும் கெடுதிகள் அநேகமென்றும், ஒரு ஸ்திரீ வாசிக்கப் படித்தால் அவள் புருஷனை இழந்து விதவையாக நேரிடுமென்றும் ஸ்திரீகளுக்குத் துர்ப்போதனை போதிக்கப்படும்பொழுது, அவர்கள் கல்வியின்மேல் நாட்டமுடையவர்களாயிருப்பது எப்படி? இந்தத் துர்ப்போதனைகளாலேயே அநேகர் கல்விகற்காமல், அறியாமையென்னும் சாகரத்தில் அமிழ்ந்தியிருக்கிறார்கள். ஆனால் சிலர் இப்போதனைகள் எல்லாம் துர்ப்போதனைகள் என்று தெளிவாய்க் கண்டு, தாங்கள் பிறருக்குப் பயன்படும்படியான நிலைமையிலிருக்க மிகவும் ஆசிக்கிறார்கள். இவர்கள் ஆசிப்பதை அடைய விரும்பினால், புருஷர் இவர்களுக்குப் போதுமான தைரியஞ்சொல்லி, உற்சாகப்படுத்திவரவேண்டியது அவசியம். புருஷர்கள் நன்றாய்ப் படித்திருக்கக்கொள்ள, மனைவிகள் நெடுங்கணக்கின் எழுத்துக்கள்முதலாய்த் தெரியாத நிர்மூடராயிருக்கும் குடும்பங்கள் எவ்வளவு ஏராளமாய் இருக்கின்றன. இவ்வகை மனைவிகளில் அநேகர் நன்றாய்ப் படிக்கக்கூடிய பாலியப் பெண்களாயும், புருஷரோ பட்டம் பெற்ற கலாதிபதிகளாயும் இருக்கிறார்கள்; மேலும், இப்புருஷர் தாங்கள் பட்டம் வாங்கும் சமயத்தில் தங்கள் மனைவிகளைப் படிப்பிக்கச் செய்வதாக பண்டிதர் பலர் கூடிய பெருஞ் சபைக்குமுன் பகிரங்கமாய்ப் பிரதிக்கினை பண்ணியிருக்கிறார்கள். தாங்கள் பண்ணின பிரதிக்கினையின்படியே செய்யப் புகுந்தால், அநேக

வீடுகளில் நாம் இப்போது எடுத்துப் பிரலாபிக்கும் இந்தப் பெருங்குறை நீங்கி, நல்ல மாறுதல் உண்டாகும்.

பெண்கல்வி விஷயத்தில் பெரும் சிரத்தை எடுத்து, இந்தியாவுக்கு வந்துபோன ஒரு அங்கிலேய பெண்மகள் கற்றறிந்த மனைவிகள் இருப்பதால் உண்டாகும் கணக்கில்லாத பலன்களை அடியில் வருமாறு கூறுகின்றாள்:—

"புருஷருக்குப் படிப்பின்மேல் பிரியமிருப்பதுபோலவே படித்தெடுத்தப் பெண்களுக்கும் கல்வியின்மேல் அதிக விருப்பமிருக்கும். இவ்வாறு பெண்கள் கல்வி கற்பதால், புருஷருக்கும் மனைவிகளுக்கும் உள்ள மனோநிலையின் பிளப்பு ஒருவாறு மூடப்படுகிறது. கலாசாலையில் படித்திருக்கும் புருஷனுக்குச் சமதையாய் மனைவியானவள் படித்திராவிட்டாலும், அவன் ஆலோசிக்கும் அல்லது எடுத்துப்பேசும் எந்த விஷயத்தையும் அறிந்துணரக்கூடிய சக்தியுடையவளாயிருக்கிறாள். புருஷன் ஒருவழி போனால் அவள் வேறுவழி போகாமல், அதே வழியில் அவனைப் பின்தொடர்ந்துவருவாள்; வீட்டுக் காரியங்களிலும் மற்ற விஷயங்களிலும் அவனுக்குத் தகுந்த நியாயத்தோடே நல்லது என்று காணப்படுவது இவளுக்கும் நல்லதாகவே இருக்கும்; ஏனெனில் இவள் புருஷனுடைய நியாயத்தைக் கிரகித்துணரும் புத்திசாலியாயிருக்கிறாள். இவளே புருஷனுக்குத் தோழி அல்லது துணைவி என்று அழைக்கப்படத் தகுதியானவள்; பிள்ளைகளை வளர்ப்பதில் இவளுக்கு இணையொத்தவளை எங்கும் காண்பது அரிது. 'முற்காலத்தில் படியாத மனைவிகள் ஏராளமாய் இருந்தபோது, அவர்கள் புருஷர் சந்தோஷமாய்க் காலந்தள்ளி வரவில்லையா? இப்பொழுதுமாத்திரம் மனைவிகள் கல்விகற்கவேண்டுமென்று வற்புறுத்தி வாதாடுவதேன்' என்று சிலர் ஒருவேளை ஆட்சேபிக்கலாம். இக்காலத்தில் புருஷர் கற்றிருப்பதுபோல முற்காலத்தில் கற்றிருந்ததில்லை; கல்வியில் கணக்கில்லாத் தேர்ச்சிகள் உண்டாயிருக்கும் இக்காலத்தில் புருஷர்மாத்திரம் தங்களை விர்த்தித்துக்கொள்ளப் பிரயாசப்படும்பொழுது, பெண்களும் விர்த்தியடைந்துவர விரும்பவேண்டியதில்லையா? (முற்காலத்தில் இல்லாத சேலை ஒன்று இக்காலத்தில் சொற்ப விலைக்கு அகப்படக்கூடியதானால், 'இது முற்காலத்துச் சேலையல்லவே, இக்காலத்தில் உண்டான சேலையல்லவா' என்று கணவன் எண்ணிக்கொண்டு, தன் மனைவிக்கு வாங்கிக் கொடாமல் இருப்பானோ? இல்லை, இல்லை. என்ன பாடுபட்டாலும் அதை வாங்கித் தன் மனைவிக்குக் கொடுப்பான். கல்வி விஷயத்தில் மாத்திரம் அப்படிச் செய்யாமல் இருப்பது என்ன? பெண்கள் எளிதாய்ப் படிப்பதற்கென்று எண்ணிறந்த வழிவகைகள் உண்டாயிருக்கும் இக்காலத்தில் கற்றுக்கொடுக்காமல் விடுவது அநீதமல்லவோ?) தற்கால நிலைமையிலும் இன்னும்



அதிக மேலான நிலைமைக்கு இந்துக்கள் வர விரும்பினால், பெண்கல்வி எங்கும் விர்த்திக்கவேண்டியது அவசியம்; அதைப் புருஷர் தங்களாலானமட்டும் அபிவிர்த்திக்கவேண்டியது அவசியத்திலும் அவசியம். தற்காலத்தில் நன்றாய்க் கல்வியில் தேர்ந்த சில இந்து ஸ்திரீகள் இந்தியாவுக்குச் செய்யும் நன்மைகள் அதிகமாயிருக்குமானால், தேசமுழுவதும் கற்றறிந்த பெண்கள் இருந்தால் தேசத்துக்கு எவ்வளவு நன்மைகள் உண்டாகும் என்று படித்தெடுத்த புருஷரே நிதானித்துக்கொள்ளட்டும்."

## FEEDING THE SICK.

## நோயாளிகளைப் போஷித்தல்.

டவ்ரின் பெருமாட்டியார் ஸ்தாபித்த ஸ்திரீ வைத்திய நிதி சங்கத்தார் பின்வரும் விதிகளைப் பொதுஜன நன்மைக்கென்று பிரசுரித்திருக்கிறார்கள்:—

"௧. நோயாளியின் உயிரைக் காய்ச்சல் தகனித்துக்கொண்டிருப்பதாலும், ஆகாரம் கொடாமல் மருந்து கொடுப்பதால் பயன் ஒன்றுமில்லையாகையாலும், உனக்கு அவசியமானதுபோலவே நோயாளிக்கும் ஆகாரம் அவசியம் என்பதை அறிந்துகொள்.

"௨. சாதாரணமாய் நோயாளி ஆகாரத்தின்மேல் பிரியமற்றவளாய் இருப்பதால், அவளுக்குச் சமையல் வாசனை வெறுப்பாயிருக்கும்; ஆகையால் அவள் பார்க்க அல்லது முகரக்கூடாத வேறொரு அறையில் எப்போதும் சமையல்செய்.

"௩. புசிக்க என்ன வேணும் என்று நோயாளியைக் கேட்காமல், கஞ்சிபோன்ற இலேசான உணவைச் செய்து, அத்துடன் கொஞ்சம் பாலாவது சர்க்கரையாவது உப்பாவது சேர்த்து, அதை ஒரு சுத்தமான பாத்திரத்தில் அவளுக்குக் கொண்டுவந்து, ஆறுதலும் அன்புமான வார்த்தைகளால் அவள் அதை உட்கொள்ளும்படி செய்.

"௪. இரண்டு மணிநேரம் கழித்து அவளுக்கு மறுபடியும் புதிதாய் ஆகாரம் செய்துகொடு.

"௫. தனது வாயிலுள்ள அரோசிகத்தினிமித்தம் அவள் சாப்பிடக்கூடாவிட்டால், எலுமிச்சஞ் சாற்றின் சில துளிகளால் அவள் நாவைச் சுத்தமாக்கு; அப்போது அவள் புசிக்கக்கூடும்.

"௬. நோயாளி எப்படியிருந்தபோதிலும், காலையிலும் மாலையிலும் அவளுக்கு ஒரு கோப்பை சுத்த பால் கொடுத்துவருவது நல்லது.

"௭. காய்ச்சல் இருக்கும்போது, குளிர்ந்த சுத்த ஜலத்தை அதிகமாய்க் கொடு; உன்னால் கூடுமானால் கொஞ்சம் தேய்நீர் கொடு."



## THE PHARISEE AND THE PUBLICAN.
## பரிசேயனும் ஆயக்காரனும்.

தங்களை நீதிமான்களென்று நம்பி, மற்றவர்களை அற்பமாயெண்ணின சிலரைக்குறித்து இயேசு ஒரு உவமையைச் சொன்னார். அது தேவாலயத்துக்கு ஜெபம்பண்ணப்போன இரண்டு மனிதரைக் குறித்த உவமை. இவ்விருவரில் ஒருவன் பரிசேயன், மற்றவன் வரிவாங்கும் ஆயக்காரன். பரிசேயர் என்னப்படுவோர் யூதரில் ஒரு வகுப்பார்; இவர்கள் புறம்பான நியம நிஷ்டைகளை அனுசரிப்பதில் மிகுந்த வைராக்கியமுள்ளவர்கள்; மேலும், மற்ற யூதர்களைப்பார்க்கிலும் தங்களை நீதிமான்களென்று எண்ணிக்கொண்ட தற்பெருமைக்காரர். தேவாலயத்துக்கு வந்த பரிசேயன் தன்னை மற்றவர்கள் பார்க்கவும் கேட்கவும் கூடியதான ஒரு இடத்தைத் தெரிந்துகொண்டு, “தேவனே, நான் மற்ற மனுஷரைப்போலவும், இதோ எனக்கு எதிரில் நிற்கும் ஆயக்காரனைப் போலவும்பொல்லாத பாவியாய் இராததற்காக உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். நான் எப்பொழுதும் ஜெபம்பண்ணி, வாரத்தில் இரண்டுதரம் உபவாசிக்கிறேன். என் சம்பாத்தியத்திலெல்லாம் ஒரு பாகத்தைத் தேவாலயத்தில் இருக்கும் ஆசாரியருக்குச் செலுத்திவருகிறேன்” என்று உரத்த சத்தமாய் ஜெபித்தான். மேலும், மற்றவர்கள் இதைக் கேட்டு, தன்னை நல்லவனென்று எண்ணும்படி இவ்வளவு சத்தமாய் ஜெபித்தான்.

ஆனால் அந்த ஆயக்காரன் தேவன்மாத்திரம் தன் ஜெபத்தைக் கேட்க விரும்பினானேயொழிய மற்றவர்கள் கேட்கவேண்டுமென்று விரும்பினதில்லை. ஆகையால் அவன் தனியே ஒரு மறைவான இடத்துக்குப் போய், தன் கண்களை வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல் தலைகவிழ்ந்து நின்று, தான் செய்த எல்லாப் பாவங்களுக்கும் மிகுந்த விசாரமுள்ளவனாய் “தேவனே, பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்” என்றான். இயேசு இந்த உவமையைக் கேட்டுக்கொண்டிருந்த ஜனங்களை நோக்கி “பரிசேயனைப்பார்க்கிலும் ஆயக்காரன்மேலேயே தேவன் அதிகப் பிரியமானார்” என்றார். ஏனெனில் பரிசேயன் தன்னைக்குறித்து மிகவும் மேலாக எண்ணின பெருமைக்காரனாய் இருந்தான்; ஆயக்காரனோ தன் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, அவைகளை அறிக்கைபண்ணி, மன்னிப்பு கேட்டான். ஆகையால் “மற்ற மனிதரைப்பார்க்கிலும் தன்னை நீதிமானென்று எண்ணிக்கொள்ளும் ஒவ்வொரு பெருமைக்காரனும் தாழ்த்தப்பட்டு, தன் பாவங்களைப் பணிவாய் அறிக்கையிடும் தாழ்மையான மனிதனே உயர்த்தப்படுவான்” என்று இயேசு புத்திசொன்னார்.

இந்த உவமையில் சொல்லப்பட்டிருக்கும் ஆயக்காரனும் பரிசேயனும் தேவனுக்கு முன்பாகப் பாவிகளாகவே இருந்தார்கள். எப்படியெனில் பரிசேயர் தங்கள் புறம்பான கிரியைகளினிமித்தம் பெருமை நிறைந்தவர்களாய் இருந்ததுபோல, ஆயக்காரரும் அயோக்கியரும் அநியாயமாய் வரிவாங்கும் பொருளாசைக்காரருமாய் இருந்தார்கள். இவர்கள் இருவர்பேரிலும் பாவக்குஷ்டம் இருந்தது. ஆனால் ஆயக்காரன் தன்னில் இருந்த பாவத்தை அறிந்து அறிக்கையிட்டான்; பரிசேயனோ தன் அயலானிடம் இருந்த பாவத்தைத் தெளிவாய்ப் பார்த்தும், தன்னிடத்தில் மரண புண்ணைப்போலிருந்த தற்புகழ்ச்சி என்னும் பெருமையைக் காணாதவனாயிருந்தான். பிறர் பாவத்தோடு நமது பாவத்தை ஒத்துப்பார்த்து, நம்மை மேலானவர்களென்று எண்ணிக்கொள்வது மகா மோசமான காரியம். இந்தப் பரிசேயனும் அந்த மோசமான நிலைமையிலே இருந்தான். தேவனுடைய நியாயப்பிரமாணமே நமது சட்டமாயிருக்கவேண்டியது. பிறரைப்பார்க்கிலும் நாம் எப்படியிருக்கிறோம் என்பதைக்கொண்டல்ல, தேவன் நம்மை எப்படியிருக்க விரும்புகிறார் என்பதைக்கொண்டே நாம் கடைசியில் நியாயந்தீர்க்கப்படுவோம். தேவனுக்கு முன்பாக நாமெல்லாரும் பாவிகளாயிருந்து, மன்னிப்பைத் தேடுகிறவர்களாயிருக்கிறோம். இந்த மன்னிப்பைக் கிறிஸ்து தமது பாடுகளாலும் மரணத்தாலும் சம்பாதித்து, ஆயக்காரனைப்போல் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, அவருடைய நாமத்தில் விசுவாசிக்கிற யாவருக்கும் தாராளமாய்க் கொடுக்கிறார்.



160940

HYMN.

## ஞான கீதம்.

NOTHING BUT THE BLOOD OF JESUS.

### இயேசு ரத்தம் ஒன்றுதானே.

ஏதென் மாசை நீக்கிடும்?
இயேசு ரத்தம் ஒன்றுதானே;
ஏது சுகமாக்கிடும்?
இயேசு ரத்தம் ஒன்றுதானே.

ஆ, அருமை ரத்தம்
ஆக்குதென்னைச் சுத்தம்;
மற்றெல்லாம் அபத்தம்,
இயேசு ரத்தமே நன்றாமே.

2. என்னைச் சுத்திகரிக்கும்
இயேசு ரத்தம் ஒன்றுதானே;
மன்னிப்பு எனக்கு அளிக்கும்
இயேசு ரத்தம் ஒன்றுதானே.
ஆ, அருமை ரத்தம்—மு.

3. ஏதும் பாவம் போக்குமோ?
இயேசு ரத்தம் ஒன்றுதானே;
என் கிரியை செல்லுமோ?
இயேசு ரத்தம் ஒன்றுதானே.
ஆ, அருமை ரத்தம்—மு.

4. என் நம்பிக்கை ஆறுதல்
இயேசு ரத்தம் ஒன்றுதானே;
என்னை நீதியாக்குதல்
இயேசு ரத்தம் ஒன்றுதானே.
ஆ, அருமை ரத்தம்—மு.

5. இதனாலே நான் வெல்லுவேன,
இயேசு ரத்தம் ஒன்றினாலே;
மோட்ச வீடு செல்லுவேன்,
இயேசு ரத்தம் ஒன்றினாலே.
ஆ, அருமை ரத்தம்—மு.


THE TAJ MAHAL.

## தாஜ் மஹல்.

தாஜ் மஹல் என்னப்படுவது மொகலாய ராஜ்யத்தில் மாட்சிமை மிகுந்த மன்னவனாகிய ஷாஜிஹான் என்பவன் தனது அன்பிற் சிறந்த அழகிய மனைவியின் ஞாபகத்துக்கென்று அகராபட்டணத்தில் யமுனையாற்றங்கரையில் அவளை அடக்கஞ்செய்த இடத்தில் வெகு திரவியம் செலவுசெய்து கட்டியிருக்கும் ஓர் அற்புதமான கோரி. இவ்வருமை மனையாட்டியின் பெயர் மும்டஸ் மஹல்; இதற்கு 'அரண்மனை பெண்டிரில் அதிக உயர்வு பெற்றவள்' என்பது அர்த்தம். இவள் முக அழகில் எப்படியோ அப்படியே குண அழகிலும் சிறந்தவள். தனது புருஷனுக்குத் தக்க சமயத்தில் மந்திரியைப்போல் புத்தி சொல்லிவந்த புண்ணியவதி என்று யாவரும் இவளைப் புகழ்ந்து கொண்டாடினார்கள். இப்படி ஷாஜிஹான் அரசனுக்கு அற்புத அணிகலமாயிருந்த இவள் தேகஉபாதியுற்று மரித்தாள். மரிக்கும் சமயத்தில் தனது உயிர்த்துணைவனிடம் இரண்டு வரம் வேண்டிக்கொண்டாள். அவற்றுள் முந்தினது அவன் மறுவிவாகம் செய்யாமல் இருக்கவேண்டும் என்பது; பிந்தினது தன் பேர் அழியாதிருக்கத் தன்னை அடக்கஞ்செய்த இடத்தில் ஒரு கோரி கட்டவேண்டும் என்பது. தன் நாயகியின் விருப்பப்படியே ஷாஜிஹான் மறுவிவாகம் செய்யாமல், தனக்கு அவள்மேல் இருந்த ஆழ்ந்த அன்பை அறிந்தோருக்கெல்லாம் ஆச்சரியமான விதமாய்க் காட்டும் அறிகுறியாகிய இந்த அற்புதக் கோரியை உடனே கட்ட ஆரம்பித்து, அதை ஏறக்குறைய ௨௰௨-ம் வருஷம் முடித்தான்.

இந்தக் கோரியானது ஆகாயமளாவிய அநேக விருட்சங்களுள்ள நாலாயிரம் அடி சதுரமான அழகிய தோட்டத்தின் நடுவே இருபக்கத்திலும் நூற்றுமுப்பத்தேழு அடி உயரமுள்ள உன்னத சிகரங்களுள்ளதாய் நிற்கின்றது. கோரியின் மத்தியில் சக்கரவர்த்தினி அடக்கம்செய்யப்பட்டிருக்கும் இடம் வெண்சலவைக் கற்களால் செய்யப்பட்டு, பூக்கள்போன்ற விலையுயர்ந்த மணிக்கற்களால் பார்ப்போர் கண்ணைக் கவரத்தக்க விதமாய்ச் சிங்காரிக்கப்பட்டிருக்கின்றது. ஒரு ரூபாய் அளவான சிறிய பூக்கற்கள் ஒவ்வொன்றிலும் வெவ்வேறுவிதமான இருபத்துமூன்று சிறந்த மணிகளைக் காணலாம் என்றும், பெரும் பூக்கற்களிலோ முன்னூறு மணிகளைக் காணலாம் என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது.

சுமார் இருபது வருஷகாலமாய் இந்தச் சிற்பத்தைக் கட்டிமுடிப்பதற்கென்று இருபதினாயிரம் கைதேர்ந்த வேலைக்காரர் இடைவிடாது வேலைசெய்துவந்தனர். இதற்குச் செலவான தொகை "எழுபத்தேழு லட்சத்து நாற்பத்தெண்ணாயிரத்து இருபத்தாறு ரூபாய்." நாலுதேசங்களிலிருந்து அகராநகருக்கு யாத்திரை போகும் யாவரும் இந்தியாவில் வேறெங்கும் காணக்கிடையாத இந்த அற்புதமான கோரியைக் கண்டு, ஆனந்தித்துத் திரும்புகிறார்கள். மறுபக்கத்திலுள்ள படம் ஆற்றங்கரையில் தாஜ் மஹல் தோன்றும் அழகிய காட்சியைக் காட்டுகிறது.



THE TAJ MAHAL.

தாஜ் மஹல்.

GOOD WORDS FOR WOMEN.

## நங்கையர்க்கு நல்லுரை.

### 9. நகை.

நகை என்ற உடனே எனக்கு நகைப்பு வருகிறது. இந்து ஸ்திரீகளில் பெரும்பாலார் என் நகைப்புக்காக நகைப்பார்களேயன்றி, நகைக்காக நகைக்கார்கள். நமது தேசப்பெண்களுக்கு நகையென்றால் மெத்தப் பிரியம். சில பெண்களுக்கு நகையின்மேல் நாட்டமிராதே போனால், அவர்களுடைய மூடத்தாய்மாரும், தங்கை தமக்கையரும் அவர்களைச் சித்திரவதைசெய்து, நகை தரித்துக் கொள்ளக் கட்டாயப்படுத்துவதுண்டு. இது எவ்வளவு பெரிய அநியாயம்.

மானம் மரியாதைக்கு வஸ்திரம் அவசியம். ஆபரணாதிகளோ என்னத்துக்கு என்று தெரியவில்லை. அவைகள் அழகுக்கு அவசியம் என்று சொல்லுவார்கள். நகைகளால் அழகுண்டாகும் என்பது அபத்தம். யதார்த்தத்தில் அழகுள்ளவள் தரித்திருக்கும் நகைகள் அவள் அழகை மறைக்கின்றன. அழகில்லாள் பூண்டு கொள்ளும் ஆபரணங்களோ அவளுடைய அவலட்சணத்தை அதிகமாக்குமேயொழிய வேறல்ல. நகையலங்காரத்தைக் குறித்து ஒரு சிறந்த வித்வான் சொல்வதைக் கேளுங்கள்:—

“நியாயாதிபதிகள் குற்றவாளிகளுக்குக் கால்விலங்குமட்டும் போடுகிறார்கள். ஸ்திரீகளோவென்றால் உலக்கைக்குப் பூண்கட்டினதுபோல, பாடகம், பாதசரம், தண்டை, சிலம்பு, கொலுசு முதலிய பல கால் விலங்குகளையும், காப்பு, தோடா, வளையல், கங்கணம் என்று பல கை விலங்குகளையும், முத்துமாலை, சந்திரகாரம், கண்டசரம் முதலிய பல கழுத்து விலங்குகளையும், தலைசிங்காரம் என்று பெயர் பெற்ற தலைவிலங்குகளையும், ஒட்டியாணமென்று சொல்லப்பட்ட இடுப்பு விலங்குகளையும், மோதிரங்களாகிய விரல் விலங்குகளையும் தரித்துக்கொள்ளுகிறார்கள். காதுகளிலும் மூக்குகளிலும் சல்லடைக்கண்போல பல துவாரங்களைச் செய்து, பல நகைகளை மாட்டுகிறார்கள். அஞ்ஞான வடிவமாகிய ஸ்திரீகளுடைய தேகங்களையும் ஞானோபதேசம் நுழையாத அவர்களுடைய காதுகளையும் பல விலங்குகளிட்டுச் சிட்சிப்பது கிரமந்தான். புஸ்தகங்களைப் பாராத கண்களையும், வாசிக்காத வாயையும் விலங்கிட்டுச் சிட்சியாமல் வெறுமையாய் விட்டுவிட்ட காரணம் தெரியவில்லை” என்கிறார்.

நகை தரிப்பதால் பலவித நஷ்டம் உண்டாகிறதென்பது திண்ணம். நகை தரிப்பதால் பல முறையும் மான நஷ்டம். பொன்னாபரணமாகிய மண்ணாபரணங்களைப் போட்டுக்கொண்டிருக்கும் ஸ்திரீகள் திருடர் முதலிய அயோக்கியரின் அவாவுக்குத் தங்களை ஆளாக்குகிறார்கள்! ஆபரணங்களினிமித்தம் கள்ளரால் பிடிபட்ட பெண்கள் எத்தனை, களவாணிகளால் அடிபட்ட பெண்கள் எத்தனை. உதைபட்ட பெண்கள் எத்தனை, சிதைபட்ட பெண்கள் எத்தனை. காதறுந்தோர் எத்தனை, கை முறிந்தோர் எத்தனை. மயிரிழந்தோர் எத்தனை, உயிரிழந்தோர் எத்தனை. பொன்னழகைப் பார்க்க ஆசைப்பட்டுக் கண்மணிகளாகிய புத்திரர் புத்திரிகளை அகால மரணத்துக்கு இரையாக்கினோர் எத்தனை. இந்த நஷ்டங்கள் அற்ப சொற்பமா?



பொன் ஆபரணம் பூணுவதால் உண்டாகும் பொருள் நஷ்டம் கொஞ்சமல்ல. பணத்தை வட்டிக்கு விட்டால், வியாபாரத்தில் போட்டால், அது பெருகும். ஆபரணாதிகளில் போட்டிருக்கும் பணம் வட்டி கொடாமல் போகிறதோடு, தேய்வினாலும் குறைந்துபோகிறதென்பது நிச்சயம். தற்காலம் இந்து ஸ்திரீகள் அணிந்திருக்கும் நகைகள் எம்மாத்திரம் என்று மதிப்பிட்டுப் பார்த்ததில் ஏறத்தாழ இருநூற்றெண்பதுகோடி ரூபாய்போல் ஆகிறதென்று கண்டிருக்கிறார்கள். நூற்றுக்குப் பன்னிரண்டு வீதம், இத்தொகைக்கு வட்டி வாங்கினால், வருஷத்தில் முப்பத்துநாலுகோடி ரூபாயாம். இது எவ்வளவு பெரிய தொகை. இதை இழப்பது எவ்வளவு பெரிய நஷ்டம். பணத்தை வியாபார விஷயங்களிலும், தொழில் துறைகளிலும் உபயோகித்தால், அதனால் தேசத்துக்கு எத்தனை நலம், தொழிலுக்கு எத்தனை விருத்தி, ஜனங்களுக்கு எத்தனை பிழைப்பு. மேலும், பல தேசங்களிலுமிருந்து இங்கே வரும் பொன் நாணயங்களையெல்லாம் நமது தேசத்தார் அழித்து ஆபரணமாக்கிவிடுவதினால் அல்லவோ பொன் விலை அதிகரித்து மாற்று விதம் உயர்ந்துவிட்டது. இதினால்தானே பத்து ரூபாய் பொருளை இப்போது பதினைந்து ரூபாய் என்கிறார்கள்.

பலவித நஷ்டங்களுக்கும் ஏதுவாகிய பொன் ஆபரணங்களை நாம் அணிந்துகொள்வதை அகற்றி, ஆத்ம அலங்காரமாகிய ஞானாபரணங்களைத் தரித்துக்கொள்ள முயல்வோமாக. கற்புக்கு மிஞ்சின காப்பொன்று உண்டா? ஞானத்துக்கு மிஞ்சின ராக்கடி உண்டா? அன்புக்கு மிஞ்சின அட்டிகை உண்டா? சாந்தத்துக்கு மிஞ்சின சந்திரகாரம் உண்டா? சுறுசுறுப்புக்கு மேலான தோடா உண்டா? பொறுமைக்கு மேலான பொன் சரப்பளி உண்டா? இவைகளே பெண்ணழகு. இந்தப் பெண்ணழகுக்கு மேற்பட்டதா பொன்னழகு? இது கிடைக்கப் பணம் வேண்டியதில்லை. தட்டான் தயவுக்கும் தட்டாத்தி சொல்லுக்கும் காத்திருக்க வேண்டியதில்லை. இந்தச் சிறந்த ஞானாபரணங்களுடன் கல்வியென்னும் ஆபரணமும் சேர்ந்திருக்குமேயானால் மிகவும் நல்லதே. ஏனெனில் கல்வி கற்காத பெண்கள் தங்களை அழகுள்ளவர்களாக்கும்படி எவ்வளவோ விலையுயர்ந்த நவரத்தினங்கள் இழைத்த நகைகளைப் பூண்டாலும், அவைகள் மரப்பொம்மைக்குப் பூட்டப்பட்ட நகைகள்போல் இருக்கின்றனவேயன்றி வேறல்ல. கல்வி கற்றவர்களுக்கோ வெளியாபரணங்களெல்லாம் வீணாபரணங்களாய்த் தோன்றுவதால், அவர்களே அவைகளை வெறுத்துத் தள்ளிவிடுகிறார்கள்.

இதை வாசிக்கும் நங்காய், நீ ஞானாபரணங்கள் பூண்ட நல்லாளாயிருக்க நாடுகிறாயோ, அல்லது வீணாபரணங்கள் பூண்ட வெங்காத்தாளாய் இருக்க விரும்புகிறாயோ? கருணாநிதியாகிய கடவுள் நமக்குத் தேவையான சகல ஞானாபரணங்களையும் அருள்வதற்கு எந்நேரமும் காத்திருக்கிறார் என்பதை நன்றாய் அறிந்து, அவர் திருவடி பணிந்து சேவிப்பாயாகில், இவ்வாபரணங்கள் உனக்குத் திரளாய்க் கிடைக்கும்.

மி. மி.



CHILDREN'S CORNER.

## சிறுவர்க்கான கதை.

THE NEGLIGENT SERVANT.

### அசமந்த வேலைக்காரி.

கல்விப் பொருளிலும் செல்வப் பொருளிலும் களஞ்சியமெனப் பேரெடுத்த ஒரு சீமாட்டி இருந்தாள். இவளிடத்தில் வெகுகாலம் உண்மையோடும் சுறுசுறுப்போடும் ஒரு வேலைக்காரன் ஊழியஞ்செய்துவந்தான். இவனுக்குப் பிறந்த பிள்ளைகளெல்லாம் சிறுவயதிலேயே ஒன்றின்பின் ஒன்றாய் இறந்துபோய், கடைசியில் சுந்தரி என்ற ஒரே ஒரு புத்திரிமாத்திரம் மீந்து இருந்தாள். ஆணை அடித்து வளர், பெண்ணைப் போற்றி வளர் என்பதைத் தகப்பன் எழுத்தின்படியே கைக்கொண்டு, தன் மகளைச் சீராட்டி பாராட்டி வெகு அருமையாய் வளர்த்துவந்தான். இதுவுமன்றி, கல்வி கற்க பள்ளிக்குப் போனால் கற்றோர் யாவரும் அடிக்கநேரிடுமே என்று அஞ்சி, வீட்டிலேயே வாசிக்கமாத்திரம் கற்றுக்கொடுத்தான். இதனால் பெண்ணுக்கு எழுத்தென்றால் எட்டியும் படிப்பென்றால் கசப்புமாகிவிட்டது.

கடைசியாக வேலைக்காரன் தள்ளாத கிழவனாகி, சாகச் சமீபமாயிருந்த சமயத்தில் தனது உத்தம எசமாட்டியைக் கூப்பிட்டு "பெற்ற தாயிலும் உற்ற தாயைப்போல் என்னைப் பார்த்துவந்த அன்னையே, இதோ நான் சாகப்போகிறேன். என் மனைவி மரித்துப்போனது உங்களுக்குத் தெரியாத காரியமல்ல. என் ஒரே புத்திரியை இப்போது உங்கள் கையிலே ஒப்புவிக்கிறேன். அவளை உங்கள் பிள்ளையைப்போல் பாவித்து முன்னுக்குக் கொண்டுவருவது உங்கள் கடமை" என்று சொல்லி, தன் மகளைச் சீமாட்டி கையில் ஒப்புவித்து மரித்தான்.

நற்குணம் மிகுந்த அந்தச் சீமாட்டியும் தான் கொடுத்த வார்த்தைக்கேற்றதுபோல அந்தப் பெண்ணை வெகு அருமையாய்ப் பார்த்து, பள்ளிக்கூடம் போய் படிக்கச் செய்தாள். ஆனால் அவளுக்குக் கொஞ்சமும் படிப்பிலே பிரியமில்லை என்று கண்டு, தனது வீட்டிலேயே ஏதாகிலும் இட்ட வேலையைச் செய்யும்படி வைத்துக்கொண்டாள். சுந்தரி தகப்பனைப்போல மெத்த உண்மையுள்ளவளாயிருந்தாலும், சுறுசுறுப்பாய் எந்த வேலையையும் செய்ததில்லை. கொடுக்கும் எந்த வேலையையும் மெத்த அஜாக்கிரதையுடன் செய்யும் அசமந்த குணமுடையவள். ஆயினும், தாயும் தகப்பனுமில்லாத அநாத பிள்ளையாயிற்றே என்று அந்தச் சீமாட்டி அவளை வேளாவேளைகளில் கண்டித்து, அவளின் அஜாக்கிரதையால் உண்டான ஆயிரமாயிரமான நஷ்டங்களையும் ஆக்கிரமின்றி பொறுமையுடனே சகித்துவந்தாள்.

ஒருநாள் பிள்ளைகளெல்லாம் பள்ளிக்கூடம் போனதும், எசமாட்டி சுந்தரியை நோக்கி "நான் வருமளவும் நீ வீட்டைவிட்டு வெளியே போகாமல், கதவைச் சாத்திக்கொண்டு அந்நியர் யாராகிலும் நமது வீட்டுக்குள் நுழைந்து எதையாகிலும் அடித்துக்கொண்டுபோய்விடாதபடி பத்திரமாய்ப் பார்த்திரு" என்று சொல்லிவிட்டு, அவசரமாய் யாரையோ பார்க்கும்படி போய்விட்டாள். அவள் போனதும், சுந்தரி "இந்தப் பட்டப்பகலில் எந்தத் திருடன் நமது வீட்டில் நுழைந்து கொள்ளையிடப்போகிறான்" என்று தனக்குள்ளே ஆலோசித்து, எசமாட்டியின் கட்டளைப்படியே கதவைச் சாத்தாமல், நீரூற்றிலிருந்து தண்ணீர் மொண்டுவரும்படி வெளியே போய்விட்டாள்.

ஊற்றண்டை கூடிவந்த ஊர்ப்பெண்களினிடம் வீணான பேச்சுகளை வெகு நேரம் அலப்பிக்கொண்டிருந்து, தண்ணீர் மொண்டு வீட்டிற்குத் திரும்பினாள். வீட்டினுள் நுழைந்ததும் மேல் மெத்தையில் கண்ணாடி உடைந்ததுபோல கலகல என்று ஒரு சத்தம் கேட்டது. அது என்னவென்று பார்க்க அவள் மேலே ஓடி, தனது எசமாட்டியின் அறையில் இருந்த ஒரு அழகிய கண்ணாடியை ஒரு வெள்ளாடு முட்டித்தள்ளி உடைத்திருப்பதைக் கண்டு, கையை முறித்துக்கொண்டு "ஐயோ, என்ன செய்யப்போகிறேன்" என்று அங்கலாய்த்தாள். அந்த அறையிலிருந்த இன்னொரு கண்ணாடியும் உடைந்துவிட்டதோ என்று திரும்பிப் பார்த்தபோது, அதில் ஏதோ ஒரு காட்சியைக் கண்டு திடுக்கிட்டு, கற்சிலைபோல் அசையாமல் அங்கேயே சற்றுநேரம் நின்று, பின்பு ஆட்டை அடித்துத் துரத்திவிட்டு, விசனமாய் உட்கார்ந்திருந்தாள். (சுந்தரி தண்ணீர் மொள்ளப் போயிருந்த சமயத்தில் இந்த ஆடானது மேலே போய், தன்னைப்போல ஒரு ஆட்டைக் கண்ணாடியிலே கண்டு, அதோடு சண்டைசெய்து முட்டித் தள்ளவேண்டுமென்று அந்த விலையுயர்ந்த கண்ணாடியை உடைத்துவிட்டது.)

(இன்னும் வரும்.)



GLEANINGS.

## சமாச்சாரக் குறிப்புகள்.

லட்சுமணபுரியில் சென்ற வருடம் வயித்திய சாஸ்திரம் கற்றுவந்த பத்தொன்பது ஸ்திரீகளில் நாலுபேர் பிராமண ஸ்திரீகளாம்.

இந்து விதவைகளுக்குப் புகலிடம் கொடுத்து கல்விகற்பிப்பதற்கென்று நிதி சேர்க்கும் பொருட்டு இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்கும் போயிருந்த பண்டிதை ரமாபாய் இந்து மதத்தை விட்டு கிறிஸ்து மதத்தை அனுசரித்தவளாய் பம்பாய் நகரில் சுகமே வந்திறங்கினாள்.

காசிம்பசார் நாட்டு மகாராணியவர்கள் ஒரிசா நாட்டில் உண்டான பஞ்சத்தைக்குறித்துக் கேள்வியாகி, அக்கஷ்டத்தை நீக்க ஆயிரம் ரூபாய் நன்கொடை அளித்திருக்கிறார்கள்.

சென்ற வருடத்திய மற்றிக்குலேஷன் பரீட்சைக்குத் திருநெல்வேலி பெண் பாடசாலையிலிருந்து போன ஏழு சுதேச கிறிஸ்தவப் பெண்களில் ஐந்துபேர் சித்தியடைந்தார்கள்; இவர்களில் ஒரு பெண் கணிதத்தில் சகல மாணுக்கருக்குமேல் முதல் இடம் பெற்றாளென அறிந்து மிகவும் சந்தோஷப்படுகின்றோம்.

மாட்சிமை மிகுந்த நமது சக்கிரவர்த்தினியவர்கள் தமது ஞானப்பிள்ளையாகிய கூச்பிகார் மகாராணியின் செல்வப் புதல்வனுக்கு அழகிய தங்கக் கிண்ணியொன்றை வெகுமதியாக அனுப்பியிருக்கிறார்கள்.

இத்தேசத்து ஸ்திரீகளுக்கு வைத்திய உதவிசெய்யும்பொருட்டு டவ்ரின் பெருமாட்டியின் பெயரால் சேர்க்கப்பட்ட நிதிக்குச் சேர்ந்திருக்கிற முதல் பத்துலட்சம் ரூபாய். இதற்குவரும் வருஷ வட்டி ஏறக்குறைய நாற்பத்தையாயிரத்து அறுநூறு ரூபாய்.

## CHILDBIRTH.
## பிரசவ நூல்.

(தொடர்ச்சி.)

குளிர்காலத்தில் வட இந்தியாவில்தவிர வேறெங்கும் (பிரசவ அறையில்) நெருப்பு எரிக்கக்கூடாது. நிலக்கரி எரிப்பதிலிருந்து ஓர் வித விஷவாயு உண்டாவதால், அது எல்லா வித நெருப்பைப்பார்க்கிலும் அதிக அசவுக்கியம் உண்டாக்கக்கூடியது.

கொஞ்சம் ஈரமான தரையின்மேல் படுப்பதைப்பார்க்கிலும் படுக்கையில் படுப்பது நல்லது. படுக்கைகளை எப்போதும் உபயோகித்து வந்தால், அநேக உயிர்மோசங்களுக்கும் அதிக உபத்திரவங்களுக்கும் இடமிராது. மேலும், படுக்கைகளை வெகு சொற்ப விலைக்கும் வாங்கலாம். படுக்கை ஈரமாய்ப் போகாதபடி அதன்மேல் எண்ணெய்ச் சீலையை விரித்து, அதற்குமேல் இரண்டு மூன்று துணிகளை விரிக்கலாம். ஒருமுழ அகலமும் மூன்றுமுழ நீளமுமுள்ள கெட்டியான காலிக்கோ என்னும் பருத்திநூற் புடவைத் துண்டைக் கட்டுவதற்கென்று சம்பாதித்து வைத்துக்கொள்ள வேண்டியது; வேண்டியபோது ஸ்திரீ இழுத்துக்கொள்ளும்படி படுக்கையின் ஓரத்தில் ஒரு துணியைக் கட்டிவிட்டு வைக்கலாம். தாய்க்கும் பிள்ளைக்கும் வேண்டிய காய்ந்த சுத்தமான துணிகள் எப்போதும் ஆயத்தமாய் இருக்கவேண்டியது. குளிர்ந்த ஜலமும் சூடான ஜலமும் தயாராய் இருக்கவேண்டியது. கொஞ்சம் கெட்டி நூலும் அவசியம்.

**பணிப் பெண்கள்.**—மருத்துவச்சியைத்தவிர பிரசவ அறையில் இரண்டு பெண்களுக்கு அதிகமான பேர் இருக்கக்கூடாது. வெகுபேர் இருப்பதால், அறை அதிக காங்கையும் அசவுக்கியமுமானதாகிவிடும். மேலும், அவர்கள் அதிகமாய்ப் பேசி ஸ்திரீக்கு வருத்தம் உண்டாக்குவதுமல்லாமல், பிரசவ வேதனையைக்குறித்த ஏதாகிலும் கட்டுக்கதைகளைச் சொல்லி அவளைப் பயமுறுத்துவார்கள். பிரசவ அறையில் இருக்கத் தெரிந்துகொள்ளப்படும் இரண்டுபேரும் பட்சம் மிகுந்து, முகமலர்ந்து, ஸ்திரீயை உற்சாகப்படுத்தும்பொருட்டு இடைக்கிடையே ஒன்று அல்லது இரண்டு வார்த்தைமாத்திரம் சொல்லும் விவேகமுள்ள பெண்களாய் இருக்கவேண்டும். பிள்ளைகளை அறையினுள்ளே விடக்கூடாது.

**ஆகாரம்.**—பிரசவமானது வருத்தமுள்ள வேலையாதலால், இரண்டு அல்லது மூன்று மணிநேரத்துக்கு ஒருதரம் கஞ்சி அல்லது பாலைப்போன்ற இலேசான ஆகாரத்தை ஸ்திரீக்குக் கொடுத்துப் போஷித்துவரவேண்டியது. பிரசவ வேதனை ஆகாரத்தைச் சீரணிக்கச் செய்யாததாகையால், வழக்கமான ஆகாரத்தை வயிறு நிறைய சாப்பிடக்கூடாது.

அறிவீன ஜனங்கள் பிரசவித்த ஸ்திரீகளுக்குக் குளிர்ந்த ஜலத்தைக் குடிக்கக் கொடுக்கிறதில்லை; சூடான ஜலத்தையும் வெகு மிதமாய்த் தருகிறார்கள். நாம் குடிக்கவேண்டியது இப்பொழுது என்று நமக்குச் சொல்லும்படிக்கே நம்மைச் சிருஷ்டித்தவர் நம்மில் தாகம் என்னும் வேட்கையை உண்டுபண்ணியிருக்கிறார்; நோயாளி ஒருவன் குளிர்ந்த ஜலத்தைச் சந்தோஷமாய்க் குடிப்பதே அது அந்தப் பிணிக்கேற்ற நற்பானம் என்பதை நிச்சயமாய்க் காட்டுகிறது. ஸ்திரீ குடிக்கக் கேட்கும்போதெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாய்க் கொடுத்துவரலாம். அதிகம் கொடுப்பதினால் குளிர்மை உண்டாகும். தேய்நீரினாலும் ஆயாசம் தீரும்.

அறிவீனமுள்ள மருத்துவச்சிகள் சில சமயங்களில் காரமான வாசனைத்திரவியங்களைக் கலந்தும், சில இடங்களில் லாகிரிப்பானங்களையும் குடிக்கக் கொடுக்கிறார்கள்; இதனால் பிரசவிக்கும்போது அதிக வருத்தமிராது என்கிறார்கள். ஆனால் இவைகளின் பலன் வேறுவிதமாய் இருக்கும்; ஆகையால் அப்படிப்பட்டவைகளைக் குடிக்கக்கூடாது.

(இன்னும் வரும்.)

# மாதர் மித்திரி.

புத். ௨. ௧௮௮௬ ௵ - ஏப்பிரல் ௴. இல. ௰.

## NOTES.
## பத்திராதிபர் குறிப்புகள்.

### HOW TO MAKE HOME HAPPY.
### குடும்ப பாக்கியத்திற்கான வழி.

பிள்ளைகள் தங்கள் காலடிகளைப் பின்பற்றவேண்டுமென்று ஆசிக்கும் பெற்றோர் முதல் முதல் தங்களை அடக்கவும், உண்மையைப் பேசவும், சாந்தமும் பொறுமையும் உள்ளவர்களாய் இருக்கவும், யோக்கியமாய் நடக்கவும் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியம். சிறு பிள்ளைகள் தங்களுக்கு மேலானவர்களின் நடக்கையைக் கவனித்து, அதை எப்படியும் பின்பற்றுவார்கள் என்பது நிச்சயம். ஆகையினால்தான் "சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை" என்னப்படுவதுபோல், "பார்த்ததைச் செய்யும் மனுப்பிள்ளை" என்றும் சொல்லப்படுகிறது. பிள்ளைக்கு நாம் காட்டும் முன்மாதிரியைக்குறித்து அதிக கவலையுள்ளவர்களாய் இருக்கவேண்டியது. பிள்ளைகளை எப்போதும் வேலைக்காரர் வசம் விட்டுவைப்பது நல்லதல்ல. மேலும், நமது சிறுவர் யாரோடு கூடுகிறார்கள் என்பதையும் நாம் வெகு ஜாக்கிரதையுடனே கவனித்துவரவேண்டும். நமது பிள்ளைகளின் சரீரத்தைப் பயங்கரமான வியாதிகளுக்கு விலக்கமாய்க் காக்க நாம் எப்படி பிரயாசப்படுவோமோ அப்படியே அவர்களின் மனதையும் பாவத்துக்குத் தூரமாக்கப் பிரயாசப்படவேண்டியது.

பிள்ளைகளைச் சாந்தத்தோடும் கண்டிப்போடும் நடத்தவேண்டியது அவசியம். "ஆனால் கண்டிப்பிலும் கணக்கு வேண்டும். அடிப்பதிலும் அளவு வேண்டும். பிரம்படி தகுதியேயன்றி இரும்படி தகுதியல்ல. சிறுவரை அடிக்கலாமேயன்றி அழிக்கலாகாது. தண்டிக்கலாமேயன்றி துண்டிக்கலாகாது." நாம் பிள்ளைகளுக்குச் சொற்ப கட்டளைகளைக் கொடுத்தாலும், அவைகள் யாவும் நற்பிரமாணங்களாய் இருக்கவேண்டியது. ஒருமுறை கொடுத்தபின் அவைகளை எப்படியும் நிறைவேற்ற பிரயாசப்படவேண்டியது.

விளையாடும் சமயத்தில் பிள்ளைகளோடு விளையாடவேண்டியது. எப்போதும் பிள்ளைகள் படிக்கவேண்டுமென்பது அவர்களுக்குப் பலவீனத்தை உண்டாக்கும் பல வழிகளில் ஒன்று. "பாடம் படிக்க நேரமும் வேண்டும், பந்தடிக்கக் காலமும் வேண்டும்." நாம் அவர்களோடு விளையாடுவதால், அவர்களுக்கு ஓர்வித உற்சாகமும் மனத்திடனும் உண்டாகிறது. பிள்ளைகள் தங்களிடத்தில் நல்லாலோசனையையும் ஆறுதலையும் தேடி, தங்களண்டை வரும்போதெல்லாம் அதிக சந்தோஷமாயிருக்கும்படி தாய்தந்தையர் தங்கள் கண்டிப்போடு கருணையும் உள்ளவர்களாய் இருக்கவேண்டும். நாம் பிள்ளைகளோடு செலவழிக்கும் காலம் வீணென்று நினைக்கக்கூடாது. ஏனெனில் நமக்கு இதனால் ஒவ்வொரு நாளும் சந்தோஷம் அதிகரிக்கிறது. பிற்காலத்திலும் நாம் இப்படி பிள்ளைகளோடு செலவழித்த காலத்தைக்குறித்து மிகவும் சந்தோஷப்படுவோம். நமது குடும்ப பாக்கியமும், நமது பிள்ளைகளின் பிற்கால மேலான நிலைமையும் நம்மையே அதிகமாய்ப் பொறுத்திருக்கின்றன. மரத்தின் கனி மரத்தடியில் விழுமாதலால், நாம் துன்மார்க்கமாய் நடந்தால், பிள்ளைகள் சன்மார்க்கமாய் நடக்கமாட்டார்கள். இதை அறிந்து, நமது பிள்ளைகளை நன்மார்க்க வழியில் நடத்தி, அவர்களை வீண்பிள்ளைகளாக்காமல் விண்பிள்ளைகளாக்குவோமாக. அப்போது நமது குடும்பமும் மெய்யாகவே பாக்கியமானதாயிருக்கும்.

## REAL WORTH.
## சரியான மேம்பாடு.

தேவன் "மனுஷ ஜாதியான சகல ஜனங்களையும் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின்மீதெங்கும் குடியிருக்கச் செய்தார்" என்று சத்திய வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. நம்மெல்லாருக்கும் ஒரே தகப்பன் உண்டு. நம்மைச் சிருஷ்டித்தவரும் ஒரே தேவன். ஆகையால் நாம் ஒருவரையொருவர் சகோதரராகப் பாவித்து, சகோதரராக நடத்தவேண்டும். "மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" என்னும் தங்கப் பிரமாணத்தை அநுசரித்து நடக்கவேண்டியது அவசியம்.

இந்துக்களின் வேதங்களிலுள்ள பாட்டுகளைக் கவனித்துப் படித்தால், இப்பொழுது எங்கும் பரவியிருக்கும் ஜாதி ஏற்பாட்டுக்கு எள்ளளவேனும் நியாயமில்லை என்பது பிரத்தியட்சமாகும். "தேவர்கள் ஜாதி ஏற்பாட்டைக் கவனியாமல், சகலருக்கும் பாக்கியம் தரும் புண்ணியங்களையே விசேஷமாக எண்ணுகிறார்கள்; ஒரு ஈன ஜாதியானிடத்திலும் இப்புண்ணியங்கள் காணப்படுமாகில், அவன் தேவர்களால் பிராமணனைப்போல் பாவிக்கப்படுவான்" என்று சாஸ்திரங்கள் ஒன்றில் சொல்லியிருக்கிறது.

இங்கிலாந்து தேசத்தில் ஜாதியென்பது கிடையாது. அங்கே மகா தாழ்ந்த ஸ்திதியில் இருப்பவர்கள்கூட மகா உயர்ந்த ஸ்திதிக்கு வரலாம். இதனால் ஏழைகளும் தங்களுக்கு ஒழிந்த நேரங்களைப் படிப்பிலும், பிறருக்குப் பயன்படும் காரியங்களைச் செய்வதிலும் செலவழித்து, இவ்வாறு தங்களை மேலான பதவிக்குத் தகுதியுள்ளவர்களாக்க உற்சாகத்துடன் ஓயாமல் பிரயாசப்பட ஏவப்படுகிறார்கள். சாதாரண கூலிவேலை செய்கிறவர்கள் மூலமாய்த்தான் நமக்கு ஆறுதலும் சகல சுகானுபவங்களும் கிடைக்கிறது என்பதை நாம் சற்று யோசித்துப் பார்க்குமளவில், இந்த ஏழைச் சுமைதாங்கிகளை நாம் மேன்மைப்படுத்தி, அவர்கள் வேலையும் மற்றவர்களின் வேலையைப்போலவே அதிக அவசியமும் சிறந்ததுமான வேலை என்பதை ஒத்துக்கொள்ளுவோம்.

வேலைசெய்யாத சோம்பேறிகளும், பாவத்தில் பன்றிபோல் புரளும் பாதகருமே ஈன மனுஷரென்றெண்ணி அகற்றப்படவேண்டியவர்கள். பிறப்பினால் பெருமைபாராட்டுவது பேதைமை. ஒருவனை உயர்ந்தவனாக்குவது அவன் நன்னடக்கையேயன்றி பிறப்பல்ல. புத்தியில் மூடனும், பத்தியில் பதராயும் இருக்கும் ஒருவன் உயர் குடும்பத்திலாவது குலத்திலாவது பிறந்துவிட்டதால், தன்னை மகாப் பெரியவனாக எண்ணிக்கொள்வது மகாப் பெரிய மதியீனம். உயர்ந்த குலத்தில் இருந்தாலும் சரி, தாழ்ந்த குலத்தில் இருந்தாலும் சரி, குடியன் குடியனே, பொய்யன் பொய்யனே, அயோக்கியன் அயோக்கியனே. "கண் தெரிகிறவனுக்குப் பிறந்தாலும், குருடன் குருடனே. ஒருவன் பூட்டன் புண்ணியவாளனாயிருந்தாலும், பாட்டன் படிப்பாளியாயிருந்தாலும், அப்பன் அதிகாரியாயிருந்தாலும், அவனுக்கு ஆவது ஒன்றுமில்லை." அரசன்கூட ஜாதியின் மாணிக்கத்தைத் தேடாமல், கல்வியில் பெரியவனைத் தேடுவதால், "அறிவுடையொருவனை அரசனும் விரும்பும்" என்று சொல்லப்படுகிறது.



இவ்வுலகத்தில் எதையாகிலும் சம்பாதிக்கும்பொருட்டு வேலைசெய்யாதிருப்பவர்கள் வெகு சொற்பம். மகா ஈன ஜாதி மனுஷராகிய இவர்கள் பிறர் பாடுபட்டுத் தேடும் பணத்தைக்கொண்டு பிழைக்கிறார்கள். இப்படியாக விவேகமின்றி வெட்கங்கெட்ட வெட்டிப் பருக்கை தின்னும் வீணான இந்தச் சோம்பேறிகள் தங்கள் உயர் குலத்தைக்குறித்து மெச்சிப் பேசுதல் வெறும் வேடிக்கைப் பேச்சேயொழிய வேறொன்றுமல்ல.

உலகத்தில் பெரியோரெனப் புகழ்பெற்ற புருஷரும் ஸ்திரீகளும் மகா தாழ்ந்த நிலைமையிலிருந்து உயர்ந்த நிலைமைக்கு வந்தவர்களென்பது மறக்கத்தக்க விசேஷமல்ல. இவர்கள் பிறருக்கும் தங்களுக்கும் உபயோகமாயிருக்கும்பொருட்டு, தங்கள் வாழ்நாளைச் செலவழித்ததால் பெரியோரானார்கள். இவ்வாறே நாமும் எப்படிப்பட்ட ஈன ஸ்திதியிலிருந்தபோதிலும், நமது வாழ்நாளைத் தக்கப்படி உபயோகப்படுத்துவதால், பெரியோரென்று போற்றப்படுவோம். ஜாதியைக்குறித்து ஔவையார் சொல்லும் அரும் வாக்கைக் கேளுங்கள்:

"சாதியிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கா
லீதிவழுவா நெறிமுறையின்—மேதினியி
லிட்டார்பெரியோ ரிடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கிலுள்ளபடி."



## THE PARABLE OF THE LEAVEN.
## புளித்த மாவின் உவமை.

சற்குருவாகிய கிறிஸ்துநாதர் மனித அவதாரமெடுத்து இப்பூலோகத்தில் சஞ்சரித்த காலத்தில் திருவாய் மலர்ந்தருளிய அநேக உவமைகளில் ‘புளித்த மாவின் உவமையும்’ ஒன்று. அந்த உவமையின் விவரமாவது: ஒரு ஸ்திரீ கொஞ்சம் புளித்த மாவை எடுத்து மூன்று படி மெல்லிய மாவிலே அடக்கிவைத்தாள். (படம் பார்க்க.) அந்தக் கொஞ்சம் புளித்த மாவானது அவ்வளவு மெல்லிய மாவையும் புளித்துப்போகப்பண்ணிற்று. இதை இயேசுவானவர் பரலோக ராஜ்யத்துக்கு உவமையாகச் சொன்னார்.

ஒரு சிறு விதையில் பெரிய விருட்சம் அடங்கியிருப்பதுபோல இந்தச் சின்ன உவமையிலும் அநேக அரிய பொருட்கள் அடங்கியிருக்கின்றன. அவைகளில் சிலவற்றைப் பார்ப்போம். புளிப்பு மூன்று படி மெல்லிய மாவிலும் மெதுவாய்ப் பரவினதுபோல, சுவிசேஷப் பிரசங்கமும் அதைக் கேட்போரின் இருதயத்தில் மெதுவாய்ப் பரம்புகிறது. ஒரு ஸ்திரீ புளித்த மாவை எடுத்தது போல, பேதுருவும் மற்ற தேவஊழியரும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறார்கள். புளிப்பு நன்றாய் ஏறுவதற்கு மாவானது எப்படி மெலிந்திருக்கவேண்டுமோ அப்படியே நமது இருதயமும் சுவிசேஷப் பிரசங்கத்தை ஏற்றுக்கொள்வதற்கு நருங்குண்டதாயிருக்கவேண்டும். நியாயப்பிரமாணம் இருதயத்தை நருங்குண்டதாக்கினதும், சுவிசேஷமாகிய புளிப்பு அதில் எளிதாய்ப் பரவி இருதயத்துக்கு ஆறுதலைத் தருகிறது. மூன்று படி மெல்லிய மாவிலும் அந்த ஸ்திரீயானவள் கொஞ்சம் நல்ல ருசி உண்டாவதற்கென்றே புளித்த மாவை எடுத்து வைத்தாள். அதுபோலவே சுவிசேஷமும் நமது இருதயத்துக்கு ஆறுதலையும் சந்தோஷத்தையும் அளிக்கிறது. புளித்தமா கொஞ்சமாயிருந்தபோதிலும், அதிகமான



மூன்று படி மாவையும் புளிக்கச் செய்து நாவுக்கு ருசிகரமாக்கிற்று. அப்படியே சுவிசேஷம் பார்வைக்குச் சிறிதாயும், பலராலும் பகைக்கப்பட்டதாயும் இருந்தபோதிலும், அது “ஜீவனும் வல்லமையுள்ளதாயும்” இருக்கிறது. கொஞ்சம் புளித்தமா மூன்று படி மாவிலும் வைக்கப்பட்டபின், அது பரவுகிறதைத் தடுக்க எவனாலும் கூடாததுபோல், சுவிசேஷத்தின் பரம்புதலையும் எப்படிப்பட்ட சத்துருவும் எவ்வளவோ கோடாகோடியான விரோதங்கள் பண்ணியும் தடுக்க முடியாதென்று கண்டு சஞ்சலமடைவான்.

முற்காலத்தைப்பார்க்கிலும் இக்காலத்தில் கிறிஸ்துமார்க்கத்துக்கு விரோதமாய் அநேக சத்துராதிகள் எழும்பி, வெகுவான நூற்களையும் பத்திரிகைகளையும் பிரசித்தம்பண்ணினபோதிலும், அது நாளுக்குநாள் விர்த்தியடைந்துகொண்டு வருவதே சுவிசேஷத்தின் வல்லமைக்கு ஒரு விசேஷித்த சாட்சியாயிருக்கிறது. முதல் முதல் மிகவும் சொற்ப அப்போஸ்தலரால் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷம் இப்பொழுது பூமியெங்கும் மகா வல்லமையுடனே பரம்பியிருக்கிறது. அதன் ஆச்சரியமான வல்லமையைத் தடுப்பவர் யாருமில்லை. சுவிசேஷமானது தனது வேலையை வெகு ஆடம்பரத்தோடே வெளிவேஷத்தை நாடி செய்யாமல், அமரிக்கையாயும் மெதுவாயும் செய்கிறது. இந்த ஆறுதலின் சுவிசேஷத்தை நாம் கெட்டியாய்ப் பிடிப்போமாக.

HYMN.

## ஞான கீதம்.

WHAT HAST THOU DONE FOR ME?

### நீ எனக்காக என்ன செய்தாய்?

என் ஜீவன் ரத்தமே
மெய்யாய்க் கொடுத்தேன் நான்,
உன் பாவம் தீரவே
உன் சாவு நீங்கத்தான்;
தந்தேன் என் ஜீவன் உனக்காய்,
நீ யாது தந்திட்டாய்?

2. மகிமை ஆசனம்,
என் தந்தை மாளிகை
விட்டிவ்வனாந்தரம்
அலைந்தேன் ஈதுண்மை;
விட்டேன் எல்லாம் நான் உனக்காய்,
நீ என்னத்தை விட்டாய்?

3. உன் நாவால் சொல்லொணா
கசந்த வேதனை
அடைந்தேன் அல்லவா,
நீ தப்ப ஆக்கினை;
பட்டேன் எல்லாம் நான் உனக்காய்,
நீ என்னத்தைப் பட்டாய்?

4. உனக்கிரக்கமாய்
மேலோகத்திருந்து
ரட்சிப்பு நிறைவாய்
தந்தேனே கொணர்ந்து;
கொணர்ந்தேன் நன்மை உனக்காய்,
நீ யாது கொணர்ந்தாய்?

MAID-SERVANTS.

## வேலைக்காரிகள்.

மறு பக்கத்திலுள்ள படம் ஒரு அங்கிலேய வேலைக்காரி தன் கிட்ட இருக்கும் ஏனத்தில் நிலக்கரி கொண்டுவர அடுப்பண்டைக்குப் போய், ஒரு கடிதம் வாசிக்கும் பாவனையைக் காட்டுகிறது. அந்தக் கடிதத்தில் அவள் மறுநாள் வீட்டில் செய்ய வேண்டியவைகள் இவைகள் என்பதை எசமாட்டி குறிப்பித்துக் கொடுத்திருக்கிறாள். நிலக்கரியில் இன்னும் நன்றாய் சூடு கொள்ளாததால், அடுப்பண்டை நின்று வீண்காலம் போக்காதபடி தனது எசமாட்டியின் கட்டளையை எடுத்துக் கவனிப்பாய் வாசிக்கிறாள்.

இந்த அங்கிலேய வேலைக்காரியினிடத்தில் நமது இந்து சிநேகிதிகள் சில நல் விஷயங்களைக் கற்றுக்கொள்ளலாம். இவைகளில் முந்தினது சுத்தம். “சுத்தம் சோறுபோடும், எச்சில் இரக்க வைக்கும்” என்பது நமது இந்து சிநேகிதிகளுக்குத் தெரியாத நூதன பழமொழியல்ல. ஆனால் அவர்களில் அநேகர், விசேஷமாய் எளியார் இதின்படி செய்கிறதில்லை என்று விசனத்தோடு அறிக்கையிடவேண்டியவர்களாயிருக்கிறோம். அடுப்பண்டை போகும் அந்த அங்கிலேய வேலைக்காரி, வேலை செய்யும்போது தனது சுத்த வஸ்திரத்தின்மேல் அழுக்கு படாதிருக்க அதன்மேல் ஒரு துண்டு கட்டிவிட்டிருக்கிறாள். அசுசிக்கு எளிமை காரணமல்ல. எவ்வளவு ஏழைகளாயிருந்தாலும், வஸ்திரம் எவ்வளவு கந்தையாயிருந்தாலும், சுத்தமாய் இருக்கலாமே. இதனிமித்தமன்றோ “கந்தையாயிருந்தாலும் கசக்கி (அதாவது துவைத்து) உடு, கூழாயிருந்தாலும் குளித்துக் குடி” என்று பெரியோர் சொல்லுகிறார்கள்? ஆகையால் இந்து எசமாட்டிகள் முதல் முதல் தங்கள் வேலைக்காரிகளிடத்தில் வற்புறுத்தவேண்டிய விஷயம் சுத்தமே.

இந்த அங்கிலேய வேலைக்காரியிடத்தில் நாம் கவனிக்கும் இரண்டாம் விஷயம், அவள் வாசிக்கவும் எழுதவும் கூடியவளாயிருப்பதுதான். இவள் இந்து வேலைக்காரிகளைப்போல் ஏதும் தெரியாத அறிவீனப் பெண்ணாய் இருக்கிறதில்லை. தனக்கு வாசிக்கவும் எழுதவும் தெரிந்தபடியால், தான் வேலைசெய்யக் கூடாது என்று பெருமையாய் இருக்கிறதுமில்லை. தனது எசமான் எசமாட்டி விரும்பும் எதையும் ஒழுங்காயும் உற்சாகமாயும் செய்கிறாள். இந்து வேலைக்காரிகள் மெத்தவும் அறிவீனராயிருப்பது மிகவும் பரிதாபமான விஷயமே. அவர்களை அறிவுள்ளவர்களாக்க விரும்பினால், அவர்களை வேலைகொள்ளும் எசமாட்டிகள் கல்வி கற்றவர்களாயிருக்கவேண்டியது அவசியம். பெண்கள் கல்வி கற்றிருந்தால், புருஷருக்கும் நல்லது, பிள்ளைகளுக்கும் நல்லது, வீட்டுக்கும் நல்லது, நாட்டுக்கும் நல்லது, தற்றோருக்கும் நல்லது, மற்றோருக்கும் நல்லது, சுத்திக்கும் நல்லது, பத்திக்கும் நல்லது. அங்கிலேய வேலைக்காரிகள் எழுதவும் வாசிக்கவும் படித்திருக்கக்கொள்ள இந்து எசமாட்டிகள் கல்வி கற்காமையினால் அவர்களுக்குத் தாழ்வாகிவிடலாமா?

ஆகையால் இந்து வேலைக்காரிகளும் அவர்களைக் கண்காணிக்கும் எசமாட்டிகளும் சுத்தத்தையும் பெண்கல்வியையும் வீணென்று வெறுத்துத் தள்ளாதிருக்க வேண்டிக்கொள்ளுகிறோம்.



AN ENGLISH MAID-SERVANT.

ஒரு அங்கிலேய வேலைக்காரி.

GOOD WORDS FOR WOMEN.

## நங்கையர்க்கு நல்லுரை.

### 10. மாமியார்.

மாதர் மித்திரியைப் பார்வையிடும் நங்கையருள் மாமிமார் பலர் இருப்பார் என்று நம்புகிறேன். மாமி என்கிற சொல் தமிழர் குடும்பங்களில் வழங்கும் இனிய சொற்களில் ஒன்றல்ல, கடுஞ் சொற்களில் ஒன்று. மாமிக்கு விரோதமாய்ப் பேசும் பழமொழிகள் பல உண்டு. கொடுமையிலெல்லாம் கொடுமை மாமிக்கொடுமை.

அவள் சொல் கொடிய சொல். மருமகளோடு பேசும்போது, பட்சமாய்ப் பேசும் மாமிமார் வெகு அருமை. மாமியார் வாயிலிருந்து வரும் சொல் எல்லாம் பெரும்பாலும் ஏவற் சொல்லாயிருக்குமேயன்றி வேறு சொல்லாயிரா. எப்போதும் ஏவற் சொல்லைக் கேட்பது காதுக்கு இனிதல்ல. மாமி தான் பெற்ற மகளுக்கு உபயோகிக்கும் ஏவல் வேறே, தன் வீட்டுக்கு வந்த மருமகளுக்கு உபயோகிக்கும் ஏவல் வேறே. ஒன்று பட்சமுள்ள ஏவல், மற்றது பலவந்த ஏவல். ஒன்று தித்திப்பான ஏவல், மற்றது கத்திபோன்ற ஏவல்.

மருமகளிடத்தில் குற்றம் பிடிப்பதே மாமியார் வேலை. மருமகளின் சீலையிலே குற்றம், வேலையிலே குற்றம். அவள் உண்பனையில் குற்றம், தின்பனையில் குற்றம். அவள் சோறு ஆக்குவதிலும் குற்றம், கறியாக்குவதிலும் குற்றம். அவள் அண்ணனோடு பேசினாலும் குற்றம், ஆண்படையானோடு பேசினாலும் குற்றம். வம்பிட்டாலும் குற்றம், கும்பிட்டாலும் குற்றம். அவள் பிள்ளை பெற்றிருந்தாலும் குற்றம், பிள்ளையற்றிருந்தாலும் குற்றம். அவள் கோவிலுக்குப் போனாலும் குற்றம், குளத்துக்குப் போனாலும் குற்றம். அவள் பெற்றூர்பேரிலும் குற்றம், உற்றூர்பேரிலும் குற்றம்.

மாமி தன் மருகளைத் தூற்றிக் காற்றில் விடும் கொடுமை பெருங்கொடுமை. மகனிடத்தில்தான் முதல் தூற்றல். உன் பெண்சாதி அங்கே சென்றாள், இங்கே நின்றாள்; அவனைப் பார்த்துச் சிரித்தாள், இந்தப் பூவைப் பறித்தாள்; இன்னாரோடு பேசினாள், இன்னாரை மெத்த ஏசினாள் என்பதுபோன்ற சில்லறைப் பிரியாதுகளால் தன் மகனைக் கோபமூட்டி, அவன் தன் தொண்டையைக் கிழித்துத் தன் மனைவியின் மண்டையை உடைக்க ஏவிவிடுகிறாள். அவள் தன் உற்றாரிடத்திலும் ஊராரிடத்திலும் சொல்லும் சொல்லுக்கும், பேசும் கொடுமைக்கும் கணக்குமில்லை, வழக்குமில்லை. இதினால் அல்லவோ "மாமியார் மெச்சின மருமகள் இல்லை" என்று சொல்லப்படுகிறது.

மாமிக் கொடுமையைச் சொல்லில்மாத்திரமல்ல, செய்கையிலும் காணலாம். சில மாமிமார் தங்கள் மருமக்கள்மாரை அடிமைபோல் நடத்துகிறார்கள். மடி பிடித்துச் சண்டையிடும் மாமிகளுமுண்டு, மயிர் பிடித்துச் சண்டையிடும் மாமிகளுமுண்டு. வயிற்றுக்குச் சோறும், இடைக்குத் துணியும், தலைக்கு எண்ணெய்யும், படுக்கப் பாயும் கொடாமல், தங்கள் மருமகளை நடத்திவரும் மாமிகள் எத்தனை. அதுவுமன்றி நின்றால் அடி, விழுந்தால் மிதி, முன்னால் குத்து, பின்னால் உதைகொடுக்கும் மாமியாருமுண்டு. இப்படி ஒன்று கொடுத்து இரண்டு பெற்றுக் கொள்ளும் மாமியாரும் இருக்கிறார்கள்.

மாமியார் கொடுமை பொறுக்கமாட்டாமல், புருஷனை விட்டோர் பலர், பிள்ளைகளை விட்டோர் பலர்; வீட்டைத் துறந்தோர் பலர், காட்டை அடைந்தோர் பலர்; மானங் கெட்டோர் பலர், ஈனப் பட்டோர் பலர். மாமியார்கள் தங்கள் மருமக்கள்மாரை இத்தியாதி பல துன்பங்களுக்கும் உள்ளாக்குவதற்கு முக்கிய காரணம் பொறாமையே. தன் மகனோடு மருமகள் சுகித்து வாழ்வதைக் கண்குளிரப் பார்க்கச் சகிக்காத பொறாமையே காரணம்.

மருமக்களின் சுகத்துக்குத் துக்கப்பட்டுத் துக்கத்துக்குச் சந்தோஷப்படுகிற மாமியாரே, மருமக்களின் வாழ்வுக்குத் துக்கப்பட்டுத் தாழ்வுக்குச் சந்தோஷப்படுகிற மாமியாரே, பிறர் உங்களுக்கு இப்படிச் செய்யுங்கால் எப்படி இருக்குமென்று கவனித்துப்பாருங்கள். உங்களைப்போல் மனம், புத்தி, சித்தமுள்ள மானிட ஜென்மிகளாகிய மருமக்கள்மாருக்கு உங்களைப்போலவே உணர்ச்சியுண்டு என்பது உங்களுக்குத் தெரியாததல்லவே. உங்கள் நாவுக்குக் கசப்பானது அவர்கள் நாவுக்கு இனிப்பாயிருக்குமா? உங்களுக்குத் துன்பம் தருவது அவர்களுக்கு இன்பம் தருமா? உங்களுக்கு ஏற்காதது அவர்களுக்கு ஏற்குமா? உத்தம சற்குருவாக உலகில் அவதரித்தவர் திருவாய் மலர்ந்தருளின தங்க மொழியை உங்கள் மனதில் ஏற்றுக்கொள்ளுங்கள். "மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்."

மேலும், பாழ் மனையை வாழ் மனையாக்குவது கீர்த்தியேயன்றி, வாழ் மனையை பாழ் மனையாக்குவது கீர்த்தியல்ல. குருவிக் கூட்டைக் கோலால் கலைப்பதுபோல, ஸ்திரீ புருஷாள் கூடிவாழும் சமுசார வாழ்க்கையைக் குலைத்துப்போடுவது தர்மமல்லவே. நீங்கள் ஏற்காத் தொழில் புரிந்து ஏன் கெட்டுப்போகிறீர்கள்?

சிலர் "என் மருமகள் துஷ்டை, என் மருமகள் தூர்த்தை, ஆனதால் கொடிய நடத்துதலே சீர்ப்படுத்தும் வழி" என்று சொல்லுவார்கள். அன்பினால் துஷ்ட மிருகங்களும் இஷ்டமாகிவிடுகின்றனவே. அன்பினால் மனிதரை வசியப்படுத்துவது எத்தனை இலேசு. மாமியர் தங்கள் மருமக்கள்மாரை ஆதாயப்படுத்த அன்பே வழி. நீங்கள் தாய்போல் அவர்களை நேசித்தால், அவர்கள் பிள்ளைபோல் உங்களை நேசிப்பார்கள்.

"அன்பீனும் ஆர்வமுடைமை அதுவீனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு."

மி. மி.



CHILDREN'S CORNER.

## சிறுவர்க்கான கதை.

THE NEGLIGENT SERVANT.

### அசமந்த வேலைக்காரி.

(தொடர்ச்சி.)

(ஒரு நாள் ஒரு எஜமாட்டி தனது அசமந்த வேலைக்காரியாகிய சுந்தரியைக் கூப்பிட்டு: திருடர் நமது வீட்டில் நுழையாதபடி கதவைச் சார்த்திக்கொண்டிரு என்று சொல்லி வெளியே போனபின்பு, வேலைக்காரி கதவைச் சார்த்தாமல் நீரூற்றுக்குப் போய்த் திரும்பினதும், மெத்தையில் ஒரு வெள்ளாடு கண்ணாடியை உடைத்திருப்பதையும், அந்த அறையிலிருந்த இன்னொரு கண்ணாடியில் ஏதோ ஒரு காட்சியையும் கண்டு, திடுக்கிட்டு, ஆட்டைத் துரத்திவிட்டு விசனமாய் உட்கார்ந்திருந்தாள் என்று நாம் போனமுறை சொன்னோம்.)

வெளியே போயிருந்த எஜமாட்டி வெகு நேரம் சென்று வீட்டுக்குத் திரும்பினதும், வேலைக்காரப்பெண் விரைவாய் ஓடி "அம்மா, நான் இன்றைக்கு உங்கள் அரிய கட்டளையை அசட்டைபண்ணினதால், உங்களுக்கு ஆயிரம் ரூபாயினும் அதிகமான நஷ்டத்தை வருவித்தேன். இம்மட்டும் நான் செய்துவந்த ஏராளமான தப்பிதங்களை நீங்கள் தயவாய் மன்னித்துவந்ததுபோல், இந்த ஒருமுறை மட்டும் இந்தத் தப்பிதத்தையும் மன்னியுங்கள். இனிமேல் நான் இப்படி அஜாக்கிரதையாக இருக்கவேமாட்டேன். இன்றைக்கு நான் கற்றுக்கொண்ட பாடத்தை இனி ஒருக்காலும் மறவேன்" என்று அழுது புலம்பினாள்.

எஜமாட்டி நடந்தது என்னவென்று சுந்தரியைக் கேட்க, அவள் அவளை மெத்தைக்கு அழைத்துக்கொண்டு போய், அறைக்கு வெளியே நின்றுகொண்டு, உடைந்திருந்த கண்ணாடியைக் காட்டி, அது உடைந்த விதத்தைச் சவிஸ்தாரமாய் எடுத்துச் சொன்னாள்.

உடைந்த கண்ணாடியைக் கண்ட எஜமாட்டிக்கு மிகுந்த விசனம் உண்டானபோதிலும், அதை அவள் அடக்கிக்கொண்டு சுந்தரியை நோக்கி "பிரியமான பெண்ணே, இன்றைக்கு எனக்கு உண்டான நஷ்டம் எல்லா நஷ்டங்களிலும் அதிகப் பெரிதானது என்பதற்குச் சந்தேகமில்லை. இந்த அறையிலுள்ள இந்த இரண்டு கண்ணாடிகளும் எனது முன்னோரிடமிருந்து வமிச வழியாய் எனக்கு வந்த அரிய பொருட்கள். இவைகளில் ஒன்றை உனது அஜாக்கிரதையினால் இன்றைக்கு இழந்தேன். ஆகிலும், நீ இன்றோடாவது அசமந்த குணத்தை விட்டு சுறுசுறுப்பும் விவேகமும் உள்ள குணசாலிப்பெண் என்று பேரெடுக்கத் தொடங்குவாயாகில், அதுவே எனக்கு ஆயிரம் அருமையான கண்ணாடிகள் கிடைத்ததற்குச் சமானம். இதற்குமுன் நீ அடிக்கடி சுறுசுறுப்பாய் நடப்பேன் என்று வாக்குக்கொடுத்தும், அதின்படி நடந்ததில்லை. இந்த முறையும் நீ சுறுசுறுப்பாய் நடக்க வாக்குக்கொடுப்பதால், நீ செய்த தப்பிதத்தை நான் முழு மனதாலும் மன்னித்து, இனிமேலாகிலும் உன் வாக்கின்படியே சுறுசுறுப்பாய் நடந்துகொள்வாய் என்று நம்புகிறேன்" என்றாள்.

தான் கொடுத்த வாக்கின்படியே சுந்தரி அன்றுமுதல் வெகு சுறுசுறுப்போடும் விவேகத்தோடும் வேலைசெய்து வந்தாள். அநேக வாரங்கள் மாசங்கள் கழிந்தும், வீட்டில் ஒரு நஷ்டமாகிலும் உண்டானதில்லை. இதைக்குறித்து எஜமாட்டியும் பிள்ளைகளும் மிகுந்த ஆச்சரியப்பட்டு, ஒருநாள் சுந்தரியைக் கூப்பிட்டு இம்மாறுதலுக்குக் காரணமென்ன என்று கேட்டார்கள்.



அப்பொழுது சுந்தரி "மெத்தையில் கண்ணாடி உடைந்ததை நான் பார்க்க ஓடினபோது, அந்த அறையிலிருந்த மற்றொரு கண்ணாடியினுள் ஒரு துரைசானி நின்றுகொண்டு ஒரு கடிதத்தை எனக்குக் காட்டினாள். அதைக் கண்டதும் நான் திடுக்கிட்டு, அதை உற்று வாசிக்கையில், அதில் "அசமந்தக்காரி எவளோ அவள் அயோக்கியக்காரி என்று அழைக்கப்படத் தகுதியானவள்" என்று எழுதியிருந்தது. இதனால் என் நெஞ்சம் புண்ணாகி: எனது அசமந்தக் குணத்தினால் அயோக்கியக்காரி என்றல்லோ பேரெடுக்கவேண்டும்; நான் அப்படி பேரெடுப்பதிலும் சாகிறது உத்தமம்; ஆகையால் நான் இன்றோடு அசமந்தத்தை வேரோடு களைவேன் என்று தீர்மானம் பண்ணினேன். அந்தத் துரைசானி இன்னும் அந்தக் கண்ணாடிக்குள்ளேயே நிற்கிறாள். நான் வேலைசெய்யத் துவக்குமுன் தினந்தோறும் மேல் அறைக்குப் போய், அவளைக் கண்ணாடியினுள் கண்டு, அவள் கடிதத்தைப் பார்த்துவருவது வழக்கம். இந்தக் காட்சியே என்னில் இந்த நல்ல மாறுதலை உண்டுபண்ணிற்று" என்றாள்.

இதைக் கேட்டதும், பிள்ளைகளும் எஜமாட்டியும் அந்தத் துரைசானியைப் பார்க்க மெத்தைக்கு ஓடினார்கள். அங்கே கண்ணாடியில் தோன்றினது எதிரே சுவரில் மாட்டியிருந்த ஒரு பெரிய படத்தின் பிரதிவிம்பமேயொழிய வேறொன்றுமில்லை என்று அவர்கள் சுந்தரிக்குச் சொல்லி, அவள் அறிவீனத்தை அகற்றி, அந்தப் படத்தையும் அவளுக்கு வெகுமதியாகத் தந்தார்கள். எஜமாட்டியும் சுந்தரியில் இப்போது உண்டான பெரிய மாறுதலினிமித்தம் அவளை வெகுவாய்ப் புகழ்ந்து கொண்டாடினாள்.

GLEANINGS.

## சமாச்சாரக் குறிப்புகள்.

ருமானியா நாட்டு இராணியார் பெண்களின் உபயோகத்துக்கென்று பிரெஞ்சு பாஷையில் ஒரு பத்திரிகை பிரசுரம்செய்து வருகிறார்கள். இப்பத்திரிகைக்கு இத்தலி தேசத்து இராணியும், பெல்ஜியம் தேசத்து இராணியும், அவர் புத்திரியும் அநேக அரிய விஷயங்களை எழுதி அனுப்புகிறார்களாம்.

---

ஜப்பான் தீவின் இராணியார் ஜர்மன், பிரெஞ்சு, ருஷியன், இத்தாலியன் பாஷைகளை வெகு ஆவலோடு கற்றுவருகிறார்கள். இந்தத் தீவில் பதினெட்டு வருஷத்திற்குள்ளாக ஐஞ்ஞூற்று ஐம்பத்தேழு தினவர்த்தமானப் பத்திரிகைகளும் வேறனேக சீர்திருத்தங்களும் உண்டாகியிருக்கின்றன.

---

பம்பாயிலிருக்கும் ருக்மிபாய் என்னும் மாது இரண்டு ஐரோப்பிய துரைசானிமார் கொடுப்பதாக வாக்களித்திருக்கும் பண உதவியைக்கொண்டு லண்டன் நகருக்குப் போய் வைத்திய சாஸ்திரம் கற்றுவரத் தீர்மானித்திருக்கிறாள்.

---

பிரான்சு தேசத்தில் மாட்டு வெண்ணெய்க்குப்பதிலாய்த் தேங்காயிலிருந்து எடுக்கப்படும் ஓர்வித நெய்யை உபயோகித்து வருகிறார்கள். இது வெகு ருசியும் உடம்புக்கு அதிக சௌக்கியமானதாயும் இருக்கிறது.

---

ஜர்மன் தேசத்து சக்கரவர்த்தினியாகிய ஆகஸ்ற்றா என்பவர்கள் ஒரே குடும்பத்தில் இடைவிடாமல் நாற்பது வருஷம் வேலைசெய்துவரும் ஸ்திரீக்கு ஒரு நற்சாட்சி பத்திரமும் ஒரு தங்கச் சிலுவையும் கொடுப்பது வழக்கம். இப்படியாக ௧௮௭௭-ம் ௵ ஜனவரி ௴ முதல் ௧௮௮௮-ம் ௵ டிசம்பர் ௴ வரையில் அவர்கள் ஆயிரத்து ஐஞ்ஞூற்று முப்பத்தைந்து வேலைக்காரிகளுக்குப் பத்திரமும் சிலுவையும் கொடுத்திருக்கிறார்கள்.

CHILDBIRTH.

## பிரசவ நூல்.

(தொடர்ச்சி.)

**நீர்ப்பையும் குடல்களும்.**—கருப்பைக்கு முன்னாக நீர்ப்பையும் அதற்குப் பின்னாக அடிக்குடலும் இருக்கின்றன. இவைகள் நிறைந்திருந்தால், பிள்ளை வருவதற்கு வழி மிகவும் இடுக்கமாகிவிடும். நீர்ப்பையைக்குறித்து நாம் மிகவும் கவலையாயிருக்கவேண்டியது அதிக அவசியம். பிரசவவேதனைப்படும் சமயத்தில் சிறுநீர் வெளியே வாராதபடி நீர்ப்பையிலுள்ள வழி அடைபட்டுப்போகும். சில ஸ்திரீகள் இதனால் வெகுவான உபத்திரவம் அடைந்திருக்கிறார்கள்; நீர்ப்பை வெடித்துப்போனதும் உண்டு. நீர்ப்பையிலுள்ள சிறுநீரை சிராவணி என்னும் ஓர்வகைச் சிறுநீர்க்குழாயால் வெளிப்படுத்தலாம். ஆனால் அதை உபயோகிப்பது இப்படியென்று சாதாரண மருத்துவச்சிகளுக்குத் தெரியாது.

பிரசவவேதனை ஆரம்பித்ததும், நீர்ப்பையில் ஒன்றுமில்லாதிருக்கச் செய்யவேண்டியது; பின்பு இடைக்கிடையே அதைக் கவனித்துவரவேண்டும். நீர்ப்பையிலுள்ள நீரை வெளியிடுவது ஸ்திரீக்குக் கூடாமையாயிருந்தால், சீலையை வெந்நீரில் நனைத்து, அடிவயிற்றின்மேல் போடலாம். அவள் முழங்கால் முழங்கைகளை ஊன்றி குனிந்து நகர்வது நல்லது.

ஒரு ஸ்திரீயின் குடல்கள் திறக்கப்பட்டு சற்று நேரமானபின்பும், (அடிக்குடலைச் சுத்தமாக்கும்படி) கொஞ்சம் தண்ணீரை உட்செலுத்துவது நல்லது. (பீர்ச்சாங்குழாய் என்னப்படும் ஓர்வித சிறு நீர்க்குழாயில் எண்ணெய் தடவி மிகவும் மெதுவாய் உட்செலுத்துவதினால் இதை எளிதில் செய்யலாம்.) (இப்படி உட்செலுத்தப்பட்ட தண்ணீரை) ஸ்திரீயானவள் சில நிமிஷங்களாக வைத்திருந்து பின்பு வெளிவிடவேண்டியது. துணியைப் பந்துபோல் சுருட்டி, நீர்த்துவாரத்திற்கு எதிரே வைத்து அழுத்துவது இதற்கு உதவியாயிருக்கும்.

**பொய் வலிகள்.**—இவ்வலிகள் பிரசவிக்க ஒன்று அல்லது இரண்டு வாரங்களுக்குமுன் வேளாவேளைகளில் உண்டாகும். இவைகள் வயிற்றின் பற்பல பாகங்களிலும் ஒழுங்கீனமாய் உண்டாவதாலும், இவைகள் உண்டாகும்போது கருப்பையிலிருந்து இரத்தம் ஓடாததாலும், இவைகளைப் பொய் வலிகள் என்று அறிந்துகொள்ளலாம். குடல்களைச் சுத்தமாக்குவதினால் இவைகளைச் சாதாரணமாய் நீக்கிவிடலாம்.

### பிரசவவேதனையின் மூன்று நிலைகள்.

பிரசவவேதனை என்னப்படுவது கருப்பை திறந்து பிள்ளையை வெளியே தள்ளுவதாம். படிப்படியாய்க் கருப்பை தன்னைச் சேர்த்து இழுப்பதும் பின்பு தளர்வதுமாய் இருப்பதினால், சிசு கீழே இறங்குவதும் கொஞ்சம் மேலே போவதுமாய் இருக்கும்; மொத்தத்தில் சிசு முன்னோக்கியே செல்லுகிறது. இப்படி (தானாய்) அசையும்படிக்கான விதமாய்த் தேவன் கருப்பையை அமைத்திருக்கிறார். (மனிதனல்லாத) மற்ற மிருக ஜீவஜெந்துக்கள் தனிமையாயிருக்கும்போது, தங்கள் குட்டிகளைப் போடுகின்றன; பற்பல ஜாதி ஸ்திரீகளும் யாதொரு உதவியுமின்றி தங்கள் பிள்ளைகளைச் சுகமாய்ப் பெறுகிறார்கள். நாம் முன் சொன்னபடி அவசியமின்றி தலையிடுவதால் அதிக மோசம் உண்டாகும். வழக்கம்போல பிரசவவேதனைப்படுகிறவர்களுக்கு அவசரமாய் எதையும் செய்யக்கூடாது. பிரசவம் உண்டாகுமட்டும் மருத்துவச்சி பொறுமையாய்க் காத்திருக்கவேண்டும். ஒத்தாசை இருந்து அவசரப்படுவதைப்பார்க்கிலும் ஒத்தாசை இல்லாமல் இருப்பதே ஸ்திரீக்கு நல்லது.

கருப்பையின் வாய் திறப்பதே பிரசவவேதனையின் முதலாம் நிலை; பிள்ளை பிறப்பதே இரண்டாம் நிலை; அணையம் (அல்லது மாயை) விழுதலே மூன்றாம் நிலை.

பிரசவவேதனை சாதாரணமாய் நாலுமணி நேரத்திற்குக் குறையாமலும், இருபத்துநாலு மணிநேரத்திற்கு அதிகப்படாமலும் இருக்கும். முதற்பிள்ளை பிறக்கும்போது (பிரசவத்திற்குச் சம்பந்தமான, உறுப்புகளெல்லாம் அதிகமாய் நீட்டப்படவேண்டியதாகையால், அதிக நேரம் செல்லும். வருத்தமான பிரசவத்திற்கு இன்னும் கொஞ்சம் நேரம் அதிகமாய்ச் செல்லும்.

(இன்னும் வரும்.)

# மாதர் மித்திரி.

புத். ௨. ௧௮௮௬ ளு - மே மீ. இல. ௰௧.

NOTES.

## பத்திராதிபர் குறிப்புகள்.

THE EDUCATION OF WOMEN.

### பெண் கல்வியின் அவசியம்.

ஸ்திரீயானவள் எதையும் யோசிக்கக் கூடாத அடிமையல்லவென்றும், மனிதன் தனக்கு ஒழிந்த நேரங்களில் விளையாடும் வெறும் பொம்மையல்லவென்றும் ஒருவர் ஞானமாய்ச் சொல்லியிருக்கிறார். மனிதனையும் ஸ்திரீயையும் படைத்த சிருஷ்டிகர் உபயோகிப்பதற்கென்றே புத்தியைக் கொடுத்திருக்கிறார்; உபயோகப்படுத்தாமல் சும்மா விட்டுவைக்க அவர் அதைக் கொடுத்திருக்கிறதில்லை. மனதைப் பண்படுத்துவதும் அறிவை விர்த்திப்பதும் ஆண்களுக்குப் பயன்தருவதுபோலேயே பெண்களுக்கும் பயன்தரும் என்பது பிரத்தியட்சமான காரியம். புருஷரின் கல்வி அபிவிர்த்திக்கு அனுசாரணையாகக் கூறப்படும் நியாயங்களையெல்லாம் பெண்களின் உயர்தர கல்விக்கும் அனுசாரணையாகக் கூறலாம். வீட்டுக்கடுத்த விஷயங்களில் பெண்கள் எவ்வளவு உபயோகமுள்ளவர்களென்று எல்லோருக்கும் தெரியும். அவர்கள் செய்வதில் எல்லாம் விவேகமும் கூடிக்கொண்டால், வெகு நேர்த்தியாய் இருக்கும் அல்லவா? தாயானவள் தன் கீழிருக்கும் பிள்ளைக்குக் கல்வி கற்பிப்பது அவசியம். கற்பிப்பதிலும் பூரணமாய்க் கற்பிக்கவேண்டும். ஏனெனில் பிற்காலத்தில் இந்தப் பிள்ளை அநேக பிள்ளைகளுக்குத் தாய் அல்லது தகப்பனாகும் பொழுது, அவர்கள் அறியாமையில் கேட்கும் ஏராளமான கேள்விகளுக்கும் தகுந்த உத்திரவு சொல்லக்கூடியதாயிருக்கவேண்டும். லோகப்பிரசித்தமான ஊழியம் செய்வோர் சாதாரணமாய்ப் புருஷராயிருந்தபோதிலும், அதிகமாய் ஸ்திரீகளின் செல்வாக்கு அவர்கள் ஊழியத்திலும் உண்டு என்பதை எளிதில் அறியலாம். ஸ்திரீகளுக்கு இப்படிப்பட்ட வல்லமையிருப்பதால், அவர்கள் பூரணமாய்க் கல்வி கற்றிருப்பது அவசியம். அவர்கள் நாளுக்கு நாள் கல்வியில் அபிவிர்த்திக்கும்படி நாம் எவ்வழியிலும் பிரயாசப்படவேண்டியதும் அவசியம். ஸ்திரீகளின் செல்வாக்கு சகல தேசங்களிலும் காணப்படுகிறது. அவர்களுடைய நிலைமையைக் கொண்டே அந்தந்த தேசத்திலுள்ள ஜனங்களின் சன்மார்க்க சீரையும், ஆசார ஒழுக்கங்களையும், குணம் முதலிய விசேஷங்களையும் தெளிவாய் அறியலாம். எந்த தேசத்தில் கற்றறிந்த ஸ்திரீகள் ஏராளமாயிருக்கிறார்களோ அந்தத் தேசமே சகல தேசங்களுக்கும் மேலானதாயிருக்கும்.

FACTS.

## "சொல்வதின்படியே செய்."

"இந்து ஸ்திரீகளை உயர்ந்த நிலைமைக்குக் கொண்டுவரப் பிரயாசப்படுவதாக சொல்லிக்கொள்ளும் அநேகர் தாங்கள் சொல்வதுபோலவே செய்துகாட்டுகிறதில்லை என்று விசனத்துடன் அறிக்கையிடவேண்டியவர்களாயிருக்கிறோம். இதை நோக்கியே "நடந்துகாட்டாப் பிரசங்கம் முடிந்துதீராப் பிரசங்கம்" என்று நன்றாகச் சொல்லப்பட்டிருக்கிறது. திருஷ்டாந்தமாக, ஸ்திரீகள் கல்விகற்கவேண்டுமென்று பகிரங்கமாய் வற்புறுத்திப்பேசுவோரின் சொந்த மனைவிகளும் குமாரத்திகளும் ஒன்றும் தெரியாத பேதைகளாயிருக்கிறார்கள். சிசுவிவாகம் செய்வோரைச் சிட்சைபண்ணுவதுபோல பேசும் சிலர் தங்கள் குமாரத்திகளைக் கல்விகற்கும் சமயத்தில் கட்டிக்கொடுத்து, இப்படியாக அவர்களின் கல்வி அபிவிர்த்திக்கு இடையூறுசெய்கிறார்கள். எவை எப்படியிருந்தபோதிலும், தற்காலத்தில் பெரிய மாறுதல்கள் உண்டாவதுமன்றி, இந்து ஸ்திரீகளும் தாங்கள் உலகத்தில் செய்யவேண்டிய வேலையொன்று உண்டு என்பதின் உண்மையைக் கண்டறிந்திருக்கிறார்கள். சொல்வதுபோலவே செய்துகாட்டி, இந்து ஸ்திரீகளை உயர்ந்த நிலைமைக்குக் கொண்டுவர உண்மையாகப் பிரயாசப்படுவோருக்கு இது மெய்யாகவே சந்தோஷத்தையும் உற்சாகத்தையும் தரும் என்று நம்புகின்றோம்.

சென்னையில் பிரசுரமாகும் சிறந்த பத்திரிகை ஒன்றில் ஒரு இந்து பெருமாட்டி இதைக்குறித்துப் பின்வருமாறு எழுதுகிறாள்:—"தற்காலத்தில் இந்து ஸ்திரீகளுக்குள் காணப்படும் நல்ல மாறுதலால் ஒரு சாதாரண இந்துப் பெண்ணின் மனோபாவனைகளும் அநுபவங்களும் எவ்வளவாய் மாற்றப்படுகிறதென்று கைக்குமெய்யான ஒரு சிறு திருஷ்டாந்தத்தால் விளக்குவோம்; இந்த நல்ல மாறுதல்களை இந்து ஸ்திரீகளிடத்தில் சொற்பமாயாவது அதிகமாயாவது காணலாம். பதினாறு பிள்ளைகளுள்ள ஒரு பாரிக்குடும்பத்தில் ஒரு பெண் இருந்தாள்; இவளுக்கு மூத்த சகோதரிகள் எல்லாம் இவள் பிறக்குமுன் விவாகம்செய்யப்பட்டிருந்ததால், பெண்களில் இவள் ஒருத்தியும், சகோதரரில் நாலுபேரும் குடும்பத்தில் மீந்திருந்தார்கள். தாயும் தகப்பனும் புதிதாய்க் கிறிஸ்துமார்க்கத்தைச் சேர்ந்த பிராமணர். அவள் எந்தக் காரியத்தையும் தன் சகோதரர் செய்யும் அவ்வளவு நேர்த்தியாகச் செய்யாவிட்டால், அவர்கள் உடனே அவளை மட்டி என்று அழைப்பார்கள். ஆனால் எல்லாருக்கும் பெரியவனாகிய அவர்களின் மூத்த சகோதரன்மாத்திரம் அவளுக்கு எதிலும் அநுகூலமாயிருந்தான். இவன் சொல்வதை மற்றவர்கள் எதிர்த்ததுமில்லை....... இவன் அவளுக்கு நல்ல புஸ்தகங்களை வாசிக்கக் கொடுத்து, நேர்த்தியான புது எண்ணங்களை அவள் மனதில் தோன்றச் செய்து, பெரிய மனுஷரின் சரித்திரங்களையும் அடிக்கடி சொல்லிவருவான். இதை மற்ற சகோதரர் கண்டு, அவள்மேல் எரிச்சலானார்கள். அவளோ குடும்பத்தில் அப்



போது ஒரே பெண்ணாய் இருந்ததுபற்றி அவளுக்குத் தீது ஒன்றும் அவர்களால் செய்யக்கூடாமற்போயிற்று. அவள் தன் மூத்த சகோதரன் தனக்குக் கொடுத்த பெரும் புஸ்தகத்தைத் திறந்து வாசித்து யோசித்துக்கொண்டிருக்கையில், அவர்கள் அதைக் கண்டு குலுங்க நகைப்பார்கள். அவளின் நற்குணமுள்ள தாயும் பெண் அதிகம் படிப்பதால் கெட்டுப்போவாள் என்று பயந்து, அவள் அவைகளைப் படிப்பதில் பிரயோஜனம் ஒன்றும் இல்லை என்று எண்ணிக்கொண்டு, அவள் படிக்கும்போதெல்லாம் சமையல்வேலை செய்ய அவளை அடிக்கடி கூப்பிடுவாள். ஒரு நாள் அவள் 'மதிகெட்ட பெண்ணே, புஸ்தகங்களை வாசித்து, உன் புத்தியை ஏன் மயங்கச்செய்கிறாய்? படிப்பினால் பெண்ணுக்குப் பிரயோசனம் என்ன? அடுப்படிதான் அவள் படிக்கும் பள்ளிக்கூடம். ஒருத்தி எவ்வளவு படித்திருந்தாலும், கடைசியில் அடுப்புவேலைதான் அவள் செய்யவேண்டும்' என்று தன் மகளைக் கடிந்துகொண்டாள். தாயின் கட்டளைப்படியே அவள் பண்டங்களை விளக்கி, வீட்டைப் பெருக்கி, இன்னும் மற்ற வீட்டு வேலைகளைச் செய்துகொண்டிருக்கும்போது, அவளின் எரிப்புக்கார சகோதரர் அவளைப் பார்த்து நகைத்துப் பரியாசம்பண்ணி, தாயினிடம் ஓடி 'அம்மா, இதுதான் அவளுக்குச் சரி; அவளை அடுப்பண்டையே வேலைசெய்ய வையுங்கள்' என்று சொல்லுவார்கள்.......சாயங்காலத்தில் அவள் மூத்த சகோதரன் அறையில் பெரிய விளக்கு கொளுத்தப்பட்டதும், மற்ற சகோதரர் மேசையைச் சுற்றிலும் உட்கார்ந்துகொண்டு இலக்கணம், கணக்கு முதலிய பாடங்களை வெகு வருத்தத்துடன் படித்துக்கொண்டிருப்பார்கள். இவளோ அவர்கள் பக்கத்தில் ஒரு பலகையில் எழுதிப் படித்துக்கொண்டிருப்பாள். இதை அவர்கள் பார்க்கச் சகிக்காமல் அவளுக்கு அங்கே உட்கார இடம் கொடுக்கக்கூடாதென்று வாதாடுவார்கள். ஆனால் அவள் அதையெல்லாம் பொறுமையாய்ச் சகித்துக்கொண்டு தனது மூத்த சகோதரன் உதவியினால் மற்ற சகோதரரின் பாடங்களையெல்லாம் நன்றாய்ப் படித்துவந்தாள்......" இம்மட்டும் நாம் சொல்லிவந்ததைக்கொண்டு படிக்க ஆசைப்படும் பெண்ணுக்குத் தாயாராலும் மற்ற சகோதரராலும் எவ்வளவோ தடைகள் இருந்தபோதிலும், அவளின் மூத்த சகோதரன் அவளுக்கு உத்தம சிநேகிதனாயிருந்ததுமல்லாமல், அதிகமாய் அவளை உற்சாகப்படுத்திவந்தானென்றும் பார்க்கிறோம். சில சகோதரர் தங்கள் சகோதரிகள் படிப்பதை ஆசிக்கிறவர்கள்போல் வெளிக்கு வேஷங்காட்டி, உள்ளே எரிப்புக்கார தம்பிமாராயிருப்பது நல்லதல்ல. தாய் தந்தையரும் தங்கள் குமாரத்திகள் படிக்கத்தான் வேண்டுமென்று பகிரங்கமாய் அறிக்கையிட்டு, பின்பு அப்படிச் செய்யாதிருப்பது பரிதாபமான விஷயம். ஆகையால் ஒவ்வொருவரும் சொல்வதுபோலவே செய்யவும் பிரயாசப்படுவார்களாக.



THE LOST PIECE OF SILVER.

## காணாமற்போன வெள்ளிக்காசு.

இயேசு இப்பூலோகத்தில் சஞ்சரித்தபோது, யூத ஜாதியாரில் தங்களைச் சாதாரண ஜனங்களிலும் மேலாக எண்ணிக்கொண்ட பரிசேயர் வேதபாரகர் என்னப்பட்ட ஒரு வகுப்பார் இருந்தார்கள். ஜனங்களில் அற்பமாயும் தீட்டாயும் எண்ணப்பட்டவர்களுக்குங்கூட இயேசு உதவி செய்துவந்ததை இவர்கள் கண்டு, அவர் மேல் மிகுந்த எரிச்சலானார்கள். ஒருநாள் அவருடைய அருமையான புத்தி பிரசங்கங்களைக் கேட்கும்படி அநேக ஆயக்காரரும் பாவிகளும் அவரைச் சுற்றி நிற்கையில், பரிசேயரும் வேதபாரகரும் முறுமுறுத்து: இவர் பெரியோர் சிறியோர் என்று கொஞ்சமும் கவனிக்கிறதில்லை, பாவிகளை ஏற்றுக்கொண்டு அவர்களோடு சாப்பிடுகிறார் என்றார்கள். அப்பொழுது அவர்களுக்கு அவர் சொன்ன உவமைகளில் காணாமற்போன வெள்ளிக்காசின் உவமை ஒன்று. அதின் விவரமாவது:—

ஒரு ஸ்திரீ பத்து வெள்ளிக்காசை உடையவளாயிருந்து, அதில் ஒரு வெள்ளிக்காசைப் போக்கடித்தால், விளக்கைக் கொளுத்தி, வீட்டைப் பெருக்கி, அதைக் கண்டுபிடிக்கிறவரைக்கும் ஜாக்கிரதையாய்த் தேடாமலிருப்பாளோ? (படம் பார்க்க.) கண்டுபிடித்தபின்பு, தன் சிநேகிதிகளையும் அயல்வீட்டுக்காரிகளையும் கூடவரவழைத்து: காணாமற்போன வெள்ளிக்காசைக் கண்டுபிடித்தேன், என்னோடுகூட சந்தோஷப்படுங்கள் என்பாள் அல்லவா? அதுபோல மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் தேவனுடைய தூதருக்குமுன்பாகச் சந்தோஷமுண்டாயிருக்கிறது என்றார்.

தம்மைக்குறித்து முறுமுறுத்த பரிசேயருக்கும் வேதபாரகருக்கும் இயேசு இந்த உவமையினால் ஒரு நற்போதனையைக் கற்றுக்கொடுத்தார். தம்மண்டை வந்த அசட்டைபண்ணப்பட்ட ஏழைகள் தங்களைப் பாவிகள் என்று எண்ணினபடியால், காணாமற்போன வெள்ளிக்காசைப்போல் இருந்தார்கள். பரிசேயரோ தங்களைப் பாவஞ்செய்யாத நீதிமான்களாக எண்ணிக்கொண்டார்கள். இவர்களால் அசட்டைபண்ணப்பட்ட பாவிகள் உண்மையை விட்டு விலகி காணாமற்போனவர்களாயிருந்தபோதிலும், கிறிஸ்து அவர்களை அப்படியே விட்டுவிடாமல், திரும்பவும் கண்டுபிடித்துத் தம்மண்டைக்குக் கொண்டுவரச் சித்தமானார். ஆகையால் பரமண்டலத்தில் தேவதூதருக்கு முன்பாக குணப்பட்ட இந்த ஏழைப் பாவிகளைக்குறித்துச் சந்தோஷமுண்டாகியிருக்கிறது; பாவிகளும் அப்படியே மிகுதியும் சந்தோஷப்பட வேண்டியவர்களாயிருக்கிறார்கள். பூலோகத்தில் உள்ள சகல மனுஷரும் பாவிகளானபடியால், அவர்கள் எல்லாரும் தேவனை விட்டு வழிவிலகிப்போனார்கள். அவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பவர் ஒருவரும் இல்லை. ஆனால் இயேசுகிறிஸ்துவோ காணாமற்போன எல்லாரையும் தேடி இரட்சிக்க இவ்வுலகத்துக்கு வந்தார். ஆகையால் குணப்படும் பாவிகள் தாமதிக்காமல், சீக்கிரம் இயேசுவண்டை ஓடுவது அவசியம். காணாமற்போன வெள்ளிக்காசை வெகு நாட்சென்று தேடினால், அதைக் கண்டுபிடிப்பது வெகு வருத்தமாயிருக்கும். மேலும் அதிக தூசியினால் மூடப்பட்டு, அழுக்கு சேர்ந்து, அதின் திறம்கூட மாறிப்போகும். இப்படியே கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் எந்தப் பாவியும் அவரண்டைக்குக் காலதாமதமின்றி உடனே ஓடிவரவேண்டியது. ஏனெனில் அவன் அதிகப் பாவத்தில் விழுந்து புரண்டு முழுவதும் மறைந்து பிசாசுக்குப் பிள்ளையாய்ப் போவதைப்பார்க்கிலும், தேவனின் பிள்ளையாவதற்கு உடனே ஓடிவரவேண்டியது. வெள்ளிக்காசு காணாமற்போனதும், உடனே அதைத் தேடுவதால், எவ்வளவு இலேசாய்க் கண்டுபிடிக்கலாமோ அப்படியே ஒவ்வொருவரும் அதிக பாவங்களாலும் அவிசுவாசத்தாலும் கறைப்பட்டுப் போகுமுன் கர்த்தரண்டைக்கு ஓடிவருவது நல்லது.



HYMN.

## ஞான கீதம்.

HUMAN NATURE.

### மனுஷ சுபாவம்.

ஒரே கர்த்தா இருக்கிறார்,
பிதா குமாரன் ஆவியார்;
அவர் எல்லாம் சிஷ்டித்தவர்,
முடியவும் விசாரிப்பர்.

2. சிஷ்டிப்பில் ஆதி மானிடர்
தெய்வீக சாயலானவர்;
அப்போது அவர்கள் வரம் [illegible]ம்.
மெய்ஞ்ஞானம், சுத்தம், பாக்கிய

3. அதை பிசாசின் சூதினால்
நாம் போக்கடித்த படியால்,
ஜென்மத்தினாலும் கெட்டவர்,
நடக்கையாலும் பாதகர்.

4. சீர் ஒன்றும் இல்லை, போயிற்று;
இருதயத்தின் நினைவு
எல்லாம் துரோகம்; சர்ப்பனை,
துர் இச்சை, மோகம், பெருமை.


5. நாம் தப்பிக்கொண்டு சேர்ப்பட
வகைபார்த்தாலும் விருதா;
கூடாது; சுவாமி ஒருத்தர்
ரட்சிப்புண்டாக்க வல்லவர்.

### LAHORE.
### லாகூர்.

இந்தியா தேசத்தின் வடமேற்கு மூலையில் ஐந்து அழகிய நதிகளால் நீர்ப்பாய்ச்சல் பெற்ற பஞ்சாப் தேசத்தின் தலைநகராகிய லாகூர் என்னும் பட்டணம் ரவி என்னும் நதிக்கு ஒருமயில் தூரத்தில் இருக்கின்றது. லவபுரம் என்பது லாகூர் என மருவியதாக சாதாரணமாய் எண்ணப்படுகின்றது. லவன் என்பவன் இராமனுடைய புதல்வன்; ஆகவே லவபுரம் என்றால், லவனுடைய நகரம் என்பது பொருள்.

பஞ்சாப் தேசத்தில் சீக்கியர் என்னும் ஜாதியார் ஏராளமாய் வசிக்கிறார்கள். சீக்கியர் என்னும் பதம் சீஷர் என்பதின் மருவு. இவர்கள் தங்கள் குருக்களிடத்தில் காண்பித்த அத்தியந்த பக்தி விநயத்தினால் அவ்வாறு அழைக்கப்பட்டார்கள். இவர்களின் முந்தின குருவாகிய நானக்ஷா என்பவன் காலத்தில் இவர்கள் ஓர்வித மதசம்பந்தமான வகுப்பாராய்மாத்திரம் இருந்தார்கள். கடைசிக் குருவாகிய குருகோவிந்து என்பவன் காலத்திலோ இந்துக்களோடும் மகமதியரோடும் போர்செய்யும் யுத்தவீரர்களானார்கள். அப்பொழுதுதான் சீக்கியர் என்னும் பெயர் சிங்கம் என்னும் பொருள் தரும் சிங் என்று மாற்றப்பட்டதுமல்லாமல், எஃகை இவர்கள் எந்த ரூபமாயாவது தங்களிடத்தில் எப்போதும் வைத்துக்கொண்டிருக்கவேண்டுமென்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. இவர்கள் அடிக்கடி மகமதியரோடு சண்டைசெய்து, கடைசியாக இங்கிலீஷ்காரரோடும் யுத்தம்புரிந்து ஜெயிக்கப்பட்டார்கள்.

லாகூர் சீக்கியரின் லவுகிக நகரம். மொகலாயர் இந்தியாவில் அரசாட்சிசெய்த காலத்தில் அநேக அரசருக்குத் தலைநகராயிருந்ததும் லாகூர்தான். அக்பர், அவுரங்கசீப் முதலிய கீர்த்திபெற்ற மொகலாய அரசர்கள் இந்நகரை அநேக அழகிய மாடமாளிகைகளாலும் கூடகோபுரங்களாலும் அலங்கரித்தார்கள். மொகலாய ராஜ்யம் இந்தியாவிலிருந்து ஒழியவே, லாகூர் நகரிலுள்ள கட்டடங்களும் அழிந்துபோயின. சிலகாலம் சென்று சீக்கியருக்குள் 'பஞ்சாபின் சிங்கம்' என்று பேரெடுத்தவனாகிய ரணசித்சிங் என்பவன் லாகூரை ஒருவாறு அதன் முந்தின சீருக்குக் கொண்டுவந்தான். ரணசித்சிங் அடக்கம்செய்யப்பட்ட இடத்தில் கட்டப்பட்டிருக்கும் அவன் சமாதி சீக்கியரின் பிரதான ஸ்தலங்களில் ஒன்று. இதைச் சுற்றிலும் பதினொரு சிறு திட்டுகள் உண்டு; அவை ஒவ்வொன்றிலும் அவனுக்குப்பின் மரித்துப்போன அவன் பதினொரு மனைவிகளின் சாம்பல் இருப்பதாக எண்ணப்படுகிறது. தற்காலத்தில் லாகூர் நகரில் ஒரு பெரிய சர்வகலாசாலையும், மேயோ வைத்திய சாலையும், இன்னும் சில உபயோகமான கட்டடங்களும் உண்டு. ஏறக்குறைய அந்நகரில் லட்சத்து ஐம்பதினாயிரம் ஜனங்கள் வசிக்கிறார்கள். நகரமெங்கும் நீண்ட தெருவுகளையும், உயர்ந்த வீடுகளையும், அழகிய கோரிகளையும் காணலாம். இங்கிலீஷ்காரரை வெகு வீரியத்தோடு எதிர்த்து சண்டைசெய்த சீக்கியர் இப்பொழுது அவர்களுக்கு வெகு உண்மையுடன் போர்த்தொழில் புரிந்து வருகிறார்கள்.



LAHORE.
லாகூர்.

GOOD WORDS FOR WOMEN.

# நங்கையர்க்கு நல்லுரை.

## 11. கணக்கு.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்றாள் ஔவை. ஸ்திரீகளுக்கும் புருஷருக்கும் எழுதவும், வாசிக்கவும், கணக்குப்பார்க்கவும் தெரிந்திருப்பது அவசியத்திலும் அவசியம். கணக்கு நால்வகைப்படும்: கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல். இவற்றைக் கற்கும் வழிவகைகளை எளிதில் காட்ட உபாத்திமாரும் பற்பல சிறந்த நூல்களும் எங்கும் ஏற்பட்டிருப்பதால், அவற்றை நான் இங்கே விவரிப்பதில்லை. சாதாரண விதிகள் என்னும் இந்நால்வகைக் கணக்கும் நினைப்பூட்டுகிற நால்வகைக் கடமைகளை நமது நாட்டுச் சகோதரிகள் நன்றாய் அறிந்துகொள்ளும் பொருட்டு சில குறிப்புகளை இங்கே இம்முறை எடுத்துரைக்க மனதாயிருக்கிறேன்.

கூட்டல்: தேனீ பல புஷ்பங்களினுமிருந்து வெகு இனிமையான தேனைக் கூட்டிச் சேர்ப்பதுபோல், ஸ்திரீகள் பலவிதத்திலும் இகபரத்துக்கான இனிய விஷயங்களைக் கூட்டிச் சேர்க்கவேண்டியது. நமது கண் காணும் காட்சிகளும், வாசிக்கும் நூல்களும், பிறரால் கேட்கும் விசேஷங்களும் புஷ்பங்களாம். அவைகளால் நாம் கற்றுக்கொள்ளும் நல்ல விஷயங்கள் தேனுக்கு ஒப்பாம். இரண்டும் இரண்டும் நாலு என்று கூட்டத் தெரியாதவர்களை அறிவீனரென்று நாம் அகற்றிவிடுவதுபோலவே, அனுதின அனுபவத்தால் தங்கள் மனதில் நற்காரியங்களைச் சேர்த்துவாராதவர்களையும் அறிவீனரென்றே அழைக்கவேண்டும். "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள், கரும்புள்ளபோதே ஆட்டிக்கொள்" என்னும் பழமொழிப்படியே நற்காரியங்களைக் கேட்கவும் வாசிக்கவும சமயம் கிடைக்கும்போதெல்லாம், அவைகளை ஆவலோடு கூட்டிச் சேர்த்து நமது மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். ஸ்திரீகள் தங்கள் வீடுகளில் முன் இராத நற்பழக்கங்களும், முன் நடந்திராத நல்வேலைகளும் தினந்தோறும் வந்து சேரும்படி முயல்வது அவசியம். இதற்காக நல்லோரின் கூட்டுறவும், பெரியோரின் சகவாசமும் கிடைக்கும்படிப் பிரயாசப்படுவது மிகவும் நன்று. ஏனெனில் "பூவோடு கூடிய நாரும் மணம் பெறுமல்லவா?" ஒன்றொன்றாய் தானேறுதேயன்றி ஒருமிக்க நூறேறுதில்லை. இதையறிந்து, நாம் தினந்தோறும் நற்காரியங்களைக் கொஞ்சம் கொஞ்சமாய் நமது மனதில் கூட்டிவைத்து வருவோமாகில், கடைசியில் அவையெல்லாம் ஒரு பெரிய களஞ்சியமாகிவிடும்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

கழித்தல்: சுதேசிகளின் குடும்பங்களில் குடிகொண்டிருக்கும் சகல விண்பத்திகளுக்கும் துர்ப்பழக்கங்களுக்கும் ஸ்திரீகளே குருபீடங்கள் என்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். நீரைத் தள்ளிப் பாலை அருந்தும் அன்னபட்சிபோல், நற்காரியங்களை ஏற்று, துர்க்காரியங்களைக் கழித்து அகற்றுவது அறிவுடையோர் கடமை. அறியாக் குழந்தைகளுக்குக் கலியாணம் செய்வதும், விதவா விவாகத்தை



வெறுத்துத் தள்ளுவதும், குடும்பங்களில் நடக்கிற சுபதுக்க விஷயங்களில் அபரிமிதமான பணங்களை அநியாயமாய்ச் செலவிடுவதும், குருட்டுத்தனமாய்க் கோடாங்கி கேட்பதும் குறிபார்ப்பதும், கண்மூடிக் கடன்பட்டு கலங்கித் தவிப்பதும், இது போன்ற வேறநேக சங்கதிகளும் எவ்வளவு பொல்லாப்பான காரியங்கள். இத் துர்க்காரியங்களை விலக்கவேண்டுமென்று புருஷர் எவ்வளவு பேசினாலும், எத்தனை முயற்சி செய்தாலும், வீட்டுத் தேவதைகளாகிய பெண்டுகள் ஒத்துநின்று அவைகளைக் கழித்து அகற்றுவிட்டால், ஒரு பயனும் விளையாது. இந்து ஸ்திரீகள் அவபக்தியால் நடப்பிக்கும் கழிப்புக் கழித்தல் என்ற வீண் வேலையைத் தொலைத்து, இத்தேசத்துக்கு அனர்த்தம் விளைவிக்கும் சகல துர்க்காரியங்களையும் கழித்துவிட முயல்வதே முக்கியம்.

"ஊதியம் என்ப தொருவற்குப் பேதையார்
கேண்மை ஒரீஇ விடல்."

பெருக்கல்: பிறத்தியாருடைய குற்றங்குறைகளைப் பெருக்கிப் பேசுவது நமது தேசத்தாருக்கு இயல்பு. துரும்பைத் தூணாக்கி, தூணை மலையாக்கும் இவ்வகைப்பட்ட அநீதமான பெருக்கல் நம்மிடம் காணப்படுவது சரியல்ல. இது பிறருடைய வாழ்வைக் கெடுத்து, அவர்களைத் தாழ்வுக்குக் கொண்டுவரும் தீதான வழி. அணுவளவு பொய்பேச ஆரம்பித்தால், நாளடைவில் மலையளவு பொய்சொல்ல நேரிடும். பிறர் வாழ்வும், நமது சுய வாழ்வும் நியாயமாய்ப் பெருகும்படி பார்ப்பது நமது கடமை. நன்முயற்சி, நல்வாக்கு, நல்வேலை, இவையெல்லாம் வாழ்வு பெருகுவதற்கான வழி. நமக்குக் கிடைக்கும் சொற்ப ஈவுகள் நாளொரு வண்ணமாய்ப் பெருகவேண்டுமானால், ஒன்றை ஆயிரமும், அணுவை மலையுமாக்கும் அளவிறந்த வல்லவராகிய கடவுளின் திருக்கரத்தில் அவைகளை ஜெபத்தினால் ஒப்புவிப்பதே உத்தம வழி. பிறருடைய புகழ்ச்சி பெருகவேண்டுமானால், நாம் அவர்களின் நற்காரியங்களை எடுத்துப் பலரும் அறியப் பிரசித்தப்படுத்துவதும் நல்லது.

"முயற்சி திருவினை யாக்கு முயற்றின்மை
இன்மை புகுத்திவிடும்."

வகுத்தல்: நமது கைக்கெட்டும் பொருளெல்லாம் அவரவர் ஏகாங்கியாய் அநுபவிப்பதற்கென்று அருளப்படாமல், நமக்கடுத்த யாவரும் பகுத்து அனுபவிக்கும்படி அருளப்பட்டனவாம். ஒரு மனிதனின் சம்பாத்தியம் அவன் குடும்பம் அனைத்தின் நலத்துக்கென்றும், ஒரு குடும்பத்தின் நன்மைகள் அதைச் சூழ்ந்திருக்கும் இதர குடும்பங்களின் நலத்துக்கென்றும் இருக்கின்றன என்பது பிரத்தியட்சம். வீட்டாருக்குள் ஏற்ற வண்ணம் பிரித்துக் கொடுக்கும் தொழில் விசேஷமாய் ஸ்திரீகளுக்குரியது. புருஷரின் சம்பாத்தியம் குடும்பம் முழுமைக்கும் போந்ததாகும்படி பிரித்துக் கொடுப்பவளே சமர்த்தியாவாள். பத்துப்பேருக்கு ஐந்து, பதிற்றை ஐந்து என்று அவளுக்குத் தெரிந்திருக்கவேண்டும். அவள் பத்துப் பேரையும் நினைக்கவும் வேண்டும், கையிலிருப்பது ஐந்தென்பதை மறக்கவும் கூடாது. கொடுத்தாருக்குக் குறையில்லை, இட்டுக்கெட்டவர் இல்லை.

"சுற்றத்தாற் சுற்றப்பட ஒழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன்."

மி. மி

CHILDREN'S CORNER.

## சிறுவர்க்கான கதை.

THE COCK.

### சேவல்.

ஒரு கிராமத்தில் ஏழைக் குடியானவன் ஒருவன் இருந்தான். இவன் தினந்தோறும் தனது எஜமான் வீட்டிற்குப்போய்த் தனக்கு ஒப்புவிக்கப்பட்ட வேலையை வெகு உண்மையோடும் ஒழுங்கோடும் செய்து வந்தும், தனக்கு சொற்ப கூலி கிடைத்ததென்று யாரிடத்திலும் குறை கூறினதுமில்லை, முறையிட்டதுமில்லை. இவன் எக்காலத்திலும் எந்த நிர்ப்பந்தத்திலும் இவ்வாறு சந்தோஷமாயிருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்த அயலார் "குறையற்ற குடியானவன்" என்று அவனைப் புகழ்ந்து வந்தார்கள். இவனுக்குக் கிடைத்த இந்த நற்பேர் சுற்றுப்புறமெங்கும் பரம்பிவிட்டது. ஆகையால் சிலர் திரண்ட திரவியம் உடைய சீமான் என்று அவனை எண்ணார்கள்.

பலராலும் ஆஸ்திக்காரனென்று தப்பாய் எண்ணப்பட்ட இந்த ஏழை மனிதனுடைய வீட்டைக் கொள்ளையடிக்க ஒருநாள் இரண்டு திருடர் வெகு தூரத்திலிருந்து அந்தக் கிராமத்துக்கு வந்தார்கள். அவர்கள் நடுராத்திரியில் வீட்டிற்குப் பின்புறத்தில் ஏணி வைத்து, மெதுவாய் ஏறி, வீட்டிற்குள் குதித்தார்கள். திடீரென்று குதித்த சத்தத்தினால் திடுக்கிட்ட வீட்டுச் சேவல் வெகு பயங்கரமாய்க் கூவிச் சத்தம்பண்ணிற்று. திருடர் இதைப் பார்த்து, மிகவும் பயந்து, ஓடுவதற்கு எத்தனித்தபோதிலும், குடியானவனும் அவன் மனைவி மக்களும் சேவலின் சத்தத்தை ஒரு பொருட்டாய் எண்ணாமல், அயர்ந்து நித்திரைசெய்வதைக் கண்டு சற்றும் அதைரியப்படாமல், வீட்டிலிருந்த விசேஷித்த பொருட்களைக் கொள்ளையடித்துக் கொண்டுபோய்விட்டார்கள்.

மறுநாள் காலையில் குடியானவன் விழித்துப் பார்த்தபோது, தனக்கு உண்டான நஷ்டத்தைக்குறித்து அதிகமாய் விசனப்படாமல், தனது உத்தம எசமானிடம் ஓடி அதைத் தெரிவித்தான். எசமான் அதை உடனே மேலான அதிகாரிகளுக்குத் தெரிவித்து, திருடரைக் கண்டுபிடிக்கும்படியான ஏற்பாடு செய்தான். அந்தத் திருடர் வெகு தூரத்திலிருந்து அக்கிராமத்திற்குப் புதிதாய் வந்தவர்களானதால், அவர்கள் இன்னாரென்று எளிதில் கண்டுபிடிக்கக்கூடவில்லை. இப்படியாக அநேக மாதங்களும் வருஷங்களும் கழிந்துபோயின.

வெகுகாலம் சென்று குடியானவன் வசித்த கிராமத்துக்குக் கொஞ்சம் தூரத்தில் இருந்த வேறொரு கிராமத்தில் அதே திருடர் கொள்ளையடிக்க மறுபடியும் வந்திருந்தார்கள். அவர்கள் அன்றிரவு அங்கிருந்த சத்திரத்தில் தங்கி, மிகவும் அயர்ந்து தூங்கிக்கொண்டிருக்கையில், சத்திரக்காரனுடைய சேவல் ஒன்று ஏதோ ஒரு சத்தத்தைக் கேட்டு உரத்திக் கூவிற்று. கூவினதும், திருடரில் ஒருவன் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தான். உடனே அவன் கூட்டாளி காரியம் என்னவென்று விசாரிக்க, அவன் "இந்தக் கெட்ட சேவல் என்னை ஒருக்காலும் விடவே மாட்டாது போலிருக்கிறது. இதற்கப்பாலுள்ள கிராமத்தில் நாம் சில வருஷங்களுக்குமுன்னே 'குறையற்ற குடியானவன்' வீட்டில் கொள்ளையடித்ததுமுதற்கொண்டு இந்தக் கெட்ட சேவல் நம்மைப் பின்தொடர்ந்து, நாம் அந்தக் கிராமத்துக்குச் சமீபமாய் வந்ததும், நம்மைப் பார்த்துக் கூவுகிறது. இது என்னில் மிகுந்த பயத்தை உண்டாக்குகிறது" என்று சொன்னான். அதற்கு அவன் சிநேகிதன் "பயப்படாதே, படுத்துக்கொள்" என்று சொல்ல, மறுபடியும் இருவரும் படுத்துத் தூங்கினார்கள்.



இவர்கள் படுத்திருந்த இடம் ஒரு மரப்பலகையால் சத்திரக்காரனுடைய அறையிலிருந்து தடுக்கப்பட்டிருந்தது. திருடர் பேசினதெல்லாம் அப்போது விழித்திருந்த சத்திரக்காரன் மனைவியின் காதில் விழவே, அவள் அதைத் தன் புருஷனுக்கு அறிவித்தாள். அவன் உடனே காலதாமதமின்றி சேவகரிடம் தெரிவித்து, திருடரை அவர் வசம் ஒப்புவித்தான். "குறையற்ற குடியானவனின்" பேர் எங்கும் தெரிந்திருந்தபடியால், அவன் வீட்டில் களவு போன சங்கதியும் அவன் வசித்த கிராமத்தைச் சுற்றியிருந்த சகலருக்குந் தெரிந்திருந்தது. மறுநாள் காலையில் கிராமத்தாரும் அதிகாரிகளும் கூடி, எங்கும் கொள்ளையடித்துவந்த அந்த இரண்டு திருடரையும் தூக்கிக் கொலைசெய்தார்கள்.

குடியானவனின் எஜமான் இவைகளைக் குறித்துக் கேள்வியாகி, மிகவும் சந்தோஷப்பட்டு, தனது உண்மையுள்ள ஊழியக்காரனுக்குண்டான சகல நஷ்டத்தையும் நிவர்த்திபண்ணினான்.

இதனால் நாம் கற்றுக்கொள்ளும் படிப்பினை யாதெனில் "பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவான்" என்பதே.

GLEANINGS.

## சமாச்சாரக் குறிப்புகள்.

கடந்த மாதத்தில் பீஷ்வார் நகரில், பலமான பூகம்பமொன்று உண்டாகி அநேக வீடுகள் இடிந்து விழுந்துபோயினவாம்.

அமெரிக்காவில் கருப்பஞ் சக்கைகள் கொழுத்தாடைகள் முதலிய கரும்பின் உபயோகமற்ற பாகங்களைக்கொண்டு வெகு நேர்த்தியான வெள்ளைக் காகிதம் செய்கிறார்களாம்.

சென்ற மாதம் ஹோல்கார் மகாராஜா அவர்களின் இளைய குமாரத்திக்கு வெகு வைபவத்துடன் கலியாணம் நடந்தது. மகாராஜாவின் ஜேஷ்ட புத்திரி இன்னும் விவாகமாகாமல் இருக்கிறாள்.

வைத்திய சாஸ்திரம் கற்கும்பொருட்டு ருக்மிபாய் என்னும் பெண் பம்பாய் நகரை விட்டு இங்கிலாந்து தேசம் போயிருக்கிறாள். இதற்கென்று சில அங்கிலேய பெருமாட்டிகள் நாலாயிரத்து ஐந்நூறு ரூபாய்க்குச் சரியான நானூற்றைம்பது பவுன் சேர்த்துக் கொடுத்திருப்பதுமன்றி, ஒரு கனவானுடைய மனைவி அவளுக்குச் சாப்பாடும், பாடசாலைச் செலவும் ஒரு வருஷத்துக்குக் கொடுப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறாள்.

ருஷியா தேசத்தின் தலைநகராகிய சென்ற் பீற்றர்ஸ்பர்க் பட்டணத்தில் பனிக்கட்டியினால் மிகச் சிங்காரமான ஒரு அரண்மனை கட்டப்பட்டிருக்கிறது. அதனுள் தடுக்கப்பட்டிருக்கும் அறைகளும், கட்டில், நாற்காலி, அடுப்பு முதலிய சாமான்களும் பனிக்கட்டியினாலேயே செய்யப்பட்டிருக்கின்றன. இரவில் இக்கட்டடம் மின்சார ஒளியினால் செகஜோதியாய்ப் பிரகாசித்துப் பார்ப்போரை வியக்கச்செய்கிறது.

CHILDBIRTH.

## பிரசவ நூல்.

(தொடர்ச்சி.)

### கருப்பை திறத்தல்.

பை திறக்கும் விதம்.—கர்ப்பாசயத் ாய் ஓர்வித தடிப்பான பசையாகிய ஆப்பினால் கர்ப்ப காலத்தில் மூடப்பட்டிருக்கிறதென்று மேலே குறித்துக்காட்டினோம். சிசுவானது கருப்பையின் வாயின் மூலமாய் வெளிப்படுமுன், அந்த வாய் விரிவாகத் திறக்கப்படவேண்டியது. இதுதான் பிரசவ வேதனையின் முதலாம் நிலையில் நடக்கும் விசேஷம்.

வலி உண்டாகும் ஒவ்வொரு சமயத்திலும் கருப்பை சுருங்கி சுருங்கி, ஒரு மேளத்தைப் போல கெட்டியாகிவிடுகிறது. இப்படி அது கெட்டியாவதனால், கருப்பையின் கழுத்து மேலே இழுக்கப்பட்டு, பையானது குறுகிப் போகிறது. ஆனால் சிசு இருக்கும் நீர்ப்பையே விசேஷமாய்க் கர்ப்பாசயத்தைத் திறந்துவிடுகிறது. (பையிலுள்ள) நீர் ஒரு மிருதுவான ஆப்பையைப்போல (படிப்படியாய்க் கருப்பையைத் திறந்துகொண்டுவருகிறது.) இப்படியிராவிட்டால், பிரசவத்தில் சாதாரணமாய் உண்டாகும் வேதனையைவிட வெகு அதிகமான வேதனை உண்டாக இடமுண்டு.

பூர்த்தின மெய் வலிகள்.—பொய் வலிகள் இவையென்று மேலே குறித்துக்காட்டினோம். அவைகள் உண்டாகும்பொழுது, கருப்பை மிருதுவாயும், அதன் வாய் அடைபட்டும் இருக்கிறது. மெய்வலிகள் உண்டாகும்பொழுதோ கருப்பை கெட்டியாய்ப் போவதுமன்றி, அதன் வாயிலிருந்து இரத்த ஒழுக்கும் உண்டாகிறது; இதனால் கருப்பை திறக்கிறதென்று தெரியவருகிறது. இந்த வலி சாதாரணமாய் இடுப்பிலும் அடி முதுகிலும் முதலில் ஆரம்பித்து, பின்பு மெதுவாய் முன் பக்கத்திலும் சிலவேளைகளில் தொடைகளிலும் தோன்றுகிறது. வலி உண்டாகும் ஒவ்வொரு சமயத்திலும் கருப்பை கொஞ்சம் திறந்து, பின்பு சற்று அமர்ந்திருக்கிறது. இடைவிடாமல் வலி உண்டாகிக்கொண்டிருந்தால், தாயானவள் மிகவும் மெலிந்துபோவாள்; ஆகையால் இடைக்கிடை வலி நிற்பது தாயின் இளைப்பை வெகுவாய் ஆற்றுகிறது. இதனால் மற்ற அவயவங்களுக்கும் தளர்வதற்குச் சமயம் உண்டாகிறது. கருப்பை விடாமல் சுருங்கிக்கொண்டேயிருந்தால், இந்த அவயவங்களுக்குக் கெடுதி உண்டாகும். கடைசியாக வலி இருக்கும்பொழுதே இரத்தம் அதிகமாய் வெளிப்படாதபடி கருப்பை கெட்டியாய்ப்போய்விடுகிறது. இரத்தம் வெகுநேரம் வெளிப்பட்டுக்கொண்டே இருந்தால், சிசு மரித்துப்போக இடமுண்டு.

கருப்பையைச் சோதித்தல்.—மருத்துவச்சி பிரசவவேதனை எம்மட்டும் வந்துவிட்டதென்று ஏற்கனவே அறியும்படி பிரயாசப்படவேண்டியது. இதற்கென்று அவள் தனது சுட்டுவிரலில் எண்ணெயை நன்றாய்த் தடவி, அது கருப்பையின் அடிபாகத்தைத் தொடும்மட்டும் யோனித் துவாரத்தின் வழியாய் அதை உட்செலுத்தவேண்டியது. அப்படி அதைத் தொடக்கூடாவிட்டால், ஸ்திரீ நிற்கவேண்டியது; அப்பொழுது அது கீழே இறங்கும். அது முதலில் மூன்று அல்லது நாலுவிரல் கூடிய அவ்வளவு பெரிதும் வட்டமுமான வஸ்துவாய் துவாரத்தின் வழியாய் வெளிப்படும். முதற் பிரசவத்தில் கருப்பையின் வாய் ஒரு சிறு வட்டமான துவாரமாய் இருக்கும். அநேகம் பிள்ளைகளைப் பெற்ற ஸ்திரீயாயிருந்தால், அது ஒழுங்கின உருவமுள்ளதாயிருக்கும். வலி உண்டாகும் ஒவ்வொரு சமயத்திலும் துவாரம் கொஞ்சம் கொஞ்சமாய் விரிந்துகொண்டுவரும். முதலில் அது மிளகு அளவாயும், பின்பு பாக்கு அளவாயும், பின்பு எலுமிச்சம்பழம் அளவாயும், பின்பு கிச்சிலிப்பழம் அவ்வளவு பெரிதாயும் படிப்படியாய் விரிந்துகொண்டேவந்து, கடைசியாக பிள்ளையின் தலை செல்லத்தக்கதான அவ்வளவு பெரிதாகிவிடுகிறது.

(இன்னும் வரும்.)

# மாதர் மித்திரி.

புத். ௨. ௧௮௮௬ ஹு - ஜூன் மீ. இல. ௰௨.

## NOTES.
## பத்திராதிபர் குறிப்புகள்.

ANOTHER YEAR.

### இரண்டாம் வருஷம்.

இம்மாத சஞ்சிகை "மாதர் மித்திரியின்" இரண்டாம் புஸ்தகத்துக் கடைசி சஞ்சிகை என்பதை நமதிஷ்டர் யாவரும் அறிவார்கள். இவ்வருஷத்தில் ஒவ்வொரு சஞ்சிகையும் பிறர் வாசித்து நற்பயன் அடையும்படிக்கான நல்நோக்கம்கொண்டு எழுதப்பட்டது என்பதை நமது சிநேகிதர் அறிந்து, அடிக்கடி அதை நமக்குச் சந்தோஷத்துடன் தெரிவித்திருக்கிறார்கள். நமது சிநேகிதிகள் யாவரும் சோம்பலையும் பாவத்தையும் அகற்றி, தேவனுக்குப் பிரியமான பரிசுத்த மார்க்கத்தில் ஜீவனம்பண்ணவேண்டுமென்பதே நமது அத்தியந்த விருப்பம்.

நாம் இவ்வருஷத்தில் எழுதிய சிறு குறிப்புகள் வெகு சுருக்கமானவைகளாயிருந்தபோதிலும், அவைகளாலும் பலர் பயனடைந்ததைக்குறித்து மிகவும் களிகூருகிறோம். சித்திர ரூபங்களைக்கொண்டு சுருக்கிச் சொல்லிய கீர்த்திபெற்ற ஸ்திரீகளின் சரித்திரங்களால் நமது சிநேகிதிகள் அடைந்த பயன் கொஞ்சமல்ல. மேலும், ஸ்திரீகள் உலகினில் எவ்வளவு நன்மை செய்யக்கூடியவர்கள் என்பதை இப்புண்ணியவதிகளின் புகழ்பெற்ற சரித்திரத்தால் போர்ந்தமட்டும் கற்றுக்கொள்ளலாம். பிரயோசனமான சரித்திரங்களைமாத்திரம் சொல்வது போதாதென்றெண்ணி, பற்பல இடங்களின் விவரங்களையும் பயன்படத்தக்க வேறு சில காட்சிகளையும் குறித்து அடிக்கடி எழுதினோம்.

இந்த வருஷத்தில் "மாதர் மித்திரிக்குப்" பற்பல வழிகளாலும் மித்திரிகளானோர் பலர். இவர்களில் "மித்திரிக்கு மித்திரி" மிகவும் விசேஷித்தவள். அவள் அநேக அரிய விஷயங்களை வெகு இனிய நடையில் அன்புகூர்ந்து எழுதியனுப்பி, "மாதர் மித்திரியை" வாசிக்கும் சகலரையும் சந்தோஷிக்கச் செய்ததற்காக நமது நன்றியைப் பூரணமாய்த் தெரிவிக்கின்றோம்.

இவ்வாறு இவ்வருஷத்திலும் நமது பத்திரிகையின் ஒவ்வொரு பக்கத்தையும் இனிதும் பயனுள்ளதுமாக்க நாம் பிரயாசப்பட்டது வீணாகாமல் அநேகருக்கு வெகு பயன் செய்ததைக் கண்டு, மிகுந்த உற்சாகமடைந்து, வருகிற மாதமுதல்

தேவ ஒத்தாசையை முன்னிட்டு மூன்றும் புஸ்தகத்தையும் தொடங்க விருப்பங்கொண்டிருக்கிறோம். நமது இந்த சிநேகிதிகளைப் பாக்கியமான உயர் நிலைமைக்குக் கொண்டுவருவதில் "மாதர் மித்திரியும்" ஒரு கருவியாயிருந்தாள் என்று கேட்கும் பாக்கியம் கிடைத்தால், அதுவே நமக்குப் பேரானந்தமாயிருக்கும். இம்மட்டும் பதிப்பித்துவந்த "மாதர் மித்திரியின்" காப்பிகளைப்போன்ற இரட்டிப்பான தொகை இனிமேல் மாதந்தோறும் பிரசுரிக்கப்படும். இது "மாதர் மித்திரி" நாளுக்குநாள் வளர்ந்து விர்த்தித்து வருவதற்கு ஒரு சிறந்த அத்தாட்சியாம். "மாதர் மித்திரியின்" இரண்டாம் புஸ்தகத்துப் பன்னிரண்டு சஞ்சிகைகளையும் ஒரே புஸ்தகமாய்க் கட்டிக்கொள்வதற்கென்று நமது சகல கையொப்பக்காரருக்கும் இத்துடன் முகப்புப் பக்கமும் பொருள் அட்டவணையும் தந்திருக்கிறோம்.

---

ENCOURAGEMENT.

## தூண்டிவிடுதல்.

ஒரு விளக்கை மங்கிப்போகும் சமயத்தில் தூண்டிவிட்டால், இன்னும் சற்று நேரம் பிரகாசமாய் எரிந்து, அதிகமான வெளிச்சத்தைக் கொடுக்கும்; தூண்டாவிட்டால் மங்கி அவிந்துபோகும். இவ்வாறே எத்தனையோ ஜனங்கள் தூக்கிவிடுவார் ஒருவரும் இல்லாமல் அதைரியப்பட்டு, அவநம்பிக்கையில் ஆழ்ந்து கிடக்கிறார்கள். இச்சமயத்தில் அவர்களை யாராகிலும் தூக்கிவிட்டால், இன்னும் சிலகாலத்துக்கு அவர்கள் இப்பூமியில் வாழ்ந்திருப்பார்கள். ஆகையால் அதைரியப்பட்டிருப்போரை நாம் சந்தோஷமாய்த் தூக்கிவிட விரைந்தோடுவது அவசியம். பிறர் துன்பப்படுவதைப் பார்த்து நாம் ஒத்தாசை செய்யத் தாமதிக்கையில், நம்மை அவர்கள் நிலைமையில் வைத்து ஒத்திட்டுப்பார்ப்பதே நல்லது. பிறர் தங்களைத் தூண்டிவிட நம்மிடம் ஒத்தாசையைத் தேடுவதுபோலவே, நாமும் பிறரால் வேளாவேளைகளில் தைரியஞ்சொல்லித் தூண்டிவிடப்படவேண்டியவர்களாய் இருக்கிறோம், நாம் பிறர் செய்யும் காரியத்தைக்குறித்துக் கொஞ்சம் புகழ்ந்துபேசுவதாலும், புன்னகைகொண்டு சந்தோஷப்படுவதாலும் அவர்களை வெகுவாய்த் தூண்டிவிடலாம், இந்தச் சிறு காரியங்களைச் செய்வதற்கு நாம் எள்ளளவென்கிலும் தாமதிக்கவேண்டியதில்லை. ஆகையால் பிறரைத் தூண்டிவிட்டு அவர்களை மேலான நிலைமைக்குக் கொண்டுவர நாம் மெய்யாகவே ஆசைப்படுவோமாகில், அவர்கள் நல்லமான காரியத்தைச் செய்யும்பொழுதும், புண்ணிய செய்கையைத் துவக்கும்பொழுதும், மானிட ஜீவிய சிறு கடமைகளை நடத்தும்பொழுதும் அவர்களை அடிக்கடி தூண்டிவிட்டு அதிக பாக்கியசாலிகளாக்கப் பிரயாசப்படுவோமாக. அப்பொழுது தேவனும் நமது அன்பின் செய்கைகளைப் பார்த்து நம்மையும் அதிகமதிகமாய் ஆசீர்வதிப்பார்.



BE PUNCTUAL.

## காலக்கிரமம்.

---

அநேக ஜனங்கள் "எங்களுக்கு இதை அதைச் செய்ய நேரமில்லையே, என்ன செய்வோம்" என்று அங்கலாய்ப்பதை அடிக்கடி கேட்டு ஆச்சரியப்பட்டிருக்கிறோம். தங்களுக்கு நேரம் இல்லை என்று சொல்லும் இவர்கள் கடைசியாகத் தாங்கள் செய்யவேண்டிய ஒரு காரியத்தைப் பலரும் பார்த்து நகைக்கும்படிக்கான விதமாய் வெகு அவசரத்தில் செய்து முடிக்கிறார்கள். இப்பேர்ப்பட்டவர்களைக் காலம் உபயோகிக்கத் தெரியாத கபோதிகள் என்று நாம் அழைக்கச் சற்றும் கூச்சப்படுகிறதில்லை. மேலும், தன் காலத்தைத் தக்கபடி உபயோகிக்க வகைதெரியாத ஒருவன் பிறனுடைய சமயத்தையும் உபயோகிக்க வகைதெரியாத பெரும் பேதையாயிருக்கிறான், திருஷ்டாந்தமாக ஒருவன் மற்றொருவனை இந்தச் சமயத்தில் தவறாமல் சந்திப்பேன் என்று சொல்லிவிட்டு, சொன்னபடியே வாராவிட்டால், தனது சொந்த காரியங்களிலே அதிக கலக்கத்தையும் குழப்பத்தையும் உண்டாக்குவதுமல்லாமல், பிறனுடைய காரியங்களிலேயும் அவற்றை ஒருவாறு தொண்டு வந்து, இப்படியாக பிறனுடைய சமயத்தைக்குறித்துத் தான் சற்றும் கவலைப்படாதவனென்று காட்டிவிடுகிறான். தாங்கள் சொன்னதைக் குறித்த சமயத்தில் செய்யத் தவறும் ஒழுங்கீன மனுஷரால் உண்டாகும் குழப்பங்களோடு அவர்கள் சொல்லும் சாக்குப் போக்குகளை ஒத்திட்டுப் பார்த்தால், அவர்கள் சாக்குப் போக்கெல்லாம் வீணென்று வெளிப்படும். அமெரிக்கா கண்டத்து "ஐக்கிய மாகாணங்களின்" முதலாம் சங்கத் தலைவராகிய வாஷிங்டன் பிரபுவினிடம் ஒரு காரியதரிசி இருந்தார். இவர் ஒருநாள் நேரம்சென்று வந்தபோது, பிரபு அவர் நேரம்சென்று வந்ததற்குக் காரணமென்னவென்று கேட்க, அவர் தனது கைக்கடிகாரம் சரியாய்ப் போக இல்லை என்று மறுமொழி பகர்ந்தார். அப்பொழுது பிரபு "ஒன்றில் நீர் சரியான கைக்கடிகாரம் சம்பாதிக்கவேண்டும், அல்லது நான் வேறே காரியதரிசியை வைத்துக்கொள்ளவேண்டும்" என்று வெகு சாந்தமாய்க் கடிந்துகொண்டார். சிலர் எந்தச் சமயத்திலும் எப்படிப்பட்ட விஷயத்திலும் சாக்குப் போக்கு சொல்வதற்குச் சந்தோஷமும் ஆயத்தமுமாயிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களைக்குறித்து ஒருவர் "சாக்குப் போக்கு சொல்வதில் கெட்டிக்காரன் எவனோ அவன் எதைச் செய்வதற்கும் பயன்படமாட்டான்" என்று அனுபவ சித்தாந்தமாய்ச் சொல்லியிருக்கிறார். உலகமெங்கும் கீர்த்திபெற்ற கப்பற் படைத்தலைவனாகிய நெல்சன் பிரபு "எனக்குக் குறிக்கப்பட்ட சரியான நேரத்திற்குக் கால்மணிநேரம் முந்தியிருக்க நான் எப்பொழுதும் பிரயாசப்பட்டபடியால், இவ்வளவு பேரும் புகழும் பெற்றேன்" என்றாராம்.

ஆகையால், நமக்கும் நமது அயலாருக்கும் சந்தோஷமும் சமாதானமும் உண்டாக நாம் செய்யும் எந்தக் காரியத்தையும் அதனதன் காலத்திலே செய்வோமாக.



THE VINEYARD LABOURERS.

## திராட்சத்தோட்டத்தில் வேலை செய்தவர்களின் உவமை.

பெரிய திராட்சத்தோட்டத்தை உடைய வீட்டெஜமானாகிய ஒரு மனுஷன் இருந்தான்; அவன் தன் தோட்டத்துக்கு வேலையாட்களை அமர்த்த அதிகாலையிலே புறப்பட்டான். வேலையாட்களுடன் நாளொன்றுக்கு நாலணா கூலி பேசி, அவர்களைத் தன் திராட்சத்தோட்டத்துக்கு அனுப்பினான். மறுபடியும் அவன் ஒன்பது மணிக்குப் புறப்பட்டுப்போய், கடைத்தெருவில் சும்மா நிற்கிற வேறு சிலரைக் கண்டு: நீங்களும் திராட்சத்தோட்டத்துக்குப் போங்கள், நியாயமானபடி உங்களுக்குக் கூலி கொடுப்பேன் என்றான். அவர்கள் அவன் தாராளமாய்க் கொடுப்பான் என்று நம்பிப் போனார்கள். மறுபடியும் பகல் பன்னிரண்டு மணிக்கும், மூன்று மணிக்கும் அவன் போய் அப்படியே செய்தான். இத்துடன் அவன் ஓய்ந்திராமல், திராட்சத்தோட்டத்தில் இன்னும் அதிக வேலையாட்கள் வேண்டியிருந்தபடியால், சாயங்காலத்திலும் புறப்பட்டுப்போய், சும்மா நிற்கிற வேறு சிலரைக் கண்டு: நீங்கள் பகல்முழுவதும் இங்கே சும்மா நிற்கிறதென்ன என்று கேட்டான். அதற்கு அவர்கள்: ஒருவரும் எங்களுக்கு வேலையிடவில்லை என்றார்கள். அவன் அவர்களை நோக்கி: நீங்களும் என் திராட்சத்தோட்டத்துசகுப் போங்கள், நியாயமானபடி கூலி பெற்றுக்கொள்வீர்கள் என்றான்.

பொழுது போனதும், திராட்சத்தோட்டத்துக்கு எஜமான் தன் காரியகாரனை நோக்கி: நீ வேலையாட்களை அழைத்து, பிந்திவந்தவர்கள் தொடங்கி முந்திவந்தவர்கள் வரைக்கும் அவர்களுக்குக் கூலி கொடு என்றான். அப்பொழுது சாயங்காலம் அமர்த்தப்பட்டவர்கள் வந்து, ஆளுக்கு நாலணா வாங்கினார்கள். இவர்களுக்குமுன் அமர்த்தப்பட்டவர்கள் தங்களுக்கு அதிகக் கூலி கிடைக்கும் என்று எண்ணினார்கள்; ஆனால் அவர்களும் ஆளுக்கு நாலணா வாங்கினார்கள்; வாங்கிக்கொண்டு, வீட்டெஜமானை நோக்கி: பிந்திவந்தவர்களாகிய இவர்கள் ஒருமணி நேரமாத்திரம் வேலைசெய்தார்கள்; பகலின் கஷ்டத்தையும் வெயிலின் உஷ்ணத்தையும் சகித்த எங்களுக்கு இவர்களைச் சமமாக்கினீரே, என்று முறுமுறுத்தார்கள். அப்போது வீட்டெஜமான் அவர்களில் ஒருவனுக்குப் பிரதியுத்தரமாக: சிநேகிதனே, நான் உனக்கு அநியாயஞ்செய்யவில்லை; நீ என்னிடத்தில் நாலணாவுக்குச் சம்மதிக்கவில்லையா? உன்னுடையதை நீ வாங்கிக்கொண்டு போ, உனக்குக் கொடுத்ததுபோலப் பிந்தினவனாகிய இவனுக்குக் கொடுப்பது என்னுடைய இஷ்டம்; என்னுடையதை என் இஷ்டப்படி செய்ய எனக்கு அதிகாரமில்லையா? நான் தயாளனாயிருக்கிறபடியால், நீ வன்கண்ணனாயிருக்கலாமா? என்றான்.

கிறிஸ்து சொல்லிய இந்த நேர்த்தியான உவமையில் குறிக்கப்பட்டிருக்கும் திராட்சத்தோட்டத்து எஜமான் கிறிஸ்துதான்; இவர் தமக்கென்று வேலைசெய்யும்படி சிலரை இளவயதிலும், சிலரைப் பாலியத்திலும், சிலரைத் தள்ளாத முதிர்வயதிலும் அழைக்கிறார். இவர்களில் சிலர் அநேக வருஷங்களாகவும், சிலர் கொஞ்சக்காலமாகவும் இயேசுவுக்கென்று உழைத்து மரிக்கிறார்கள். மரித்து இவர்கள் பரலோக ராஜ்யம் சேர்ந்ததும், தேவன் அவர்கள் எல்லாருக்கும் சரிசமானமான சுதந்தரத்தைக் கட்டளையிடுகிறார். ஒவ்வொருவரும் எத்தனை வருஷம் உழைத்தார்கள் என்பதைக் கவனியாமல், எந்த ஆவியோடு வேலைசெய்தார்கள் என்பதையே கவனிக்கிறார். ஆகையால் எந்தப் பாவியும் கிறிஸ்துவண்டைக்கு நல்லிருதயத்தோடு எந்த வயதில் திரும்பினாலும், அவனுக்கு நற்சுதந்தரத்தைக் கட்டளையிட ஆயத்தமாயிருக்கிறார். ஆகையால் காலதாமதமின்றி கிறிஸ்துவுக்கென்று உழைக்கத் தங்கள் காலத்தைச் சகலரும் ஒப்புக்கொடுப்பார்களாக.



HYMN.

## ஞான கீதம்.

PRAISE THE LORD.

### கர்த்தருக்குத் துதி.

மாசற்ற தெய்வ நாமத்தை
துதி, என் நெஞ்சமே!
இரக்கம் செய்த கர்த்தரை
துதி, என் உள்ளமே!

2. உன் பாதகங்கள் யாவையும்
நிவிர்த்திசெய்கிறார்;
உன் ரோகங்கள் அனைத்தையும்
பரிகரிக்கிறார்.


3. நீ மாண்டுபோகும்பொழுது
உன் ஜீவனை மீட்பார்;
நிறைந்த அன்பால் உனக்கு
கிரீடம் சூட்டுவார்.

4. நன்மைகளால் உன் மனதை
திருப்தியாக்கினார்;
அன்பாய் உன் ஆயுள்காலத்தை
நீடிக்கப்பண்ணினார்.

5. எந்நாளும் இந்த நன்மையை,
என் ஆத்துமாவே! நீ
மறந்திடாமல் கர்த்தரை
வணக்கமாய்த் துதி.

## BUCKINGHAM PALACE.
## பக்கிங்காம் அரண்மனை.

செல்வம் பொழியும் சிங்கார நகரென்றும் இப்பூமண்டலமெங்கும் சிறப்புற்றோங்கும் லண்டன் பட்டணம் உலகத்திலுள்ள பட்டணங்களிலெல்லாம் மகாப்பெரிதும் வர்த்தகத்தில் சிறந்ததுமானது. பதினாறு மயில் நீளமும் பன்னிரண்டு மயில் அகலமுமுள்ள இம்மாநகரில் மாட்சிமை மிகுந்த மாடமாளிகைகளும் எண்ணுதற்கரிய கூடகோபுரங்களும் ஏராளமாய் உண்டு. தெருக்களின் மொத்த நீளம் ஏறக்குறைய எண்ணாயிரம் மயில். இந்நகரை அலங்கரிக்கும் அநேக அழகிய அரண்மனைகளில் பக்கிங்காம் அரண்மனை என்னப்படுவது ஒன்று. லண்டன் நகரில் வசிக்கும்போதெல்லாம் இராணியாரின் இருப்பிடம் இவ்வரண்மனையே. இக்கட்டடம் நாலாவது ஜார்ஜ் என்னும் அங்கிலேய அரசன் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு, நாலாவது வில்லியம் என்னும் அரசன் காலத்தில் முடிவுபெற்றது. ஆனால் வில்லியம் அதில் வசிக்க விரும்பினதில்லை. அதிலுள்ள பெரிய படிக்கட்டுகளெல்லாம் நேர்த்தியான விலையுயர்ந்த வெண்சலவைக்கற்களால் கட்டப்பட்டிருக்கின்றன. விசேஷித்த உற்சவ தினங்களில் பிரபுக்கள் எல்லாம் ஒன்றாகக் கூடி உல்லாசமாய்க் காலங்கழிக்கும்பொருட்டு ஒரு அகன்ற மண்டபம் அதிலுள்ளே உண்டு. அதில் ஏறக்குறைய ஈராயிரம் பேர் வசதியாய் உட்காரலாம். இந்த அரண்மனை தோட்டத்தில் அரண்மனை கோயில் ஒன்று இருக்கிறது. சிங்காசனம் வைக்கப்பட்டிருக்கும் அறை அறுபத்து நாலு அடி நீளமுள்ளது. இவ்வறைச் சுவரின் உட்பக்கங்களெல்லாம் மிகவும் விலைபேறப்பெற்ற சிவப்பு குத்துனிப்பட்டுகளாலும், தளமெல்லாம் விநோத காட்சிகள் எழுதப்பட்டுக் காணக்கிடைப்பதற்கரிதான வெண்சலவைக்கற்களாலும் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன. வெகுவான சித்திர காட்சிகள் வேண்டியமட்டும் காணக்கிடைக்கும் விநோத சாலையானது பக்கிங்காம் அரண்மனையிலுள்ள கட்டடங்களிலெல்லாம் மிகவும் விசேஷித்தது. இது நாலாவது ஜார்ஜ் என்பவன் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு, நாளுக்குநாள் அதிக விர்த்தியடைந்து வந்திருக்கிறது. இவ்வகன்ற அரண்மனைத் தோட்டத்தில் இரண்டுலெட்சத்து இருபதினாயிரம் சதுர அடியுள்ள ஒரு பெரிய ஏரி உண்டு. இதனால் வெகு குளிர்ச்சியான காற்று அரண்மனையில் எப்போதும் வீசிக்கொண்டே இருக்கிறது. அரண்மனைக்கு வெளியே உள்ள கட்டடங்களில் ராஜகுடும்பத்தைச் சேர்ந்த ஸ்திரீகள் குதிரை ஏறி சவாரி செய்ய கற்பிப்பதற்கான பாடசாலை உண்டு. இந்தச் சிங்கார அரண்மனையையும், அரண்மனைத் தோட்டத்தையும் பார்க்க ஆயிரம் கண்கள் போதாதென்று அதைப் பார்த்தோர் யாவரும் புகழ்ந்து பேசுகிறார்கள். இப்பேர்ப்பட்ட மகத்தான அரண்மனையில் வசிக்கும் இராணியார் தாழ்மை என்னும் தங்க அணிகலத்தைப் பூண்டிருக்கிறார்கள் என்பது ஆச்சரியத்திலும் ஆச்சரியமாம்.



BUCKINGHAM PALACE.
பக்கிங்காம் அரண்மனை.

GOOD WORDS FOR WOMEN.

## நங்கையர்க்கு நல்லுரை.

### 12. பாக்கியம் நிறைந்த மாளிகை.

மித்திரிக்கு மித்திரியாகிய நான் இம்முறை கணவனும் மனைவியும் தங்கள் வீட்டைப் பாக்கியமான வீடாக்கும் வழி இன்னதென்று காட்டப் பிரியங்கொண்டிருக்கிறேன்.

தங்கள் சொந்த வீட்டைப் பாக்கியமாக்கும் முந்தின வழி கணவனும் மனைவியும் ஒத்துவாழ்வதேயாம். "ஒத்தால் வாழலாம், ஒத்தால் வாழலாம்" என்பது அவர்கள் எக்காலத்திலும் கைக்கொள்ள வேண்டிய நற்பிரமாணம். ஒவ்வொரு எசமானும் தன் வீட்டுக்கு இராசாவாயிருக்கிறான். அவன் வீடு குச்சாயிருந்தாலும் மச்சாயிருந்தாலும் அது அரசர் மாளிகைக்குச் சரி.' "அவன் அடுப்பில் காய்ச்சும் அன்னப்பால் அரசர் மாளிகையின் திரட்டுப்பாலிலும் மேலானது." கணவனும் மனைவியுமாகிய அரசனும் அரசியும் ஒத்து வாழ்ந்தாலொழிய தங்கள் எளிய குடிலை இன்ப குடிலாக்குவது கூடாத காரியம். இதை நோக்கியே

"மருவிய காதன் மனையாளும் தானும்
இருவரும் பூண்டீர்ப்பினல்லால்—ஒருவரால்
இல்வாழ்க்கை என்னும் இயல்புடைய வான்
செல்லாது தெற்றிற்று நின்று" [சகடம்

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

வீட்டுக்காரன் தனது வீடு பாக்கியம் நிறைந்ததாயிருக்கவேண்டுமென்று விரும்பி, தனது மனைவியோடு ஒத்துவாழவேண்டுமென்று நான் சொல்வதால், அவள் சொல்வதையே சட்டமாக கைக்கொண்டு நடக்கவேண்டுமென்பது என் கருத்தல்ல. வீட்டாரை அவர்கள் மனம்போன போக்கெல்லாம் போகவிடுகிறவன் சுத்தமூடன். "அவன் வீட்டுக்காரனல்ல, கேட்டுக்காரன். வீட்டை ஒழுங்காய் நடத்த எப்போதும் திட்டும் குத்தும் அவசியமல்ல. பத்தியும் புத்தியுமுள்ள வீட்டெசமான் முகமலர்ச்சியினாலும், அருட் பார்வையினாலும், இனியவாக்கினாலும் யாவையும் ஒழுங்காக்குவான்." இதனால் அவன் பெண்சாதியைச் சந்தோஷமாக்குகிறதுமல்லாமல், பெண்சாதியும் புருஷன் சந்தோஷத்துக்காக கவலைப்படுகிறாள். இப்பேர்ப்பட்ட வீட்டில் புருஷனையும் மனைவியையும் ஒத்துவாழச் செய்வது சாந்தமும் அன்புமுள்ள வார்த்தையேயாம்.

"வெட்டனவை மெத்தனவை வெல்லாவாம் [வேழத்திற்
பட்டுருவும் கோல் பஞ்சிற் பாயாது—நெட் [டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத் [த்தின்
வேருக்கு நெக்கு விடும்."

தங்கள் சொந்த வீட்டை எட்டிக் கசப்பாகவும், அயல் வீட்டைத் தேனிலும் இனிப்பாகவும் எண்ணுகிற சிலரைக்குறித்து ஒரு வித்வான் பின்வருமாறு எழுதுகிறார்:—

"தங்கள் வீட்டைப் பாக்கியம் நிறைந்த வீடாக்க வகைதெரியாத புல்லறிவாளர் தங்கள் நேரத்தை வீட்டிற் போக்க மனமற்று, கள்ளுக்கடையிலும் கஞ்சா மடத்திலும், சூதாட்டத்திலும் வாதாட்டத்திலும் பின்னிடுவது எவ்வளவு பரிதாபம். வீட்டை வெறுக்கிறவன் வெகு நிர்ப்பாக்கியன். அவனை ஆலகால விஷம் தீண்டியிருக்கிறதென்பதற்கு அணுவளவும் சந்தேகமில்லை. ஆனால் கணவனும் மனைவியும் ஒத்துநடத்தும் சமுசாரம் துக்க சாகரமாகாமல், ஆனந்த சாகரமாகுமல்லவா? சமுசார பாரம் சர்க்கரைப் பாரமென்றும், கலியாண பாரம் கற்கண்டு பாரமென்றும் அப்போது சொல்ல இடமாகுமே."



வீட்டைப் பாக்கியமாக்கும் வேறொரு காரியம் மக்கள் சந்தோஷமே. பிள்ளை பாக்கியம் பெரிய பாக்கியம் என்று பெரியோர் சொல்லுவார்கள். இதற்கேற்ப திருவள்ளுவரும்

"அமிழ்தினுமாற்ற வினிதே தம்மக்கள்
சிறுகை அளாவிய கூழ்"

என்கிறார். "பிள்ளைகளைப் பார்ப்பது கண்ணுக்கு ஆனந்தம். அவைகளைத் தூக்கியெடுப்பது உடற்கானந்தம். அவர்கள் சத்தம் கேட்பது செவிக்கானந்தம். அவர்களைப் பத்தியில் வளர்ப்பது மனதுக்கானந்தம்." "சொல்லிச் செய்வோர் நல்லோர், சொல்லாமற் செய்வோர் பெரியோர், சொல்லியும் செய்யார் அசடர்" என்பதற்கிசைய, பிள்ளைகளை நல்லோரும் பெரியோரும் ஆக்கும்படி பார்ப்பது வீட்டார் கடமை. பிள்ளைகட்கழகு பெற்றோருக்கடங்குதல். ஆகையால் பெற்றோர் பிள்ளைகளுக்குப் படிப்பிக்கவேண்டிய முதலாம் பாடம் கீழ்ப்படிதல். கீழ்ப்படியாத பிள்ளைகளால் பாக்கியம் நிறைந்திருக்கவேண்டிய வீடு துன்பம் நிறைந்த காடாகும்.


"மேலும், வீட்டைக் கவனிப்பதும், வீட்டாரைப் பராமரிப்பதும், வீட்டுக்காரி வேலை. தன் வீட்டை அலங்கோலமாய்ப் போட்டுவிட்டு, வீடுவீடாய் நுழைந்து வருவது பெண்சாதிக்கு அழகல்ல. காலடங்கியிருப்பதிலும் நாவடங்கியிருப்பது அதிக அவசியம். நீள் நாக்குள்ள பெண்டுகளால் வீடும் காடாம். நாவடக்கமுள்ள நற்பெண்டிரால் காடும் வீடாம்."

"இல்லாளகத்திருக்க இல்லாத தொன்றில்லை
இல்லாளு மில்லாளே யாமாயின்—இல்லாள்
வலிகிடந்த மாற்ற முரைக்குமேல் அவ்வில்
புலிகிடந்த தூறாய் விடும்."

புருஷனும் பெண்சாதியும் தங்களுக்கு என்ன துன்பம் வந்தாலும், எப்பேர்ப்பட்ட சங்கடங்கள் நேரிட்டாலும், இந்த உபத்திரவத்திலெல்லாம் பொறுமையாயிருக்கவேண்டும். பாக்கியம் நிறைந்த மாளிகையின் விசேஷித்த அடையாளம் பொறுமையே. பெற்றாராலும் சரி, உற்றாராலும் சரி, மித்துருக்களாலும் சரி, சத்துருக்களாலும் சரி என்ன துன்பம் வந்தாலும் பொறுமையோடே, அவைகளைச் சகித்துக்கொண்டால், அத்துன்பங்கள் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் ஓடிப்போகும். இந்தச் சிறந்த மாளிகையின் மற்றொரு இலட்சணம் அதின் குடிகள் யாவரும் ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருப்பார்கள். தங்களாலானதையெல்லாம் செய்துவிட்டு, தேவனுடைய ஆசீர்வாதம் பெறும்படிக்கு உருக்கமாய் ஜெபிப்பார்கள். இப்படியாக அவர்களைக் கர்த்தர் சகல துன்பங்களிலிருந்தும் காப்பாற்றுவார் என்பதை உறுதியாய் நம்பியிருக்கிறார்கள். இப்படிக்கொத்த குடிகள் வசிக்கும் மாளிகை பாக்கியம் நிறைந்ததென்பதற்கு ஆட்சேபனையென்ன?

ஆகையால் கர்த்தருக்குப் பயந்த புருஷனும், குணசாலியான பெண்சாதியும், கீழ்ப்படிதலுள்ள பிள்ளைகளும் எந்த வீட்டில் இருக்கிறார்களோ, அந்த வீடே பாக்கியம் நிறைந்த வீடாயும், செல்வம் பொழியும் சிங்கார மாளிகையாயும் இருக்கிறது. இதை வாசிக்கும் சிநேகிதியே, நீயும் உன் வீட்டை இப்படிப்பட்ட பாக்கியமான வீடாக்கப் பிரயாசப்படவேண்டுமென்பதே உனது அன்பான மித்திரிக்கு மித்திரியின் உள்ளக் கனிவான விருப்பம்.

மி. மி.



CHILDREN'S CORNER.

## சிறுவர்க்கான கதை.

THE CRIMSON SILK.

### சிவப்புப் பட்டு.

அன்றாடக வேலைசெய்து தனது அப்பத்தைச் சம்பாதித்த ஒரு ஏழைக் குடியானவனுக்கு அமீலியா என்னும் ஒரு அழகிய புத்திரி இருந்தாள். இவளின் தாய் மரித்துப்போனபடியால், சகல வீட்டுவேலைகளையும் இவளே வெகு திட்டமாயும் சுறுசுறுப்பாயும் கவனித்துவந்தாள். ஆனால் தன்னை விலையுயர்ந்த உடுப்புகளால் அலங்கரித்துக்கொள்ளவேண்டுமென்னும் வீணான விருப்பம் எப்போதும் அவள் உள்ளத்தில் இருந்தது. தகப்பன் தனக்கு வேளாவேளைகளில் இனாமாக கொடுத்துவந்த காசையெல்லாம் சேர்த்துவைத்து, அவை பெருந்தொகையானவுடனே ஒரு நாள் பட்டுக் கடைக்குப் போய், ஒரு நேர்த்தியான பட்டு உடுப்புக்குப் போதுமான பட்டை வாங்கி வீட்டுக்கு வந்தாள்.

தகப்பன் தனது வேலையை முடித்து வீட்டுக்குத் திரும்பினதும், அவனிடம் தான் வாங்கின பட்டைக் காண்பித்தாள். அவன் அது என்ன விலையென்று கேட்க, கெஜம் இரண்டு ரூபாய் என்றாள். கெஜம் மூன்று ரூபாயாக வாங்கியிருந்தும், அதை ஒளித்து, தகப்பனிடம் இரண்டு ரூபாய் என்றாள். தான் இவ்வளவு நயமாய் வாங்கினபடியால் தகப்பன் அதன் விலையைத் தனக்குக் கொடுக்கவேண்டுமென்று அவனை வெகுவாய் அலட்டினாள். புத்திரியின்மேல் அன்பு மிகுந்த தகப்பன் அவள் கேட்ட தொகையைக் கொடுத்தான். அவள் உடனே தான் ஏற்கனவே சேர்த்துவைத்த சிறு தொகையையும் தகப்பன் கொடுத்ததையும் எடுத்துக்கொண்டுபோய்க் கடைக்காரனிடம் கொடுத்துவர ஓடினாள்.

இவள் வெளியே போயிருந்த சமயத்தில் குடியானவனைப் பார்க்க ஒரு வர்த்தகன் வந்தான். குடியானவன் கையிலிருந்த பட்டை வர்த்தகன் பார்த்து, இதென்ன விலையென்று கேட்டான். அவன் தன் மகள் சொன்னதின்படியே கெஜம் இரண்டு ரூபாயென்க, வர்த்தகன் கெஜம் ஒன்றுக்கு இரண்டரை ரூபாய் தருவதாக ஒத்துக்கொண்டான். குடியானவனுக்குப் பட்டின் நாணயம் நன்றாய்த் தெரியாதபடியால் வெகு சந்தோஷத்துடன் பட்டை வர்த்தகன் கேட்ட விலைக்கு விற்றுப்போட சம்மதித்தான். வர்த்தகனும் தனக்கு நல்ல லாபம் கிடைத்ததென்று மிகுதியும் சந்தோஷப்பட்டு கெஜம் இரண்டரை ரூபாய் மேனிக்குப் பட்டை வாங்கிக்கொண்டு காலதாமதமின்றி தன்னூருக்குப் போய்விட்டான்.

கடைக்குப் போன பெண், திரும்பி வந்ததும் தகப்பனைப் பார்த்து: தகப்பனே, பட்டு எங்கே என்றாள். அவன் அவளை நோக்கி: மகளே, நீ வெளியே



போயிருந்த சமயத்தில் நான் நல்ல வியாபாரம் பண்ணினேன். நீ கெஜம் இரண்டு ரூபாயாக வாங்கின பட்டைக் கெஜம் இரண்டரை ரூபாயாக ஒரு வர்த்தகனிடம் விற்றுப்போட்டு நல்ல லாபம் சம்பாதித்திருக்கிறேன் என்றான்.

ஆனால் மகளின் முகம் குன்றிப் போய், அவள் கண்களில் கண்ணீர் ததும்பினதைத் தகப்பன் கண்ணுற்று ஆச்சரியமடைந்து: மகளே, நீ சந்தோஷப்படுவதற்குப் பதிலாய் விசனப்படும் காரணம் என்ன என்றான். அவள் வாய் திறந்து: தகப்பனே, என்ன பெரிய நஷ்டத்தை உண்டுபண்ணினீர் என்று அங்கலாய்த்தாள். தகப்பன் எப்படி நஷ்டம் உண்டாயிற்று என்று விசாரிக்க, அவள் உள்ளதை உள்ளபடி சொன்னாள்.

பொய்யைப் பகைக்கும் புண்ணியவானாகிய தகப்பன் இதைக் கேள்வியுற்று மிகுந்த சஞ்சலமடைந்து, மகளை வெகு கோபத்துடனே நோக்கிப்பார்த்து: உன் பொய்க்கு மெய்யாகவே இது தக்க தண்டனைதான். நீ வீண் பெருமையை விரும்பினபடியால், இந்தப் பொய்யாகிய பாவத்திலே படுகேடாய் விழுந்தாய். நான் உனக்குக் கொடுத்தவைகளையெல்லாம் நீ சேர்த்துவைத்துக் கடைசியில் அதை நல்லுபயோகம்பண்ணாமல், விலையுயர்ந்த உடுப்புக்கென்று வீண்செலவு செய்தபடியால், இனிமேல் நான் உனக்கு ஒன்றும் கொடேன் என்றான். ஆகையால் பிள்ளைகளே, எக்காலத்திலும் பொய் பேசாதிருங்கள்.

GLEANINGS.

## சமாச்சாரக் குறிப்புகள்.

அமெரிக்காவில் பழைய சமாச்சாரப்பத்திரிகைகளைக்கொண்டு கல்லுகள் செய்கிறார்களாம். இவை பரதேசிகள் வீடு கட்டிக்கொள்வதற்கு உபயோகமாகச் செய்யப்படுகின்றனவாம்.

---

லண்டன் நகரில் வருஷந்தோறும் ஏழைகள் உதவிக்கென்று ஏழுகோடி ரூபாய் செலவாகிறது. இந்தப் பெருந்தொகையின் மிகுதியான பாகம் குடிவெறியின் கெடுதியினால் தங்கள் ஆஸ்தியை இழந்து வறிஞரானவர்களுக்கே கொடுக்கப்படுகிறது.

---

சீனு தேசத்து சக்கரவர்த்தியின் மனைவி, பதினெட்டு வயதுள்ள சிறு பெண்ணாயிருந்தபோதிலும், நன்றாய்ப் படித்தவளும், புத்திக் கூர்மையுமுள்ள பெருமாட்டியாயிருக்கிறாள்.

---

பம்பாய் நகரில் மல்பரவாலா என்னும் ஒரு பார்சிப்பெண் சுவாசப்பைகளையும், அவைகளின் தொழில்களையும், நாம் அனுஷ்டிக்கும் ஜனசாரமுறைவகைகளால் அவைகளுக்குண்டாகும் சாதகபாதகங்களையும்பற்றி வெகு சிறப்பாய் உபந்நியாசித்தாள். இதற்குமுன் எந்தப் பார்சி ஸ்திரீயும் இப்படிப் பகிரங்கமாய்ப் பிரசங்கித்ததில்லையாகையால், வெகுபேர் இவள் பிரசங்கத்தைக் கேட்டு ஆநந்தித்தார்கள்.

---

அமெரிக்கா கண்டத்து ஐக்கிய மாகாணங்களிலுள்ள மிசிசிப்பி என்னும் நதியில் இரண்டு ஸ்திரீகள் கப்பல் நடத்தும் தலைமை உத்தியோகம் பெற்று, வெகு சாமர்த்தியமாய் வேலைசெய்துவருகிறார்கள். அவர்களில் மேரி மில்லர் என்னும் ஸ்திரீ மாலுமி தன் கணவன் மரித்ததுமுதல் இந்த வேலையை அநேக வருஷங்களாய்ப் பார்த்துவந்து, கைதேர்ந்த மாலுமி என்னும் பேர்பெற்றிருக்கிறாள்.

CHILDBIRTH.

# பிரசவநூல்.

(தொடர்ச்சி.)

கருப்பையைச் சோதித்ததும், ஒரு கெட்டிக்கார மருத்துவிச்சி பிரசவ வேதனை எம்மட்டும் ஆகிவிட்டதென்று எளிதில் சொல்லக்கூடும். கருப்பையின் வாயில் சிசுவின் எந்தப் பாகம் வந்திருக்கிறதென்று அறிவது இதிலும் அதிக முக்கியம். நூற்றுக்குத் தொண்ணூற்றேழு சமயங்களில் சாதாரணமாய்த் தலைதான் முதலில் தோன்றும். இப்படியிருந்தால் வருத்தமின்றி பிரசவிக்கலாம். சில சமயங்களில் பிட்டத்தின் அடிப்பாகமாவது, இன்னும் வெகு சொற்ப சமயங்களில் கையாவது காலாவது முதலில் தோன்றும்.

ஒரு கெட்டிக்கார மருத்துவச்சியானவள் கருப்பையின் வாயைப் பரிசித்துப்பார்த்து சிசுவின் எந்தப் பாகம் வெளிப்படுகிறதென்று சொல்லுவாள். வலி உண்டாகும்பொழுது, சிசுவும் நீருமுள்ள தோல் கெட்டியாயிருப்பதால், உள்ளே இருப்பது இன்னதென்று அறியமுடியாது. ஆகையால் தோல் தளர்ந்திருக்கும் சமயத்தில் சோதித்துப்பார்க்கவேண்டும். மருத்துவச்சி தனது விரலைக்கொண்டு மெதுவாய் வாயைச் சுற்றிலும் தடவிப்பார்க்கவேண்டும். உள்ளிருக்கும் பாகம் பெரிதாயிருந்தால், அது அநேகமாய் தலையாவது பிட்டத்தின் அடிப்புறமாயாவது இருக்கும். கபாலத்தின் எலும்பு கைக்குத் தட்டினால், தலை வெளிப்படுகிறதென்று அறியலாம்.

அறிவீன மருத்துவச்சிகள் அடிக்கடி சோதித்துப்பார்க்கிறார்கள். இப்படிச் செய்வதால் அவர்கள் ஸ்திரீக்கு அதிக வருத்தத்தைதான் உண்டாக்குகிறார்கள். சாதாரணமாய் அரை மணிநேரத்துக்கு ஒருமுறை சோதித்துப் பார்ப்பது போதும்.

ஸ்திரீ.—முதலாம் நிலையில் ஸ்திரீயானவள் அறையில் நடந்து உலாவலாம்; இடைக்கிடையே நாற்காலியில் சாய்ந்துகொண்டு ஆகாரம் புசித்து இளைப்பாறலாம். நடந்து உலாவுதலும், நேராய் உட்கார்ந்திருத்தலும் சிசுவின் தலையைக் கீழே கொண்டுவருவதற்கு அதிக உதவியாயிருக்கும். அதிகமான வலி உண்டாகும்பொழுது, அவள் படுத்துக்கொள்ள விரும்புவாள். படுத்தபின் வலி சற்று குறைந்துபோனால், திரும்பவும் அவள் இடைக்கிடையே எழுந்து அறையில் உலாவவேண்டும். அவள் பிரியப்படியே ஒரு பக்கமாயாவது மல்லாந்தாவது மாறிமாறிப் படுக்கலாம். நாம் முன் குறித்தபடியே மூன்று மணிநேரத்துக்கு ஒருவிசை நீர்ப்பையைச் சுத்தமாக்குவதுமல்லாமல், நீரை உட்செலுத்தி அடிக்குடலையும் சுத்தமாக்கவேண்டும்.

இந்த நிலையில் ஸ்திரீயின் சேலையை அவிழ்த்துவிட்டாவது, மூச்சை அடக்கச் செய்தாவது அவளைக் களைக்கப்பண்ணலாகாது. இவைகள் பிரயோசனமற்றவைகளாயிருப்பதுமல்லாமல், மோசத்துக்கு இடமானவைகளாயும் இருக்கின்றன. மருத்துவச்சி தனது விரலால் கருப்பையின் வாயைத் திறந்து பிரசவத்தைத் துரிதப்படுத்தப் பிரயாசப்படுவது இதிலும் அதிக கேட்டையுண்டாக்கக்கூடியது.

வலி இருக்கும் சமயத்தில் ஸ்திரீயினுடைய முதுகின் அடிப்பக்கத்தைக் கெட்டியாய் அழுத்துவது ஒருவாறு வலியை நீக்கும்.

சற்று நேரம் வலி நின்று ஸ்திரீ தூங்கினால், அவளுக்கு நற்சுகம் உண்டாகும். கொடிதும் குரூரியதுமான வேதனையைப்பார்க்கிலும் மெதுவும் சாந்தமுமான வேதனை நல்லது.

ஸ்திரீ வாந்திபண்ணலாம். கருப்பையின் வாய் முழுவதும் திறந்ததும், அவளுக்கு ஓர்வித வலிப்பும் நடுக்கமும் உண்டாகலாம். ஆனால் இவைகளால் மோசம் ஒன்றுமில்லை.

(இன்னும் வரும்.)

160940
Y15m211,M87